இயேசுவுக்கு மகிமை

# KEY TO CANTICLE

# உன்னதப்பாட்டு திறவுகோல்

★★★

வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளை உடையதாய் இராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது. II பேதுரு 1 : 20.

நாங்களோ ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்மந்தப்படுத்திக் காண்பிக்கிறோம். I கொரி. 2 : 13.

IMMANUEL GOSPEL LIBRARY
9th Main Road
Mariyappana Palya
4th Cross, Magadi Road
BANGALORE - 560 023

★★★

BY

**Pastor. JOHN ROSE**

Kadamalaykuntu, Kanniakumari Dt.

★★★

IMMANUEL GOSPEL LIBRARY
BOOK No.
BANGALORE-23

வெளியிடுவோர்:

மாரநாதா பதிப்பகம்

68, டாக்டர் அழகப்ப செட்டியார் ரோட்

வெப்பேரி, சென்னை-7.

D அருமைராஜ்
D அருமைராஜ்

இயேசுவுக்கு மகிமை

IMMANUEL GOSPEL LIBRARY
9th Main Road
Mariyappana Palya
4th Cross, Magadi Road
BANGALORE - 560 023

# Key to Cantciles

# உன்னதப்பாட்டு திறவுகோல்.

வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கத் தரிசனமும் சுய தோற்ற மான பொருளை உடையதாய் இராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது. II பேதுரு 1 : 20 நாங்களோ ஆவிக் குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்மந்தப் படுத்திக் காண்பிக்கிறோம். I கொரி 2 : 13.

*by*

**Pastor J. John Rose,**
Kadamalay Kuntu,
Kanniyakumari District

IMMANUEL GOSPEL LIBRARY
BOOK No. 045
C
BANGALORE-23

# முன்னுரை

நான் இரட்சிக்கப்படுவதற்கு முன்னதாக ஒரு பெயர் கிறிஸ்தவனாகவே ஜீவித்தேன். அப்பொழுது வேத புஸ்தகத்தை பற்றிய யாதொரு அறிவும் நம்பிக்கையும் இல்லாதவனாகவே இருந்தேன். இவ்வாறிருக்க கர்த்தர் என்னை இரட்சித்தார். இரட்சிக்கப்பட்டதும் வேதத்தைப் பற்றி அறிய ஆசைப்பட்டேன். ஆனால் அதை எப்படிக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று அறியாதவனாக இருந்தேன். அதேவேளையில் உன்னதப் பாட்டைப்பற்றியோ யாதொரு விதமான அறிவு மற்றவனாகவே இருந்தேன். அப்படியிருக்க உன்னதப் பாட்டிலுள்ள வசனத்திலிருந்து இருவர் இரு பிரசங்கங்கள் செய்தனர். அதுவும் எனக்கு யாதொரு விளக்கத்தையும் கொடுக்கவில்லை. ஆதலால் உன்னதப்பாட்டைப் படிக்க வேண்டுமென்ற ஆசை எனக்குள் உண்டானது. அதை எப்படிக் கற்றுக்கொள்ளவேண்டுமென்றோ; எவ்விதத்தில் படிக்க வேண்டுமென்றோ; எனக்குத் தெரியவுமில்லை; யாரும் போதிக்கவுமில்லை.

இவ்வாறிருக்க நான் பிழைப்பதற்கான வேலை செய்வதற்காக மலேயா சென்றேன். தேவன் என்னை அதிகமாய் நேசித்தபடியால் அங்கு வைத்து பரிசுத்தாவியை அந்நிய பாஷை அடையாளத்துடன் கொடுத்து ஆவியினால் நிரப்பினார். அதன் பின்னர் விசுவாசிகளின் ஞானஸ்நானம் எடுப்பதற்காக கர்த்தரே எச்சரித்துப் பேசினபடியால் விசுவாசிகளின் ஞானஸ்நானத்தையும் எடுத்தேன்.

இரட்சிக்கப்பட்ட காலங்களில் வேதத்தைக் கற்றுக்கொள்ள ஆசித்தாலும் சரியான தாகமுண்டாகவில்லை: பரிசுத்தாவியை பெற்றுக்கொண்டதும் வேதம் படிக்க வேண்டுமென்றுள்ள தாகமுண்டானது. வேதம் படிக்கஆரம்பித்தேன். உன்னதப்பாட்டை படிக்கும்போதோ ஒன்றும் புரிந்துக்கொள்ளாதவனாகவே படித்தேன். இப்படியிருக்க கர்த்தர் சிலோனிலிருந்து மலேயர்வுக்கு ஒரு ஊழியக்கார சகோதரியை அனுப்பினார். அந்த சகோதரி வந்ததும், உன்னதப்பாட்டையே

படிப்பித்தார்கள், அவர்கள் படிப்பிக்கும்போதே என்னுள்ளம் ஆனந்தத்தால் நிறைந்தது. அவர்கள் படிப்பாட்ட படிப் பாட்ட அவர்கள் படிப்பிக்கிறதைவிட அநேக புதிய புதிய காரியங்கள் எனக்கு வெளிப்பட்டுக்கொண்டே வந்தது. ஆனபடியால் உன்னதப்பாட்டு எனக்கு மிகவும் மகிழ்ச்சியை கொடுக்கும் ஒரு புஸ்தகமாய் மாறிற்று. ஆகவே சிலகாலம் செல்ல உன்னதப் பாட்டை பற்றி நானே சில குறிப்புகள் எழுத ஆரம்பித்தேன். அதன் பின்னர் உன்னதப்பாட்டைப் பற்றி எனக்குக் கிடைத்த அறிவை புஸ்தகமாக அச்சடித்து மற்றவர்கட்கும் பயன்படுத்தலாமாவென்று ஆசித்தேன். பற் பல தடைகளினுல் கூடாமற்போயிற்று. ஆனுல் இப்பொ ழுது, அநேக தெய்வமக்களும் உன்னதபாட்டைப் பற்றிய வியாக்கியானத்தை ஒரு புஸ்தகமாக அச்சிட உற்சாகப்படுத் தினபடியால் கர்த்தரில் விசுவாசம் வைத்து, இப்புத்தகத்தின் வியாக்கியானத்தை ஒரு புஸ்தகமாக வெளியாக்கத்துணிந் தேன். ஆதலால் இப் புஸ்தகமானது ஊழியம் செய்கிற ஊழியக்காரர்களுக்கும், விசுவாசிகளுக்கும்பயன்படத்தக்கதாக தேவன் துணைபுரிவாராக. இதனுல் கர்த்தரின் நாமமும் மகி மைப் படுவதாக; அவருக்கே மகிமை.

—ஆக்கியோன்

# உன்னதப் பாட்டு

**உன்னதப்பாட்டைப்பற்றிய பற்பல அபிப்பிராயங்கள் :—**

1. உன்னதப் பாட்டைக் குறித்து பலரும் பற்பல அபிப்பிராயங்கள் கூறுவதுண்டு. அவற்றுள் சிலர், இப்புத்தகமானது யூதர்களின் கலியாண நாட்களில் கலியாணத்திற்காய் நியமிக்கப்பட்ட புருஷனையும் ஸ்திரீகளையும் குறித்துப் புகழ்ந்து பாடிவந்த பாட்டு எனக் கூறுவார்கள்.

2. சிலரோ, ஒரு ஸ்திரியானவள் ஒரு பெண் குழந்தையைப் பெற்று கிச்சிலி மரத்தடியில் போட்டு விட்டு போய் விட்டாள். அக்குழந்தையானது தொப்புள் அறுக்கப்படாமல் அவ்விடத்திலேயே கிடந்தது. இதைக் கண்ணுற்ற ஒரு ஆட்டிடையன் குழந்தையின் மீது இரக்கங்கொண்டு அதன் தொப்புளை அறுத்து, கழுவி சுத்தம் செய்து, அவன் வீட்டில் கொண்டுபோய் வளர்த்தான். அக்குழந்தை வளர்ந்து வரவே பக்குவகாலம் வரவும் அவளை விவாகம் பண்ணிக்கொள்ள எண்ணினன். இவ்வாறு வளர்க்கப்பட்ட பெண்ணை தனது திராட்சத்தோட்டத்திற்கு காவற்காரியாக நியமித்து வைத்தான். அவள் திராட்சைத் தோட்டத்தைக் காத்து வரவே, ஒருநாள் சாலோமோன் இராஜா காட்டில் வேட்டையாடச் சென்றிருந்தார். அப்பொழுது அவர் திராட்சைத் தோட்டத்தைக் காத்துக்கொண்டிருந்த ஸ்திரியைக் கண்டு அவள் மீது ஆசை கொண்டு அவளை மனைவியாக்கிக் கொள்ள விரும்பி தனது அரண்மனைக்கு அழைத்துச் சென்றார். அந்த ஸ்திரியானவள் இராஜாவின் அரண்மனைக்கு கொண்டு போகப்பட்ட பின்னர் இராஜாவின் அரண்மனையின் அழகையும் சிறப்பையும் எல்லா மேன்மைகளையும் கண்டாள். அவள் அவற்றையெல்லாம் கண்டும் அரண்மனையிலுள்ள யாதொன்றையும் விரும்பிக் கொள்ளாமல் அவள் நேசராகிய இடையன் பேரிலுள்ள பாசத்தினால் அங்கலாய்த்துப் புலம்பிக்கொண்டே இருந்தாள். இதைக்கண்ட சாலோமோன்

இராஜா, இடையன் பேரிலுள்ள பாசத்தை அறுக்க முடியாதென்று உணர்ந்து, அந்த ஸ்திரியை மறுபடியும் காட்டில் கொண்டுபோய் இடையனிடம் ஒப்புவித்து விட்டார் என்ற, சரித்திரம் எனக் கூறுபவரும் உண்டு.

3. சிலரோ, சாலோமோன் இராஜா தேவ ஆவியால் நிரம்பியிருந்த காலத்தில் வரப்போகும் மணவாளனாகிய இயேசுவைக் குறித்தும் மணவாட்டி சபையைக் குறித்தும் தீர்க்கத் தரிசனமாக உரைக்கப்பட்ட தீர்க்கத் தரிசன புஸ்தகம் எனக் கூறுபவரும் உண்டு.

இவ்விதமாகப் பலரும் பற்பலவிதமான அபிப்பிராயங்களைக் கூறுவார்கள்.

## ஆக்கியோனின் அபிப்பிராயம்

வேத புஸ்தகத்தில் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரு புஸ்தகங்கள் உண்டு. அதில் பழைய ஏற்பாட்டில் 39 புஸ்தகங்கள் அடங்கியிருக்கின்றன. இந்த 39 புஸ்தகங்களிலும் தீர்க்கதரிசன பாகங்களும் உண்டு. என்றாலும் அப்புஸ்தகங்களை சரித்திரப் புஸ்தகங்கள், தீர்க்கதரிசன புஸ்தகங்கள், சங்கீதப் புஸ்தகங்கள் எனப் பிரித்துப் படிக்கலாம்.

சரித்திரப் புஸ்தகங்களை எடுத்தால் எல்லா புஸ்தகங்களுக்குள்ளும், புஸ்தகத்திற்குப் புஸ்தகம் தொடர்புடையதாகவே இருப்பதைக் காணலாம். ரூத்தின் சரித்திரத்தை எடுத்துக்கொண்டால் இப்புஸ்தகத்திற்கு ஏன் வேத புஸ்தகத்தில் இடம் கொடுக்கவேண்டுமென்று கேட்போமானால் தாவீதின் வம்ச வரலாற்றை விளக்குவதற்கென அறியலாம். இப்புத்தகம் இல்லாவிடில் தாவீதின் வம்சவரலாற்றைத் தெளிவுடன் அறிந்துகொள்ள இயலாது. ஆகவே மற்றும் சரித்திரப் புஸ்தகங்களையும் இவ்வாறே தொடர்பின் தேவையை அறிந்தே அமைத்து வைத்திருக்கின்றனர்.

ஆனால் உன்னதப்பாட்டோ இடைப்பெண்ணின் சரித்திரமெனக் கூறும்போது மற்ற ஆகமங்களோடுள்ள எவ்வித தொடர்பும் அப்புஸ்தகத்திற்கு இல்லை. இடைப் பெண்ணின் சரித்திரம், சரித்திரம் எனக் கூறத்தக்கதான சரியான

தெளிவும் அதற்கு இல்லை. அதைச் சரிப்படுத்துவதற்காக ஆங்காங்குள்ள ஒவ்வொரு வாக்கியங்களை கோர்த்து உறுதிப் படுத்த முயல்கின்றனர். இவையாவும் வாக்குவாதத்திற்கும் சந்தேகத்திற்கும் உரியவைகளாகவே இருக்கின்றன.

சாலோமோனின் தோல்வியைக் குறிப்பிட வேண்டுமாஞல் இதரத் தோல்விகளைக் குறிப்பிட்டதுபோலக் குறிப்பிடலாம். ஆனால் அக்காலத்தில் வேதப் புஸ்தகத்தைக் கோர்த்து ஒரே புஸ்தகமாக அமைக்க முயன்ற பரிசுத்தவான்கள் பழைய ஏற்பாட்டில் 39 புஸ்தகங்கள் அதனதன் அமைப்பிற் கேற்றபடி தலைப்பும் கொடுத்தனர். சாலமோனின் தோல் வியை ஒரு புஸ்தகமாக்கி அதற்கு தலைப்பாக ஆங்கிலத்தில் மட்டும் போதுமென தெரிந்து ஒவ்வொரு புஸ்தகத்திற்கும் சாலமோனின் பாட்டு என்ற பொருள் படவும் மலையாளத்தில் உத்தம கீதம் எனவும் தமிழில் உன்னதப்பாட்டு எனவும் பெயரிடுவார்களோ? ஒருநாளும் அவ்விதம் பெயரிடார். சாலோமோனின் காதல் என்றோ அதற்கேற்ற வேறு பெயர் களோ கொடுத்திருப்பார்களென்பது திண்ணம். ஆனால் இந்தப் புஸ்தகத்திற்கு தமிழில் உன்னதப்பாட்டு என்று பெயரிட் டிருக்கின்றனர். ஏனென்றால் வேதத்தை வெளியாக்கின நாளில் 'தேவாவியால் நிரம்பின தேவ மக்களுக்கு இந்தப் புஸ்த கத்தைப் பற்றி இடையன் இடைச்சியர் என்பவர்களின் சரித் திரம் என்ற எண்ணம் இருந்ததில்லை என்று தெரிகிறது. அப் படி இருந்திருக்குமாஞல் அதற்கேற்ற தலைப்புப் பெயரே கொடுத்திருப்பார்கள். ஆனபடியால்தான் இந்தப் புஸ்தகத் திற்கு எல்லா பாஷைகளிலும் மேன்மை தங்கிய பெயரை கொடுத்திருக்கிறார்கள் என்று தெளிவாகிறது.

தமிழ் மொழிப் பெயர்ப்பில் இந்த புஸ்தகத்திற்கு உன் னதப்பாட்டு என்று அழகான பெயரை கொடுத்திருக்கிறார் கள், இந்த பெயரை வாசிக்கும்போதே புஸ்தகத்தின் அழகு ஜொலிக்கிறது. மெய்யாகவே ஆண்டவர் இப்புஸ்தகத்தில் உன்னதத்திலுள்ள பொக்கிஷங்களை அடக்கியே வைத்திருக் கிறார். உன்னதத்திற்குரிய பொக்கிஷத்தை பூமிக்குரியதாக்கி அதன் கனத்தைக் குறைப்பது ஞானக்குறைவே ஆகும்.

ஆகவே இப்புஸ்தகமானது வரப்போகிற மணவாளனா கிய இயேசுவைப் பற்றியும் மணவாட்டி சபையைப் பற்றி யும் சபை பூரணப்படவேண்டிய விதத்தைப்பற்றியும் ஆவி யானவர் உவமான ரூபத்தில் தீர்க்கத் தரிசனமாக முன்

குறிப்பிட்ட தீர்க்கதரிசன புஸ்தகம் என்பதே எனக்குக் கிடைத்த அறிவாகும். இதை அனுசரித்தே ஆவியானவர் எனக்குக் கொடுத்த கிருபைக்குத் தகுந்தவாறு இப்புஸ்தகத் திற்கு வேத வியாக்கியானம் எழுதத் துணிந்தேன். இதனுல் கர்த்தர் மகிமைப்படுவாராக. இப்புஸ்தகம் அநேகமாயிரம் ஜனங்களுக்குப் பிரயோஜனப்படுவதற்காக கர்த்தரின் பாதம் சமர்ப்பித்து மன்ருடுகிறேன். அவருக்கே துதியும், மகிமையும் கனமும் உண்டாவதாக,

## புத்தகத் தொடக்கம்

உன்னதப் பாட்டை எழுதின சாலோமோன் இராஜா தாவீது இராஜாவின் மகன். இவர் தாயின் பெயர் பத்சே பாள். இவர் சிறு பிராயத்திலேயே இராஜாவானுர், இவர் சிறு பருவத்திலேயே இராஜாவாக இருந்தபடியால் இராஜ் யத்தை ஆளும் திராணியற்றவராக இருந்தார். இவ்வாறிருக் கும்போது ஒருநாள் "கர்த்தர் சாலோமோனுக்குத் தரிசன மானுர். அவ்வேளையில் சாலோமோனே! உனக்கு என்ன வேண்டும்" என்று கர்த்தர் கேட்டார். I இராஜா 3 : 5 அப் பொழுது சாலோமோன் இராஜா கர்த்தரை நோக்கி "ஆண் டவரே என்னை என் தகப்பன் ஸ்தானத்தில் இராஜாவாக்கி னீர். நானேவென்ருல் போக்குவரவு அறியாத சிறுபிள்ளை யாக இருக்கிறேன். இந்த ஏராளமான ஜனத்தை நியாயம் விசாரிக்க எனக்கு ஞானமில்லை. ஆதலால் இந்த ஜனத்தை ஆளத்தகுந்த ஞானத்தைத் தரவேண்டும் என்று கேட்டார். அவரது வேண்டுதலைக் கேட்ட கர்த்தர் வியந்து அவருக்கு முன் னும் பின்னுமில்லாத ஞானத்தைக் கொடுத்ததுமல்லாமல் திரளான ஐசுவரியத்தையும் கொடுத்தார் 1 இரா 3 : 7-13 இதனுல் சாலோமோன் இராஜா தேவ ஞானத்தால் நிறைந்த மனிதனுக விளங்கினுர். ஆதலால், புல், பூண்டு, மரம், மிருகம் பறவை ஊறும் பிராணிகள் இவற்றின் மீதெல்லாம் பற்பல பாட்டுகளை பாடினுர். இதனுல் இவருடைய ஞானத்தைப் பற்றி உலகமெங்கும் புகழுண்டாயிற்று. ஆதலால் இவரது ஞானத்தைக் கேட்கவும், பார்க்கவும், பலரும் பல இடங்களி லிருந்து வந்தனர். அப்படியே சேபாவின் இராஜ்ஜியஸ்திரி யும் பல கேள்விகளோடு சாலோமோனின் ஞானத்தை சோதிக்க வந்தாள். I இராஜா 10 ; 1—27 அவ்வளவுக்கதிக மான ஞானம்படைத்தவராக சாலோமோன் விளங்கினுர். ஆகவே சாலோமோன் 3000 நீதி மொழிகளையும் 1005 பாட்டு களையும் பாடியிருப்பதாகக் காண்கிறோம், I இராஜா 32:33

இந்தக் காலங்களில் வரப்போகும் மணவாளனாகிய இயேசுவைப் பற்றியும், மணவாட்டி சபையை ஆயத்தப் படுத்துவதைப் பற்றியும் தீர்க்க தரிசனமாக ஸ்திரி .புருஷன் சம்பாஷணை ரூபத்தில் உன்னதப் பாட்டை உரைத்திருக்கிறார்.

உன்னதப் பாட்டில் கூறப்பட்டிருக்கும் வாக்கியங்களை மாம்சத்தின்படி சிந்தித்தால் மனிதன் இடறுதற்கேதுவாகவே காணப்படும். ஜென்ம சுபாவமுள்ள மனுஷன் தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான் என்றும், அவைகள் அவனுக்கு பைத்தியமாகத் தோன்றுமென்றும் ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானித்து ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடு சம்பந்தப்படுத்திக் காண்பிப்பான் என்று காண்கிறோம். I கொரி 2 : 11—15.

அதோடு வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கத் தரிசனமும் சுய தோற்றமான பொருளை உடையதாய் இராதென்று முந்தி அறிய வேண்டும். II பேது 1 : 20,

இவ்வாறே நம்முடைய கர்த்தரும் பரலோகத்தின் இரகசியங்களை பூலோகத்துக்குரிய காரியங்களைக் காட்டியே விளக்கியிருக்கிறார், கலியாணவிருந்து, முத்துவலை,திராட்சத்தோட்டம் இன்னும் இவை போன்ற காரியங்களை எடுத்துக்காட்டியிருக்கிறார், இதுபோலவே உன்னதப்பாட்டான ஆவிக்குரிய முன்னேற்றம் அடைவதற்காக, சம்பாஷணை ரூபத்தில் ஆவிக்குரிய மனுஷனை தட்டி எழுப்பி அனல் மூட்ட எழுதப்பட்ட ஆவிக்குரிய புஸ்தகமென அறிந்து கொள்ள வேண்டும்.

## உன்னதப்பாட்டை பங்குபங்காய் பங்கு வைத்து படிக்கும் விதம்:—

1. முதலாம் அதிகாரம் முதலாம் வசனம் முதல் நான்காம் அதிகாரம் ஏழாம் வசனம் முடிய இரட்சிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகளை தட்டி எழுப்பிப் பூரணத்திற்கு நடத்தும் அனுபவத்தைக் காணலாம்.

2. நான்காம் அதிகாரம் எட்டாம் வசனம் முதல் ஆறாம் அதிகாரம் பன்னிரண்டாம் வசனம் முடிய பூரணமடையும்

போது சோர்வடைவதையும், மறுபடியும் உயிர்ப்பிக்கப்பட்டு பூரணப் படுவதையும்,பூரணமடைந்தோர் எடுத்துக்கொள்ளப் படுவதையும், பூரணமடையர்தோர் கைவிடப்படுவதையும் காணலாம்.

3. ஏழாம் அதிகாரம் ஆகாயமண்டலத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட மணவாட்டி அல்லது பூரணப்பட்டோர் உலகத்தில் இருக்கும் போது மணவாளனுக்காகச் செய்த ஊழியங்களை மணவாளன் புகழ்ந்துரைக்கும் அனுபவங்களை காணலாம்.

4. எட்டாம் அதிகாரமோ கைவிடப்பட்ட சபையின் அங்கலாய்ப்பையும் ஆயிரமாண்டு பூமியில் வாழ மணவாளன் மணவாட்டியோடு பூமிக்கு வரும் காட்சியையும் காணலாம்.

குறிப்பு :— 1, உன்னதப் பாட்டில் குறிப்பிட்டிருக்கும் சாலோமோன் என்பதை, சமாதானப் பிரபுவாகிய இயேசு என்றும், சீயோன் குமாரத்தி என்பதை மணவாட்டி என்றும், எருசலேம் குமாரத்தி என்பதை பரிசுத்தாவி பெற்றுபூரணப் படாதவர்கள் என்றும் வைத்து படிக்க வேண்டும்.

2. உன்னதப் பாட்டிலுள்ள வசனங்களைப் படிக்க ஆரம் பிக்கு முன்னதாகஇரட்சிக்கப்பட்டு பரிகத்தாவியின் அனுபவம் அடைந்தவனோடு கர்த்தர் பேசி முன்னேற்றி கொண்டு போ கிறுர் என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும்.

பாவத்தில் ஜீவிக்கும் அனுபவம் வேறே, இரட்சிக்கப் பட்ட அனுபவம் வேறே. பரிசுத்தாவியை பெற்றுக்கொள்ளும் அனுபவம் வேறே என்பதையும் உபதேச ரூபமாய் கற்றிருக்க வேண்டும். ஏனென்றுல் அநேகர் உபதேசத்தின் வித்தியாசத் தை விளங்கிக் கொள்ளாமல் கலப்பான உபதேசத்திற்குள் அகப்பட்டு கலங்குகின்றனர்.

பாவத்தில் ஜீவிக்கிறவன் பாவியே. பாவிகளை இரட்சிக்க இயேசு உலகத்தில் வந்தார், I திமோ 1 : 15 இந்த இயேசுவைச் பாவி விசுவாசிக்கும் போது இரட்சிப்படைகிறுன். ரோமர், 10 : 9—10. இரட்சிக்கப்பட்ட பின்னரே பரிசுத்தாவியைப் பெற்றுக் கொள்கிறுன். இரட்சிக்கப்படும் போது பரிசுத்தாவி

யைப் பெற்றுக் கொள்கிறன் என்பது தவறான போதனை யாகும். ஏனெனில் இயேசுவோடு 3½ வருடம் நடந்த சீஷர் பரிசுத்தாவிக்காகக் காத்திருந்து பரிசுத்தாவியை பெற்றனர். லூக்கா 24 : 49 அப்படியே பெந்தேகொஸ்தே நாளுக்கு பின்னரும் சமாரியர் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்ட பின்னரும் பரிசுத்தாவியைப் பெற்றுக் கொள்ள வில்லை என்று காண்கிறோம். அப். 8 : 12—14.

பரிசுத்தாவியைப் பெற்றுக் கொள்ளும் போது பரிசுத்தாவியைப் பெற்றுக் கொண்டேன் என்பதற்கு அடையாளமாக அந்நிய பாஷை அவனில் கிரியை செய்கிறது. அந்நிய பாஷை இருவிதமாக கிரியை நடப்பிக்கிறது.

ஒன்று அந்நிய பாஷை வரம்? மற்றொன்று அந்நிய பாஷை அடையாளம். அந்நிய பாஷை வரமாக கொடுக்கப் படாவிட்டால் எப்போதும் அந்நிய பாஷையில் பேசுவதில்லை. ஆவியினால் நிரப்பும் போது மாத்திரமே அந்நிய பாஷை அடையாளம் அவனில் காணப்படும். இதை படித்து அறிந்து கொள்ள வேண்டும். இவை இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தையும் அறிந்து கொள்ள வேண்டும், இவ்வாறு பரிசுத்தாவி பெறும் போது தான் மனித உள்ளத்தில் தேவ அன்பு ஊற்றப்படுகிறது. ரோமர் 5 : 5. இவ்வித அன்பினால் நிரப்பபட்ட விசுவாசி அல்லது சபையே தேவனுடைய அன்பை நாடுவாராயிருக்கும். அவ்வித, அன்பை நாடுகிறபடியினாலேயே மணவாளனைப் பார்த்து மணவாட்டி சொல்லுவதென்னவென்றால்:—

## முதலாம் அதிகாரம்

உன்ன 1 : 2 அவர் தமது வாயின் முத்தங்களால் முத்தமிடுவாராக :— மணவாட்டி நிலவரத்தை நாடுகிற தேவனுடைய பிள்ளை மணவாளனாகிய இயேசுவின் மீதுள்ள அன்பை விளங்கப்பண்ணுகிறன். ஏனெனில் மணவாட்டிக்கு மணவாளன் மீது அன்பு பெருகிவிட்டது. ஆனபடியால் மணவாட்டி இப்போது மணவாளனின் முத்தத்தை நாடுகிறாள். அன்பு அதிகரிக்கும் போது தான் முத்தமிடுவார்கள். நாம் ஒரு குழந்தையை தூக்கும்போது குழந்தையின்மீது அன்பும் பாசமும்பெருகுகிறது. அப்போது முத்தமிடுகிறோம். ஏனெனில் அன்பிலிருந்தே முத்தம் உருவாகிறது. ஆதலால் முத்தமிடுகிறோம்.

வேத புஸ்தகத்தில் இருவகைமுத்தத்தைக் காணலாம்· அவை வஞ்சனையின் முத்தம், அன்பின் முத்தம் ஆகியவை. நீதி 27:6.

**வஞ்சனையின் முத்தம்:-** இது யூதாசின் முத்தம். யூதாஸ் இயேசுவோடு 3½ வருடம் நடந்தான். அருமையான போதகங்களைக் கேட்டான். சீஷன் என்ற பெயரைப் பெற்றான். எனினும் பொருளாசைக்கு இடங்கொடுத்தான். ஆகையால் வேதபாரகர், பரிசேயர் இவர்களை அண்டினான். பிராண பிரியனைக் காட்டிக்கொடுக்க 30 வெள்ளிக் காசைப் பெற்றான். எல்லா ஒழுங்குகளையும் செய்து கொண்டு இயேசுவை அண்டினான். ரபீ நீர் வாழ்க என்று கழுத்தைக்கட்டி முத்தமிட்டான் இதுவே வஞ்சனையின் முத்தம். பயங்கர கொலை பாதகன் கழுத்தைக் கட்டி முத்தமிட்டான். முடிவாகச் சம்பவித்தது என்னவென்றால், அவன் சமாதானத்தை இழந்தான். கழுத்தில் கயிற்றைக் கட்டி மரத்தில் தொங்கினான். கயிறு அறுந்து கீழே விழுந்தான். அவன் வயிறு வெடித்தது பரிதாபகரமாக மரித்தான். வஞ்சனையின் முத்தமானது முடிவில் அழிவையே உண்டு பண்ணிற்று.

இவ்வாறே தாவீது இராஜாவின் குமாரன் அப்சலோம் எழும்பினான். அப்சலோம் அழகில் சிறந்தவன் என்றாலும் தன் தம்பியாகிய அம்னோன் செய்த தப்பிதத்திற்காக அவனைக் கொன்றான், (II சாமு 13 அதி) இதனால் தன் தகப்பனாகிய தாவீதால் தண்டிக்கப்பட்டான். தகப்பன் தன்னைத் தண்டித்ததை அப்சலோம் பகையாக மனதில் வைத்துக் கொண்டு தகப்பனின் சிங்காசனத்தைக் கவிழ்த்து தகப்பனைக் கொலை செய்யத் தீர்மானித்தான். அதற்காக அப்சலோம் தாவீதின் கைக்கீழுள்ள ஜனங்களைச்கைவசமாக்க முயன்றான், ஆகையால் அவன் ஜனங்களைக் வழிகளிலே காணும்போதெல்லாம் கட்டி முத்தமிட்டும் இதமான வார்த்தைகளைப்பேசியும் அவர்களின் வழக்குகளை தீர்த்துக் கொடுத்தும் தகப்பனாகிய தாவீதைக் குற்றப்படுத்திப் பேசி இஸ்ரவேலின் எல்லா ஜனங்களின் இருதயங்களையும் கவர்ந்து கொண்டான் II சாமு 14 ; 1-6 இவ்வாறிருக்க ஒருநாள் அப்சலோம் சடுதியாக திரள்படையைச் சேர்த்துக் கொண்டு தாவீதைக் கொலை செய்யப் புறப்பட்டான். இதைக் கண்டதும் தாவீது தனது ஜீவனைக் காப்பதற்காகக் காட்டிற்கு ஓடினான். தாவீது காட்டிற்குப் போகும்போது அழுது கொண்டே போனான். முடிவாக தாவீதின் சேனைக்கும் அப்சலோமின் சேனைக்கும் யுத்தம் நடந்தது. அப்சலோம் தோற்கடிக்கப்பட்டான். அவன்

தோற்று ஓடும்போது அவனது தலைமயிரை கருவாலி மரம் பிடித்துக் கொண்டது. அவன் ஏறிவந்த கழுதையோ ஓடி விட்டது. அப்சலோமோ கருவாலி மரத்தில் தொங்கிக் கொண்டு நின்றான். இதைக் கண்ட தாவீதின் போர் வீரர் அப்சலோமை ஈட்டியால் குத்திக்கொன்றனர். அப்சலோமோ மரித்தான். பாருங்கள்! வஞ்சனையான முத்தம் முடிவில் அழிவையே உண்டாக்கிற்று. ஆகையால் வஞ்சனையான முத்தத்திற்கு விலகியே ஜீவிக்க வேண்டும். உள்ளத்தில் பகையை வைத்துக்கொண்டோ, யூதாசைப் போல் பொருளாசைக்காகவோ அப்சலோமைப் போல் காரிய சித்திக்காகவோ அன்புள்ளவர்களைப் போல் நடித்து முத்தம் செய்வதுபாவம் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். முடிவாக அந்த வஞ்சக சுபாவம் அவர்களுக்கே தீமையை உண்டாக்குமென்று அறிந்து கொள்வோமாக.

**அன்பின் முத்தம்**

இது உள்ளத்திலிருந்து எழும்பி வரும் முத்தம். இந்த முத்தமே யாவருக்கும் தேவையானது. வீரனாகிய தாவீது கோலியாத்தைக் கொன்று இஸ்ரவேலுக்கு ஓர் பெரிய இரட்சிப்பைக் கொண்டு வந்தான். இதைக் கண்ட சவுலின் குமாரனாகிய யோனத்தானின் இருதயம் தாவீதோடு ஒட்டிக் கொண்டது. ஆனால் சவுல் இராஜாவின் இருதயமோ தாவீதைப் பகைத்தது. இந்தப் பகையானது நாளுக்கு நாள் பெருகித் தாவீதைக் கொன்று போடத்துணிகரம் கொண்டது இதையறிந்த சவுல் இராஜாவின் குமாரனாகிய யோனத்தான் தனது. நண்பனாகிய தாவீது மேலுள்ள பாசத்தால் அவனைக் கட்டி முத்தமிட்டு தன் தகப்பனின் வஞ்சகத்தை அவனுக்கு அறிவித்தான். I சாமு 20 : 41 இதனால் தாவீது சவுலின் வஞ்சகத்திற்குத் தப்பிக்கொண்டான். இதுவே அன்பின் முத்தம். சிநேகிதனை நேசிக்கும் நேசமென்பது உள்ளத்தில் அன்பு கூருவதாகும். இவற்றையே மணவாட்டி மணவாளனில் விரும்புகிறாள். மணவாளன் என்னை நேசிக்க வேண்டுமென்பதே விருப்பம். ஏனென்றால் அவரைப் பற்றிய அன்பு அவள் உள்ளத்தில் ஊற்றப் பட்டிருக்கிறது. அந்த அன்பானது பெருக் கெடுத்தது. ஆதலால் அவள் அவரின் முத்தத்தை வாஞ்சிக்கிறாள். அம்முத்தமே அன்பின் கிரியை. உமது நேசம் திராட்சரசத்தை விடவும் இன்பமானது.

மணவாட்டி மணவாளனின் அன்பால் நிறைந்தவுடன் மணவாளனின் அன்பை எதற்கு ஒப்பிடலாம் என சிந்தித்

தாள். அப்பொழுது திராட்சரசமே மேலானது என அறிந்தாள். ஆதலால் அவரது அன்பை திராட்சரசத்தோடு உவமானமாகப் பேசினுள்.

பலஸ்தீனு தேசத்தில், உலக மக்கள் திராட்சரசத்தை அதிகமாக விரும்புவார்கள். விருந்துவேளையிலும் கலியாண நாட்களிலும், உல்லாச நாட்களிலும் அதிகமாக திராட்ச ரசத்தை உபயோகப் படுத்துவார்கள். எஸ்தர் 1 : 10; யோவா 2 : 1 - 11 திராட்சரசத்தால் அடையும் இன்பம் சற்று நேரத்திற்குள்ளாக மாறிப்போய் விடும். ஆனுல் இயேசு மணவாளனேடு அடையும் இன்பமோமாற்றமில்லாதது. ஆனபடியால்தான் உமது நேசம் திராட்சரசத்தைப் பார்க்கிலும் இன்பமானது என்கிருள்.

## திராட்ச ரசத்தால் அடையும் பலன்

*1* **திராட்சரசம் மனிதரை மகிழ்விக்கும் தன்மை வாய்ந்தது:—** *சங்கீ 104 : 15; பிரசங் 10 : 19* மனிதன் குடும்ப பாரத்தாலும், உலக நெருக்கங்களினுலும், வறுமையாலும், மரணங்களாலும் நடத்தப் படும்போது கலங்கி தவிக்கிருன். அவ்வேளையில் மனிதன் சமாதானத்தை இழந்து தற்கொலை புரிவதும் பைத்தியக் காரனுக அலைவதும், இனஜனபந்துக்களைத் தள்ளிவிட்டு காட்டிற்கு ஓடுவதும், நாடுவிட்டு நாடு சென்று பிச்சைக் காரனுக அலைவதுமான காட்சிகளைக் காணலாம். அவ்விதமான கவலைக்கு தப்பி ஆறுதலடைந்து ஜீவிப்பதற்காகவே உலக மனிதர் திராட்சரசத்தையாவது குடித்து ஆறுதலைக் காண முயலுகின்றனர். இந்த திராட்சரசத்தைக் குடிக்கும் போது அவனது கவலை சற்று மாறினுலும் திராட்ச ரச வெறி நீங்கும் போது மறுபடியும் சஞ்சலம் உண்டாகிறது. சுயபுத்திமயங்கும் போது மாத்திரம் கவலை நீங்கி ஜீவிக்கிருன். அதனுல் தான் ஞானியும் மனங்கசந்தவனுக்கு திராட்சரசம் கொடு எனக்கூறினுர். *நீதி 31 : 6* திராட்சரசம் குடித்தால் அவன் கலக்கம் நீங்கி அப்போது சற்று மகிழ்ச்சி அடைகிருன். ஆனுல் இந்த உலக வாழ்க்கையில் இயேசுவின் அன்பின் ஆவியால் நிறையப்படும்போதோ அவனது எல்லா கவலையும் அவனை விட்டு பறந்து போகிறது. இந்த அனுபவம் திராட்சரசத்தால் அடையும் அனுபவம் போன்றதல்ல. திராட்சரசத்தால் அடையும் மகிழ்ச்சி கொஞ்ச நேரம் மாத்திரம். ஆனுல் இயேசுவாலடையும் மகிழ்ச்சியோ எடுபடாததும், மாற்றமில்லாததும், எந்த கவலையிலும் மகிழ்விக்கும்

தன்மை வாய்ந்ததுமே. இதுவே இயேசுவின் அன்பால் அடையும் மேன்மை.

**2 புது திராட்சரசம் கன்னிகளை வளர்க்கும் தன்மை வாய்ந்தது:—** சகரியா 9 : 7. பலவீனப்பட்டு இரத்தக் குறைவால் ஜீவிக்கிறவர்கள் திராட்சரசம் குடித்தால் சரீர பலவீனம் நீங்கி இரத்தத்தை ஊறச்செய்வித்து, சரீரத்தை வளரச் செய்கிறது. அப்படியே பவுலும் தீமோத்தேயுவுடன் உனக்கு அடிக்கடி நேரிடும் பலவீனங்களினிமித்தம் கொஞ்சம் திராட்சரசம் கூட்டிக் கொள் என்கிறார். I தீமோ 5 : 23 இந்த திராட்சரசம் யாவும் புதிய ரசமாகும். புளித்ததோ மதுவேறினதாகும்.

திராட்ச ரசத்தால் சரீரம் வளருவது போல ஆவிக்குரிய ஜீவியமும் தினமும் வளர வேண்டும். வளர்ச்சி இல்லா விட்டால் குன்றிப் போகும். அநேகர் வளர்ந்தஜீவியம் செய்யாததால் வனாந்தரத்திலுள்ள கறளையான செடியைப்போல வறண்டு போகின்றனர் எரேமியா 17 : 7. இவ்வித ஜீவியம் கர்த்தரால் வெறுக்கப் படும் ஜீவியமே. ஒவ்வொரு நாளும் புதுப்பிக்கப் படவேண்டும். புதிய எண்ணெயால் அபிஷேகம் பண்ணப் படவேண்டும். அப்படியானால் மாத்திரம் பரிசுத்தமடைந்து புதுப்பெலன் பெற்று ஜீவியத்தில் வளர்ந்து போகலாம். இதுவே புது திராட்சரசத்தின் அனுபவம்.

**3 திராட்சரசம் பராக்கிரமம் செய்யும்:—** சங் 78 : 65. திராட்சரசம் சரீரத்தை வளர்த்துமாத்திரமல்லபெலத்தையும் கொடுக்கும். பெலன் கிடைக்கும்போது பாரங்களை தூக்கவும், விரைவாய் நடக்கவும் சத்துருவோடு போராடவும் செய்யலாம். விசுவாசி ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ந்து போகும் போது அதிகமான போராட்டம் உண்டு. பிசாசு மாமிச உலகம் வான மண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகள் இவற்றோடெல்லாம் போராட வேண்டியதாயிருக்கிறது. எபே. 6 : 12. இந்த போராட்டத்திலெல்லாம் எதிர்த்து ஜெயம் அடைய வேண்டுமானால் பெலன் வேண்டும். இந்த பெலனே பரிசுத்தாவியினாலுண்டாகும் பெலன். அப் 1 : 8; ஏசா 40 : 29, 31 இவ்விதபெலனை பரிசுத்த பவுல், பேதுரு, யாக்கோபு இவர்கள் பெற்றிருந்த படியால் விசுவாசத்தினாலேயே எல்லாவற்றையும் ஜெயித்தார்கள். நம்பிக்கையோடே ஓட்டத்தை ஓடிமுடித்தார்கள். II தீமோ 4 : 7. இதுவே திராட்சரசத்தால் அடையும் பெலன்.

**4 புது திராட்சைரசம் புது துருத்திகளையும் பீறப்பண்ணும் சக்தி வாய்ந்தது:—** யோபு 32 : 18 - 19. திராட்சைரசத்திற்குள் நெருக்கும் வல்லமை அடங்கியிருக்கிறது. ஆனபடியால் திராட்சைரசம் வைத்துப்பாதுகாக்கும் துருத்திகளையும் கிழித்துவிடுகிறது. முற்காலங்களில் குப்பிகளுக்குப் பதிலாக துருத்திகளையே உபயோகித்து வந்தார்கள். அதற்காக கட்டியான துருத்திகளை உபயோகிப்பது வழக்கம் அதோடு திராட்சைரசம் குடித்த உடன் மனிதனை தைரியப் படுத்தி பேசுவிக்கவும் செய்விக்கிறது.

இந்த திராட்சைரசத்தைப் பரிசுத்தாவியின் வல்லமைக்கு ஒப்பிட்டிருக்கிறார். பரிசுத்தாவியானவர் வல்லவரே. இந்தசக்தியே ஆத்துமாக்களோடு சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டுமென வற்புறுத்தும் சக்தி. இந்த வல்லமையை பெற்றவன் சுவிசேஷத்தை அறிவிக்காதிருக்க முடியாது. ஏனென்றால் ஆவியானவர் தூண்டி எழுப்பி ஏவிக் கொண்டேயிருப்பார். இந்த வல்லமையிருப்பதால் தான் சுவிசேஷத்தினால் வரும் உபத்திரவங்களையும் அடிகளையும் சிறைச்சாலைகளையும் அனுபவிக்கிறார்கள். அதிகாரிகளால் இந்த நாமத்தைக்குறித்து பேசக்கூடாதென்று பயமுறுத்தப்பட்டபோதிலும் பயப்படாமல் இடைவிடாது பிரசங்கித்தார்கள் அப் 5 : 40-42 ஏனென்றால் பரிசுத்தாவியின் வல்லமை எப்போதும் நெருக்கிக்கொண்டேயிருந்தது. II கொரி 5 : 14 இதுவே திராட்சைரசத்தின், வல்லமை. இந்த இன்பத்தை மணவாட்டி அனுபவித்துக் கொண்டேயிருக்கிறாள். ஆதலால்தான் உமது நேசம் திராட்சைரசத்தைப் பார்க்கிலும் இன்பமானது என்கிறான்.

## 3-ஆம் வசனம்

**உமது பரிமளதைலம் இன்பமான வாசனையுள்ளவைகள் :—**

மனிதர்கள் பரிமள தைலத்தை பலவிதமான காரியங்களுக்காக உபயோகப்படுத்துவார்கள். பரிமள தைலமானது வாசனை கொடுக்கிற பொருளானதால் பெரியோரும், சிறியோரும், ஐசுவரியவான்களும், ஏழைகளும் விரும்புவார்கள். கலியாண நாட்களிலேயும், விருந்துகளிலும், உல்லாசப் பயணம் போகும்போதும், பண்டிகை கொண்டாடும்போதும் அதிகமாக

உபயோகப்படுத்துவார்கள். இப்படிப்பட்ட பரிமள தைலத்தை மணவாட்டி உலக ரட்சகராகிய இயேசுவோடும் அவருடைய வல்லமையோடும் ஒப்பிட்டுக் கூறுகிறாள்.

### 1 பரிமளதைலம் விலையேறப் பெற்றது

பரிமள தைலமானது அதிக விலையேறப் பெற்றபொருள். அதைக் காட்டிலும் விலையேறப் பெற்றது இயேசுவின் இரத்தமாகும். I பேதுரு *1 : 19.* இவ்விலையேறப்பெற்ற இரத்தத்தை அழிந்து போகிற பொருட்களினால் உண்டாக்கினதுமல்ல; கூட்டிச்சேர்த்ததுமல்ல. விலைமதிக்க முடியாத மனிதனின் ஆத்துமாவை மீட்பதற்காக பரலோகத்தின் தேவனே பூலோகத்தில் வந்து, தமது விலைமதிக்க முடியாத ஜீவனைக் கொடுத்தார். அவருடைய ஜீவனே இரத்தம். பரிமள தைலம் இயேசுவின் விலைமதிக்கப்படாத இரத்தத்தையே காட்டுகிறது.

### 2 பரிமளதைலம் வாசனையுள்ளது யோ. 12: 3,

பரிமள தைலம் பூசினவுடன் சுற்றிலுமிருப்பவர்களுக்கு வாசனை பரிமளிக்கிறது. அதற்காகவே சரீரத்தில் மனிதர்கள் பரிமள தைலத்தைப் பூசுகின்றனர். இந்த வாசனையைக் காட்டிலும் மேன்மை தங்கிய வாசனையைக் கொடுக்கிறவரே இயேசு. அவர் எங்குசென்றாலும் அவரது கிரியை வாசனை வீசிக்கொண்டே இருந்தது. அவரது வாசனையை முகர்ந்துகொள்ள திரள் ஜனம் ஓயாமல் அவரைப் பின்தொடர்ந்துகொண்டே இருந்தனர். அவரது வார்த்தை எப்போதும் கிருபை பொருந்தினதாகவே இருந்தது. அவரது அற்புத செயல்கள் வியக்கத்தக்கதே. ஆதலால் அவரது ஜீவ வார்த்தைகளைக் கேட்டு ஆறுதலடையவும், சரீர வேதனை நீங்கி சொஸ்தமடையவும் ஜனங்கள் பின்தொடர்ந்து கொண்டே இருந்தனர். மாற் *2:1—6.* இதுவே பரிமள தைலத்தின் வாசனை.

### 3 பரிமளதைலம் மதிப்பிற்குறியது யோ 12: 5,

பரிமள தைலம் வாசனை கொடுக்கிறபடியால் யாவரும் அதை மதித்து கனப்படுத்துவார்கள். மூடனோ அதை அறியான். இயேசுவாகிய பரிமள :தைலத்தைக் கனப்படுத்தாத உலகமே கிடையாது. அவரது போதனைக்கும் தியாகத்திற்

கும் உலகில் முதலிடமே கொடுக்கப்பட்டிருக்கிறது. உயிர்த் தெழுதலிலும் அவர் முதலிடமே பெற்றிருக்கிறார். I கொரி 15:20. அவரை தாழ்த்திப் பேச ஒரு மதத்தினருக்காவது ஒரு மத கர்த்தாக்களுக்காவது இயலாது. தாழ்த்துகிறவ னுண்டானால் தேவனில்லை என்று கூறும் மதிகேடனே. அவரை கொலைக்கு ஒப்புக்கொடுத்த நியாதிபதியாகிய பிலாத்தும், அவரோடு சிலுவையில் அறையப்பட்ட ஒரு கள்ளனும் அவ ரது சிலுவை மரணத்தைப் பார்த்துக்கொண்டிருந்த நூற் றுக் கதிபதியும் அவரைக்கண்ட பிசாசும் அவரை புகழ்ந் துரைத்ததைக் காணலாம். ஏனென்றால் இயேசு மதிப்பிற் குரிய பரிமள தைலமே.

## 4 பரிமளதைலத்தை துர்வாடை நீங்க உபயோகிப்பார்கள்

உலகில் அறிவாளிகளானவர்கள் அடிக்கடி மனித சரீ ரத்திலிருந்தெழும்பும் துர்வாடை நீங்கவோ, வெளியிலிருந்து எழும்பி வரும் துர்வாடைக்கு விலகவோ பரிமள தைலத்தை உபயோகப் படுத்துவார்கள். இவ்விதமாகவே இயேசுவாகிய பரிமள தைலத்தை ஒருவன் உபயோகித்தால் அவனது பாவ சரீரத்திலிருந்தெழும்பும் பாவ நாற்றம் நீங்கிப் போகவும் துர்ப்போதனையால் ஏற்படும் பாவத் தன்மைகளுக்கும் விலகி ஜீவிக்கவும் உதவுகிறது. சுவிசேஷத்திற்கு சத்துருவும் கொலை பாதகனுமாகிய சவுலின் குணத்தை மாற்றி அவனை நீதி மானாக்கி வாசனை வீசச்செய்தது, இந்த இயேசுவாகிய பரி மள தைலமே. துன்மார்க்க ஸ்திரீயாகிய சமாரிய பெண்ணை சன்மார்க்க பெண்ணாக மாற்றியதும் இந்தப் பரிமளதைலமே. இவ்வாறாக எண்ணிறந்த பாவிகளை இரட்சித்து பாவத் தன் மைகளை எல்லாம் மாற்றியதும் இன்னும் மாற்றிக்கொண்டே இருக்கிறதும். இந்த பரிமள தைலமே. இவ்வளவு வல்லமை படைத்த பரிமள தைலமாய் விளங்குவது இயேசுவின் நாமமே யல்லாமல் வேறொரு நாமமுமில்லை அப். 4:12. அவரது நாமமே எந்த மனிதனையும் பிரகாசிப்பிக்கும் மெய்யான ஒளி யோ. 1 : 9. இந்த ஒளியாகிய இயேசுவே துர்வாடையை நீக்கும் பரிமள தைலம்.

## 5 பரிமளதைலம் இருதயத்தை களிப்பாக்கும் நீதி 27 : 9.

பரிமள தைலத்தை ஒருவன் பூசினவுடனே அவனது இரு தயத்திற்குள் ஒருவித களிப்பு உண்டாகிறது. இக்களிப்பை ஒரு வனுடைய உட்கருத்தான ஆலோசனையோடு ஒப்பிட்டிருக் கிறார். ஆகவே எப்படிப்பட்ட மனிதனுடைய உள்ளத்தையும்

களிப்பாக்கத் தக்க நல்ல ஆலோசனை இயேசுவினிடமே இருக்கிறது. ஆதலால் இயேசுவுக்கு ஆலோசனைக் கர்த்தர் என்ற நாமமும் உண்டு ஏசா. 9 : 6. அவரது ஆலோசனை மனிதனுக்கு இம்மைக்கும் மறுமைக்கும் போதுமானவைகளே. நான் உனக்கு போதித்து நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன். உன்மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன் என்கிறார். சங். 32 : 8. அவருடைய ஆலோசனையைக் கேட்டு ஜீவிக்கிறவன் இடறான். அவருடைய ஆலோசனையைக் கேட்குந் தோறும் சஞ்சலம் அகன்றுபோம். சந்தோஷமும் மகிழ்ச்சியும் பெருகும். ஆதலால் அவருடைய ஆலோசனைக்கே காத்திருக்க வேண்டும். தாவீது இராஜா அவரது ஆலோசனையைக் கேட்டு ஜீவித்தபடியால் எல்லா யுத்தத்திலும் வெற்றி பெற்றார். ஆதலால் அவரது ஆலோசனை உள்ளத்தில் மகிழ்ச்சியை உண்டாக்கும் பரிமள தைலம் என்பதை அறிய வேண்டும்.

**உமது நாமம் ஊற்றுண்ட பரிமள தைலம்:-**

பரிமள தைலமென்று மணவாளனைப் புகழ்ந்த மணவாட்டி இப்போது ஊற்றுண்ட பரிமள தைலம் என்கிறாள். ஏனென்றால் இயேசுவின் நாமத்தை தண்ணீரை ஒரு பாத்திரத்திலிருந்து மறுபாத்திரத்திற்கு ஊற்றிக்கொடுப்பதுபோல், மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கலாம். அதாவது ஒருவன் இன்னொருவனுக்கும், அவன் இன்னொருவனுக்கும், அவன் இன்னொருவனுக்குமாகக் கொடுத்து அநேகரை இயேசுவண்டை இழுத்துக் கொள்ளலாம். இவ்விதமாய் வாசனைக்கொடுக்கும் இயேசுவை மற்றவர்களுக்கு, சாட்சி கூறி இயேசுவண்டை சேர்த்துக்கொண்டே யிருப்பார்கள். இதனால் அநேகர் இரட்சிக்கப்படவும் தேவனை அறியவும் ஏதுவாகிறது. ஏனென்றால் அவர் ஊற்றுண்ட பரிமள தைலமே.

**1 அற்புதத்தில் ஊற்றுண்ட நாமம்:—**

முதலாம் நூற்றாண்டில் இயேசுவின் நாமத்தில் பிசாசுகளைத் துரத்தி வியாதியஸ்தர்களைக் குணமாக்கினது போல, இருபதாம் நூற்றாண்டிலும் கிரியை செய்துகொண்டே இருக்கிறார். அவரது வருகைமட்டும் அவரது அற்புதக் கிரியை நின்றுபோவதில்லை. ஆசீர்வாதத்தை என்றும் கொடுத்துக்கொண்டே யிருக்கிறார். ஆதலால் அவரது நாமம் ஊற்றுண்ட தைலமே.

**2 பாவிகளை இரட்சிக்கிறதில் ஊற்றுண்டநாமம்**

அன்று எப்படி பாவிகளை இரட்சித்தாரோ அப்படியே இன்றும் பாவிகளை இரட்சித்துக்கொண்டேயிருக்கிறுர். உலகம் உள்ளளவும் பாவிகளை இரட்சித்து பரிசுத்தவான்களாக்கிக் கொண்டே இருப்பார். அதுமாத்திரமல்ல பரிசுத்தவான்களாக்கப்படுகிறவர்கள் மூலமும் தம்முடைய கிரியையைப் பகர்ந்து கொடுப்பதுபோல ஆத்துமாக்களை இரட்சித்துக் கொண்டே யிருப்பார். அவரது கிரியையானது கொஞ்ச நாட்களுக்கோ கொஞ்ச கர்லங்களுக்கோ குறிக்கப்பட்டதல்ல. எக்காலத்திலும், எல்லா வேளைகளிலும், எல்லாதேசங்களிலும் கிரியைகளை நடப்பித்துக்கொண்டே இருப்பார். இதுவே ஊற்றுண்ட பரிமளதைலமாகும்.

**கன்னியர்கள் உம்மை நேசிக்கிறுர்கள்.**

கன்னிகை என்பது புருஷனுக்கு வாழ்க்கைப்பட பக்குவமானவர்களாகும். இது இயேசுவை நாயகனுக்குவதற்கு தகுதியாக்கும் மீட்பின் முத்திரையாகிய பரிசுத்தாவியை பெற்றவர்களாகும். எபே. 1:13,14. அவர்களுக்கே மணவாளனுகிய இயேசுவை நேசிக்கும் இருதயம் இருக்கும். ரோமர். 5 : 5. ஆதலால் அப்படிப்பட்டவர்கள் இயேசுவை அதிகமாய்நேசித்து அவரை பின்பற்ற தீர்மானிப்பார்கள். ஒருவன் மணவாளனுகிய இயேசுவைப் பின்பற்ற தீர்மானிக்கும் போதே மிகுந்த உபத்திரவம் ஆரம்பிக்கிறது. அப். 9:15—16, பிலி. 1:29—30. இன ஜனபந்துக்களால் வெறுக்கப்பட்டு எல்லாராலும் பகைக்கப்பட்டு, பாடுகளின் வழியாய் நடத்தப்படும் போது யாருக்குத்தான் இயேசுவை பின்பற்றக் கூடும்? அவரது அன்பால் நேசிக்கப்படும் கன்னிகைகளுக்கு மாத்திரமே அவரைப் பின்பற்ற கூடும். அவ்விதமான பயங்கர உபத்திரவத்தின் வழியாய் இயேசுவை பின்பற்றிச் செல்லும் விசுவாசிகளைப் பார்த்தே கன்னியர்களும் உம்மை நேசிக்கிறுர்கள் என்கிறுள்.

## 4-ம் வசனம்

**என்னை இழுத்துக் கொள்ளும்.**

இது ஓர் பிரதிஷ்டையின் அனுபவம். தான்பெற்ற ஆசீர்வாதத்தில் திருப்திப்படவில்லை. இன்னும் இழுத்துக்

கொள்ளப்படவே ஆசிக்கிறாள். அதற்காகத்தான் தனது பிரதிஷ்டையை புதுப்பித்துக் கொடுக்கிறாள். ஏனென்றால் கர்த்தருக்காக உபயோகப்படவேண்டுமானால் ஏராளமான கிருபைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும். கிறிஸ்தவ ஜீவியத்தில் மட்டுப்படுத்தும் அனுபவங்களிலிருந்தால் ஆவிக்குரிய ஆழத்தில் கடந்துபோக முடியாதென்றும் மாமிசத்திலும் ஆவியிலுமுண்டான அசுசி நீங்கப்பட்டு பூரண பரிசுத்தமாகுதலைப் பெற்றுக்கொள்ள முடியாதென்றும் அறிந்துகொள்ளுகிறாள். ஆதலால் பூரணத்திற்காக ஒப்புக்கொடுத்து என்னை இழுத்துக்கொள்ளுமென கெஞ்சுகிறாள்.

### உமக்கு பின்னே ஓடிவருவோம்

ஒருவனைக் கர்த்தர் ஆவிக்குரிய அனுபவத்தில் இழுத்துக் கிருபையால் நிரப்பும்போது அவனால் அநேகர் ஆதாயம் பண்ணப் படுவார்கள். சமாரியா நாட்டில் ஒரு சமாரிய ஸ்திரியை இழுத்தார். அநேக சமாரியர் கிறிஸ்துவை விசுவாசிக்கக் காரணமானாள். பின்னரும் சமாரியா நாட்டில் அந்தக் கிரியை தொடர்ந்து நடந்துகொண்டே இருந்தது. ஆதலால் அநேகர் விசுவாசிகளானார்கள். அப். 8ம் அதிகாரம். இந்த அனுபவங்களை மணவாட்டி அறிந்திருந்தாள். ஆனபடியால்தான் என்னை இழுத்துக்கொள்ளும். அதாவது பரிசுத்தமாக்கும். அப்போது அநேகர் உம்மண்டையில் வருவார்களென்று ஜெபித்தாள் II தீமோத் *2:20—21.*

### இராஜா தமது அறைகளில் அழைத்துக்கொண்டு வந்தார்

இராஜ அறையின் ஜீவிதம் என்பதுதனி ஜெப ஜீவியத்தைக் காட்டுகிறது. இது மணவாளனாகிய இயேசுவோடு தனி ஜெபத்தில் உறவாடிப் பழகும் அனுபவமாகும். பலர் கூடிப் பகிரங்கமாய் ஜெபிக்கும் அனுபவம் வேறே, மணவாளனோடு தனித்து ஜெபிக்கும் அனுபவம் வேறே. இப்போது மணவாளன், மணவாட்டியைத் தனி ஜெபத்தில் பழக்குவிக்கிறார். அதற்காக மணவாளன் தனி அறையின் ஜீவியத்திற்கு மணவாட்டியை அழைத்துச் செல்கிறார்.

## தனியறையின் ஜீவியம்

### 1 குற்றங்களை உணர்த்துமிடம்

தனிமையாக மணவாளனோடு உறவாடும்போது ஆவிக்குரிய ஜீவியத்தின் குறைவுகளை உணர்த்திக் கொடுக்கிறார்.

அதாவது ஆவிக்குரிய பெருமை, மற்றவர்களை அற்பமாய் எண்ணுவது மற்றோர் குறைகளைப்பேசுவது, அலப்பி நடப்பது, பொறுமையில்லாமல் வெடுவெடுப்பாய் பேசுவது, மூர்க்கமாய் கண்டிப்பது, குறைகளை மன்னித்து மறக்காத தன்மை, இவைபோன்ற துர்க்குணங்களை தனிஜெபத்தில் உணர்த்திக் கொடுக்கிறார். இதை உணர்ந்த மணவாட்டி அறிக்கையிட்டு சுத்திகரிக்கப் படுகிறாள். இதற்காகவே மணவாளன் தனி அறைக்கு அழைத்துச் செல்கிறார்.

## 2 இரகசியம் பேசுமிடம்

தனி ஜெபத்தில் தரித்திருந்து மணவாளனோடு சம்பாஷிக்கும்போது மணவாளன் வேதத்தில் மறைந்திருக்கும் இரகசியங்களை விளங்கப்பண்ணுகிறார். வசனத்தை அறியும் அறிவை திறந்து காட்டிப் போதிக்கிறார். அதுமாத்திரமல்ல சபையை நடத்தும் விதம், வழக்கு தீர்க்கவேண்டிய மாதிரி, உபதேசத்தை விட்டு விலகி ஜீவிக்கிறவனை உணர்த்துவித்து திருப்பவேண்டிய ஆலோசனை—இவ்விதமான ஆவிக்குரிய இரகசியங்களைப் படிப்பிக்கவே தனி அறைக்கு அழைத்துச் செல்கிறார்.

## 3 தனியறையின் ஜீவிதம் ; மணவாளனோடு மகிழும் ஜீவிதம்

தனி ஜெபத்திலிருக்கும்போது ஆசை தீருமட்டும் மணவாளனைப் போற்றலாம், புகழலாம், ஆவியில் மகிழலாம். சங். 104:34. அவரது அன்பின் இன்பத்தில் களிகூரலாம். பூன்னர் மனுமக்களோடு மகிழ்ந்துக்கொண்டிருந்த கர்த்தர், (நீதி 8:31) நம்மோடும் மகிழ்வதை நாம் உணரலாம். இந்த மகிழ்ச்சியின் அனுபவத்தைப் பெற்று அனுபவிக்கும் இடமே தனி அறையின் ஜீவியம். இதற்காகவே தனி அறைக்கு அழைத்து செல்கிறார்.

## 4 தேவைகளைக் கேட்டு பெற்றுக் கொள்ளுமிடம்:-

மணவாளனோடு மகிழ்ந்து ஜீவிக்கும்போது நமக்குத் தேவையானதை அவரிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். எப்படியெனில் அவரோடு உறவாடும்போது குறைகளை உணர்ந்து விட்டுவிட தீர்மானிக்கிறோம். அப்பொழுது குறை நீங்கி, பெற்றுக் கொள்ளத் தகுதியுள்ளவர்களாகிறோம். அவ்வேளை எவற்றைக் கேட்கிறோமோ அவற்றிற்கு உடனே பதிலும் அளிக்கிறார். தானி. 9:23 இவ்விதமான மேன்மை

யான அனுபவத்தைக் கொடுக்கவே தனி அறைக்கு அழைத்துச்செல்கிருர்.

**5 மற்ருேர்களுக்காக பரிந்து பேசுமிடம்:-**

மணவாளனேடு மகிழ்ந்து உறவாடி ஜீவிக்கும்போது மற்றவர்களுக்காக நாம் ஏறெடுக்கும் விண்ணப்பமும் கேட்கப்படுகிறது. மற்றவர்களுக்காக நாம் பரிந்துபேசி ஜெபிப்பதை கர்த்தர் விரும்புகிருர். யோபு. 16;21 பவுலும் மற்றவர்களுக்காகப் பரிந்துபேசி ஜெபிக்கக் கூறுகிருர். எபே. 6:18-20 மற்றவர்கள் வாழ்வை விரும்பும் இந்தக் குணம் நம்மில் விருத்தியடையும்போது நர்மும் கிறிஸ்தவ ஜீவியத்தில் வளர்ந்து பேர்வோம். மற்றவர்களுக்காக பரிந்து பேசும் இயேசுவைப் போல ஜீவிப்போம். அதை பழக்குவிக்கவே கர்த்தர் தனி அறைக்கு அழைத்துச் செல்கிருர்.

**திராட்ச ரசத்தைப் பார்க்கிலும் உமது நேசத்தை நினைப்போம்:- உன் 1: 2 ஆம் வசனம் பார்க்கவும்.**

அறையின் ஜீவியம் அன்பின் ஜீவியம் என மணவாட்டி அறிந்து கொண்டாள். அது மறக்க முடியாத ஜீவியமாய் மாறியது. ஆதலால் அவரது அன்பை விட்டு பிரிக்க முடியாது என்ற அளவுக்கு வந்து விட்டாள். ரோமர் 8 : 34. அவரது அன்பை அவ்வளவாய் ருசித்து விட்டாள். ஆனபடியால்தான் நேசத்தை நினைப்போம் என்கிருள்.

**உத்தமர்கள் உம்மைநேசிக்கிருர்கள் :-**

இயேசுவை எல்லாப் பொது உலகமும் பொதுவாக நேசிப்துண்டு. ஆனுல் காவலிலும் சாவிலும் நேசிப்பவர்களே உத்தமர்கள். யோபு உத்தமன் என்ற சாட்சியைப் பெற்றிருந்தார். யோபு 1 : 1; 2 : 3. அவரது வீட்டில் மரணங்கள் வந்தபோதும், பொருள் நஷ்டங்கள் ஏற்பட்டபோதும், வியாதியின் வழியாய்ப்புடமிடப் பட்டபோதும், அவர் தமது உத்தமத்தில் நிலை நின்ருர். இவ்விதமான உத்தமர்களுக்கே காத்தர் துணை II நாளா 19 : 11. உத்தமர்கள் ஒருநாளும் வெறுக்கப்படுவதுமில்லை, கைவிடப்படுவதுமில்லை, என்றும்; யோபு 8 : 20 உத்தமர்களுக்கே தேவன் தமது வல்லமையை வெளிப்படுத்துகிருர் என்றும் காண்கிருேம். II நாளா 16 : 9.

அதோடு பவுலும் என்னை உத்தமனென்றெண்ணி இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினுர் என்கிருர். I தீமோ 1 : 12

ஆகவே கர்த்தர் உத்தமர்களை நேசிக்கிறது மாத்திரமல்ல, உத்தமர்களும் கர்த்தரையே நேசிக்கின்றனர். ஆனபடியால் தான் மணவாட்டி, உத்தமர்கள் உம்மை நேசிக்கிறார்கள் என்கிறாள்.

## 5-ம் வசனம்

எருசலேம் குமாரத்திகளே கேதாரின் கூடாரங்களைப் போலவும் சாலோமோனின் திரைகளைப் போலவும் நான் கறுப்பாயிருந்தாலும் அழகாய் இருக்கிறேன்.

எருசலேம் குமாரத்தி என்னும்போது பரிசுத்தாவி பெற்றும், ஆவிக்குரிய உன்னதமான அனுபவம் அடையாதவர்களென சிந்திக்க வேண்டும். இயேசுவோடு ஆயிரவருட அரசாட்சியில் பங்கு கொள்ள, பக்குவமாகாதவர்கள். ஆதலால் அவர்களை எருசலேம் குமாரத்தி என அழைக்கிறார். இவ்வித அனுபவமுள்ளவர்களோடு மணவாட்டி சொல்லுவது என்னவென்றால், நான் கறுப்பாக இருந்தாலும் அழகாக இருக்கிறேன் எனச் சொல்லித்தனது கறுப்பை கேதாரின் கூடாரத்திற்கும் சாலோமோனின் திரைக்கும் ஒப்பிடுகிறாள்.

**கேதாரின் கூடாரம் :-**

கேதார் என்பவன் இஸ்மவேலின் மகன். ஆதி 25 : 13. ஜாதிகளுக்குத் தலைவன். அரேபியாவின் வடமேற்கே வாசஞ் செய்தவன். வியாபாரம் செய்வதும், ஆடுமாடுகள், ஒட்டகம் வளர்ப்பதுமே இவர்களது தொழில் சங் 120 : 5 6; ஏசா 60 :7 எசே 27 : 21. இவர்கள் ஆட்டுமயிரால் கூடாரங்களை செய்வார்கள். அந்தக் கூடாரங்கள் கறுப்பாகவே இருக்கும். இவ்விதமே சாலோமோனின் திரையும் கறுப்பு எனக் கூறப்பட்டிருக்கிறது.

இந்தக் கறுப்பு கிறிஸ்து இயேசுவின் நிந்தையை சுமப்பதைக் காட்டுகிறது. எபி 13 : 13. பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் பூலோகத்தில் வந்து மனுஷ ஜாதிகளுக்காகப்பாடுகளை சகிக்கும் போது அவரது முகம் அந்தகேடடைந்திருந்ததாகக் காண்கிறோம். ஏசா 52 : 14. ஆகவே அவரைப் பின்பற்றுகிற மணவாட்டிக்கும் உலகில் எவ்வித கனமும் இல்லை. உலகம் அவளைப் பகைத்தே தள்ளும். பச்சைமரமான மணவாட்டியும் வாதிக்கப் படவே செய்வாள். இவ்விதமாக மணவாட்டி

தன்னைக் கஷ்டத்திற்கே ஒப்புக் கொடுத்திருக்கிறாள். ஆனால் அவளது உள்ளமோ, வரப்போகும், மகிமையை, எண்ணி, எண்ணி, மகிழ்ந்தே இருக்கிறது. அதேவேளை மணவாட்டி கஷ்டத்தின் பாதைகளுக்குள் நடத்தப்படுவதேஅவளதுகறுப்பு என்பதாகும்

## கூடாரத்தின் பிரயோஜனம்

### 1 கூடாரம் மழைகாலங்களிலும் பனிகாலங்களிலும் ஒதுங்குவதற்காக உண்டாக்கப்பட்டது:-

கேதாரின் சந்ததியார் ஆடு, மாடு, ஒட்டகம் வளர்க்கிறார்களான படியால் அதிகமாகவும் கூடாரங்களிலேயே வாசஞ் செய்து வந்தார்கள். மழை பெய்யும் காலங்களிலும் பனி பெய்யும் காலங்களிலும் காடுகளில் மந்தைகளை மேய்த்துக் கொண்டிருக்கிறபடியால் கூடாரங்களிலே ஒதுங்கி இருப்பார்கள். ஆதலால் மழை, பனியால் உண்டாகும் கஷ்டத்திற்கு சற்று நீங்கலாக்கப் படுவார்கள். இதுபோலவே மணவாட்டியும் மற்றவர்களுக்கு ஒதுங்கும் ஓர் கூடாரம் போலவே இருக்கிறாள். பலரும் பலவித மான சோதனையால் பீடிக்கப்பட்டு கலங்கும் போது மணவாட்டி அவர்களை ஆற்றுகிறாள்; தைரியப்படுத்துகிறாள்; அவர்களுக்காக அடிக்கடி உபவாசித்து ஜெபிக்கிறாள்; அவர்களுக் கேற்ற போதனைகளைக் கொடுத்துதாங்கி அரவணைக்கிறாள். இப்படிப்பட்ட குணம் மணவாட்டியில் காணப்படுகிறபடியால் பலவீனப்பட்டவர்கள் தங்கள் கஷ்டவேளையில் இவளைத்தேடிவருகிறார்கள். மணவாட்டியோ அவர்களுக்குக் கூடாரம் போலிருந்து அரவணைக்கிறாள். இதுவே கூடாரம் ஒதுங்குவதற்கு உதவுவதாகும்.

### 2 ஆட்டுக்குட்டிகளை அடைக்கக் கூடாரத்தை உபயோகப் படுத்துவார்கள் :-

மேய்ப்பர்கள் ஒரு இடத்தில் சென்றால் அந்த இடத்தை விட்டுப் போகுமட்டும் கூடாரங்களை குறிப்பான இடத்தில் அடித்து வைப்பார்கள். மந்தைகளை பல பாகங்களிலும் மேய்ப்பதற்காகக் கொண்டு போவார்கள். ஆட்டுக் குட்டிகளைக் கூடாரங்களில் அடைத்துவைப்பார்கள். ஏனெனில் ஆடுகளோடு ஆட்டுக் குட்டிகளுக்கு நடக்கவோ குன்றும், மலையும் ஏறவோ முடியாது. அதோடு மேய்ப்பனின் சத்தம் கேட்டு பழக்கமில்லாத படியால் அவனது அழைப்பை விளங்கிக் கொள்ளா

மல் திசை தவறி ஆட்டுக்குட்டிகள் போய் விடும். இன்னும் ஆட்டுக்குட்டிகள் களைப்பு உண்டாகும்போது எங்கேயாவது படுத்துத்தூங்கி விடும். அப்போது ஆட்டுக்குட்டிகளுக்கு தீங்கு சம்பவிக்கும். அதாவது ஓநாய்கள் பிடிக்கவோ, திருடர்கள் திருடிக்கொண்டு போகவோ, திசைதெரியாமல் அலைந்து திரியவோ ஏதுவாகும். ஆகையால் உத்தரவாதமுள்ள மேய்ப்பன் ஆட்டுக்குட்டிகளைக் கூடாரத்தில் அடைத்து வைத்து விட்டு போவான்.

இந்த ஆட்டுக்குட்டிகள் புதிய விசுவாசிகளைக் காட்டும். இந்தப்புதிய விசுவாசிகளான ஆத்துமாக்கள் கெட்டுப் போகாமலிருக்க ஆவிக்குரிய விசுவாசி அல்லது மணவாட்டி, கூடாரத்தில் அடைத்து வைக்கும் ஆட்டுக்குட்டியைப்போல கட்டுப் படுத்தி நடத்த வேண்டும். இல்லாவிட்டால் தேவ சித்தம் தெரியாமலும் ஊழியனின் அன்பை உணராமலும் யனின் உபதேசத்தை புரிந்துகொள்ளாமலும் விசுவாசிகளின் ஐக்கியத்தைக் காப்பாற்றுமலும் தாறுமாறுய் நடந்து சீர் கெட்டவர்களாக மாறிவிடுவார்கள். பின்னர் அப்படிப்பட்டவர்களுக்கு சபை ஒழுங்கும், கீழ்ப்படியும் விதமும், பரிசுத்தவான்களின் ஐக்கியமும், சோதனையில் அகப்படாமலிருக்கும் வழியும் துர் உபதேசம் இன்னதென்று தெரியாமலும் அழிவுக்குரியவர்களாக மாறி விடுவார்கள் ஆதலால் மணவாட்டி புதிதாக இரட்சிக்கப்பட்டவர்களை தாறுமாருக விடாமல் கட்டுப்படுத்தி, புத்திமதிகளைக் கூறி, கண்டித்து. கூடாரம் போல் வைத்து காப்பாற்றுகிருள். இதுவே ஆட்டுக் குட்டிகளை காப்பாற்றும் கூடாரம்.

**3 கூடாரங்களில் தட்டுமுட்டு ஜாமான்களை வைத்துகாப்பார்கள்:-**

மேய்ப்பர்களுக்கு சிற்சில பொருட்கள் உண்டு. அவர்கள் கூடாரத்தில்வைத்து காப்பார்கள். அது போல சபையின் பிரயோஜனத்திற்குரிய வரங்கள் உண்டு. I கொரி 12 : 7 இந்த வரங்கள் சபையில் நாளுக்கு நாள் விருத்தியடைய வேண்டும். மணவாட்டி அதற்கான ஆலோசனைகளைக் கொடுத்து விசுவாசிகளை அனல் மூட்டி எழுப்புவாள். சாத்தான் வரங்களை கெடுக்காதிருக்க காவலாளிபோல் விழித்திருந்து ஜெபிப்பது மாத்திரமல்ல மற்றவர்களையும் தூண்டி எழுப்புவாள். இதனுல் சபையின் வரங்கள் காப்பாற்றப் படுகிறது. இவ்வித மேன்மையான குணங்கள் ஊழியத்தில் பெருகியிருப்பதால் மணவாட்டியின் உள்ளம் மிகுந்த சந்தோஷத்தால் நிரம்பப் படுகிறது. அந்த சந்தோஷமே அவள் அழகுள்ளவள் என்பதை விளக்கி, சபையின்

காவலாளி எனவும் தெளிவிக்கிறது. இதுவே கூடாரத்தின் உபயோகம்.

## 6-ம் வசனம்

நான் கறுப்பாய் இருக்கிறேனென்று பாராதேயுங்கள். வெயில் என்மேல் பட்டது என் தாயின் பிள்ளைகள் என் மேல். கோபமாயிருந்து திராட்சத் தோட்டத்திற்கு காவற்காரியாக வைத்தார்கள். என் சொந்த திராட்சத் தோட்டத்தையோ நான் காக்கவில்லை.

இங்கு மணவாட்டியிலுண்டான கறுப்பானது கஷ்டத்திற்கும் நிந்தைக்கும் ஒப்புக்கொடுத்த அனுபவத்தையல்ல ஜீவியத்திலுள்ள குளிர்ந்த அனுபவத்தைக் காட்டுகிறது. ஏனெனில் கறுப்புக்குக் காரண வெயில் என்மேல் பட்டது என்கிறாள்.

**கறுப்பு உண்டாகக் காரணம் :-**

**1 மத்தியான வேளை முகம் கறுப்பாகும்**

மத்தியான வேளைகளில் வெயில் பலமாய் வீசுகிறதை காணலாம். அவ்வேளைகளில் எவ்வித அழகுடையவர்களாய் இருந்தாலும் வெயிலடித்து அவர்கள் அழகைக் கெடுத்து விடுகிறது. இந்த வெயில் விசுவாசிகளின் மீது அடிக்கும் பயங்கர உபத்திரவத்தைக் காட்டுகிறது. மணவாட்டி ஆவிக்குரியவளாயிருக்கும்போதே சோதனையாகிய வெயில் என்னும் போராட்டத்திற்குள்ளாகி விட்டாள். இவ்வித சோதனையில் தாங்கள் பெலனற்றவளானாள். இந்தப் பெலகீனமே ஜீவிதத்தில் காணும் கறுப்பு என்பது.

**2 மகிமை இன்னொருவனுக்கு கிடைக்கும்போது முகம் கறுப்பாகி விடுகிறது I சாமு 18: 7-9**

இஸ்ரவேலருக்கும் பெலிஸ்தியருக்கும் யுத்தம் நடந்தது. அப்பொழுது பெலஸ்தியரின் தலைவனும் வீரனுமான கோலியாத்தை சிறியவனான தாவீது ஜெயித்து ஜெய வீரனாக வந்தான். இதைக்கண்ட இஸ்ரவேலின் ஸ்திரிகள் சவுல் கொன்றது ஆயிரம் தாவீது கொன்றது பதினாயிரம் எனப்பாடினார்கள். இந்தப் பாடலின் சத்தம்

இஸ்ரவேலின் இராஜாவாகிய சவுலின் காதில் விழுந்தது. இச்சத்தத்தை அவன் கேட்டதும் அவன் முகநாடி வேறுபட்டது. உடனே சவுல் தாவீதைக் காய்மகாரமாகப் பார்த்தான். ஏனென்றால் ஸ்திரிகள் தன்னைவிட தாவீதைக் கனப்படுத்தினபடியால் சவுலின் முகநாடி வேறுபட்டது. கனம் மற்றவர்களுக்குப் போகும்போது முகநாடி கறுப்பாகிறது.

பவுல் மற்றவர்களைத் தன்னைக் காட்டிலும் கனப்படுத்தும்போது நாமும் தேவனை மகிமைப்படுத்தவேண்டுமென்று கூறுகிறார். ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூட சந்தோஷப்படவேண்டும். I கொரி 12 : 26 அப்படியில்லாவிட்டால் உடனே பொறாமை எழும்பி ஜீவியத்தைக் கறைப்படுத்திவிடும். முகநாடியும் வேறுபடும். இதுவே ஆவிக்குரிய ஜீவியத்தில் உண்டாகும் கறுப்பு.

### 3 எல்லாம் நஷ்டமாகும்போது முகம் கறுப்பாகும்:-

ஒரு காலம் யோபின் மனைவி யோபைப் போலவே கர்த்தரை உத்தமமாய்ச் சேவித்தாள். இப்படியிருக்க எல்லாவற்றையும் இழந்து சோதிக்கப் பட்டபோது அவள் கர்த்தரையே தூஷித்தாள். யோபு 2 : 9

விசுவாசம் சோதிக்கப்படும்போதும், எல்லாவற்றையும் இழக்கவேண்டிய தருணம் உண்டாகும்போதும் ஆபகூக்கோடு சேர்ந்து அத்திமரம் துளிர்விடாமற்போனாலும், திராட்சச் செடியில் பழம் உண்டாகாமற் போனாலும், ஒலிவமரத்தின் பலனற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற் போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப்போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமல் போனாலும் நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன். என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன் எனக் கூறவேண்டும். ஆபகூக் 3:17—18. இவ்வித விசுவாசத்தோடு கர்த்தரில் உறுதியாய் சார்ந்து நிற்பதே மேன்மை. அப்படி இல்லாமல் கஷ்டத்தைக் காணும்போது முறுமுறுக்கிறவர்களின் முகமே கறுப்பாகிறது. இதுவே கறுப்பு.

### 4 தேவசித்தம் செய்யாததால் முகம் கறுப்பாகும்:-

தேவனால் ஆசீர்வதிக்கப்பட்ட நகோமியின் குடும்பம் பெத்லகேமில் சந்தோஷமாய் வாழ்ந்திருந்தது பெத்லகேமில் பஞ்சம் உண்டாகவே நகோமி குடும்பத்தோடு மோவா

புக்குச் சென்றுள். அங்கு சென்றதும் தனது இரு புத்திரருக்கும் இரு மோவாபியப் பெண்களை மணம் செய்து வைத்தாள். சில காலம் செல்லவே குடும்பத்தில் மரணம் பிரவேசித்தது. நகோமியின் புருஷனும் இரு மக்களும் மரிக்கவேண்டியதாயிற்று. நாகோமியின் சந்தோஷமோ கசப்பாக மாறி விட்டது ரூத். 1:1—5. கஷ்டங்கள் வரும்போது விசுவாசிகள் தேவசித்தம் செய்யாமல் ஜீவிப்பதால், சகலமும் கலக்கமாகவே முடியும். கஷ்ட வேளையிலும் கர்த்தருடைய சித்தத்துக்காகவே காத்திருக்கவேண்டும். இஸ்ரவேலர் கானனில் சென்றதும் எரிகோ பட்டணத்தை அழித்து, ஆயி பட்டணத்தை நிர்மூலம் செய்ததை கிபியோனியர் கண்டதும் தந்திரமாக யாத்திரைக்காரர்போல் வேஷம் பூண்டு, பூஷணம் பூத்த அப்பங்களுடனும் பழமையான பாதரட்சைகளுடனும் யோசுவாவிடம் சென்று நாங்கள் பரதேச யாத்திரைக்காரர். எங்களை உயிரோடே காக்கும்படி உடன்படிக்கை செய்யவேண்டுமென வேண்டிக்கொண்டார்கள் இதைக்கேட்ட யோசுவா தேவசித்தம் செய்யாமல் அவர்களது வார்த்தைகளை நம்பி அவர்களோடு உடன்படிக்கை பண்ணினன். இதனுல் தெய்வ ஜனம் புறஜாதி மார்க்கத்தைக் கற்று தேவனைவிட்டு விலகவும் தேவ தண்டனைக்குள்ளாகவும் நேர்ந்தது யோசு 9:1-14

இக்காரணங்களால் மணவாட்டி எப்போதும் தேவசித்தம் அறிந்தே ஜீவிக்கவேண்டும். தேவசித்தம் செய்யாதிருக்கும்போது ஆவியில் குன்றுகிறோம். இந்த குன்றுதலே முகத்தில் காணப்படும் கறுப்பாகும்.

### 5 மனித பயத்துக்குள்ளாகும் போது முகம் கறுப்பாகிறது:-

அப்போஸ்தலனுகிய பேதுரு பரிசுத்தாவியைப் பெற்றபோது புதுப்பலன் அடைந்தார். ஒரே பிரசங்கத்தில் 3000 பேரை கர்த்தரண்டை திருப்பினர். தேவ சித்தப்படி புறஜாதிக்காரனுகிய கொர்நேலியுவின் வீட்டில் சென்று பிரசங்கிக்கும்போதே ஆவியானவர் ஊற்றப்பட்டார். அன்று அவர்களோடு புசித்து சந்தோஷமாக உறவாடினர். இவ்வாறிருக்க அந்தியோகியா சென்று அங்கும் புறஜாதிகளோடு புசித்தார். அதன் பின்னர் யூதர் வரவே பேதுரு யூதருக்குப் பயந்து புறஜாதியாரோடு புசியாதவன்போல மாயம் பண்ணினர். இவரது மாயத்தில் பர்னபாவும் இழுப்புண்டார். கலா 2 : 11—13. இதுவே விசுவாசிகளில் காணப்படும் கறுப்பு . இவ்வித குணங்கள் மணவாட்டியை விட்டு முற்று

மாய் மாற்றப்படவேண்டும். இல்லாவிட்டால் ஜீவியம் பாழாகிப்போகும். இவைகளே மணவாட்டியில் காணப்படும் கறுப்பாகும்.

**6 தேவ கிருபைகளை பெறும்போது மற்றவர்களைக் கனப்படுத்தாததால் உண்டாகும் கறுப்பு:-**

விசுவாசிகள் தேவ கிருபைகளைப் பெறுந்தோறும் தாழ்மைப் படவேண்டும். சாராளின் வேலைக்காரியாகிய ஆகார் நாச்சியாரின் இரக்கத்தால் கர்ப்பவதியானாள். அவள் கர்ப்பவதி ஆனதும் நாச்சியாரை அற்ப்பமாக எண்ணினாள். கிருபைகளைப் பெற்றவுடன் மற்றவர்களை அற்பமாக எண்ணும் குணமே விசுவாசியில் காணப்படும் கறுப்பாகும். கர்த்தரால் ஆசீர்வதிக்கபடுந்தோறும் தாழ்மை படுவதற்குப் பதிலாக மேட்டிமை கொண்டாள். ஆதலால் ஆபிரகாமின் வீட்டை விட்டுத் துரத்தப்பட்டாள். இதுவே மணவாட்டியைக் கெடுக்கும் கறுப்பு இவ்விதமாக மணவாட்டியில் பற்பல விதமான கறுப்பு ஒட்டிக்கொள்கிறது. அதை அவள் அறிகிறாள். என்றாலும் தன்னைத் தாழ்த்தி அறிக்கை செய்து புதுப்பிக்சுப்படாமல் மற்றவர்களின் புகழுக்காகத் தன்னைத் தேற்றிக் கொண்டு வெயில் என்மேல் பட்டது என்கிறாள். அதாவது சோதனை என்கிறாள். இவ்விதமாகவே அநேகர் சோதனைக் காலங்களில் விழித்திருந்து தன்னைக் காத்துக்கொள்ளவோ சோதனையில் அகப்படும்போது கறைகளை அகற்றவோ முடியாமல் தங்களைத் தேற்றிக் கொள்கிறார்கள் இப்படிப்பட்டவர்கள் ஒருபோதும் ஆவிக்குரிய உலகில் கடைசிவரை நின்று பிடிக்கமாட்டார்கள். ஆதலால், எப்போதும் குறைகளை அகற்றவே முயலவேண்டும். இதுவே மேன்மையபன அனுபவம்.

**தாயின் பிள்ளைகள் கோபம்:-**

அதாவது அவளைப்போன்ற விசுவாசிகள் அவளது குற்றங்களைக் கண்டு உணர்த்துகிறார்கள். அவளோ சீர்படாதபடியால் கண்டிக்கிறார்கள். இவள் ஆவிக்குரிய அனுபவத்தில் குளிர்ந்துபோனபடியால் மற்றவர்களால் கண்டிக்கப்படும்போது, கண்டிக்கிறவர்கள் தன்னை வெறுப்பது போலும், பகைப்பது போலும் எண்ணுகிறாள். மற்றவர்களின் கடிந்துகொள்ளாமல் வெறுப்பதுபோலும், பகைப்பதுபோலும், தோற்றமளிக்கிறது. ஆனால் நீதிமானுடைய கடிந்துகொள்ளுதல் என் தலைக்கு எண்ணெய் என்று விசுவாசிக்க வேண்

டும், சங் 141:5. அப்பொழுது மென்மேலும் அன்பிலும் பரிசுத்தத்திலும் வளரலாம், அவ்வாறின்றி இவளோ தன்னை மற்றவர்கள் கண்டிக்கும்போது த்ாயின் பிள்ளைகள் கோபமாக இருப்பதாகக் கூறுகிறாள்.

**திராட்சைத் தோட்டத்திற்கு காவற்காரியாக வைத்தார்கள்**

விசுவாசியின் ஜீவியம் குன்றும் போது கர்த்தருடைய ஊழியத்தில் அசதி ஏற்படுகிறது. உத்தரவாதம் விலகிப் போகிறது. அப்பொழுது மற்ற விசுவாசிகள் ஊழியத்தை உத்தரவாதத்துடன் செய்வதற்காக கட்டுபாடு செய்கின்றனர்.

திராட்சைத் தோட்டம் என்பது சபையாகும். விழித்திருந்து ஜெபிக்கிறவர்களே காவற்காரர். சபைகளைக் கறைபடுத்த சாத்தான் இரவும் பகலும் கர்ச்சிக்கிற சிங்கம் போல அலைந்து கொண்டே சுற்றுகிறான் I பேது 5: 8. பாவம் சபைக்குள்ளிருந்தும் எழும்பும், சபைக்கு வெளியிலிருந்தும் பாவம் உள்ளே பிரவேசிக்கும். பொல்லாத ஊழியர்களாலும் சபைகள் கறைபடும். ஆகவே சபைகள் எப்போதும் காக்கப்பட வேண்டுமானால் இரவும் பகலும் விழித்திருந்து ஜெபிக்கும் காவலாளர் தேவை ஏசாயா 62: 6-7 இவளோ ஜெப ஜீவியத்தை விட்டு விட்டாள். சமயத்தை வீணாக்குகிறாள். ஆதலால் உடன் விசுவாசிகளான சகோதரர் அவளைக் கட்டுப் பாட்டிற்கு கொண்டுவர விரும்புகிறார்கள். ஆகையால் அவளுக்கு உத்தரவாதம் கொடுக்கிறார்கள். அவளோ அதை வெறுக்கிறாள். கட்டுப்பாட்டினாலடையும் நன்மையை விளக்கி கொள்ளாமல் மனிதன் சுயாதீனத்திற்கே அழைக்கப்பட்டிருக்கிறான் எனக் கூறுகிறாள். சுயாதீனத்திலும் அவள் கட்டுபாடு உண்டென்பதை அறியாமல் போய் விட்டாள். இப்படிப்பட்ட அனுபவங்களை விசுவாசி தள்ளி விட்டால் அடங்காதவர்களாக மாறி விடுவார்கள். அப்போது சகோதர அன்பு அகன்று போகும். பெருமை தலை தூக்கும் தேவ சிநேகம் ஒழிந்து போகும். ஆதலால் அன்பின் கட்டுபாடு அவசியம் என்பதை அறியாமல் இவளோ அடங்காதவளாய் விசுவாசிகளின் ஐக்கியத்தை விட்டு விட்டாள். இதுவே திராட்சை தோட்டத்தைக் காக்காத அனுபவம்.

## 7-ஆம் வசனம்

**என் ஆத்தும நேசரே:—** இப்பொழுதும் மணவாட்டி நிலவரத்தில் அழைக்கப்பட்டவள், விசுவாசிகளின் ஐக்கியத்

தை விட்டு விட்டாலும் கர்த்தரில் பற்றுதலுள்ளவளாகவும் ஜீவியத்தில் வைராக்கியம் உள்ளவளாகவும் ஜீவிக்கிருள். ஆன படியால் போன போன இடங்களிளெல்லாம் ஊழியங்களை உற்சாகமாய் செய்து அநேக ஆத்துமாக்களையும் சம்பாதித் திருக்கிருள். ஆதலால் தனக்கு கிடைத்த ஆத்துமாக்களை என்ன செய்ய வேண்டுமென்றும், எந்த சபையோடு சேர்த்து விடவேண்டுமென்றும், உண்மையான சபை ஏதென்றும், கண்டு கொள்ளக் கூடாத சந்தேகத்திற்குள்ளாகி விட்டாள். ஏனென்றுல் விசுவாசிகளோடுள்ள போராட்டத்தில் விசுவாசி களோடுள்ள ஐக்கியத்தையும் விட்டு விட்டாள். ஆகையால் சபையைப்பற்றிய நம்பிக்கையற்றவளாய் தனித்து வெளியே கிளம்பினுள். அதேவேளையில் கர்த்தரோடுள்ள ஐக்கியம்இருக் கிறது. ஆத்துமாக்களைப் பற்றிய தாகமும் இருக்கிறது ஆன படியால் சில ஆத்துமாக்களை சம்பாதித்தாள். இப்போது தனக்குக் கிடைத்த ஆத்துமாக்களை என்ன செய்வது என்ற கேள்வி ஏற்பட்டு விட்டது. ஆதலால் மணவாளனிடத்தில் ஆலோசனைக் கேட்கிருள். ஏனென்றுல் அவள் வேருெரு நேச ரை நேசிக்கவில்லை. ஆத்துமாவுக்கு இயேசுவையே நேசராக தெரிந்து கொண்டிருக்கிருள். ஆனபடியால் என் ஆத்துமநேச ரே என்று வினவிக் கேட்கிருள்.

**உமது மந்தையை எங்கே மேய்த்து மத்தியானத்தில் எங்கே மடக்குகிறீர்? :** மந்தை என்பது தேவனுடைய சபையாகும். சபை என்பது இரட்சிக்கப் பட்டவர்களின் கூட்டமே அப்: 2: 47. பாவத்திலிருந்து இரட்சிக்கப் படாதவர்கள் கிறிஸ்துவின் சபை அல்ல. அது அந்திக் கிறிஸ்துவின் சபையாகும் I யோ 2: 18. இயேசுவின் மந்தையாகிய சபை ஆக வேண்டுமானுல் பாவி பாவ மன்னிப்பை பெற்று இரட்சிக்க படவேண்டும். பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டவனே தேவனுடைய சபையாகிய மந்தை.

மந்தையை மேய்க்கிறது பரிசுத்தாவியானவர். மந்தையை மேய்க்கிற பரிசுத்தாவியானவரே ஊழியர்களையும் நியமித்து வைக்கிருர். அப் 20: 28; I பேது 5: 2. ஆவியானவரே சபை யை நடத்துகிறவர் என்று அறிய வேண்டும். ஏனென்றுல் ஊழியர்க்கு ஊழியங்களை நடத்த ஆலோசனைக் கர்த்தராயி ருக்கிருர் அப் 13: 1-2. ஆதலால் மந்தை மேய்க்கிறவர் ஆவி யானவர் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

**மத்தியானம்:— மத்தியானம் என்பது உபத்திரவகாலம்:—** சூடான தேசங்களில் மத்தியானத்தின் வெயில் கடுமையாக

இருக்கும். எவ்வித மனிதனையும் மத்தியான வெயில் கடுமையாய் தாக்கும். இவ்வித சூடு நிறைந்த வேளையில் உண்மையான மேய்ப்பன் மந்தையை மேய விடுவதில்லை. ஏனென்றால் வெயிலின் சூடு ஆடுகளைத் தாக்கி அவற்றை பலவீனப்படுத்தும். அதற்காக உத்தம மேய்ப்பன் வெயிலின் கதிர் கடுமையாக வீசுமுன்னர் மந்தையை மேய்த்து மத்தியானம் வரும் போது ஆடுகளைத் தண்ணீர் காட்டி மர நிழலிலோ குளிர்ச்சியான இடங்களிலோ மடக்குகிறான். இதனால் ஆடுகள் வெயிலின் கொடுமைக்குத் தப்பி காக்கப்படுகின்றன.

இந்த மத்தியான வெயில் வேளைதான் பயங்கர உபத்திரவத்தைக் காட்டுகிறது. விசுவாசி விசுவாசத்தில் வளர்ந்து போகும் போது பயங்கரமான உபத்திரவத்தின் வழியாகத் நடத்தப் படுகிறான். ஏனென்றால் உபத்திரவத்தின் வழியாக தான் தேவனுடைய இராஜ்யத்திற்குள் போக வேண்டும் அப் 14:22. தேவன் விசுவாசிக்கு நியமித்த பாதையும் இதுவே. இவ்வித பயங்கரமான பாதை வழியாய் நடத்தப்படும்போது சிலர் பின்வாங்கிப் போகின்றனர். மத்தியான வேளையில் மேய்ப்பன் மந்தையை குளிர்ச்சியான இடங்களில் மடக்கி இளைப்பாற்றி காப்பாற்றுவது போல கர்த்தரும் விசுவாசிகள் சிதறிப்போகாமலிருக்க அரவணைத்து காப்பாற்றுகிறார். கொடூரமானவர்களின் சீறல் மதிலை மோதியடிக்கிற வெள்ளத்தைப்போலிருக்கையில் நீர் ஏழைக்குப் பெலனும் நெருக்கப் படுகிற எளியவனுக்கு திடனும் பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும் வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர் என்கிறார் ஏசா 25:4-ஆம் நம்முடைய இயேசு மணவாட்டியின் நிழலே. ஏனென்றால் இவ்வாறு அநேக வாக்குத் தத்தங்கள் கொடுத்திருக்கிறார். அவர் கொடுத்த வாக்குத்தத்தங்கள் யாவும் உண்மையே.

ஆத்துமாகளின் நிலையைக் கண்டு அதற்கேற்ற தூதுகளைக் கொடுத்து தட்டி உணர்த்தி ஆவியினால் நிறைத்து பலப்படுத்தி சபையைக் காப்பாற்றி நடத்துகிறார். இதுவே மத்தியானத்தில் மடக்குவதாகும்.

**2. மத்தியானம் மனித சஞ்சாரமில்லாத காலம்:—** மத்தியான வேளையில் அதிகமான சூடு பூமியிலிருப்பதால் யாத்திரைக்காரரான மனிதரும் சற்று ஒதுங்கியே இருப்பார்கள். ஆள் நடமாட்டம் குறைவாகவே காணப்படும். ஆள் சஞ்சாரம் குறையும் போது திருடர் பயமும் உண்டாகிறது. இது

ஆவிக்குரியவர்களும் வேதவாக்கியங்களில் தேறினவர்களு மான ஊழியர்கள் குறைந்து போனதுமான காலத்தைக் காட்டு கிறது. அப்படிபட்டவர்களைக் காண்பது அரிதாகவே இருக் கும். அப்பொழுது பொய்யான உபதேசங்களும் பொய்யான ஊழியர்களும் நடமாடிக்கொண்டே இருப்பார்கள். இதுதான் திருடர் பயத்தைக் காட்டுகிறது.

ஆகவே நாமதேய கிறிஸ்தவர்களால் உலகம் நிறைந்து புத்தியில்லாத ஆராதனைகளை நடத்தி உத்தமமாய் பின் பற்று கிறவர்களை வழி விலகச் செய்து ஆவிக்குரியவர்கள் குறைந்து போனார்களென்பதை விளக்குவதாகும். இதுவே மனித சஞ் சாரமில்லாத இடத்தைக் காட்டுகிறது.

**உமது தோழரின் மந்தைகளினருகே அலைந்து திரிகிறவனை போல் இருக்க வேண்டியதென்ன?**

**தோழர்:—** தோழர் என்பது பழைய ஏற்பாட்டுகால பரிசுத்தவான்களைக் குறிப்பிடும். ஏனென்றால் யோவான் ஸ்நா னகன் பழைய ஏற்பாட்டு கால பரிசுத்தவான்களில் ஒருவர். ஸ்திரீகளில் பிறந்தவர்களில் யோவானைப் பார்க்கிலும் பெரி யவன் ஒருவனுமில்லை என்று இயேசு புகழ்ந்தார் மத் 11: 11. இவ்வாறு இயேசுவால் புகழப்பட்ட யோவான் நான் மண வாட்டியல்ல மணவாளனுடைய தோழன் எனக் கூறுகிறார். யோ 3: 29. ஆகவே யோவான் கூறுவதைக் கொண்டு பழைய ஏற்பாட்டுக் கால பரிசுத்தவான்கள் யாவரும் மணவா ளனின் தோழர்கள் என்றே விளங்குகிறது. ஏனென்றால் எபி ரேய நிருபக்காரன் பழைய ஏற்பாட்டுக் கால பரிசுத்தவான் களை வாக்குத்தத்தமாகிய பரிசுத்தாவியை பெறாதவர்கள் என் கிறார். எபி 11: 38-39. இக்காரணங்களால் பழைய ஏற்பாட்டு கால பரிசுத்தவான்கள் யாவரும் பெந்தேகோஸ்தே நாளில் பகிர்ந்து கொடுத்த வாக்குத்தத்தமாகிய பரிசுத்தாவியைப் பெற்றுக்கொள்ளாதவர்களென நாம் அறிகிறோம்.

பழைய ஏற்பாட்டுக்கால பரிசுத்தவான்கள் மீட்கப்பட்டி ருந்தவர்களும் விசுவாசத்தினாலே அற்புத அடையாளங்களை நடத்தினவர்களுமாய் இருந்தார்கள். எனினும் வாக்குத்தத்த மாகிய பரிசுத்தாவியை பெற்றுக் கொள்ளவில்லை. வாக்குத் தத்தமாகிய பரிசுத்தாவியை பெற்றுக் கொள்ளாதவர்களை தோழர்களோடே ஒப்பிடுகிறார். வாக்குத்தத்தமாகிய பரி

சுத்தாவியைபெற்றுக் கொண்டவர்களே மணவாட்டிக்குரிய முத்திரையைப் பெற்றுக் கொண்டவர்களாகும். இந்த முத்திரையை பெற்றுக்கொள்ளாதவர்கள் தோழரே.

**அலைந்து திரிதல்:-** மணவாட்டி அலைந்து திரிய வேண்டியவளல்ல. மணவாளன் கனத்துக்குரியவரும், புகழபடத் தக்கவரும் தூதர்களால் போற்றப் படுகிறவரும், பூலோகத்திற்கும் பரலோகத்திற்கும் உடமஸ்தனுமானவர். இப்படிப்பட்ட மணவாளனுக்கு வாழ்க்கை படவேண்டிய மணவாட்டி அலைந்து நடக்கிறவளல்ல. அவள் மதிப்புக்குறியவளும் புகழப்படத் தக்கவளும் சிறப்புடையவளுமாய் இருக்க வேண்டும். இப்படிப்பட்டவளையே மணவாளன் விரும்புகிறார்.

## மணவாட்டிக்கு இருக்க வேண்டிய முக்கிய மேன்மைகள்

**1. மணவாட்டிக்கு நல்ல வீடு இருக்க வேண்டும்:—** வீடு என்பது தேவனுடைய சபையைக் காட்டுகிறது I தீமோ 3: 15. சபை என்றால் இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்ட கூட்டம். இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்டவர்களின் கூட்டமாகிய நல்ல பெரிய வீடாகிய சபை இருக்க வேண்டும்.

பெரிய வீடு என்றால் பெரிய கூட்டங்களையோ லௌகீகமான சௌகரியங்களையோ அல்ல குறிக்கிறது. அப்போஸ்தல உபதேசத்தில் கட்டுப்பட்டு உபதேசத்திலும் ஜீவிதத்திலும் நிலை நிற்கிறதுமான சபையையே காட்டுகிறது. அப் 2: 38-41; எபேசி 2: 19-21; I தீமோ 4: 16. இதுவே பெரிய வீடாகும். இவ்விதமான சபையில் ஐக்கியப்பட்டவர்களாக இருக்க வேண்டும். இதுவே அவள் வீடு.

அநேகர் இரட்சிக்கப்பட்டவுடனே, ஸ்நானபட்டவுடனே பரிசுத்தாவியைப் பெற்றவுடனே தாங்கள் பூரணப்பட்டதாக எண்ணி அப்போஸ்தலர்களுக்கோ அப்போஸ்தல உபதேசங்களுக்கோ கீழ்ப்படிய மனமில்லாமல் தன்னிஷ்டப் பிரியராய் தாறுமாறாய் அலைந்து நடப்பார்கள். அப்படியே தங்களை சேர்ந்தவர்களையும் பழக்கி தங்களைக் கெடுப்பது போல் அவர்களையும் கெடுப்பார்கள். இவர்கள் அப்போஸ்தல உபதேசத்தில் ஜீவிக்கும் விசுவாசிகளோடு ஐக்கியப்படார். இப்படிப்பட்டவர்களே வீடு இல்லாதவர்களாகும்.

**2. பால் மற்றும் ஆகாரங்களை புசித்து பக்குவமடைய வேண்டும்.**

மணவாட்டி ஆக வேண்டுமானால் வீடு இருந்தாலும் போதாது. நன்ருக புசித்து அழகுள்ளவளாகவும், பலனுள்ளவளாகவும் விளங்கவேண்டும். அதற்காக சமயா சமயம், விதம் விதமான ஆகாரங்களைக் கொடுக்கும் தாய் வேண்டும். இந்த தாயே திறமையான ஊழியன். I தெசலோ 2:7.

இந்த ஊழியன் அப்போஸ்தல பிரதிஷ்டை உள்ளவனும் உபதேசத்தில் தேறினவனுமாய் இருக்கவேண்டும். அப்படிப்பட்டவனே சபையை பூரணத்துக்கு நேராய் வழி நடத்துவான். எபே 4: 11—13. சபை கிறிஸ்துவின் அளவுக்கு எல்லா விஷயங்களிலும் வளர வேண்டும். அதற்காகவே இயேசு ஊழியர்களை வேறு பிரித்து பழக்குவித்தார் மத் 4: 18. தேறினவன் குருவைப் போலிருப்பான். லூக் 6:40.அதாவது இயேசுவின் திவ்ய சுபாவமும் பிரதிஷ்டையும் உடையவனுயிருப்பான். இவ்விதமான ஊழியனால் போஷிக்கப்பட்டு மணவாட்டி பக்குவமடைய வேண்டும். அதாவது கறைதிரை அற்றவளாய் விளங்க வேண்டும். II கொரி 11: 2. இதுவே அவளின் அழகு.

**3. வஸ்திரம் அணிந்திருக்க வேண்டும்:—** மணவாளன் பார்க்கும் போது அவளுடைய சரீர அழகு மாத்திரமல்ல மணவாளன் விரும்பத்தக்க ரூபத்தில் அழகான வஸ்திரமும் தரித்திருக்க வேண்டும்.

**வஸ்திரம்:— (1) இரட்சிப்பின் வஸ்திரம்:—** ஏசா 61: 10.

பாவி மீட்கப்படுமுன்னதாக நிர்வாணியாகவே இருந்தான். ஆதி 3: 7. ரோமர் 3: 23. இரட்சிக்கப்பட்டவுடன் அவருடைய இரத்தத்தினுல் பாவ மன்னிப்பைப் பெறுகிறது மாத்திரமல்ல இரத்தத்தினுல் பெற்று அனுவிக்கும் இரட்சிப்பையும் அடைகிருன். ஆதலால் அவனது நிர்வாணம் இரட்சிப்பின் வஸ்திரத்தால் மூடப்படுகிறது. இந்த வஸ்திரம் அவனில் கறைபடாதபடி காக்கப்படவேண்டும்.

**2. நீதியின் வஸ்திரம்:—** இரட்சிக்கப்பட்டவர்கள் நற்கிரியையும் செய்ய வேண்டும். தீத்து 3: 8. விசுவாசிகளின் நற்கிரியைதான் பரிசுத்தவான்களின் நீதியின் வஸ்திரம். வெளி

19: 8. இந்த வஸ்திரத்தை பெற்றுக்கொள்ள இரவு பகலின்றி பாடுபட வேண்டும்.அப்பொழுதுதான் நீதியின் வஸ்திரம் நமக்கு கிடைக்கிறது.அதாவது மற்றவர்கள் விரும்பத்தக்க ரூபம் நம்மேல் ஜொலிக்கும். இந்த வஸ்திரத்தைக்காப்பாற்றுவதற்காக நற்கிரியைகளைச் செய்து நல்ல கனிகளைக் கொடுத்து உத்தமத்தை காக்க வேண்டும் என்பதாகும்.

**3. துதியின் உடை:—** மணவாட்டியின் வஸ்திரங்களில் துதியின் உடையும் உண்டு. பாவி கர்த்தரை துதிப்பதில்லை.கர்த்தரைத் துதிப்பதற்காகவே மனிதனை உண்டாக்கினார். ஏசா 43: 21. மனிதனோ சாத்தானால் ஏமாற்றப்பட்டு கர்த்தரைத் துதிப்பதை விட்டு விட்டான். ஆதலால் பாவியின் உள்ளம் இருளால் நிறைந்து விட்டது. ரோமர் 1: 21. அதோடு பாவி மரித்தவன் என்றும் காண்கிறோம். எபே 2: 1. மரித்தவனுக்கு துதிக்க இயலாது. சங் 115:17. ஜீவனைப்பெற்றவர்களே கர்த்தரைத் துதிப்பார்கள். சங் 150: 6. சுவாசம் என்பது ஜீவனாகும். ஆதலால் துதி எப்போதும் நம் நாவில்இருக்க வேண்டும். சங் 34: 1. இதுவே துதியின் உடை.

**4. சித்திரத் தையலாடை** வேண்டும்:— சங் 45:14 இது மணவாட்டியின் கஷ்டப்பாடுகளைக் காட்டுகிறது. மணவாட்டி எவ்விதக் கஷ்டத்தையும் சகிக்க ஒப்புக்கொடுக்க வேண்டும். கஷ்டங்களைக் காணும் போது விலகி ஓடவோ, மறைந்து கொள்ளவோ செய்யலாகாது.மனப்பூர்வமாக தேவ சித்தத்துக்கு ஒப்புக் கொடுக்கவேண்டும். பாடுகளில் சந்தோஷப்படவேண்டும். ரோமர் 5: 3-4; II கொரி 7: 4; பாடுகளில் பிரியப்படவேண்டும். II கொரி 12: 10. அந்தப் பாடுகளே அவளுக்கு சித்திரத்தையலாடையாக விளங்குகிறது. இதுவே மணவாட்டியின் சித்திரத் தையலாடை.

**5. ஆபரணம் அணிந்திருக்க வேண்டும்:—** இந்த ஆபரணம் உலக பிரகாரமான நகைகளைக் காட்டவில்லை. உலக பிரகாரமான நகைகளையோ விசுவாசி அகற்ற வேண்டும் I பே 3: 3-5. ஏனென்றால் சரீரம் கிறிஸ்துவுக்குரியது. கிறிஸ்துவின் சரீரம் பரிசுத்தமாய் இருக்க வேண்டும். கொலோ 3: 10. கிறிஸ்துவுக்குப் பிரியமில்லாத எப்பொருளையும் மணவாட்டி சரீரத்தில் அணியலாகாது. கிறிஸ்துவையே தரித்துக் கொள்ள வேண்டும். துர் இச்சைக்கு இடமாக உடலைப்பேணலாகாது என்கிறார் ரோ 13: 14.

முற்காலப்பரிசுத்தவாட்டிகளும் அறியாத அலங்கரிப்பாய் இருக்கிற சாந்தம் அமைதலாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணங்களால் தங்களை அலங்கரித்தார்கள். 1 பே 3: 3-5 சாலோமோன் ஞானியும் கர்த்தருக்குப் பயப்படுவதே கழுத்திலுள்ள சரப்பணி என்கிறார். ஆகவே மணவாட்டி ஆவிக்குரிய கனிகளான அலங்காரமாகிய ஆபரணங்களால் அலங்கரிக்கப் பட்டவளாய் இருக்க வேண்டும். ஆவிக்குரிய குணங்களே அவளது ஆபரணம்.

**6. தகப்பன் வீட்டை மறக்க வேண்டும்:—** தகப்பன் வீட்டை மறக்க வேண்டும் என்பது பாவ ஜீவிய காலத்தில் அனுபவித்த உலக சந்தோஷங்களையும் உலக ஆடம்பரங்களை பழைய சபைகளையும் பாவிகளின் உறவாட்டத்தையும் முற்றுமாய் மறந்து ஜீவிப்பதாகும். இவையாவும் பிதாவாகிய பிசாசுக்கு குரியவைகள் I யோவா 2: 15—16

குமாரத்தியே கேள் உன்செவியை சாய்த்து சிந்தித்துக் கொள். உன் ஜனத்தையும்தகப்பன் வீட்டையும் மறந்துவிடு. அப்போது இராஜா உன் அழகில் பிரியப்படுவார் என்கிறார் சங் 45: 10—11. மணவாளன் மணவாட்டியை விரும்புவதற்காக மறக்க வேண்டிய யாவற்றையும், முற்றுமாய் மறக்க வேண்டிய யாவற்றையும், முற்றுமாய் மறக்க வேண்டும். அப்போது மணவாளனால் மேய்க்கப்பட்டு அலைந்து நடவாதபடி நடத்தப்படுவாள். அது மாத்திரமல்ல மணவாளனைப் போல் மணவாட்டியும் மணவாளன் விரும்பத்தக்க விதத்தில் மதிப்புக்குரியவளாய் காணப்படுவாள். இதுவே அவளது கனத்துக்குரிய மேன்மை.

## 8-ம் வசனம்

**ஸ்திரிகளில் ரூபவதியே:—** வேத புஸ்தக பாஷையில் பரிசுத்தாவியைப் பெற்றுக் கொள்ளும்போது மணவாட்டிகுரிய மீட்பின் முத்திரையாகிய பரிசுத்தாவியின் அச்சாரத்தை அடைகிறாள் எபே 1: 13-14; IIகொரி 5:5. அதாவது மணவாளனுக்கு வாழ்க்கைப் பட நியமிக்கப்பட்ட ஸ்திரியின் அனுபவத்திற்குள்ளாகிறாள். ஸ்திரிகளில் ரூபவதி எனப்படும் போது பரிசுத்தாவி பெற்றவர்களுக்குள் உன்னதமான அனுபவத்தில் ஜீவிக்கிறவள் என்பது விளங்குகிறது.

ஆகாஸ்வேரு இராஜாவின் மனைவி வஸ்தி கீழ்ப்படியாமை காட்டினபடியால் அவளை இராஜஸ்தானத்திலிருந்து தள்ளினார். அந்த இடத்திற்கு ஒரு ஸ்திரியை நியமிக்கும்படி இராஜா தனது இராஜ்யத்திலுள்ள சகல கன்னிப்பெண்களையும் அழைத்தார். அழைக்கப்பட்ட கன்னிப்பெண்களை ஆறுமாதம் வெள்ளைப் போளத்திலாலும் ஆறுமாதம் சுகந்த வர்க்கத்திலாலும் சுத்திக்கரிக்கப்படயேகாய் என்பவரிடம் ஒப்புக்கொடுத்தார். எஸ் 2: 1—3. குறிக்கப்பட்ட நாள் வந்தபோதுஎல்லாக் கன்னிப்பெண்களையும் ஆகாஸ்வேரு இராஜாவின் கண்களுக்கு முன்பாக நிறுத்தினார்கள் அப்போது ஆகாஸ்வேருவின் பார்வைக்கு எல்லா ஸ்திரிகளிலும் அழகுள்ளவளாய் எஸ்தர் காணப்பட்டாள் எஸ். 2: 9, ஆதலால் ஆகாஸ்வேரு இராஜா எஸ்தரை பட்ட ஸ்திரியாகத் தெரிந்து கொண்டார். எத்தனையோ ஸ்திரிகளுக்குள் எஸ்தர் ரூபவதியாக விளங்கினாள். இதுவே ஸ்திரிகளில் ரூபவதி என்பதாகும். இதுபோலவே விசுவாசிகளின் மத்தியில் உன்னதமான ஜீவியம் செய்த பரிசுத்தவான்களே ஸ்திரிகளில் ரூபவதி என்னப்படுகிறவர்கள் என்பதாகும்.

**மந்தைகளின் காலடிகளை தொடர்ந்து மேய்ப்பனின் கூடாரங்களண்டையில் உன் ஆட்டுக்குட்டியை மேயவிடு:—**

இவள் விசுவாசிகளோடுள்ள ஐக்கியத்தை விட்டு விட்டு ஊழியம் செய்தாள். என்றாலும் சில ஆத்துமாக்களை சம்பாதித்தாள். தான் சம்பாதித்த ஆத்துமாக்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறபடியால் எந்த சபையில் சேர்ப்பதென்று விளங்காமல் கவலைப்படுகிறாள். ஏனென்றால் அநேக விதவிதமான பெயர்களோடு கூடிய சபைகளைக் காண்கிறாள். தான் நம்பியிருந்த சபையில் விசுவாசக்குறைவும் அன்புக்குறைவும் ஏற்பட்டு விட்டது. ஆதலால் நீர் எனக்குக் கொடுத்த ஆத்துமாக்களை எந்த சபையில் சேர்ப்பதென்று ஆத்துமநேசரை கேட்கிறாள்.

அப்போது மணவாளன் மறுமொழியாக இன்னபெயரையுடைய சபையில் சேர்ப்பாயாக என்று ஆலோசனை கூறாமல் மந்தையின் காலடிகளைத் தொடர்ந்து போய் மேய்ப்பரின் கூடாரங்களண்டையில் உன் ஆட்டுக்குட்டிகளை மேயவிடு என்கிறார். அதாவது முதலாவது போன மந்தையாகிய அப்போஸ்தல சபையை போல், அப்போஸ்தல உபதேசமும் ஜீவிதமும் உள்ள சபையில் ஆத்துமாக்களை சேர்த்து விடுவாயாக என்று ஆலோசனை கொடுத்தார். அப்போஸ்தலசபை ஸ்தா

பிக்கப்பட்ட முதல் நாளில் 3000 பேர் மந்தையாகிய சபைக்குள் சேர்க்கப்பட்டார்கள். அன்றையதினம் அவர்களுக்கு கொடுத்த உபதேசமே ஆதி மந்தை கால் வைத்துப்போன காலடியாகும். அந்த உபதேசத்தையே பிற்கால சபைகளும் கடைபிடித்து நடக்க வேண்டும். அந்த அடிச்சுவடுகளை விட்டு விலகுவது, அதாவது அப்போஸ்தல உபதேசத்தைவிட்டு விலகுவது கிறிஸ்துவை விட்டு விலகுவதாகும் II யோ 7—9. ஆதலால் அப்போஸ்தல சபைக்குக் கொடுத்த உபதேசத்தை தற்காலத்தில் எந்த சபை கைக்கொண்டிருக்கிறது என்று கண்டுபிடிக்க வேண்டும். அதுவே பூர்வபாதை. எரே 6 : 16. அதையே கைக்கொண்டு நடக்க மணவாளன் ஆலோசனை கொடுக்கிறார்.

மனந்திரும்புதல், விசுவாசிகளின் ஞானஸ்நானம், பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்றுக்கொள்ளுதல், மாறுபாடான சந்ததியை விட்டு விலகுதல், அப்போஸ்தல உபதேசத்தைக் கைக்கொள்ளுதல், அன்னியோன்னிய அப்பம்பிட்குதல் ஜெபத்தில் தரித்திருக்குதல் இவையாவும் அப்போஸ்தல சபையின் அஸ்திபார உபதேசங்களாகும். அப் 2: 38—41. இவ்விதமான உபதேசத்தில் நிலைத்திருக்கும் சபையே பூர்வீக மந்தையாகிய அப்போஸ்தலர் ஸ்தாபித்த சபையாகும். அந்த சபையையே நீ தெரிந்து கொள் என்பதாக ஆலோசனை கூறினார்.

## 9-ம் வசனம்

**என் பிரியமே பார்வோனின் ரதங்களில் பூண்டிருக்கிற பரிகள் பவுஞ்சுக்கு உன்னை ஒப்பிடுகிறேன்:—**

**என் பிரியமே:—** மணவாட்டியாக அழைக்கப்பட்டவள் மணவாளனின் பிரியத்தை அறிந்துஅவருடைய ஆலோசனைக்கு அடங்கி ஜீவிக்கிறபடியால் மணவாட்டியைப்பார்த்து என் பிரியமே என்றழைக்கிறார். மணவாட்டியாக விரும்புகிறவர்கள் மணவாளனால் எப்போதும் நல்ல சாட்சி பெற்றவர்களாகவே ஜீவிக்கவேண்டும். அப்படியானால் மணவாளன் எப்பொழுதும் மணவாட்டியில் பிரியப்படுவார்.

**பிரியமானவளாய் ஜீவிப்பதால் உண்டாகும் பலன்.**

**1. பிரியமானவளின் ஜெபத்தை கேட்கிறார்:—**

தானியேல் பாபிலோனுக்கு சிறைப்பிடிக்கப்பட்டவராய் கொண்டு போகப்பட்டார். அங்கு சென்றதும் தன்னுடைய

ஜீவியத்தை பாதுகாத்துக்கொண்டார். ஆகாரத்திலும் தன்னை கறைப்படுத்தாதபடி காத்துக்கொண்டார். தானி 1:8 சத்துருக்கள் குற்றங் கண்டுபிடிக்க முயற்சி எடுத்தபோதும், குற்றம் கண்டுபிடிக்கக் கூடாத விதத்தில் குற்றமற்றவராக ஜீவித்தார். தானி 6: 5. எல்லாவிதத்திலும் தானியேல் தன்னுடைய ஜீவியத்தைக் காப்பாற்றி தேவனுக்குப் பிரியமானவராய் நடந்தார். அக்காலத்தில் தானியேல் தனது ஜனத்தின் விடுதலைக்காக தேவனை நோக்கி ஊக்கமாய் ஜெபித்தார். தானி 9: 1-20. அப்பொழுது கர்த்தருடைய தூதன் தானியேலிடம் வந்து தானியேலே, நீ மிகவும் பிரியமானவன். ஆதலால் நீ வேண்டிக்கொள்ள தொடங்கினபோதே கட்டளை வெளிப்பட்டது என்கிறான். தானி 9: 23. இருதயத்தில் அக்கிரமசிந்தை உள்ளவர்களின் ஜெபத்தையோ கர்த்தர் கேளேன் என்கிறார். சங். 66: 18. ஆனபடியால் தேவன் நமது ஜெபத்தைக் கேட்க அவருக்குப் பிரியமானவர்களாய் எப்பொழுதும் நடக்க வேண்டும். மணவாட்டி அவருக்கு பிரியமானவளாய் நடக்கிறபடியால் அவளின் விண்ணப்பத்தைக் கேட்கிறார். ஆதலால் மணவாட்டி மணவாளனுக்கு பிரியமானவளே.

**2. பிரியமானவர்களுக்கு வெளிப்படுத்தலைக் கொடுக்கிறார்.**

சாமுவேல் குழந்தைப் பருவத்திலேயே ஆசாரியனாகிய ஏலியின் கீழில் வளர்க்கப்பட்டவனாய் இருந்தான். சிறு பருவத்திலேயே தெய்வபயம் உள்ளவனும் தேவனுக்கும் மனிதனுக்கும் பிரியமாய் நடக்கிறவனுமாய் இருந்தான். I சாமு 2: 26. அக்காலத்தில் ஆசாரியனாகிய ஏலியின் மக்கள் பேலியாளின் மக்களாய் நடந்து வந்தார்கள். ஏலியின் மக்களின் பாவத்தை கர்த்தர் எடுத்துக்காட்டி எச்சரித்த போதும்ஏலிஅவற்றை கண்ஜாடையாய் விட்டு விட்டான். ஆதலால் கர்த்தர் ஏலிக்கும் ஏலியின் குடும்பத்திற்கும் தண்டனை அனுப்ப சித்தங் கொண்டார். இந்த இரகசியத்தை தேவனுக்குப் பிரியமானவனாய் ஜீவித்த சாமுவேலுக்கு வெளிப்படுத்தினார். I சாமு 3: 4—18. தாவீது ராஜாவும் தமக்கு பயப்படுகிறவர்களிடம் தமது இரகசியம் இருக்கிறதெனக் கூறுகிறார். சங் 25: 14. ஆதலால் அவருக்குப் பயந்து அவருக்கு பிரியமாய் ஜீவிக்கிறவர்களுக்கு இரகசியத்தைவெளிப்படுத்துவார் என அறிய வேண்டும். ஆதலால் மணவாட்டி எப்போதும் அவருக்குப் பிரியமாய் நடக்க வேண்டியவளே.

**பார்வோனுடைய ரதத்தில் பூண்டிருக்கிற பரிகள் பவுஞ்சுக்கு உன்னை ஒப்பிடுகிறேன்:-** மணவாட்டி மணவாளனைப்

பிரியப் படுத்தி ஜீவிக்கிறபடியால் அவளை இப்போது பார்வோனுடைய ரதத்தில் பூட்டியிருக்கின்ற குதிரையோடு ஒப்பிடுகிறார். ஏன் பார்வோனுடைய ரதத்தில் பூட்டியிருக்கிற குதிரையோடு ஒப்பிடுகிறார் என்றால் மணவாட்டியின்மேன்மையை விளங்கப்பண்ணவே.

அக்காலத்தில் எகிப்து தேசம் பெரியதும் வல்லமையுள்ள தேசமுமாய் இருந்தது. எகிப்து தேசத்தை ஆண்ட இராஜாக்களுக்கு பாரம் பரியமாய் பார்வோன் என்பது குடும்பப்பெயராய் இருந்தது. சாதாரணமான ஐசுவரியவான்களுடைய குதிரைகளைவிட அரசனுடைய குதிரை எல்லாவற்றிலும் மிகுந்த வல்லமையுள்ளதாகவே காணப்படும். அரசனுடைய இரதத்தில் நான்கோ, ஆறோ குதிரைகளைக் கட்டி ஓட்டுவார்கள். இவ்வாறு இராஜாவின் இரத்தில் அழகுள்ளதும் வீரமுள்ளதும் பராக்கிரமமுள்ளதுமான குதிரைகளைக் கட்டுவதை போல மணவாட்டியும் தம்முடைய சபையாகிய இரதத்தில் சேர்க்கப்பட்டவளாயிருக்கிறாள். மணவாட்டி சாதாரணமான பரிசுத்தவான்களை போன்றவளல்ல. எல்லாவற்றிலும் விசேஷப்பட்டவள் என்பதை விளக்கவே பார்வோனுடைய இரதத்தில் பூண்டிருக்கிற பரிக்கு சமானம் என்று புகழ்ந்து பேசினார்.

**குதிரைகளின் தன்மை:-**

**1. குதிரைகள் இரதத்தின் நுகத்தடிக்குள் பட்டிருக்கிறது.**

பார்வோன் இராஜாவினுடைய குதிரைகள் இராஜாவின் இரதத்தை இழுத்து செல்வதற்காக இரதத்தின் நுகத்தடிக்குள் கட்டப்பட்டதாய் இருந்தது. இந்த ரதம் சபையைக் காட்டுகிறது. இந்த சபையாகிய ரதத்தை இழுப்பவளே மணவாட்டி. ஆதலால் மணவாட்டி சபையை முன்னேற்றிக் கொண்டுபோக எப்பொழுதும் அடங்கியிருக்கவேண்டும். குதிரைகள் இரதத்தை இழுத்துக் கொண்டுபோக நுகத்தடிக்குள் அடங்கி இருப்பதுபோல விசுவாசிகள் சபையின் கட்டுப்பாட்டிற்குள் அடங்கியிருக்க வேண்டும். அப்படியானால் சபையை முன்னேற்றிக்கொண்டு போகலாம். இயேசு என் நுகத்தை ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள் என்றார். மத் 11: 29. கர்த்தருக்குள் அடங்கி ஜீவித்தால்தான் கர்த்தருடைய இரகசியங்களைக்கற்றுக் கொள்ளலாம். சபை என்றால் கட்டுப்பாடு இல்லாததல்ல சட்ட திட்டங்கள் அடங்கினதே

சபை. கட்டற்ற புஸ்தகம் போல் இருக்கிறதல்ல அப்படிபட்ட வர்கள் வீண் அலுவற்காரர். அவர்கள் காலஞ்செல்லச்செல்ல சிதறடிக்கப்பட்டுப் போவார்கள். மணவாட்டி கட்டுப்பாடு உள்ளவள் என்பதை விளக்கவே நுகத்தடி காட்டுகிறது.

**2, குதிரைகள் முன்னேக்கியே ஓடும்:—** இரதத்தில் கட்டப்பட்ட குதிரைகள் இரத்தை இழுத்துக் கொண்டு முன்னேக்கியே ஓடும். குதிரைகளுக்கு எதிராக எதிர்ப்புகள் வந்தாலும் அவைகள் பின் வாங்குவதில்லை. சாலமோன் ஞானி ஒன்றுக்கும் பின்னடையாத குதிரை என்கிறுர். நீதி 30: 30—31. யுத்த காலங்களிலும் கூட குதிரைகள் எதிரியுடைய ஈட்டியை கண்டோ, பீரங்கியுடைய சத்தத்தைக் கேட்டோ, அதற்கு சென்ற வீரர்கள், குதிரைகள், வெட்டுண்டு கிடப்பதைக் கண்டோ, காயப்பட்டு வேதனையடைந்து அலறுவதைக் கண்டோ, பயந்து பின்னடைவதில்லை. குதிரைகள் எப்போதும் கனைத்துக்கொண்டு முன்னேக்கியே செல்லும். இதுவே மணவாட்டியின் வீரம். மணவாட்டி தான்பெற்ற வெளிப்படுத்தலுக்காகவும், உபதேசங்களுக்காகவும், போராட்டங்களோ, எதிர்ப்புகளோ வந்தாலும் பயப்படாமல் முன்னேக்கியே போவாள். முன்னே போனவர்கள் சாத்தானல் வெட்டுண்டு தவறிப்போனுலும் சிலர் நான் சுவிசேஷத்திற்காக விட்டு வந்தவைகள் யாவும் தவறுதல் என்று கண்ணீர்விட்டுக் கதறினுலும், மணவாட்டியோ தான்அறிந்த சத்தியங்களுக்காக மரிக்க வேண்டியது வந்தாலும், ஒன்றையும் பொருட்படுத்தாமல் முன்னேக்கியே செல்வாள். பவுலும் தனது ஜீவிய போராட்டத்தில் பயப்படாமல் கனைத்துக் கொண்டு முன்னேறிப்போகும் குதிரையைப்போல, நல்ல தீர்மானத்தோடு ஜீவித்ததைக் காணலாம். அப் 20:22—24 ஆனபடியால் பவுல் நம்பிக்கையோடு தனது ஓட்டத்தை ஓடிமுடித்தார். 2 தீமோ 4: 7. இதுவே குதிரைகள் முன்னேக்கி ஓடுவதாகும்.

**3. குதிரைகள் எஜமானின் சித்தமே செய்யும்:—** இரதத்தில் பூட்டப்பட்ட குதிரைகள் நுகத்தடியில் கழுத்தைக் கொடுத்துவிட்டு தனக்குப்பிரியமானபடி போவதில்லை. எஜமானின் சித்தத்தின் படியே செய்யும். அதுபோலவே மணவாட்டியும் எப்பொழுதும் கர்த்தருடைய சித்தத்தின்படியே ஜீவிக்கிருள். பவுல் நீங்கள் மதியற்றவர்களாய் இராமல் கர்த்தருடைய சித்தம் இன்னது என்று உணர்ந்து கொள்ளுங்கள் என்கிறுர். எபே 5: 17.

சில வேளைகளில் விசுவாசிகள் கஷ்டங்கள் வரும்போது தங்கள் சித்தத்தை செய்வதைக் காணலாம். கானானில்வாசமாயிருந்த ஆபிரகாம், கானானில் பஞ்சம் உண்டானபொழுது தனது சொந்த சித்தப்படியே எகிப்துக்குப்போனார். ஆதலால் நானூறு வருஷம் தனது சந்ததியார் எகிப்தில் அடிமையாகத் தக்கதாக தேவன் அவரைத் தண்டித்தார். ஆதி 12: 5; ஆதி 15: 13. அதுமாத்திரமல்ல எகிப்தில் சென்ற ஆபிரகாம் எகிப்திலிருந்து ஆகாராகிய அடிமைப் பெண்ணையும் கொண்டு வந்தார். இதனால் கர்த்தர் கொடுத்த வாக்குதத்தை சாராள் மறந்து ஆபிரகாம் ஆகாரை சேர்த்துக்கொள்ள ஆலோசனை கொடுத்தாள். இந்த ஆலோசனைக்கு ஆபிரகாம் செவிகொடுத்தார். ஆதலால் ஆகார் கர்ப்பவதியானாள். ஆகார் கர்ப்பவதியானதிலிருந்தே ஆபிரகாமுடைய வீட்டில் கலக்கம் ஆரம்பித்தது. இப்போதும் அந்த சந்ததியாரால் தெய்வஜனம் கலங்கிக்கொண்டே இருக்கின்றனர். இவையாவும் சுயசித்தம் செய்ததால் நேர்ந்ததே. ஆதலால் விசுவாசிகள் தெய்வசித்தம் செய்யவே அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ளவேண்டும். ஆகவே மணவாட்டி தேவசித்தம் செய்தே ஜீவிக்கிறாள். ஆனபடியால்தான் மணவாளன் மணவாட்டியை பார்வோனின் இரதத்தில் பூண்டிருக்கிற பரிக்கு ஒப்பிட்டு பேசுகிறார்.

**4. குதிரைகள் மற்றவர்களுக்காகவே ஓடும்:—** பார்வோனுடைய இரதத்தில் கட்டியிருந்த குதிரைகள் தங்களுக்காக அல்ல மற்றவர்களுக்காகவே ஓடினது. இப்படியே மணவாட்டியும் மற்றவர்களுக்காகவே ஜீவிக்கிறாள். விசுவாசிகள் தங்களுக்காக அல்ல மற்றவர்களுக்காகவே ஜீவிக்கவேண்டும். பவுல் தனக்கானவைகளையல்ல பிறருக்கானவைகளையும் நோக்குவானாக என்கிறார். பிலிப் 2:4. நாம் எப்போதும் மற்றவர்களுடைய பிரயோஜனத்தையே நாடவேண்டும். I கொரி 10: 32. யோவான் ஸ்நாபகன் நான் சிறுகவேண்டுமென்கிறார். யோவான் 3: 30. ஏனென்றால், மற்றவர்கள் பெருகும்படியாகவே அப்படி கூறியிருக்கிறார். அதற்காக அவர் எரிந்து பிரகாசித்தார் ஆதலால் அநேகர் அந்த வெளிச்சத்தில் களிகூர்ந்தார்கள். யோவா 5: 35. எரியும் போது எறிகிற பொருள் அழிந்துபோகிறது எதற்காகவென்றால் மற்றவர்கள் ஜீவிப்பதற்காகவே. இதுவே மணவாட்டியின் அனுபவம்.

**5. குதிரைகள் முறையிடாது:—** அரசனின் இரதமானதால் நான்கு அல்லது ஆறு குதிரைகள் பூட்டியிருப்பார்கள். நான்கு குதிரைகளாலும் இரதத்தை இழுத்துக் கொண்டு

போகும்பொழுது அவைகள் ஒன்றுக்கொன்று முன்பின்னாய் போகவோ தாமதமாய் இழுக்கவோ செய்தால் நீ ஏன் முன்னே போகிறாய் என்றோ! சரியாய் இழுக்கவில்லை என்றோ! குறை கூறவோ முறுமுறுக்கவோ செய்வதில்லை. ஒவ்வொன்றும் முறையிடாமல் சமாதானமாகவே தங்கள் தங்கள் வேலைகளைச் செய்கின்றன. அவற்றை சரிப்படுத்தி கொண்டு போகிறவன் குதிரை ஓட்டுகிறவனே.

கர்த்தருடைய மக்கள் தேவனுடைய சபையாகிய இரதத்தில் பற்பல வேலைகளைச்செய்ய நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேலைகளை கர்த்தர் கொடுத்திருக்கிறார். அவரவருக்கும் கர்த்தர் கொடுத்த வேலைகளில் உண்மையுள்ளவர்களாகவும் உத்தரவாதமுள்ளவர்களாகவும் மனப்பூர்வம் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் ஜெபிக்கிறவன் ஜெபத்தில் தரித்திருக்க வேண்டும். ஊழியஞ்செய்கிறவன் ஊழியஞ் செய்யவேண்டும். புத்திசொல்கிறவன் புத்திசொல்ல வேண்டும். உதவிசெய்கிறவன் உதவிசெய்ய வேண்டும். ரோமர் 12; 4—8. இவ்விதமாகக் கர்த்தருடைய ஊழியத்தில் சிறிதும் பெரிதுமான வேலைகள் உண்டு என்பதை அறிந்து கொள்ள வேண்டும். பெரியவேலைதான் கர்த்தருடைய ஊழியம் தேவனுடைய வீட்டை சுத்தம் செய்வது தேவனுடைய ஊழியம் அல்லவென்று எண்ணலாகாது. எவ்வித சிறிய, இழிவான ஊழியஞ்செய்தாலும் மனுஷருக்கென்றல்ல கர்த்தருக்கென்று மனப்பூர்வமாய் செய்யவேண்டும். கொலோ 3 : 24—25. அப்போது பலனைக்காணலாம்.

நிற்க, இவ்வித ஊழியத்தில் ஒவ்வொருவரும் ஈடுபடும் போது மற்றவர்களை குற்றப்படுத்துகிறவர்களாகவோ, குறை பேசுகிறவர்களாகவோ இருக்கக்கூடாது. பிலிப் 2: 16 யாக் 4; 11. மற்றவர்கள் மனப்பூர்வமாய் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி அதற்கேற்ற பலனை கர்த்தரிடம் பெற்றுக் கொள்வான் என தீர்மானித்து நமது பலனை நாம் பெற்றுக் கொள்ள முறுமுறுக்காதவர்களாகவும் குறைபேசாதவர்களாகவும் நடந்து கொள்ளவேண்டும். இப்படிப்பட்டவர்களே மணவாட்டி; மணவாட்டி முறுமுறுக்காதவளே.

**6, குதிரைகள் ஐக்கியம்:—** இரதத்தில் பூட்டப்பட்டிருக்கும் குதிரைகள் முறையிடாதவைகளாய் இருப்பது மாத்திரமல்ல ஐக்கியமாய் இரதத்தை இழுத்துக் கொண்டும் செல்

கின்றன. ஒவ்வொரு குதிரையும் ஐக்கியமில்லாமலும் இரதம் ஓட்டுகிறவன் சொல்கேளாமலும் ஒவ்வொரு பக்கமாய் இழுத்தால் இரதம் சரியாய் ஓட்டப்படமாட்டாது. இரதம் மறிந்து கீழே விழ ஏதுவாகும். அரசன் இரதத்திலிருந்தால் அரசனும் ஓட்டுகிறவனும் கீழே விழவும் கை, கால், தலை, உடையவும் மரிக்கவும் ஏதுவாகும். குதிரைகளின் ஐக்கியக் குறைவு அரசனுக்கு பெரும் நஷ்டத்தையே உண்டாக்கும். அப்படிக்கில்லாமல் குதிரைகள் மிகவும் ஒழுங்காய் ஐக்கியமாய் இரதத்தை இழுத்துக் கொண்டு செல்கின்றன. வீதிகளில் இரதம் நேர்த்தியாக நடத்தப்படுகிறது. பார்ப்பவர் கண்களை கவரத்தக்க விதத்தில் குதிரைகள் ஐக்கியமாய் ஓடுகின்றன. அரசனும் உல்லாசமாய் அரண்மனை போய்ச்சேருகிறான். இவைகள் விசுவாசிகளின் ஐக்கியம் எவ்வளவு அவசியம் என்பதை இவ்வுண்மை வெளிப்படுத்துகிறது. தற்கால உலகில் விசுவாசிகளின் மத்தியில் ஐக்கியமே இல்லை. எங்குபார்த்தாலும் பிரிவினை. இப்பிரிவினைக்குக்காரணம் மேட்டிமையே. நான் அவனுக்குக் கீழ்ப்படிய வேண்டுமா? நான் தாழ்ந்தவனோ? நான் யார்? எனக்கு வெளிப்படுத்தல் இல்லையா? பிசாசைச் துரத்தவில்லையா? அப்படியிருக்க நான் ஏன் கீழ்ப்படிய வேண்டும் என்ற அகங்காரம் உள்ளத்தில் கிரியை நடப்பிப்பதால் - பிரிவினை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போகிறது. இதனால் கர்த்தருடைய நாமம் தூஷிக்கப்படுவதோடு விசுவாசிகளும் அழிந்து போகின்றனர். ரோமர் 2; 24 கலா 5: 15. ஆனபடியால் எப்பொழுதும் ஐக்கியமாய் இருப்பதையே நாடவேண்டும். அப்பொழுது தேவனுடைய நாமம் மகிமைப்படும். மணவாட்டி ஐக்கியத்தை காத்துக்கொள்ளுகிறவளே. அவளே பார்வோனுடைய இரதத்தில் பூண்டிருக்கிற குதிரைக்கு சமமானவள்.

**7. குதிரைகளின் வாய் கடிவாளத்தால் கட்டப்பட்டும், கண்மறைவு கட்டப்பட்டும்,ஓட்டுகிறவனுக்கு அடங்கியும்இருக்கிறது:—** பார்வோனுடைய இரதத்தில் கட்டப்பட்டிருக்கும் குதிரைகள் தன் இஷ்டமாய்ப் போகாமல் ஓட்டுகிறவனுடைய இஷ்டத்திற்கு நடத்தப்படுவதற்காக குதிரையின் வாயில் கடிவாளம் போட்டு கட்டிவைத்திருக்கிறது. இந்த கடிவாளத்தை குதிரை ஓட்டுபவன் வெட்டி இழுக்கும் போது குதிரைக்கு கடுமையான நோவு உண்டாகிறது. இதற்கும் குதிரை அடங்காதவேளையில் குதிரை ஓட்டுகிறவன் தனது சாட்டையால் குதிரையை அடிக்கிறான். இவையாவும் கர்த்தருடைய பிள்ளைகள் தேவன் விரும்பின பாதையில் நடத்தப்படும்படியாக தேவனால் நியமிக்கப்பட்ட தண்டனைகள் என்

பதை உணர்ந்து கொள்ள வேண்டும். ஆம்: தேவனுடைய பிள்ளைகளுக்குத் தண்டனை அவசியமே. விசுவாசிகள் எப்போதும் தண்டனையை விரும்பவேண்டும். ஏனென்றால் தேவன் தண்டிக்கிறமனுஷன் பாக்கியவான். சர்வ வல்லவருடைய சிட்சையை அற்பமாய் எண்ணாதே என்கிறார். யோபு 5: 17. ஏனென்றால் கர்த்தர் நம்மை நேசிக்கிறபடியால் அவருடைய பரிசுத்தத்திற்கு பங்குள்ளவர்களாக வேண்டுமென்றே சிட்சிக்கிறார். எபி 12: 6—12 ஆகையால் கர்த்தருடைய தண்டனையை காணும்போது சோர்ந்து போகாமல் தாழ்த்தி குற்றங்களை உணர்ந்து அறிக்கையிட்டு கர்த்தரை மகிமைப்படுத்தி ஜீவிக்க வேண்டும். இதுவே மணவாட்டியின் ஜீவிதம்.

**8. குதிரைகளுக்கு நாளையதினத்தைப்பற்றி கவலையில்லை:—**

பார்வோனின் இரதத்தில் பூட்டப்பட்ட குதிரைகளை இரதசாரதி இரவுபகல் தேவைக்கேற்றபடி வேலை வாங்குகிறான். குதிரைகளோ வெயிலென்றும் மழையென்றும் பாராமல் எஜமானுடைய சித்தப்படியே உழைக்கிறது. உழைத்துவிட்டு அரண்மனை சென்றதும் என்ன சாப்பிடுவேன் என்னதைக் குடிப்பேன் என்று கவலைப்படுவதில்லை. எஜமானனே அவைகளுக்காகக் கவலைப்படுகிறான். குதிரை, லாயத்தில் சென்றவுடன் உழைப்புக்குத் தகுந்தபடி புல்லோ, கடலையோ, கொள்ளோ மற்றும் எவை தேவையோ அவற்றை ஆயத்தப்படுத்திக் கொடுக்கிறான். குதிரைகளோ வயிறாரப் புசித்து இளைப்பாறுகின்றன இவ்வாறே நமது கர்த்தரும் தமது மக்களுக்கு வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். நாளைக்காகக் கவலைப்பட வேண்டாம். கவலைப்படுகிறவர்கள் அஞ்ஞானிகள். நானேஉங்களுக்காகக் கவலைப்படுகிற கர்த்தர் என்று உரைத்திருக்கிறார். மத்தே. 6 : 25—34 ஆதலால், விசுவாசிகள் கவலைக்கு இடங்கொடுக்கலாகாது. கவலைகளை பிசாசு கொண்டுவரும்பொழுது அவர்மேல் எல்லாவற்றையும் சுமத்திவிட்டு சும்மா இருக்கப் பழக வேண்டும். அப்படியே நமது கர்த்தரும் சொல்லியிருக்கிறார். I பேதுரு 5 : 7. சங். 55 : 22.

அநேகர் ஆண்டவருடைய வாக்குத் தத்தங்களை பிடித்துக்கொண்டு கவலைகள் வரும்போது அவர்மேல் சுமத்துவார்கள். ஆனால் முழங்காலை விட்டு எழும்பும்போதோ சிலுவை மரத்தில் சுமத்தின பாரங்களையும் எடுத்துக் கொண்டே போவார்கள். ஆதலால் அவர்கள் கவலைகள் அவர்களைவிட்டு விலகுவதில்லை. எல்க்கானாவின் மனைவி அன்னாளுக்கு குழந்தைகள் இல்லாதிருந்தது. அவளின் சக்களத்தியாகிய பெனின்னாள் அன்னாளை

அவதூறாய் பேசிக்கொண்டே இருப்பாள், இதனுள் அன்னாள் கலங்கி திகைக்கிறவளாய் இருந்தாள். அவளது புருஷன் எல்க்காகு அன்னாளை எவ்வளவோ ஆறுதல் படுத்தியும் அவள் ஆறுதல் அடையவில்லை. இவ்வாறிருக்க ஒருநாள் அன்னாள் தேவ சமுகம் சென்று தன்னுடைய பாரத்தையெல்லாம் கர்த்தர் மேல் சுமத்தினாள். அவள் திரும்ப எடுக்கவில்லை. அதன்பின்னர் ஒருநாளும் துக்கமுகமாக இருக்கவுமில்லை. சாமு 1:1—18.

இப்படியே பாரத்தை சுமத்தி கவலையில்லாதிருக்கவேண்டும். மணவாட்டி நாளைக்காகக் கவலைப்படாதவளே. இதுவே பார்வோனுடைய இரதத்தில் பூண்டிருக்கும் பரிகளின் அனுபவம். இவ்வனுபவம். மணவாட்டியில் காணப்பட்டபடியால் மணவாட்டியை மணவாளன் பார்வோனுடைய இரதத்தில் பூண்டிருக்கும் பரிகளின் பவுஞ்சுக்கு ஒப்பிடுவேன் என்று புகழ்ந்து பேசினார்.

## 10-ம் வசனம்

**ஆபரணுதிகள் பூண்ட உன் கன்னங்களும் ஆரங்கள் பூண்ட உன் கழுத்தும் அழகாய் இருக்கிறது.**

முற்காலங்களில் நம்முடைய நாடுகளிலும் ஸ்திரிகள் தங்களை நகை நட்டுகளினாலும் மற்றும் வகைகளினாலும் பலவிதமாகஅலங்கரிப்பார்கள். ஒவ்வோர்அவயங்களிலும் வித்தியாசம் வித்தியாசமான ஆபரணங்களை அணிந்து அலங்கரிப்பார்கள். அப்படியே பலஸ்தீன தேசத்திலும் அந்தநாட்டு வழக்கத்தின் படியே ஸ்திரிகள் தங்களை அலங்கரித்து வந்தார்கள். கன்னத்தில் கன்னப்பிறையையும் கழுத்தில் பற்பல விதமான ஆரங்களையும் உபயோகித்து வந்தார்கள்.

**ஆபரணுதி பூண்ட கன்னம்:—** கன்னத்தில் ஆபரணம் பூண்ட ஸ்திரியின் முகத்தில் ஒருவன் பார்த்தவுடன் அவளின் கன்னத்திலிருக்கும் ஆபரணத்தையே காண்கிறான். அவள் இயற்கை அழகு குறைந்தவளாயிருந்தாலும் அவளது அழகின் குறைவை அவள் கன்னத்தில் பூண்டிருக்கும் ஆபரணம்மாற்றி அவளை அழகுள்ளவளாக்குகிறது.

இந்த கன்னத்தில் பூண்ட ஆபரணத்தால் உண்டாகும் அழகு, இயேசுவின் மகிமையின் பிரசன்னத்தால் நிறைந்திருப்

பதையே காட்டுகிறது. இயேசுவின் மகிமையால் நிறையாத ஆத்துமாவுக்கு மரணங்கள், நஷ்டங்கள், இடுக்கண்கள், துன்பங்கள் உண்டாகும்போது உள்ளம் சஞ்சலத்தால் நிறைந்து முகம்வாடி, காரிருள் மூடி, விகார ரூபமடைகிறது. இயேசுவின் மகிமையால் நிறைந்தவனே இக்கட்டால் பிடிக்கப்படும் பொழுது கர்த்தரைத் துதித்துப் பாடி மகிமையால் நிறைந்திருப்பான்.

ஸ்தேவான்மீது சத்துருக்கள் எழும்பி பொய்க்குற்றங்கள் சாட்டி கல்லெறிந்தார்கள். ஸ்தேவானே தைரியமாய் சாட்சி பகர்ந்தான். அப்போது அவனைப் பார்த்தவர்கள் அவன்முகம் தேவதூதன் முகம்போல பிரகாசித்ததைக் கண்டார்கள். அப்போ 6 : 15. ஏனென்றால் ஸ்தேவான் தேவ சிநேகத்தால் நிறைந்திருந்தான். சந்தோஷமுள்ளவனாய் விளங்கினான். எல்லாம் அனுகூலமாய் இருக்கும்போது சந்தோஷப்படுவது மாத்திரமல்ல எல்லாம் பிரதிகூலப்படும்போதும் சந்தோஷமாய் இருப்பதே கிறிஸ்தவ ஜீவிதம். இந்த அனுபவமே ஒருவனை தேவமகிமையால் நிறையச் செய்கிறது. இந்த அனுபவத்தை மணவாட்டியில் மணவாளன் காண்கிறார். ஆனபடியால் ஆபரணதிகள் பூண்ட உன் கன்னங்கள் என்கிறார்.

**ஆரங்கள் பூண்ட கழுத்து:**—ஸ்திரிகள் தங்களை அழகுபடுத்த கழுத்துகளில் ஆரங்களையும் அணிவார்கள். இந்த ஆரம் கர்த்தருக்கு பயப்படும் பயமாகும். கர்த்தருக்கு பயப்படும் பயத்தை சரப்பணியென கூறுகிறார். நீதி 1 : 7—9 கர்த்தருக்கு பயப்படும் பயம் மனிதனை தீமைக்கு விலக்கி காக்கிறது. நீதி 8 : 13 ; 16 : 6 ஆதலால் அது அவருக்கு உகந்த வாசனையாய் இருக்கிறது. ஏசாயா 11 : 3 ஆகவே விசுவாசி எப்பொழுதும் கர்த்தருக்குப் பயந்து ஜீவிக்கிறபடியால் கிறிஸ்து அவனோடிருக்கிறார். ஆதலால் அவன் கிறிஸ்துவை தரித்தவனாக விளங்குகிறான். இதுவே ஸ்திரிகளின் கழுத்தில் அணிந்திருக்கும் ஆரம்.

இவ்விதமாக மணவாட்டி ஆவிக்குரிய சந்தோஷத்தால் நிறைந்து தேவபயத்தால் நடந்து, தீமைக்கு விலகி ஜீவிப்பதால் கிறிஸ்துவை தரித்துக்கொள்ள தகுதிப்படுத்துகிறது. இதனால் இவள் ஆபரணதிகள் பூண்ட கன்னமும் ஆரங்கள் பூண்ட கழுத்தும் உடையவளாய் விளங்குகிறாள். ஆதலால் மணவாளன் அவளது சந்தோஷமான ஜீவியத்தையும் தெய்வ

பயத்தின் மேன்மையான அனுபவத்தையும் கண்டு ஆரங்கள் பூண்ட கழுத்து என்று புகழ்ந்து பேசுகின்றார்.

## 11-ம் வசனம்

**வெள்ளிப் பொட்டுள்ள பொன்னாபரணங்களை உனக்குப் பண்ணுவோம்.**

மணவாட்டியின் ஆவிக்குரிய சந்தோஷமான அனுபவங்களை மணவாளன் கண்டவுடன் இன்னும் அதிகமான ஆசீர்வாதங்களைக் கொடுக்க விரும்புகிறார்.

**வெள்ளி :—**இது மீட்பைக் காட்டுகிறது. பழைய ஏற்பாட்டின் காலத்தில் ஒரு இஸ்ரவேலன் சேனையில் சேர்க்கப் படவேண்டுமானால் மீட்பின் கிரயமாக அரைச் சேக்கல் வெள்ளி கொடுக்க வேண்டும். யாத் 30 : 11-16 இந்த வெள்ளி அநேகரை இரட்சிப்புக்கு நேராய் வழி நடத்த வல்லமை கொடுப்பது என்பதைக் காட்டுகிறது.

**பொன் :—** இது ராஜரீகத்தையும் விசுவாசத்தையும் காட்டும். I பேது 1 : 7 இது விசுவாசிகளை விசுவாசத்தில் உறுதிப் படுத்த கிருபைகளைக் கொடுப்பதாகும்.

ஆகவே விசுவாசி ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ந்து பிரதிஷ்டையிலும், பரிசுத்தத்திலும் முன்னேறுவதால் புதிய கிருபைகளைக் கொடுத்து இரட்சிப்பில் ஆத்துமாக்களை கொண்டு வரவும் விசுவாசத்தில் ஸ்திரப்படுத்தவும் கிருபைகளைக் கொடுக்கிறார்.

இவ்விதமாய் மணவாட்டியை ஆத்துமாக்களுக்குப் பிரயோஜனமாய் உபயோகப் படுத்துவதையே வெள்ளிப் பொட்டுள்ள பொன்னாபரணங்களை உண்டுபண்ணுவோம் என்பதாகும்.

பண்ணுவோம் என்பது திருத்துவத் தீர்மானத்தின் ஆலோசனையைக் காட்டுகிறது. ஆதியில் ஆதாமை உண்டாக்கும் போதும், ஆதாம் பாவம் செய்த பின்னரும், பாபேல் கோபுரம் கட்டும் போதும் நாம் என்று பன்மையிலேயே கூறியிருக்கிறார். ஆதி 1 : 26; ஆதி 3 : 22; ஆதி 11 : 7. அப்படியே மனிதனுக்கு புதிய கிருபைகளை பகர்ந்து கொடுக்கும் போதும் தெய்வத்தினுடைய திருத்துவ ஆலோசனை உண்டென்

பதையும் அறிந்து கொள்ள வேண்டும். ஆனபடியால் தான் பண்ணுவோம் என்கிருர்.

தற்காலத்தில் திருத்துவ உபதேசங்களை மறுதலிக்கிறவர்களைக் காணலாம். அவர்களுக்கு உண்மையான தெய்வீக மகிமை வெளிப்படாததே காரணம். மத் 11 : 27 ஸ்தேவான் சத்துருக்களால் கல்லெறியப்படும்போது வானம் திறந்திருக்கிறதையும் தேவனுடைய வலது பாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் காண்கிறேன் என்கிருன். அப் 7 : 55. திருத்துவத்தை மறுதலிக்கிறவர்களோ, இயேசுவை மிகாவேல் தூதனுகவும் சாதாரண மனிதனுகவும் காண்கிருர்கள், சிலர் இயேசு முதலில் பரலோகத்தில் மிகாவேலாய் இருந்தார் என்றும், மனுஷ ஜாதியை மீட்க பூமியில் இயேசுவாய் வெளிப்பட்டார் என்றும் இப்போது, முன்னிருந்த படியே பரத்தில் மிகாவேலாகவே இருக்கிருர் என்றும் கூறி இயேசுவின் தெய்வீகத்தை மறுதலிக்கின்றனர். இவர்களே அந்திக்கிறிஸ்தவர்கள். யூதா 4; II யோ 7-9.

வேத புஸ்தகத்தில் இயேசுவுக்கு அநேக பெயர்கள் காரணங்களுக்கு தகுந்தவாறு கொடுத்திருக்கிறது. ஆனபடியால் காணப்படுகிறதும், குறிப்பிட்டதுமான அந்த பெயரையுடைய இயேசு, இயேசுதான் என அறிய வேண்டும். தெய்வீக வெளிச்சம் இல்லாதவன் மனதில் எண்ணின படியே எதையும் சொல்லுவான்.

உதாரணமாக இயேசுவுக்கு தாவீது என்ற பெயர் கொடுத்திருக்கிறது. எசேக் 34 : 23-24. இதன் கருத்தை சிந்திக்காதவன் தாவீது மரித்து, இயேசுவாய் வந்தார் என்றும் இப்பொழுது மரித்து முந்தின தாவீதாய்ப் போயிருக்கிருர் என்றும் இனிமேல் ஆயிர வருஷ அரசாட்சிக்குத் தாவீதாய் வருவார் என்றும் போதித்தால் எவ்வளவு பயங்கரமான வேதப்புரட்டு என்பதை அறிவீர்களாக.

ஆகவே திருத்துவத்தில் ஒருவரான கிறிஸ்துவை மிகாவேல் தூதன் என்பதும் திரியேகத்துவத்தை மறுதலிப்பதும் வாசிப்போர் கவனிக்க வேண்டியதாகும். திரியேகத்துவத்தின் உபதேசத்தை மறுதலிக்கிறவர்களின் வஞ்சகப் போதகத்திலிருந்து விசுவாசிகள் காக்கப்படுவார்களாக.

## 12-ம் வசனம்

**இராஜா தமது பந்தியிலிருக்குந்தனையும் என்னுடைய நளத தைலம் தன் வாசனையை வீசும்:-**

**நளததைலம்:-** இது இமயமலையிலுள்ள ஒரு சிறு செடியின் வேரிலிருந்து எடுக்கிற தைலம் என்கிறார்கள். இந்த தைலத்தை பலஸ்தீனாவில் வியாபாரம் செய்து வந்தார்கள். பாவியான ஸ்திரியும் இந்த தைலத்தை இயேசுவின் சிரசின் மேல் ஊற்றினாள். மாற்கு 14: 13—5. முதற்காலங்களில் பலஸ்தீனா தேசத்தில் பற்பல விதமான சடங்காசாரங்களை கையாடி வந்தார்கள். பிள்ளைகள் பிறந்தால் பெரியோரான இன ஜன பந்துக்கள் பிள்ளைகளுக்கு பரிசு கொடுப்பது வழக்கம். அப்படியே பெண்பிள்ளைகளானால் அதிக பரிசுகளைக் கொடுப்பார்கள். இப்பெண்பிள்ளைகள் அறிவு வரும் போது தங்களுக்குக் கிடைக்கும் பரிசுகளைச் சேர்த்து பத்திரப்படுத்தி வைப்பார்கள். பக்குவகாலம் வரும் போது தங்களுக்குக் கிடைக்கும் பரிசால் விலைபெற்ற நளததைலத்தை வாங்குவார்கள். பெண்களின் விவாகத்திற்கான காலம் வந்ததும் விவாக நியமனம் செய்கிற அன்று. விவாகத்திற்காக நியமிக்கப்பட்ட புருஷன் இனத்தவரோடு பெண் வீட்டிற்கு வருவது வழக்கம். அப்போது விவாகத்திற்காக நியமனம் செய்த பெண்மணி தன்னை அந்த புருஷனுக்கே ஒப்புக்கொடுத்திருக்கிறேன். என்பதை வெளிப்படையாய் காட்டுவதற்காக அவள் சிறு பருவமுதலே சேர்த்து வைத்து வாங்கினதும் விலையேறப் பெற்றதுமான நளததைலத்தை யாவர்க்கும் முன்பாக வந்து இவரே என் நாயகன் என்பதாகக் கூறி அவன் தலைமேல் தைலத்தை வார்ப்பாள். அதன் பின்னர் குறிக்கப்பட்டநாளில் விவாகம் நடைபெறும்.

இதுபோலவே ஆத்தும நேசராகிய இயேசுவின் தலைமேல் ஒரு ஸ்திரீ இவரே என் நேசர் என்பதைக் காட்ட நளததைலத்தை ஊற்றினாள்.

மணவாளன் மணவாட்டியின் நற்குணங்களைப் பார்த்து சில ஆவிக்குரிய கிருபைகளைக் கொடுத்தார். மணவாட்டியோ பரிபூரணமாய் நேசருககு ஒப்புக்கொடுத்து விட்டேன் என்பதாக பலஸ்தீனா பெண்களை போல மணவாளனாகிய இயேசுவின் தலைமேல் நளததைலத்தைவார்த்து விட்டாள். அதாவது மண

வாட்டி தன்னையே அவருக்கென்று ஒப்புக்கொடுத்துவிட்டாள். இதுவே அவளது நளததைலம். ஆதலால் அவரது நாமம் வாசனை வீசுகிறது.

**பந்தியில் இருப்பதாவது:—** உலக மனிதர் விவாக நியமனத்திற்காக ஒன்று கூடுவதுபோல மணவாட்டி இருதயத்தைப் பரிபூரணமாய் திறந்து கொடுப்பதால் இயேசு அவள் உள்ளத்தில் வருகிறார். இந்த அனுபவத்தைதான் அவளோடுபோஜனம் பண்ணுவதாகக் கூறுவதாகும். வெளி 3: 20 பந்திஎன்று கூறும்போது இயேசுவோடு எப்போதும் மகிழ்ந்து ஜீவிப்பதின் அனுபவமாகும். யோ 14: 23 இவ்வித அனுபவத்தில் மணவாளனும் மணவாட்டியும் ஜீவிக்கும் போது நளததைலம் வாசனை வீசுவது போல இரட்சிக்கப் படுகிறவர்களுக்குள்ளேயும் கெட்டுப் போகிறவர்களுக்குள்ளேயும் கிறிஸ்துவின் நற்கந்தமாய் ஜீவிக்கிறார்கள் II கொரி 2: 14—15 இதுவே நளததைலம் வாசனை வீசுவதாகும்.

## 13-ம் வசனம்

**என்நேசர் என் ஸ்தனங்களின்நடுவில் தொங்கும் வெள்ளைப்போளச் செண்டு:—** மணவாளனைப் பூரணமாய் நேசித்து பூரணமாய் அவருக்கே மணவாட்டி ஒப்புக் கொடுத்து விட்டபடியால் இப்போது அவரை விட்டு விலக முடியவில்லை. அவரை மார்போடு கட்டி அணைத்துக் கொண்டாள். அன்பு உள்ளத்தில் பற்றிப் பிடித்துக் கொண்டது. ஆதலால்தான் அவள் என் ஸ்தனங்களின் நடுவில் தொங்கும் வெள்ளைப்போளச் செண்டு என்கிறாள். முற்காலங்களில் பலஸ்தினா பெண்கள் கொண்டையிலும் கழுத்திலும் பூக்களை அணிவது போல வெள்ளைப் போளங்களை குப்பிகளில் அடைத்து மார்போடு சேர்த்து தொங்கவிட்டிருப்பார்கள். இது எப்பொழுதும் வாசனை வீசுவதற்காகவே இப்படி செய்து வந்தார்கள்.

பெண்களுக்கு பூக்கள் மீதும் வாசனைப் பொருட்கள் மீதும் இயற்கையாகவே அன்பும் பிரியமுண்டு. அப்படியேஸ்திரீகளின் அன்பும்விசேஷமானதே. அன்றுஇயேசுகொல்கதாமலைக்குஈனச் சிலுவையை சுமந்துகொண்டு போனபோது மார்போடு சார்ந்திருந்த யோவானையும் காணவில்லை. காவலிலும் சாவிலும் உம்மைபின்பற்றுவேன்என்று சொன்னபேதுருவையும்காணவில்லை ஆனால் ஏழை ஸ்திரிகளே சிலுவைக்குப் பின்னாலே அழுதுகொ

ண்டு போனார்கள். அப்பொழுது இயேசு எருசலேம் குமாரத்தி களே எனக்காக அழாமல் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைக ளுக்காகவும் அழுங்கள் என்று கூறி ஸ்திரீகளை ஆற்றினார். அதோடு இயேசுவை அடக்கம் பண்ணின மூன்றும் நாள் அதி காலையில் இருட்டோடே அவருக்குக் கந்தவர்க்கங்களைப் பூசு வதற்காக தேடிப் போனவர்களும் ஸ்திரீகளே. ஆகவே ஸ்திரீக ளின் நேசம் பெரியதே.

**வெள்ளைப் போளம்:—** இதுவும் ஓர்விதவாசனைத் திரவிய வியமே. வெள்ளைப் போளம் எடுக்கிற செடி முட்செடி என் கின்றனர். இதன் இலையிலிருந்துதான் வெள்ளைப் போளம் எடுப்பார்களாம்.

இன்னொரு விதமாகவும் வெள்ளைப் போளம் எடுப் பதுண்டு. தண்ணீர்ப் பாங்கான இடத்தில் வளரும் ஓர் விதமரத்தின் பட்டையிலிருந்து ஓர் விதமான தண்ணீர் போன்ற பொருள் வடிந்து வரும். அது உலரும் போது பிசினாகும். இதுவும் வாசனை கொடுக்கக்கூடியதே. இவற்றை இஸ்மவேலர் கீலேயாத்திலிருந்து எகிப்துக்குக் கொண்டு வந் தார்கள். ஆதி 37:25.

**வெள்ளைப் போளமும் அதன் உபயோகமும்:—**

**1. வெள்ளைப் போளம் நீர்ப்பாங்கான இடத்தில் வளரும் ஒருவிதமரத்திலிருந்து கிடைக்கும் பொருள்:—**

இது மரம் தண்ணீர் ஓரமாய் வளருவதுபோல விசுவாசி கள் எப்பொழுதும் ஆவியில் நிறைந்திருப்பதை காட்டுகிறது. எபே. 5 : 18. தண்ணீர் இல்லாவிடில் மரம் சீக்கிரம் பட்டுப் போகும். அதற்காக எப்போதும் தண்ணீர்த் தாவளம்தேவை. கிறிஸ்தவ ஜீவியத்தின்வளர்த்தி ஆவியின்நிறைவிலிருக்கிறது. ஆவியின் நிறைவுகுறையும் போது மாமிசத்துக்குரியவர்களாய் மாறுகிறார்கள். அப்போது மாமிசத்தின்படி சிந்தித்து, மாம்சத் தின்படி நடந்துமாம்சத்தின்படிபேசி ஜீவிக்கிறார்கள் இதனால்வ னாந்திரத்திலுள்ளகறளைச் செடியைப் போலாகி விடுகிறார்கள். எரே 17:5-6. அதன் முடிவுஅழிவே. ரோமர் 8:1. ஆவிக்குரியவர் களோஆவியில் நிறைந்து ஆவிக்குரிய மிகுந்த பலனை கொடுக் கிறார்கள். சங்கீதக்காரன் தன் காலத்தில் தன் கனியைத்தந்து இலையுதிராதிருக்கும் மரத்தை போலிருப்பான் என்கிறார். சங் 1 : 3 ; எரே 17 : 8. இதுவே ஆவியின் நிறைவின் அனுபவம்.

**2. பட்டையிலிருந்து வடியும் தண்ணீர் வெள்ளைப்போளம்** இது உள்ளத்திலிருந்து ஓடும் ஜீவ தண்ணீரை காட்டுகிறது. என்னை விசுவாசிக்கிறவனுடைய உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்று இயேசு சொன்னார். யோவா 7 : 38-39. ஒருவன் பரிசுத்தாவியினால் நிறைந்து ஜீவிக்கும் போது அவன் போகிற இடத்தில் எல்லாம் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படவும் ஜீவதண்ணீரை ஜனங்கள் குடித்து தாகம் தீர்க்கப்படவும் செய்வார்கள் !

இது போலவே பிலிப்பு, சமாரியா நாடு சென்று பிரசங்கித்தார். சமாரியர் பிரசங்கத்தைக் கேட்டு விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றார்கள். பின்னர் பரிசுத்தாவியும் பெற்றார்கள். பேதுரு கொர்நெலியுவின் வீடு சென்று உபதேசித்தார். அவர்களோ இரட்சிக்கப்படவும் பரிசுத்தாவியைப் பெற்றுக்கொள்ளவும் செய்தார்கள். பரிசுத்தாவியால் நிறைந்தவர்கள் போகிற இடங்களிலெல்லாம் கர்த்தருடைய வல்லமை வெளிப்படுகிறது. கர்த்தரும் பெரிய காரியங்களைச் செய்கிறார். இதுவே உள்பட்டையிலிருந்து உற்பத்தியான தண்ணீராகிய பரிசுத்தாவியாகும்.

**3 வெள்ளைப் போளம் வாசனையுள்ளது :-** இது கிறிஸ்தவ ஜீவியத்தின் வாசனையைக் காட்டுகிறது. விசுவாசிகள் கோணலும் மாறுபாடுமான சந்ததிகளின் மத்தியில் குற்றமற்றவர்களும் மாசற்றவர்களுமாய் ஜீவித்து கிறிஸ்துவை வெளிப்படுத்த வேண்டும். பிலி. 2 : 14—15 விசுவாசிகளின் நன்னடக்கையே கிறிஸ்துவை வல்லவரென விளங்கப் பண்ணுவிக்கிறது. தைலக்காரனின் தைலக் குப்பியை செத்த ஈ கெடுப்பது போல மனிதனின் துர்க்குணங்கள் கிறிஸ்துவின் நாமத்தை தூஷிப்பிக்கச் செய்விக்கிறது. பிரசங்கி 10 : 1 ; ரோ 2 : 24 ஆதலால் எப்பொழுதும் நடக்கையிலும் வார்த்தையிலும், செய்கையிலும் வெள்ளைப் போளம் போல் வாசனை வீசிக்கொண்டே இருக்க வேண்டும். இதுவே வெள்ளைப் போளம் வாசனையுள்ளதென்பதாகும.

**4 வெள்ளைப் போளத்தை அபிஷேகத்திலும் சேர்ப்பார்கள்:** முற்காலங்களில் இராஜாவாக வேண்டுமானாலும் I இராஜா 19 : 15, ஆசாரியர்களாக வேண்டுமானாலும் லேவி 8 : 12 ; தீர்க்கத் தரிசியாக வேண்டுமானாலும் I இராஜா 19 : 16. தைலத்தால் அபிஷேகம் பண்ணப்பட வேண்டும். அபிஷேகம்

பண்ணவேண்டிய தைலத்தை தேவன் கொடுத்த கணக்கின் படியும் அவர் சொன்ன பொருட்களைக் கொண்டுமே செய்ய வேண்டும். ஒருவன் வேறு முறைப்படி கூட்டவோ வேற்று மனிதருடைய சரீரத்தில் வார்க்கவோ செய்யக்கூடாது. இவற்றின் கட்டளையை மீறுகிறவன் சபிக்கப்பட்டவனுவான். யாத் 30 : 23—33 இந்த அபிஷேக தைலத்தில் சேர்க்கப்பட்ட பொருட்களில் ஒன்று வெள்ளைப் போளம்.

இவ்விதமாய் அபிஷேகம் செய்தவர்களை இராஜாக்களாகவும் தீர்க்கதரிசிகளாகவும், ஆசாரியர்களாகவும் அறிந்து கொள்வார்கள். இவ்விதமே ஆவியின் அபிஷேகம் நமக்கு மேன்மையான அனுபவங்களை கொடுக்கச் செய்கிறது. வரப் போகும் கிறிஸ்துவின் இராஜ்ஜியத்தில் கிறிஸ்துவோடுகூட ஆயிரம் வருஷம் இராஜாவாய் அரசாளுவோம் என்பதையும் இந்த பதவி மேன்மையானதென்பதையும் வெள்ளைப்போளம் விளக்கிக் காட்டுகிறது.

**5. ஸ்திரிகளின் சுத்திகரிப்புக்காக உபயோகப்படுத்துவார்கள்.**

ஆகாஸ்வேரு அரசன் தனது மனைவியாகிய வஸ்தி கீழ்ப்படியாமை காட்டினபடியால் அவளைத் தள்ளிவிட்டு இன்னொருத்தியைப் பட்டஸ்திரியாகத் தெரிந்து கொள்ள தீர்மானித்தான். அதற்காக எல்லா தேசங்களிலுமுள்ள கன்னிப் பெண்களையும்கூட்டிச் சேர்த்தான். அப்போது அவர்களின் சுத்திகரிப்புக்காக ஆறுமாதம் வெள்ளைப்போளமும் ஆறு மாதம் சுகந்த வர்க்கங்களும் கொடுத்தான். எஸ் 2 : 12 இது விசுவாசி இயேசுவாலடையும் சுத்திகரிப்பை காட்டுகிறது. ஒருவன் பரிபூரணனுக்கப்பட வேண்டுமானுல் அவன் சுத்திகரிக்கப்பட வேண்டும். அதற்காகப் பல வழிகளை இயேசு நியமித்திருக்கிருர். அந்த சுத்திகரிப்பை மணவாட்டி பெற்று அனுபவமாக்க வேண்டும். அப்படியே மணவாட்டி பெற்று அனுபவமாக்குகிற படியால்த்தான் மணவாட்டி அவர் என் ஸ்தனங்களின் நடுவில் தொங்கும் வெள்ளைப் போளச் செண்டு என்கிருள். ஆகவே அவரால் அடையும் சுத்திகரிப்பை அவள் நாளுக்கு நாள் அடைந்து கொண்டே வருகிருள்.

**சுத்திகரிக்கப்படும் வழிகள் :—**

**1 இயேசுவின் இரத்தத்தாலடையும் சுத்திகரிப்பு :—**

ஒருவன் பாவமன்னிப்பைபெற்று இரட்சிக்கப்பட்டவுடன் பூரணனல்ல. அப்போது இயேசுவின் இரத்தத்தால் கழுவப்

பட்டாலும் பூரணமாகுதலைப் பெற்றுக் கொள்ள ஒளியாகிய அவரோடு ஐக்கியமாய் நடக்கவேண்டும். அவரோடு ஐக்கிய மாய் நடக்கும்போது குறைகளைக் காட்டிக் கொடுக்கிறார். அவருடைய வெளிச்சம் அவனுக்குள் பிரவேசிக்கிறது. தின மும் உணர்த்தப்படுகிறான். அப்பொழுது அவன் அவருடைய இரத்தத்தால் கழுவுவதற்காக விண்ணப்பம் பண்ணுகிறான். அப்பொழுது அவருடைய இரத்தத்தால் சுத்திகரிப்பு உண் டாகிறது. இந்த சுத்திகரிப்பு அவருடைய ஒளியில் அவன் நடக்குந்தோறும் நடந்து கொண்டே இருக்கிறது. 1யோ 1:7. இதுவே இரத்தத்தால் உண்டாகும் சுத்திகரிப்பு.

## 2 வசனத்தால் உண்டாகும் சுத்திகரிப்பு :—

யோவா 17 : 17. இரட்சிக்கப்பட்டவன் பூரணப்பட வசனத்தாலும் சுத்திகரிக்கப்பட வேண்டும். வசனம் ஆவியா யும் ஜீவனுயும் இருக்கிறது. யோவா 6 : 63. ஆதலால் கர்த் தருடைய வசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல அதின்படி செய்கிறவர்களுமாய்இருக்கவேண்டும். அப்பொழுது கேட்கும் வசனத்துக்குக் கீழ்ப்படிந்து தாழ்த்திக் கொடுப் போம். வசனம் நம்முடைய குறைவை எடுத்துக் காட்டுவ தால் குறைவை உணர்ந்து மனஸ்தாபப்பட்டுவிட்டு விடுகி றோம். அப்போது நமக்கு சுத்திகரிப்பு கிடைக்கிறது. யோவா 15 : 3. வாலிபன் தன் வழியை எதனுல் சுத்தம் பண்ணு வான். உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுவ தினுல் தானே. சங். 119 : 9. வசனம் அவனை தீய வழிக்கு விலக்குகிறது. ஆதலால் அவன் வசனத்தால் தன்னை சுத்தி கரித்துக் கொள்கிறான். இதுவே வசனம் கால்களுக்குத் தீபமும் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது என்பதாகும். சங். 119 : 105.

## 3. பரிசுத்தாவியாலடையும் சுத்திகரிப்பு :—

கொரிந்து சபையாருக்கு நிருபம் எழுதும்போது கர்த்த ராகிய இயேசுவின் நாமத்தினுலும் நமது தேவனுடைய ஆவி யினுலும்கழுவப்பட்டீர்கள். பரிசுத்தமாக்கப்பட்டீர்கள். நீதி மான்களாக்கப்பட்டீர்கள்என்கிறார் I கொரி 6:11 பரிசுத்தாவி யை பெற்றுக் கொள்ளும் போது பரிசுத்தாவி யாலுண்டாகும் சுத்திகரிப்பைப் பெறலாம். எப்படியென்றால் ஆவியைப் பெற்றுக்கொள்ளும் போது நமது சரீரத்தை ஆவியானவர் தங்கும் ஆலயமாக்குகிறார். I கொரி 3 : 15-16

அப்போது ஆவியானவர் உள்ளத்திலிருந்து சகல சத்தியத்தி லும் வழி நடத்துகிருர். சிறு சிறுகுறைவுகளையும் எடுத்துக் காட்டி அறிக்கையிடச் செய்து, சீர்திருத்துகிருர். இதனல் சுத்திகரிப்பு உண்டாகிறது. II தெச. 2 : 13.

**4 அக்கினியினுல் உண்டாகும் சுத்திகரிப்பு :—**

மனிதன் முழுவதும் பாவத்தில் பிறந்தவன். அவன் இரட் சிக்கப்பட்டாலும் செம்புக்குள் களிம்புகலந்திருப்பது போல பாவ தன்மைகள் மனிதனின் இரத்தத்திற்குள் கலந்திருக் கிறது. ஆதலால் அந்தந்தவேளைகளில் துர்க்குணங்கள் எழும்பி மனிதனைக் கறைபடுத்திவிடுகிறது. அதற்காக கர்த்தர் களிம் பை அக்கினியால் எரித்து உருக்கி மாற்றுவது போல மனி தனிலிருக்கும் அழுக்கை அகற்ற பரலோக அக்கினியை நிய மித்து வைத்திருக்கிருர். ஆதலால்தான் எந்தப் பலியும் உப் பினுல் உப்பிடப்படுவதுபோல் எந்த மனிதனும் அக்கினியினுல் உப்பிடப்படுவான் என்று இயேசு சொன்னுர். மாற்கு 9:49. பரலோக அக்கினிக்கு மாமிச சுபாவங்களை அழிக்கும்வல்லமை உண்டு.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் ஒருவன் பலி செலுத் தினுல் அந்த பலியைக் கொன்று தோலுரித்து கண்டம்துண்ட மாக்கி பலிபீடத்தில் வைக்கிருன். அதன் பின்னர் தான் அக்கினி பலியை பட்சிக்கிறது. அக்கினி பலியை பட்சிக்கா விட்டால் பலி புழுபுழுத்து நாறும். இவ்வாறே அநேகஆவிக் குரிய அனுபவங்களைப் பெற்றிருந்தாலும் அக்கினி மாமிசத் தைப் பட்சித்து உப்பிடாவிட்டால் துர்க்குணங்கள் எழும்பி கிரியை செய்யும். அதற்காகவே கர்த்தர் வெள்ளியைப் போல வும் பொன்னைப் போலவும் புடமிட்டு சுத்திகரிக்கிருர். மல் 3 : 3. இதுவே அக்கினியாலடையும் சுத்திகரிப்பு.

**5 சோதனையால் வரும் சுத்திகரிப்பு :—** மனிதனுக்கு சோதனையையும் சுத்திகரிப்புக்காகவே கர்த்தர் நியமித்திருக் கிருர். சோதனை வரும் போது தான் விசுவாசத்தில் உறுதி யாய் நிலைநிற்கிறதையும் கர்த்தரை சேசிக்கிறதையும் அறிய லாம். பேதுரு கர்த்தரிடத்தில் நல்ல பிரதிஷ்டை செய்திருந் தான். காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றுவேன். என்றும், எல்லோரும் இடறலடைந்தாலும் நான் இடறல் அடையேன் என்றும் உறுதியாகச் சொன்னுன். சோதனை வந்த போதோ எல்லோருக்கும் முன்னதாகவே மறுதலிக்க

வும் செய்தான். அதன் பின்னர் அவன் தனது குறைவை உணரவும் மனஸ்தாபப்படவும் அறிக்கை செய்யவும் செய்தான். அதனால் அவன் பெலனடைந்து தைரியமாய் எல்லாருக்கும் முன்னதாக நீங்கள் சிலுவையிலறைந்த இயேசு என்று சாட்சி பகர்ந்தான். அப். 2 : 36. சோதனை அவனை இவ்வித தன்மையுடையவன் என்பதை எடுத்துக் காட்டிற்று. ஆதலால் அவன் அதை உணர்ந்து அறிக்கையிடப் பண்ணிற்று. அதனால் சுத்திகரிப்பைப் பெற்றான்.

## 6. கனி கொடுப்பதால், சுத்திகரிப்பு உண்டாகிறது:—

விசுவாசி கர்த்தரால் பாவிக்கப்படுந்தோறும் தன்னைத் தாழ்த்த வேண்டும். மறைந்தும் ஜீவிக்கவேண்டும். திராட்சை செடியானது ஒரு தடவை கனி கொடுத்தால் மறுபடி கனிகளைக் கொடுக்கும்படியாக செடியை காத்து செய்யவேண்டும். அப்படி கொடிகளை நறுக்குவதால் செடி அதிக கனிகளைக் கொடுக்கும் யோவா. 15 : 2. இவ்வாறே விசுவாசி கர்த்தரால்உபயோகப்படுவதற்காக உபயோகப்படுந்தோறும் தன்னைத் தாழ்த்தி வெறுமையாக்க வேண்டும். தாழ்மைபடுந்தோறும் கிருபையை பெறுவார்கள். யாக் 4 : 6. அவனும் சுத்திகரிக்கப்படுகிறான். கர்த்தரும் மகிமைப் படுகிறார். கடிந்து கொள்ளுதலினாலேயும் சுத்திகரிப்பு உண்டாகிறது. எவ்விதமான பரிசுத்தவானிலும் அற்பசொற்ப மதியீனங்களை காணலாம். மதியீனமோ குற்றமோஇல்லாதவர் இயேசு மாத்திரம். ஏனென்றால் அவர்பரிபூரணர். மனிதனோ குறைவுள்ளவன். இந்த குறைவு அல்லது மதியீனம் நீங்க, சுத்திகரிக்கப்படவேண்டும். அதற்காகவே மற்றவர்களின் கடிந்துகொள்ளுதலும் தேவை என்று கர்த்தர்நியமித்திருக்கிறார். நீதிமான் என்னை தயவாய் குட்டி கடிந்து கொள்ளட்டும் அது என் தலைக்கு எண்ணெயைப் போலிருக்கும். அதை நான் அல்லத் தட்டுவதில்லைஎன்கிறார். சங். 141:5 அநேகர் கடிந்து கொள்ளுதலை அசட்டை பண்ணுகிறார்கள். அன்னவரின் உள்ளத்தில் மிருகசுபாவம் நிறைந்திருப்பதாக ஞானிகூறுகிறார். நீதி 12 : 1 அநேகர்கடிந்து கொள்ளுகிறவனை பகைப்பார்கள். ஏசா 29:21 ஆமோ 5 : 10 இப்படிப்பட்டவர்கள் சுத்திகரிக்கப்பட மாட்டார்கள். நாம் கடிந்து கொள்ளுதலுக்காக நம்மை ஒப்புக்கொடுக்கும் போது மற்றவர்கள் நமது மதியீனத்திற்காக கடிந்து கொள்வார்கள். அப்பொழுது அந்த மதியீனத்தை நம்மைவிட்டு நீக்குவதற்காக மனஸ்தாபப்பட்டு அறிக்கையிடுகிறோம். அதனால் மதியீனம் நீங்கி சுத்திகரிக்கப்படுகிறோம்.

ஆதலால் மதியீனம் நீங்கி சுத்திகரிக்கப்படகடிந்து கொள்ளுதல் தேவை என்றறிந்து கொள்ளவேண்டும். நீதி 22 : 15 ; நீதி 20 : 30.

ஆகவே வெள்ளைப் போளத்தை ஸ்திரிகளின்சுத்திகரிப்புக்காக உபயோகப்படுத்தினது போலவிசுவாசி இயேசுவாலடையும் பரிபூரணமானசுத்திகரிப்பைப்பெற்று அவரது வருகைக்கு ஆயத்தப்படுவதற்காக தேவன் நியமித்திருக்கும் சுத்திகரிப்பின் வழியை வெள்ளைப் போளத்தோடு உவமித்து வைத்திருக்கிறார் என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும்.

## 14-ம் வசனம்

**என் நேசர் எனக்கு எங்கேதி ஊர் திராட்சை தோட்டங்களில் முளைக்கும் மருதோன்றி பூங்கொத்து.—** எங்கேதி என்றால் ஆட்டுக்குட்டியின் ஊற்று எனப் பொருள்படும். இந்த ஊர் சவக்கடலின் மேற்கு பக்கத்திலுள்ள செழிப்பான பட்டணம், தாவீது சவுலுக்குப் பயந்து ஓடின இடமும் இதுவே. I சாமு 23 : 29 ; I சாமு 24 : 1.

**மருதோன்றி பூ :—** இந்த பூ எங்கேதி தேசத்தில்ஏராளமாய் கிடைக்கும். இந்தியா, அரேபியா இத்தேசங்களிலும் உண்டு. சிறு பூவாயிருந்தாலும் குலை குலையாகப் பூக்கும். இதற்கு நல்ல வாசனையும்உண்டு. இதை மாலையாய்க்கோர்த்து ஸ்திரிகள் கூந்தலில் கட்டுவார்கள். பூவையும் இலையையும் சுடு தண்ணீரில் அரைத்து உள்ளங்கையிலும் கைவிரல் நகங்களிலும் தடவுவார்கள். அப்போது அப்பாகங்களில் சிகப்பு நிறம் கொடுக்கும். ஸ்திரிகளுக்கு இவற்றில் மெத்த பிரியம்.

1 **எங்கேதி :—** இது ஆட்டுக்குட்டியின் ஊற்று எனப் பொருள்படும். இந்த ஆட்டுக் குட்டி இயேசுவைக்காட்டும். இயேசுவுக்கு ஆட்டுக்குட்டி என்ற பெயரும் உண்டு. அவரே உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்க வந்த தேவஆட்டுக்குட்டி யோவா 1 : 29. ஆதாம் பாவஞ் செய்வதற்கு முன்னதாகவே விழுந்து போகும் மனிதனின் மீட்புக்காக இந்த ஆட்டுக்குட்டியை தேவ தீர்மானத்திற்குள் நியமித்து வைத்திருந்தார் I பே 1 : 20 காலம்நிறைவேறினதும் ஆட்டுக்குட்டி ஸ்திரியின்வித்தாய்வெளிப்பட்டார். கலா 4 : 5. ஆகவேகாலம் வந்ததும் மனுஷ ஜாதியின் மீட்புக்காக பாடுபட்டுமரித்தார்.

இஸ்ரவேல் ஜனம் எகிப்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு செங்கடல்தாண்டி கானானுக்குள் பிரவேசிப்பதற்காக ரெவிதீம் வந்தார்கள். அங்கு வந்ததும் குடிக்க தண்ணீர் இல்லாமல் கஷ்டம் அனுபவித்தார்கள். அப்பொழுது ஜனங்கள் முறு முறுக்கத் துவக்கினார்கள். ஆதலால் கர்த்தர் மோசேயிடம் ஓரேப் மலையில் சென்று கோலை ஓங்கி கன்மலையை அடிக்கக் கட்டளை கொடுத்தார். அப்படியே மோசே கன் மலையை அடித்தான். உடனே தண்ணீர் புறப்பட்டது. ஜனங்கள் தண் ணீரைக் குடித்தார்கள். யாத் 17 : 1—6 இந்த கன்மலைகிறிஸ் துவைக் காட்டுகிறது. I கொரி 10 : 2. நமது கன்மலையாகிய கிறிஸ்து அடிபட்ட பின்னர்தான்பரிசுத்தாவியாகிய தண்ணீர் சுரந்தது என்பதை வெளிப்படுத்துகிறது. இந்த ஊற்று பெந்தேகோஸ்தே நாளில் 120 பேர் மேல் ஊற்றப்பட்டது. அதனால் 120 பேரும் இந்த தண்ணீரைக் குடித்து தாகந் தீர்த் தார்கள். இவர்கள் குடித்ததால் இவர்கள் உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீர் ஊற்று புறப்பட்டது. அதனால் 3000பேர் குடித் தார்கள். பின்னர் அவர்களின் வழியாக சமாரியா, எபேசு பிலிப்பியா, தெசலோனிக்கேயா இத்தேசங்களுக்கும் இதன் வழியாக உலகின் நான்கு திசைகளுக்குள்ளும் ஓடிற்று. ஆதலால் ஆயிரம் பதினாயிரம் ஜனங்கள் இரட்சிக்கப்பட்டு பரிசுத்தாவி யையும் பெற்றார்கள். இதனால் அநேக தோட்டங்கள் உண் டாயிற்று. இந்த தோட்டமே தேவனுடைய சபை என்பதா கும். இந்ததேவசபைக்குள்ளே தான் மருதோன்றி முளைத்தது.

**மருதோன்றி :—** (1) இது வாசனையுள்ள புஷ்பம் :— திராட்சைதோட்டத்தில்எவ்வளவோ செழிப்பாய் திராட்சை கள் வளர்ந்து பலன் கொடுத்துக் கொண்டிருந்தாலும் ஸ்திரீ கள் வாசமிகும் மருதோன்றிப் பூவில்தான் பிரியம்வைப்பார் கள். ஏனென்றால் பூவின் வாசம் அவர்களை இழுத்துக்கொள்ளு கிறது. இது போலவே தேவனுடையசபையாகிய திராட்சைத் தோட்டத்தில் மனிதனை சந்தோஷப்படுத்தத்தக்கதான எவ் வளவு பரிசுத்தவான்களிருந்தாலும் மணவாட்டியைசந்தோஷி பிக்கும் பொருள் மருதோன்றி பூவாகிய இயேசு மாத்திரமே. ஏனென்றால் அவரின் வாசனை மணவாட்டியை மகிழ்விக்கிறது. அவரின் கல்வாரி சிலுவையின் அன்பின்காட்சி அவளை கவர்ந்து இழுக்கிறது. ஆகவே இயேசு மருதோன்றி பூவாகவே மண வாட்டிக்கு இருக்கிறார்.

(2) மருதோன்றிபூவின் சாயத்தைக் கையில் பூசுவார்கள் பூவின் சாயம் கையில் சிகப்பு நிறத்தைக் கொடுக்கிறது. அத

ஞல் ஸ்திரிகள்மகிழ்ச்சிஅடைகிறுர்கள். மற்றவர்களையும் மகிழ்விக்கிறுர்கள். பூவை தண்ணீரில் கசக்கினதும் சிகப்பு நிறமாய் தோற்றமளிக்கிறது. இது போலவே இயேசு பிதாவின் வார்த்தையாலும் அவரது வசனத்தாலும் கசக்கி நொறுக்கப்பட்டார் என்றும் அவரது பாடு மரணம் நமக்கு இன்பத்தைக் கொடுக்கிறதென்றும் காட்டுகிறது. யோவா 1 : 1, 14 அவருடைய வசனத்தைக்காணும்போது இயேசுவை காண்கிறோம். முற்காலத்தில் கர்த்தரை காண்பதற்கு அடையாளமாக மனிதன் எப்பொழுதும் அவருடைய வார்த்தைகளை இருதயத்தில் வைத்தும் கைகளில் அடையாளமாகக் கட்டியும் வைப்பார்கள். வீட்டின் நிலைகளிலும் எழுதவேண்டும் என்பதாகவும் கர்த்தர் கட்டளை கொடுத்திருக்கிறுர். உபா 6 : 6-9.

கைகளை பார்க்கும்போதெல்லாம் அவருடைய வசனத்தை காண்கிறுன். மற்றவர்களும் காண்கிறுர்கள். அதனுல் பாவத்துக்கு விலகவும் எச்சரிக்கப்படவும்செய்கிறுர்கள். பாவத்திற்கு விலகி ஜீவிப்பதால் தேவசமாதானத்தையும் காத்துக் கொள்கிறுர்கள். இதனுல் அவன் உள்ளம் மகிழ்ச்சியடைகிறது. அவனேடு ஜீவிக்கிறவர்களும் இந்த மகிழ்ச்சியை அடைகிறுர்கள் இதுவே மருதோன்றி பூவின் சாயம் படிப்பிக்கிறது.

(3) ஸ்திரிகள் பூவை தலையில் வைத்து சுமப்பார்கள் :—

இது மணவாளனுகிய இயேசுவைச் சுமப்பதாகும். மணவாட்டிக்கு மணவாளனின் பாசம் தவிர வேறொரு பாசமுமில்லை. பூவை தலையில் வைத்து கட்டுவது ஸ்திரிகளுக்குப் பிரியம் இதுபோலவே பவுலும் நான் அவரை சுமந்து நடக்கிறேன் என்றும் அவருடைய அச்சடையாளங்களை தரித்திருக்கிறேன் என்றும் சொல்லுகிறுர். II கொரி 4 : 10 ; கலா6:17 ஆதலால் மணவாட்டி மருதோன்றி பூவாகிய கிறிஸ்துவை சுமந்து நடக்க வேண்டும் என்பதை படிப்பிக்கிறது.

## 15-ம் வசனம்

**என் பிரியமே ! நீ ரூபவதி ; நீ ரூபவதி ; உன் கண்கள் புறுக்கண்கள் :—** என் பிரியமே என்பதை உன்ன 1 : 9-ல் பார்க்கவும்.

உன் கண்கள் புறாக்கண்கள் :— மணவாட்டி மணவாளனைப் புகழ்ந்து பேசினதால் இப்போது மணவாளன் மணவாட்டியைப் புகழ்ந்து பேசுகிறார். உலகபிரகாரம் ஒரு ஸ்திரியை அழகுள்ள ரூபவதி எனக் குறிப்பாக பேசவேண்டுமானால் அவளை அழகு படுத்துவதற்குரிய அவயவங்கள் யாவும் ஒருங்கே இருக்கவேண்டும். அப்படியே மணவாட்டியை மணவாளன் காண்கிறபடியால் அவளை ரூபவதி எனக் கூறுகிறார். அது மாத்திரமல்ல அவளை அழகு படுத்தும் கண்களைப் புறாவின் கண்களோடு குறிப்பாக எடுத்துக் காட்டுகிறார்.

**புறாவின் கண்கள் :—**

(1) புறாவின் கண்கள் கூர்மையானது :— இது சத்தியங்களை உற்றுப் பார்க்கும் தன்மையைக் காட்டுகிறது. பரிசுத்த பவுல் பரிசுத்தாவியைப் பெற்ற எபேசு சபைக்கு நிருபம் எழுதும் போது பெற்றுக்கொண்ட அனுபவம் போதுமென்று கூறாமல் இன்னும் பிரகாசமான மனக் கண்களைக் கொடுக்கும்படியாக ஜெபிக்கிறேன் என்கிறார். எபே 1 ; 19. ஏனென்றால் கண் பிரகாசமானால் மாத்திரம் சத்தியங்களை உற்றுப் பார்த்தறியக் கூடும்: ஒரு நாள் இயேசு பெத்சாயிதா ஊருக்கு வந்தார். அங்கு ஒரு குருடனைக் கண்டார். அவர் அவன் மீது இரங்கி அவன் கண்களில் உமிழ்ந்து அவன்மேல் கைகளை வைத்தார். அதன் பின்னர் நீ எதையாகிலும் காண்கிறாயா என்று கேட்டார். அப்பொழுது அவன் நடக்கிற மனிதரை மரங்களைப் போல் காண்கிறேன் என்றான். மாற் 8 : 22—24 இதுபோலவே சிலவிசுவாசிகளும் காண்கிறதுண்டு. இவர்கள் ஆழமான சத்தியங்களை அறிந்து கொள்ள முடியாமலும் கர்த்தரிடத்தில் இருக்கும் ஏராளமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளாமலுமிருக்கிறார்கள். ஏனென்றால் கண்கள் பிரகாசமடையவில்லை; ஆதலால் சத்தியங்களைப் பார்க்கத்தக்க கூர்மையான கண்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். மணவாட்டிக்கோ பிரகாசமாக்கப்பட்ட கூர்மையான கண்கண் இருப்பதால் உன் கண்கள் புறாக்கண்கள் என்கிறார்.

(2) புறாவின் கண்கள் தூரம் பார்க்கும் தன்மையுள்ளவைகள்.

இது இரண்டு காரியங்களைக் காட்டுகிறது. ஒன்று மேலானவைகளை பார்க்கும் தன்மையும், மற்றொன்று உள்ளங்களை அறியும் தன்மையுமாகும்.

**1 மேலானதை பார்ப்பது:—** ஆவிக்குரியவன் பூமிக்குரியவைகளையல்ல மேலானவைகளையே நோக்குவான் கொலோ 3 : 2. விவேகிக்கு ஜீவ வழியானது உன்னதத்தை நோக்கும் வழியாம். நீதி 15:24. ஏனென்றால் தெய்வீக தரிசனத்தை அடைந்திருக்கிறான். பவுலுக்கு தெய்வீக வெளிப்படுத்தல் இருந்தபடியால் பூமிக்குரியவைகளை அற்பமும் குப்பையுமாக எண்ணினார். பிலி. 3 : 7-11. மோசே இனிவரும் பலன் மேல் நோக்கமாய்இருந்து எகிப்திலுள்ளபொக்கிஷங்களை வெறுத்து கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிபாக்கியமென்றெண்ணினான். எபி 11 : 24-27. இதுவே மேலான தரிசனம் அடைந்தவனின் நிலைமை.

**2 உள்ளங்களைபார்ப்பது :—** ஆவிக்குரியவன் இருதயங்களின் ஆழங்களைக் கண்டறியக் கூடியவனாய் இருக்கிறான்: பேதுரு சமாரியாவிலுள்ள மாயவித்தைக் காரனின் துர்க்குணத்தை அறிந்து கொண்டார். ஆதலால் மாயவித்தைக்காரனை கடிந்து கொண்டதைப் பார்க்கிறோம். அப். 8:20-23. நாகமானின் பணத்தை நாடின கேயாசியின் வஞ்சகத்தை எலிசா அறிந்து சபித்ததாகக்காண்கிறோம். ஆதலால் கேயாசி சபிக்கப்பட்டவனானான். II இராஜா 5 : 26—27.

அப்படியே கலப்பான துர் உபதேசங்களை அறியும் அறிவுமுடையவனுயுமிருக்கிறான். பவுல் நாங்களோ தேவவசனத்தைக் கலப்பாய்பேசாமல் துப்புரவாகவும் தேவனால் அருளப்பட்ட பிரகாரமாகவும் பேசுகிறோம் என்கிறார். II கொரி 2 : 17 துர் உபதேசங்கள் பரிசுத்தத்தைக் கறைப்படுத்தும். ஆதலால் அப்படிப்பட்ட கலப்பான உபதேசங்களை அறியும் தன்மையுடையவனாயும் இருக்க வேண்டும். ஆகவே மணவாட்டி உள்ளங்களை அறிகிறவர்களும் துர் உபதேசங்களைக் கண்டு பிடிக்கிறவர்களுமாய் இருப்பதால் அவளுடைய கண் புறாக்கண் என்கிறார்.

**3 புறாவின் கண் கண்ணீரால் நிறைந்திருக்கும்:—** புறாக்களின் கண்களை நாம் உற்றுப்பார்த்தால் எப்போதும் கண்ணீர் நிறைந்ததாய் காணப்படும். இந்தக் கண்ணீர் ஓய்வில்லாமல் அழுது ஜெபிப்பதைக் காட்டும். ஆவிக்குரிய மணவாட்டிக்கு உலகத்தில் எவ்வித சமாதானமுமில்லை. உலகத்தைப் பார்க்கும் போது உலகம் பாவத்தில் மூழ்கியிருப்பதையும் அதனால் உலகம் தேவனுடைய கோபத்துக்குள்ளாகி நியாயத் தீர்ப்புக்கு ஏதுவாய் இருக்கிறதையும்

காண்கிறாள். ஆனபடியால் அவள் உலகத்துக்கு வரும் அழிவை நினைத்து பெருமூச்சு விட்டுக்கொண்டேயிருக்கிறாள்.

இயேசு எருசலேம் வழியாய் வந்தார். அப்பொழுது சீஷர்கள் எருசலேமின் சிறப்பைக்காட்டி புகழ்ந்தார்கள். ஆனால் இயேசுவோ எருசலேமைப் பார்த்து கண்ணீர் விட்டார். எருசலேமே, எருசலேமே, உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்திற்கேற்றவைகளை அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும். இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாய் இருக்கிறது. எல்லாம் அழிக்கப்படும் காலம் வருகிறதே என்று வியாகுலம் அடைந்தார். லூக் 19:41-44. ஏனென்றால் எருசலேமுக்கு வரும் ஆக்கினையை எருசலேம்வாசிகளோ அறியவில்லை. கர்த்தரோ அறிந்திருந்தார். ஆதலால் கண்ணீர் விட்டு அழுதார்.

உலகத்துக்குப் பயங்கரமான அழிவு வரப்போகிறது. ஜனங்களின் பாவம் வான பரியந்தம் எட்டி விட்டது. பட்டயத்தாலும், பஞ்சத்தாலும், கொள்ளைநோயாலும் வாதிக்கப்படப் போகிறார்கள் எசே 5; 16. அதுமாத்திரமல்ல அக்கினி பூமியை ஒருங்கே பட்சிக்கும் காலம் வரப் போகிறது. மல் 4: 2: II பேது 3: 7—8 பூமியின் குடிகளை ஒவ்வொரு விதமான வாதைகளாலும் வாதித்து முடிவாக ஒன்றாகவே அழித்து நித்தியமான நரகத்திலே தள்ளுவார். அங்கே புழு சாகாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும். மாற்கு 9:43—48. இவ்வளவு கொடிய பயங்கரங்கள் குணப்படாத மனிதர் மேல் வரப்போகிறபடியால் இதையறிந்த மணவாட்டி ஓயாமல் இடுப்பு நொறுங்க அழுதுகொண்டே இருக்கிறாள். எசே 21:3–5. நமது ஆண்டவரும் மரித்தவனுக்காக அழ வேண்டாம். சிறைப்பட்டுப் போகிறவனுக்காக அழுங்கள் என்று சொல்லியிருக்கிறார். எரே 22:10 உலக மனிதரோ பாவத்துக்கு அடிமையாகி சாத்தானால் சிறை பிடிக்கப் பட்டவர்களாயிருக்கிறார்கள். மணவாட்டி இதை அறிந்து கொண்டிருக்கும் போது எப்படி அழாதிருக்க முடியும். வரப் போகும் ஆபத்திலிருந்து சிலராகிலும் தப்பித்துக் கொள்வதற்காக மணவாட்டி அழுது ஜெபிப்பதற்குதவியாகத்தான் ஆவியையும் பகிர்ந்து கொடுத்திருக்கிறார். ரோ 8:26. இந்த ஆவியைப் பெற்றதினால் ஆவியானவர் பெருமூச்சு விட்டு ஜெபிக்க உதவி செய்கிறார். ஆனபடியால் மணவாட்டி எப்பொழுதும் கண்ணீர் விட்டுக்கொண்டே இருக்கிறாள்.

**2. வியாதியஸ்தரையும் பசித்தவரையு ம்பார்த்து அழுகிருள்.**

ஆதாம் பாவம் செய்ததின் பலனுய் ஆதாமின் சந்ததி சாபத்திற்குள்ளாகி பலவிதமான வியாதியால் பிடிக்கப்பட்டிருக்கிருர்கள். ஆகவே மனிதர் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான வியாதியால் பிடிப்பட்டு அவஸ்தைப்படுகின்றனர் இவற்றைக் காணும் போது ஆவிக்குரியவனுடைய உள்ளம் எப்படி உருகாதிருக்கும். இயேசுவண்டை ஊமையும் செவிடுமான ஆவி பிடித்தவனைக்கொண்டு வந்தார்கள். இயேசுவோ அவனது பரிதாபத்தைப் கண்டு எப்பத்தா எனக்கூறிப் பெருமூச்சு விட்டார் மாற்7;32: 35. இவ்விதமாக மணவாட்டியும் மனுஷ ஜாதியின் அழிவை பார்த்து கண்ணீர் விடுகிறவளாகவே இருக்கிருள்.

அப்படியே பசியாய் இருக்கிறவர்களையும் பாாத்து அழுதார் மாற் 8; 2. ஏனென்ருல் எண்ணிறந்த ஜனம் எவ்வளவு தான் பாடு பட்டாலும் புசிக்க ஆகாரமில்லாமலும் கட்டவஸ்திரமில்லாமலும் படுக்க இடமில்லாமலும் பாடு படுகிருர்கள். தேவ சாயலில் உண்டாக்கப்பட்ட ஜனம் இவ்வளவு பயங்கர சாபத்தை அனுபவிக்கிருர்களே என்று உள்ளம் உடைந்துமணவாட்டி அழுகிருள். இதுவே மணவாட்டியின் கண்ணீர்.

**4. இணைப்புருவுக்காக கண்ணீர் விடுதல்:—** பலஸ்தீனுவில் ஒருவித புருக்கள் இருக்கிறது. அவைகள் தன் இணைப்புருவோடல்லாமல் வேறு எவ்வித பட்சிகளுடனும் இசைந்து ஜீவிப்பதில்லை. ஜோடிப்புருக்களில் ஒன்றை வேடரோ மற்றும் பட்சிகளோ கொன்று போடவோ காணுமற்போகவோ செய்தால் இணைப்புரு தனது ஜோடிக்காக அழுதுகொண்டே இருக்கும். ஜோடிப்புரு வந்து சேரு மட்டும் ஆகாரம் புசியாமலும் குடியாமலும் அங்கலாய்த்து ஓலமிட்டுக் கொண்டே இருக்கும். தன்னை விட்டு போன பட்சி வரட்டும், பார்க்கலாமென் றுமற்ற பட்சிகளோடு ஆறுதலடையவோ சமாதானப்பட்டு ஜீவிக்கவோ செய்வதில்லை: இணைப்புருவை காணுமட்டும்புசியாமல் அழுதுகொண்டேயிருக்கும். முடிவாக இணைப்புரு வராவிட்டால் புசியாமலிருந்து, அழுது, அழுது அப்படியே சாகும்.

ஆவிக்குரிய மணவாட்டியின் இணைப்புரு மணவாளனுகிய இயேசுவே: ஞானஸ்நானத்தன்று நீர் தான் என் நேசர் என்று உடன்படி செய்து விட்டாள் I பேது 3: 21 அவளே மணவாளனைத் தெரிந்து கொண்டாள். அவளது இன்பமும், ஆறுதலும்,

மன மகிழ்ச்சியும், மணவாளனே. அவர் இதோ சீக்கிரமாக வருகிறேன் என்பதாக சொல்லி விட்டு போனூர். அப் 1: 11 ஏகதேசம் 2000 வருஷங்களாகியும் அவர் இன்னும் வரவில்லை. அவர் வருவதற்கு தாமதித்த படியால் அநேகர் தங்களுக்கு இணைபுருவாக வேறே நாயகர்களைத் தெரிந்து கொண்டார்கள். அதாவது உலக இன்பம் கொடுக்க தக்க ஆடம்பரத்தையும், உலக நேசத்தையும், பணத்தையும், மாமிச இச்சையையும் தெரிந்து கொண்டார்கள். இவற்றினுல் திருப்தி பட்டு மணவாளனை மறந்து விட்டார்கள். மணவாட்டியோ இவற்றில் அவள் பிரியப்படவுமில்லை, ஆறுதலடையவுமில்லை, தனது மணவாளனையே பார்த்துக் கொண்டிருக்கிறுள். அவருக்காக ஏங்கி, ஏங்கி அழுதுகொண்டேயிருக்கிறுள். மணவாளனை எப்போது காண்பேன் எப்போது காண்பேனென்று கண்ணீர் விட்டுக் கவலைப் பட்டுக்கொண்டேயிருக்கிறுள். உலகத்தில், ஒன்றும் அவளை சமாதானப்படுத்த முடியவில்லை. மணவாளா, என் ஆசை மணவாளா! என்பதே அவளது ஏக்கம். அதற்காக அழுதுகொண்டே இருக்கிறுள். ஏனென்றுல் அவரே அவளது ஜோடிபுரு. இதுவே மணவாட்டியின் கண்கள் புருவின் கண்களாய் விளங்குவது.

## 16–ம் வசனம்

**நீர் ரூபமுள்ளவர் என் நேசரே நீர் இன்பமானவர் நம்முடைய மஞ்சம் பசுமையானது;—** மணவாட்டி ஆத்துமாக்கள் பேரிலுள்ள அன்பையும் அனுதாபத்தையும் வெளிப்படுத்துவதைக் கண்டவுடன் மணவாளன் அவளையும் புகழ்ந்து பேசுகிறுர். ஆதலால் மணவாட்டியும் மணவாளனின் மேன்மையை எடுத்து காட்டுகிறுள்.

**நீர் ரூபமுள்ளவர் என்கிறுள்:—** ஏனென்றுல் அவரின் அழகை அவள் அறிந்திருக்கிறுள். அழகு என்பது அவரது திவ்விய குணுதிசயங்களைக் காட்டும். இயேசு தமது பூலோக வாழ்க்கையில் குற்றமற்றவராகவே விளங்கினுர். அவரைக் குற்றப் படுத்துவதற்காக நியாய சாஸ்திரிகளும், வேதபாரகரும், பரிசேயரும், சதுசேயரும் எவ்வளவோ முயற்சி எடுத்தும்யாதொரு குற்றத்தையும் கண்டு பிடிக்க முடியவில்லை. ஒரு தடவை அவர் திரள் கூட்டத்தின் மத்தியில் நின்று கொண்டு என்னில் பாவமுண்டென்று யார் உங்களில் குற்றப்படுத்தக் கூடும் என்று சவால் விட்டுக் கேட்டார். ஒருவருமில்லாமல் போய்விட்டார்கள். யோவா 8: 46.

முடிவாக தேசாதிபதியாகிய பிலாத்துவுக்கு முன்னதாக கள்ளச்சாட்சியை நிறுத்தினார்கள். தேசாதிபதி விசாரணை நடத்தி விட்டு குற்றமற்றவரென்றே சாட்சிபகர்ந்தான். லூக் 23 : 4, 14 இயேசுவோடு சிலுவையிலறையப்பட்டகள்ளரில் ஒருவன் மற்றக் கள்ளனைப் பார்த்து நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; இவரோ தகாததொன்றும் செய்ய வில்லையென்று அவனும் புகழ்ந்து பேசினான். லூக் 23: 41 இயேசு சிலுவையிலிருக்கும் போது நூற்றுக்கதிபதி அவரைப் பார்த்து இந்த மனுஷன் நீதிபரராயிருந்தான் என்று அவனும் சாட்சிக்கொடுத்தான் லூக் 23: 47.

இவ்விதமாக இயேசுவை நியாயம் விசாரித்தவர்களாலும் பார்த்துக் கொண்டிருந்தவர்களாலும், அவரோடு சிலுவையில் அறையப்பட்டவராலும் குற்றமற்றவரென சாட்சிபெற்றவராய் விளங்கினார். இவ்வித பூரண புருஷனாகிய இயேசுவை ஆத்தும மணவாளனாய் தெரிந்து கொண்டமணவாட்டியும் அவரை முற்றுமாய் சோதித்து ருசித்தறிந்தபடியால் என் நேசரே நீர் ரூபமுள்ளவர் என்கிறாள்.

**நீர் இன்பமானவர்:—** உலக மக்களுக்கு இன்பம் கொடுக்க கூடிய காரியங்கள் உலகில் அநேகம் உண்டு. ஆடு, மாடு, சொத்து, சுகம், உத்தியோகம், இவைகள் யாவும் உலகத்தாருக்கு இன்பத்தையே கொடுக்கும். இயேசுவை நேசித்த மணவாட்டிக்கோ இவை ஒன்றிலும் இன்பமுண்டாவதில்லை. இவளுடைய இன்பம் ஆத்தும மணவாளனில் மாத்திரம். இதற்கு மேலாக உலகத்தின் இன்பம் இன்பத்தைக் கொடுக்கவில்லை. உலகம் கொடுக்கும் இன்பம் அநித்தியமானதே. இயேசுவின் இன்பமோ நித்தியமானவை. இதை கடந்த காலப்பரிசுத்தவான்கள் அனுபவித்தபடியால் மரணத்திலும் அவரை விட்டு பிரிக்க முடியவில்லை. ரோம 8: 33—37. அவ்வித இன்பம் அவரிலிருக்கிறது. மரணத்திலும் அவர் பிரிகிறவரல்ல. பிரியா இன்பம் கொடுக்கிறவர் இயேசு மாத்திரம். ஆனபடியால் மணவாட்டி என் நேசரே நீர் இன்பமானவர் என்கிறாள்.

**நம்முடைய மஞ்சம் பசுமையானது:—** மஞ்சம் என்பது படுக்கையறை: மணவாட்டி மணவாளனின் இன்பத்தை ருசி பார்த்தபடியால் அவரின் பாதத்திலிருப்பதையே தெரிந்து கொண்டாள். இயேசு பெத்தானியா கிராமத்தில் சென்றபோது மரியாள் இயேசுவின் பாதத்திலிருப்பதையே தெரிந்து கொண்டாள். மார்த்தாள் மரியாளைப் பார்த்து குற்றப்படுத்தி

ளுள். அப்பொழுது இயேசு மார்த்தாளிடம் மார்த்தாளே மார்த்தாளே மரியாள் தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கைத்தெரிந்து கொண்டாள் நீயோ, அநேக காரியங்களுக்காக கலங்கித் தவிக்கிறாய் என்றார். லூக் 10: 38—42 இயேசுவோடு உறவாடி மகிழும் ஜீவிதமே மேன்மையான ஜீவிதம். அவர் நம்மோடும் நாம் அவரோடும் மகிழ்ந்து ஜீவிப்பதே மஞ்சத்தின் உறவாட்டமாகும்.

இந்த மஞ்சத்தை பசுமையானதென்கிறார். அதாவது பச்சையான தென்பதாகும். பச்சை எப்பொழுதும் சமாதானத்தையே காட்டும். மணவாளனோடு மகிழ்ந்து ஜீவிப்பதால் அவள் எப்பொழுதும் தேவ சமாதானத்தால் நிறைந்திருக்கிறாள். கொலோ 3:15 ஏசாயா கூறும் போது ஆ!என் கற்பனைகளைக் கவனித்திருந்தால் நலமாயிருக்கும். அப்பொழுது உன் சமாதானம் நதியை போலவும் உன் நீதி சமுத்திரத்தின் அலைகள் போலவுமிருக்குமென்கிறார். ஏசா 48: 18. தேவனுடைய கற்பனைகளை கைக்கொண்டு ஜீவிப்பதே ஒருவன் அவருக்குள் இருக்கிறான் என்பதை அறிவிக்கிறது. I யோ 2: 5.

ஆகவே மணவாட்டி கர்த்தரை நேசிப்பதும் அவரை மகிமைப் படுத்துவதும் அவருடைய வசனத்தை கைக்கொண்டு ஜீவிப்பதும் அவர்களின் மஞ்சத்தின் பசுமை என்பதாகும்.

## 17-ம் வசனம்

**நம்முடைய வீட்டின் உத்திரங்கள் கேதுரு மரம் நம்முடைய மச்சு தேவதாருமரம்:—**

வீடு:— இது தேவனுடைய சபையைக் காட்டுகிறது. I தீமோ 3: 15. தேவனுடைய சபைக்கு வேதபுஸ்தகத்தில் பல பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதில் ஒரு பெயர் வீடு என்பதாகும்.

ஒரு பெரிய வீட்டின் வெளியில் நின்று ஒருவன் வீட்டைப் பார்த்தால் ஒரு பெரிய வீடு இருப்பதாகக் காண்பான் உள்ளே இருக்கும் பொருட்களையோ காண மாட்டான். உள்ளே பிரவேசித்தால் உள்ளே இருக்கிற எல்லாப் பொருட்களையும் காண்பான். அப்படியே மணவாட்டி தேவனுடைய வீடாகிய தேவனுடைய சபைக்குள் நுழைந்து அவரு

டைய வீட்டின் எல்லா பொருட்களையும் நுட்பமாக அறிந்திருக்கிறாள். ஆதலால் அவள் நம்முடைய வீட்டின் உத்திரங்கள் கேதுருமரம் மச்சு தேவதாருமரம் என்கிறாள்.

**கேதுரு மரம் (1) இது அலங்காரமானமரம்:—** இந்த மரமானது இயேசுவைக் குறிக்கிறது. கேதுரு மரம் வீட்டுக்கு அலங்காரமாய் இருப்பது போல சபைக்கு இயேசு அலங்காரமானவரே. இயேசு இல்லாத சபை பாழானதே. அப்படியே இயேசு இல்லாத குடும்பமும், இயேசு இல்லாத ஆத்துமாவும் பாழானதே.

சகேயு இயேசுவை ஏற்றுக்கொண்டான். உடனே கர்த்தர் அவன் வீட்டில் சென்று இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமின் குமாரனுனுன் என்றார். லூக் 19: 9.

இஸ்ரவேலர் இயேசுவை தள்ளிவிட்டு பரபாஸ் எங்களுக்குப் போதுமென்று கூறிப்பரபாசைத் தெரிந்து கொண்டார்கள். ஆதலால் எருசலேம் பாழாக்கப்பட்டது. ஆகவே இயேசு இல்லாத தேசமும் பாழானதே. இயேசு இருந்தால் சபைக்கு அலங்காரமே. ஏனென்றால் இயேசு தங்கும் சபையில் வியாதிகள் சுகமாகும். பிசாசுகள் ஓடிப்போகும். எல்லாரும் ஆவியால் நிறைந்து பரிசுத்தமாய் இருப்பார்கள். இதுவே இயேசு இருக்கும் சபையின் அலங்காரம்.

**2. வாசனையுள்ள மரம்:—** இயேசு ஒரு சபைக்குள் அல்லது ஆத்துமாவுக்குள்ளிருந்தால் ஆவிக்குரிய ஜீவியத்தில் அலங்காரமாய் ஜீவித்து விளங்குவார்கள், அப்பொழுது ஜீவியம் பரிமளித்து வாசனை வீசும். பக்கத்தில் இருக்கும் குணப்படாதவர்களும் இவர்களுடைய நன்னடக்கையால் இயேசுவை அறிந்து கொள்ளக்கூடியதாகும். பிலி 2: 14—15 இவ்விதமாய் இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும் கெட்டுப் போகிறவர்களுக்குள்ளேயும் கிறிஸ்துவின் நற்கந்தமாய் வாசனை கொடுப்பார்கள். இவ்வித வாசனையே இயேசு வாசனையுள்ள மரம் என்பதைக் காட்டுகிறது.

**3, கேதுரு மரம் பெலனுள்ளது:—** கேதுரு மரம் பெலனுள்ளது போல கிறிஸ்து சபைக்குள்ளிருந்தால் பயமில்லை. ஏனென்றால் அவர் நமது பெலனாய் இருக்கிறார். தேவன் நமக்கு

அடைக்கலமும் பெலனும் ஆபத்துக் காலத்தில் துணையுமான வர் சங் 46: 1 ஒருதடவை ஏசுவும் சீஷரும் படவில் ஏறி அக்க ரைக்குப் போனார்கள். படவில் இயேசு நித்திரையாயிருந்தார். அப்பொழுது காற்று பலமாய் மோதினது. படகு அமிழ்ந்து போகத்தக்கதாய் காற்றடித்தது. ஆதலால் சீஷர்கள்போதகரே நாங்கள் மடிந்து போகிறோமே என்று முறையிட்டார்கள். உடனே இயேசு எழுந்து காற்றையும் கடலையும் அதட்டினார். எல்லாம் அமைதலாயிற்று. லூக் 4: 35—39 இயேசு வல்லவரே. அவரது வல்லமை இயற்கையையும் அமைதலாயிருக்கச் செய் வித்தது. கேதுரு மரம் பெலனுள்ளதே.

**4. கேதுரு மரத்தை குஷ்டரோகியின் சுத்தகரிப்புக்காக உபயோகித்தார்கள்.**

லேவி 14: 4 கேதுரு மரத்தை குஷ்டரோகியின் சுத்திகரிப் புக்காக பாவித்தது போல பாவக் குஷ்டத்தால் பிடிக்கப்பட்ட பாவியின் சுத்திகரிப்புக்காக பிதாவாகிய தேவனால் நியமிக்க பட்டவர் இயேசுவே. இந்த இயேசு எவ்விதமான பாவியையும் சுத்திகரித்து நீதிமானுக்குகிறார். யோவா 1. 9; ரோ 3:24 பாவத் தில் ஜீவித்த சமாரியா நாட்டவளான ஏழை ஸ்திரீயை சுத்தி கரித்து நீதிமாட்டியாக்கினார். யோவா 4:16-29.அப்படியே அவரண்டை வரும் எந்தப் பாவியையும் நீதிமானுக்குகிறவர் என்பதையே கேதுரு மரம் காட்டுகிறது.

**மச்சு தேவதாரு மரம்:—** கேதுரு மரம் போலவே தேவ தாரு மரமும் அழகுள்ளதும், பெலனுள்ளதும், வாசனை யுள்ளதுமான மரம். ஒரு வீட்டின் மேற்பாகம் பெலனாக நிலை நிற்க வேண்டுமானால் உத்தரமும் மச்சு பெலனாக இருக்கவேண் டும். உத்திரம் பெலனுள்ளதாய் இருப்பது போல மச்சும் பெலனுள்ள மரமாயிருக்க வேண்டும். அப்போது காற் றுக்கோ, மழைக்கோ, வெயிலுக்கோ, பயமில்லை. ஏனென்றால் பெலனான மரத்தால் மச்சும் உண்டாக்கப்பட்டிருக்கிறது. இது போலவே சபையும் எவ்வித சோதனை வந்தாலும் விழுந்து போகாதபடி விசுவாசத்தில் உறுதியாய் கட்டியிருக்க வேண்டும். சபையாகிய தேவனுடைய வீட்டை உடைத்துத் தள்ளுவதற் காகச்சாத்தான் எப்பொழுதும் எதிர்த்து கிரியை செய்துகொண் டே இருக்கிறான். எந்த வழியாக உட்புகுந்து கெடுக்கலாம் யார் வழியாக உள்ளே பிரவேசிக்கலாம் யாரையாவது விழத்தள்ளி சபையை உடைக்கலாமா என்று தனது முழுப் பிரயாசத்தை யும் நடத்திக் கொண்டேயிருக்கிறான். அதனால் கர்த்தர் எப்

பொழுதும் சபையைக் காத்துக் கொண்டிருக்கிறுர். வீட்டின் அஸ்திபாரம் மதில், உத்திரம் மச்சுயாவும் பெலமாயிருப்பது போல சபையின் விசுவாசிகள் ஒவ்வொருவரையும் ஆவியின் பெலத்தால் இடைகட்டி வைத்திருக்கிறுர்; இதைக் கண்ட மணவாட்டி, சபையின் தலையாகிய மணவாளன் எப்பொழுதும் சபையைக் காத்துக் கொண்டிருக்கிறுர். அவரின் வல்லமை கிரியை செய்து கொண்டிருக்கிறதென்று. ஆவியில் உணர்ந்தே நமது வீட்டின் உத்திரம் கேதுரு மரம், மச்சு தேவதாரு மரம் என்கிறுள்.

## இரண்டாம் அதிகாரம்

இந்த அதிகாரத்தை நாம் படிக்கும் போது மணவாளனும் மணவாட்டியும் ஐக்கியமாய் ஜீவிப்பதை நாம் காணலாம்.

### 1-ம் வசனம்

**நான் சாரோனின் ரோஜாவும் பள்ளத்தாக்குகளின் லீலிப் புஷ்பமுமாயிருக்கிறேன்.**

**சாரோன்-** இது யோப்பா முதல் கர்மேல் வரையுள்ள தேசம். இது ஒரு செழிப்பான பூமி ஏசா. 35:2. இந்ததேசத்தில் பற்பலவிதமான அழகுள்ள பூக்களுண்டு. உல்லாசப் பிரயாணிகள் இதில் அழகுள்ளப் பூக்களைப் பார்க்க வருவார்கள். பலஸ்தீனு தேசத்தில் ரோஜாப் புஷ்பம் பல பாகங்களிலுமுண்டு என்றுலும் சாரோனில் ரோஜாப் புஷ்பம் அதிகமாக உண்டு.

அப்படியே லீலிப் புஷ்பமும் பலஸ்தீனுவின் பலபாகங்களிலுமுண்டு. அதிகமாய் பள்ளத்தாக்குகளில் காணலாம். இயேசு தனது தாழ்மையை இந்த பூக்களோடு மணவாட்டிக்கு வர்ணித்துக் காட்டினுர்.

**ரோஜா:—** (1) இது அழகான பூ! — இந்த அழகு இயேசுவின் குற்றமற்ற ஜீவியத்தையே விளக்குகிறது. அவர் எப்பொழுதும் பாவிகளின் மத்தியிலும் குற்றம் பிடிக்கிறவர்களின் பத்தியிலும் குற்றமற்றவராகவே ஜீவித்தார். எபி 7:26. விபசாரத்தில் கையுமெய்யுமாய் கண்டு பிடிக்கபட்ட ஸ்திரியைக் கொண்டுவந்து இயேசுவுக்கு முன்னதாக நிறுத்தி இயேசு செலுத்தும் நியாயத்தீர்ப்பிலிருந்து அவரைக் குற்றப் படுத்த முயன்றனர். அப்பொழுது அவர் கட்கும்குற்றம்

காண முடியவில்லை. இவ்விதமாய் எண்ணரிய முயற்சிகளைசத்து ருக்கள் எடுத்த போதிலும் இயேசு குற்றமற்றவராகவே விளங்கினர். இயேசு மெய்யாகவே குற்றமற்ற சாரோனின் அழகான ரோஜா பூவே.

**2. ரோஜா நல்ல வாசனைக் கொடுக்கும்:—** ரோஜா தனது வாசனையை ஏழையென்றோ, பெரியவனென்றோ, உயர்ந்தவனென்றோ, தாழ்ந்தவனென்றோ வித்தியாசமின்றிவாசனையைக் கொடுப்பது போல இயேசுவும் எவ்வித பாகு பாடுமின்றி இனத்தார் என்றோ சொந்த ஜனமென்றோ, யூதனென்றோ, புறஜாதியென்றோ யாதொரு வித்தியாசமின்றி வாசனையைக் கொடுத்துக்கொண்டிருந்தார். இந்த வாசனை என்பது எல்லோருக்கும் நன்மை செய்வதைக் காட்டுகிறது. இயேசுநன்மைசெய்கிறவராகவே சுற்றி நடந்தார். அப். 10:38 நல்லோர் மேலும், தீயோர் மேலும் தமது நீதியின் சூரியனை உதிக்கப் பண்ணிநீதியுள்ளவர் மேலும் அநீதியுள்ளவர்மேலும் மழையைப் பெய்யப் பண்ணினர். மத் 5:45. யாதொரு வித்தியாசமின்றி நன்மை செய்கிற வாசனையை வீசிக்கொண்டேயிருந்தார்.

(பசியுள்ளவர்களுக்கு ஆகாரம் கொடுத்தார். பிசாசினல் வாதிக்கப் பட்டவர்களை விடுவித்தார். வியாதியஸ்தர்களை சுகப்படுத்தினர். சமாதானமில்லாதவர்களுக்கு பாவ மன்னிப்பைக் கொடுத்து சமாதானப் படுத்தினர். இவ்விதமாய் அவரது ஜீவிய காலம் முழுவதும் வாசனை வீசிக் கொண்டேயிருந்தார். ஆகவே இவர் சாரோனின் ரோஜா தான்.)

**3, ரோஜா அடுக்கடுக்கான இதழ்களால் இணைக்கப்பட்டபூவாயிருந்தது:—** இயேசு திவ்ய சுபாவம் நிறைந்தவராகவே இருந்தார். அவரில் ஒருவிதமான குணங்கள் மாத்திரமல்ல. சர்வ சற்குணராக வேயிருந்தார். அவரில் எல்லாவிதக் கனிகளையும் காணலாம். மனிதரால் மெச்சிப் புகழும் நீதிமானிலும் சிற்சிலக் கெட்ட குணங்களுண்டு. ஆனல் இயேசுவிலோ நற்குணங்கள் அடுக்கடுக்காய் இசைந்திருந்தது. சத்துருக்களை நேசிக்கும் குணம் அவர்களை ஆசீர்வதிக்கும் தன்மை, அவர்களுக்காக பரிந்து பேசும் கருணை, அவர்களுக்காக ஜீவனைக் கொடுக்கும் அன்பு, இவையாவும் இயேசுவின் அடுக்கடுககான இதழின் குணமே. இவரே சாரோனின் ரோஜா.

4 பள்ளத் தாக்குகளின் லீலி:- பள்ளத்தாக்குகளில் காணும் அழகான லீலிப் புஷ்பத்தைப்போல் இயேசுவின் தாழ்மையே அவரது மேன்மையைக் காட்டுகிறது. இயேசு சிலுவையின் மரண பரியந்தம் தன்னைத் தாழ்த்தின தாழ்மையே வானோர், பூதலத்தோர் பூமியின் கீழானோர் யாவருடைய முழங்காலும் அவருக்கு முன்பாக முடங்கச்செய்ய அவரை உயர்த்தினது. பிலி 2: 6—11 இவ்வளவு மேன்மைக்கும் அவரைக் கொண்டு போனது அவரது தாழ்மையே: அவருடைய தாழ்மையை வர்ணிக்க ஒருவராலும் முடியாது. நியாயமற்றவராய் நின்றும் தன்னைத் தாழ்த்தினார். அப். 8: 33. அவரும் நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன் என்றார். மத் 11:29. அவர் தாழ்மையுள்ளவர்தான். ஆதலால் அவர் பள்ளத் தாக்கின் லீலியே.

5 லீலி பனி பெய்யும் போது மலரும் தன்மையுள்ளது:—
இது கஷ்டத்தில் சந்தோஷமாயிருக்கும் அனுபவத்தைக் காட்டுகிறது. உபத்திரவத்தில் சந்தோஷமாயிருப்பது மிகவும் கஷ்டமான அனுபவமே. இயேசுவில் இந்த அனுபவத்தையும் காணலாம் அவர் பூமியில் பிறந்தது முதல் கொல்கொதாவில் தனது ஜீவனை விடு வரைக்கும் கஷ்டத்தின் பாதையிலே சென்றார். இந்த வேளையில் எந்த இடத்திலாகிலும் எனக்கு இந்த கஷ்டம் என்னத்திற் கென்றோ ஏன் இந்தப் பாடுகளைப் படுகிறேனென்றோ முறையிடவோ துன்பப்படுத்துகிறவர்களை பகைக்கவோ சபிக்கவோ செய்யவில்லை. எல்லா உபத்திரவங்களையும் சந்தோஷமாய் சகித்தார். சிலுவையில் மகா வேதனைப் படும் போதும் பனி பெய்யும் போது லீலி மலர்வது போல பிதாவே இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே எனப் பரிந்து பேசினார்.

இதுவே உபத்திரவத்தில் சந்தோஷத்தோடும் சமாதானத்தோடும் ஜீவிப்பதாகும். இதுவே பனி பெய்யும் போதுலீலிமலர்வதாகும். இவ்விதமாய் இயேசு தமது திவ்ய குணங்களைமணவாட்டிக்கு விளக்கிக் காண்பித்தார்.

## 2-ம் வசனம்

முள்ளுகளுக்குள்ளே லீலிப் புஷ்பம் எப்படி இருக்கிறதோ அப்படியே குமாரத்திகளுக்குள்ளே எனக்கு பிரியமானவளும் இருக்கிறாள்:- மணவாளன் இப்பொழுது மணவாட்டியை முள்ளுகளுக்குள்ளே இருக்கும் லீலிப் புஷ்பத்தோடு ஒப்பிடு

கிறார். ஏனென்றால் பலவிதமான துன்பத்தின் மத்தியில் நடத்தப்பட்டபோதிலும் சந்தோஷமாய் விசுவாசத்தைக் காத்துக்கொண்டிப்பதைக் காண்கிறார். ஆனபடியால் மணவாட்டியை பற்றி சாட்சி பகருகிறார்.

**1. லீலி முள்ளின் மத்தியிலிருக்கிறது:—** முள்ளென்பது குணப்படாத ஜனங்களாகும். விசுவாசி குணப்படாத ஜனங்களின் மத்தியிலிருப்பதைக் காட்டுகிறது குணப்படாத ஜனங்களை முள்ளோடு உவமித்திருக்கிறார். எசே 2:6 குணப்படாத ஜனம் மணவாட்டியை எப்போதும் முள்ளைப்போல் குத்திக்கொண்டிருப்பார்கள். லீலிப் புஷ்பம் அதிகமாகவும் காடுகளில் தான் உற்பத்தியாகிறது. இதைச் சுற்றிலும் முட்களும் முளைத்தெழும்பி நிற்கும். காற்றடிக்கும் போது லீலிப் புஷ்பமானது ஆடியசைந்து கொடுக்கிறது. அவ்வேளைகளில் முள்ளானது லீலிப் புஷ்பத்தை குத்துகிறது. சில வேளைகளில் லீலியின் இதழ் கிழிந்து போவதுமுண்டு. இதுதான் குணப்படாத ஜனங்களினாலுண்டாகும் உபத்திரவம். மணவாட்டி சத்தியத்திற்குச் சாட்சியாக நிற்பதால் உலகத்தார் முட்களைப் போல்கடினமான வார்த்தைகளைக்கூறி குத்துவதையும், இழிவாய்ப் பேசுவதையும் காணலாம். பவுல் இரட்சிப்பின் சத்தியங்களைப் பேசினபோது உலகத்தைக் கலக்குகிறவனென்றும் அப் 17: 6 நூதன உபதேசக்காரன் என்றும் அப் 17: 19—20 வாயாடி என்றும் கொள்ளை நோய் என்றும் அப் 24: 5 பலவருகத் தூஷித்தது மல்லாமல் பவுலைக் கல்லெறியவும் செய்தார்கள். இதோடு பவுலை காவலில் வைத்தார்கள். சவுக்கால் அடித்தார்கள். சொல்லரிய இன்னல் கட்குட்படுத்தினார்கள். இயேசுவும் ஒருவனுக்கு அவன் வீட்டாரே சத்துருக்கள் என்றும் கூறினார் மத் 10: 36. இயேசுவின் நாமத்தினிமித்தம் வீட்டாரால் பகைக்கப் படுவதே முள்ளின்மத்தியில் வாசமாயிருப்பதாகும்.

**2 லீலியை முள் குத்தினாலும் கிழித்தாலும் வாசனையோ அழகோ குன்றுவதில்லை :—**

மணவாட்டி எவ்வளவுதான் உபத்திரவங்களை அனுபவிக்க வேண்டியது வந்தாலும் லீலியின் அழகோ வாசனையோ குன்றாதது போல அவளது ஆவிக்குரிய சந்தோஷமோ; விசுவாசமோ குன்றிப்போவதில்லை. என்னிமித்தம் உங்களை நிந்தித்து துன்பப்படுத்தி பலவித தீமையான மொழிகளை உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்.

சந்தோஷப்பட்டு களி கூறுங்கள் என்றார் இயேசு மத் 5: 10—12 விசுவாசிக்கு உபத்திரவத்தின் பாதையையே நியமித்து வைத்திருக்கிறார். அப் 14-22 நாம் அவரை விசுவாசிப்பதற்குமாத்திரமல்ல பாடுபடுவதற்கும் அருளப்பட்டிருக்கிறது. பிலி1—29 இவ்விதமாய் இயேசுவை விசுவாசிக்கும் விசுவாசிகளுக்கு பல பாடுகள் நியமித்து வைத்திருக்கிறபடியால் இந்த பாடுகளை அனுபவிக்கும் போது சந்தோஷபடவேண்டும். பிரியமானவர்களே! உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல் கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும் போது மகிழும் படியாய் அவர்களுடைய பாடுகளுக்கு பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள் என்றார். Iபேது 4: 12—13.

ஆகவே எவ்வித உபத்திரவதத்தின் பாதையில் நடத்தப்பட்டாலும் கலங்காமலும், திகையாமலும் விசுவாசத்தைக் காத்துக் கொண்டு உறுதியுள்ளவர்களாய் விளங்கவேண்டும். இதுவே முட்களுக்குள் நிற்கும் லீலி புஷ்பம்:

**3 முட்களுக்குள் நிற்கும் லீலியை எளிதாக பறித்தெடுக்க இயலாது :—**

லீலி முட்களுக்குள் நிற்பதால் எளிதாக மற்றவர்கள் பறித்தெடுக்க முடியாது. இது மணவாட்டி உபத்திரவத்தின் மத்தியில் ஜீவித்தாலும் எளிதாக கெட்டுப்போகாமல் காக்கப்படுகிறாள் என்பதாகும். யோசேப்பு ஏகதேசம் 13 வருஷகாலம் தொடர்பாகவே உபத்திரவத்தின் வழியாய் நடத்தப்பட்டான். சகோதரராலும் போத்திப்பாரின் மனைவியால் சிறைச்சாலையிலும் வாதிக்கப்பட்டான். என்றாலும் அவன் விசுவாசத்தைக் காத்துக்கொண்டான். சங்105; 17—19. யோபுதானியேல்இவர்களும் கடுமையான தீயைக்கடந்து வந்தார்கள். தேவன் அவர்களைத் தமது வலது கரத்தால் தாங்கி நடத்தினார். அவர்களும் காக்கப்பட்டார்கள். லீலிப்புஷ்பம் காக்கப்பட்டதின்அனுபவம் இதுவே.

**4 முட்களைக் குமாரத்திகளுக்கு சமமாக்கினார்:—**

லீலிப் புஷ்பத்தை உபத்திரவப்படுத்துவது முள். இந்தமுள் தான் குமாரத்தி. குமாரத்தி என்பது தான் இரட்சிக்கப்பட்டவர்களாகும். அப்படியானால் மணவாட்டிக்கு வரும் அதிகமான உபத்திரவமும் விசுவாசிகளாலேயே உண்டாகும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

சிலர் குணப்படாதவர்களால் உபத்திரவம் வரும் போது அதைப் பொருட் படுத்த மாட்டார்கள். ஆனால்விசுவாசிகளால் உபத்திரவங்கள்வரும் போது அநேகர் சோர்ந்து போகிறார் கள். விசுவாசிகளால் அதிக உபத்திரவம் உண்டென்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். ஆபிரகாமைக் கானானுக்கு கர்த் தர் அழைத்துக் கொண்டு வந்தார். அவன் சகோதரன் குமார னாகிய லோத்தும் அவனோடு கானானுக்குச் சென்றான். வழி மத்தி யில் ஆபிரகாமுடைய வேலைக் காரனுக்கும் லோத்தின் வேலைக் காரனுக்கும் வாக்குவாதமுண்டானது இதனால் இவர்களுக்குள் பிரிவினைஉண்டானது.ஆதி 13: 6-12. இதுவே விசுவாசிகளின் மத்தியில் உண்டாகும் உபத்திரவம். இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு கானானுக்கு யாத்திரை புறப்பட்டு பாரான் வனாந்திரத்தில் வந்தார்கள். அங்கு வந்த பின்னர் லேவிவம்சத்தில் உட்பட்ட கோராகும் அவன் கூட்டமும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக கிரியை செய்தார்கள். இதனால் சபையில் தேவ, கோபம் பற்றி யெரிந்தது. கோராகும்கூட்டமும் அழிந்தது. இதுவே விசுவாசிகளால் தேவனை நேசிக்கிறவர்களுக்கு உபத்திரவம் உண்டு என்பதைக் காட்டுகிறது எண் 16 அதி.

(ஆகவே விசுவாசிகளே தங்களோடுள்ள விசுவாசிகளுக்கு, முள்ளைப் போல்எப்பொழுதும் வேதனை கொடுத்துக் கொண் டிருந்த போதிலும்மணவாட்டி தனது ஜீவியத்தை கெடுக் காமலும் கறைப்படுத்தாமலும் காத்துக் கொண்டு ஜீவிக் கிறாள். அவளது சந்தோஷம். குன்றவுமில்லை. அவள் கிரியை செய்வதைகுறைக்கவுமில்லை. அன்பை விட்டுவிடவுமில்லை. ஆத லால் மணவாளன் மணவாட்டியை முள்ளுகளுக்குள் இருக்கும் லீலிப் புஷபத்தோடுபுகழ்ந்து பேசுகிறார்)

## 3-ம்-வசனம்

காட்டு மரங்களுக்குள்ளே கிச்சிலி மரம் எப்படி இருக்கிற தோ அப்படியே குமாரருக்குள்ளேயும் நேசர் இருக்கிறார்.

**காட்டுமரம் :-** இது பாவ உலகத்தையும் பாவிகளையும் காட்டுகிறது. பாவிகளும் பாவ உலகமும் காட்டு மரம் போல் பிரயோஜனமற்ற நிலையிலிருக்கிறதென்பதை காட்டுகிறது.

**1 காட்டு மரத்தின் கனி ருசியில்லை :—** இது பாவிகளின் அன்பில்லாத தன்மையைக் குறிப்பிடுகிறது. அன்புள்ளவர்கள் போல் காட்டிக் கொள்வார்கள். உண்மையான அன்போ இல்லை.

முழுவதுமே வஞ்சகமும் கருணையில்லாத தன்மையுமாகும். காயினைப்போல் சகோதரனைப் பகைக்கிறகுணம். இது காட்டு மரக்கனி ருசியில்லை என்பதாகிறது.

2 **காட்டு மரக்கனியில் முள்ளுண்டு** :— சில மரங்கள் கனி கொடுத்தாலும் அந்தக் கனிக்குள் முள்ளிருக்கும். இது நல்ல சுபாவம் போல் மனிதர் பார்வைக்குத் தோன்றும். ஆனால்அதற்குள்ளெல்லாம் வஞ்சகம் உண்டு. நியாயாதிபதிகள் காலத்தில் சிசெரா தொபோராளால் யுத்தத்தில் தோற்றோடும் போது யாகேல் வீட்டு வாசலின் முன்னின்று அவனை உள்ளே அழைத்தாள். அவன் உள்ளே சென்றதும் தாகத்திற்குத் தண்ணீர் கேட்டான். அவளோ தண்ணீருக்கு பதிலாகப் பாலைக் கொடுத்தாள். அவன் பாலைக் குடித்துவிட்டு படுத்தான். அவனை சமுக்காளத்தால் மூடினாள். அப்புறம் அவன் தலையில் சுத்தியலால் ஆணி வைத்து அடித்துக் கொன்றாள் நியா 4 :1—21 இதுவே முட் கனி. தோற்றோடுகிறவனை வீட்டுக்குள் அழைத்தாள்; (தண்ணீருக்கு பதிலாகப்பாலைக் கொடுத்தாள்) அவனைக் கொன்றாள். அன்புள்ளவளைப்போல் காட்டினாள்; நயந்தாள்; கொன்றாள். இதுவே முட்கனி.

3 **சில மரக் கனியோ விஷக்கனி**:— இந்தக் கனி மனிதர் எல்லா பாவ துர்க்குணத்தாலும் நிறைந்திருப்பதைக் காட்டுகிறது. விஷம் நிறைந்த கனியைப் புசித்தால் மனிதன் மரிப்பது போல துர்க்குணத்தால் நிறைந்த மனிதனால் பொதுவான மானிடர்களுக்கும் துன்பமே விளைவிக்கும். நீதி 1:10—19 இதுவே விஷக்கனியுள்ள மரம். முழுவதும் பாவம் நிறைந்த அனுபவம்.

4 **கனியில்லாத மரம்**— காடுகளில் சென்றால் சில மரங்களை பார்க்கும் போது எவ்விதமான கனியும் காய்க்காமல் வளர்ந்து போவதைக் காணலாம். அப்படியே மனிதரிலும் சிலர் மற்றவர்களுக்கு ஒரு வித நன்மையும் செய்யார்; தீமையும் செய்யார். தன்னையே நேசித்து, தங்களையே காப்பாற்றி வாழ்வார்கள். இவர்களே கனியில்லாக் காட்டு மரமாகும்.

**கிச்சிலி மரம்** :— இந்த மரம் உத்தேசம் 30 அடி வளரும். குளிர்ந்த வட்ட இலையால் நிறைந்திருக்கும். ஆதலால் வெயிலுக்கொதுங்க வருகிறவர்களுக்கு நல்ல நிழல் கொடுக்கும். ருசியான கனியும் கொடுக்கும்.

ஆகவே மணவாட்டி உலகத்தைக் காட்டுமரத்தோடும் மணவாளனாகிய இயேசுவை கிச்சிலி மரத்தோடும் ஒப்பிடுகிறாள். ஏனென்றால் காட்டு மரத்தண்டை ஒரு வழிப்பிரயாணி தனது களைப்பை ஆற்ற வந்து ஒதுங்கி இளைப்பாற இருந்தால் அதன் நிழலில் சற்று நேரம் உட்கார்ந்து இளைப்பாறலாம். ஆனால் சமயம் தாமதிக்கும் போது அவனுக்கு பசி உண்டாகிறது. அவன் புசித்துக் களைப்பை போக்க ஆசித்தால் சில மரங்களில் கனிகளில்லை; சில மரங்களில் ருசியில்லாக் கனி; சில மரங்களில் முட்கனி; சில மரங்களில் விஷக்கனி. இவை யாவும் மனிதனுக்கு கெடுதியைக் கொடுக்கிறவைகளே. இவைகளே மனிதனுக்கு உலகம் கொடுக்கும் சந்தோஷம். உலகம் கொடுக்கும் சந்தோஷம் கொஞ்ச நேரம் சந்தோஷமாயிருந்தாலும் அது அநித்தியமான சந்தோஷமே. முடிவாகத் துன்பத்தையே கொடுக்கும். அதாவது குடிப்பதினாலோ, துன்மார்க்கமாய் ஜீவிப்பதாலோ, மற்றும் எவ்வித உலக சந்தோஷங்களை அனுபவிப்பதாலோ மனிதன் சமாதானத்தை அடைவதில்லை. இவைகளை அனுபவிக்கும் போது சமாதானமும் சந்தோஷமும் உள்ளது போல் காணப்படும். முடிவாக துக்கத்தையே அனுபவிக்கிறான். இதுவே காட்டுமர அனுபவம்.

கிச்சிலி மரத்தண்டை வந்து இளைப்பாறும் பிரயாணியோ நிழலில் களைப்பை ஆற்றி விட்டு சமயம் தாமதிக்கும் போது அதிலிருக்கும் அருமையான கனிகளைப் புசித்து திருப்தியடைந்து பெலனடைகிறான். இதுபோலவே இயேசுவாகிய கிச்சிலி மரத்தண்டையில் இளைப்பாற வருகிறவனே ஆத்மீக சரீர நன்மைகளால் திருப்தியடைகிறான். இதனாலேதான் மணவாட்டி அதன் நிழலில் வாஞ்சையாய் உட்காருவேன் என்கிறாள்.

மணவாளனின் பாதம் அவளுக்கு இன்பத்தைக் கொடுக்கிறது. மரியாள் அதை அறிந்த படியால் அவருடைய பாதத்தையே தெரிந்து கொண்டாள். லூக் 10:39. அவளுக்கு அது இன்பமாயிருந்தது. சங்கீதக்காரன் மானைப்போல் கதறி அழுது கொண்டு காத்திருக்கிறான். சங் 42:1. பவுலும் தான் பெற்றுக் கொண்டதில் திருப்தியடையாமல் நான் அடைந்தாயிற்று முற்றும் தேறினேன் என்று எண்ணாமல் ஆசையாய்த் தொடர்ந்து கொண்டே போகிறேன் என்கிறார். பிலி. 3:12. கர்த்தருடைய பாதத்தில் வாஞ்சையாய் காத்திருக்க வேண்டுமென்ற எண்ணம் எப்பொழுது ஒரு ஆத்துமாவை விட்டுக் குறையுமோ அப்பொழுதே பின்மாற்றம் ஆரம்பிக்கிறது. ஆனால் மணவாட்டியோ வாஞ்சையோடு காத்திருக்கிறாள்.

**அதின் கனி என் வாய்க்கு மதுரமாய் இருக்கிறது.**

மணவாளனின் பாதத்தில் காத்திருக்கிற படியால் மணவாளன் மணவாட்டியோடு பேசுகிறார். அவருடைய இனிய வார்த்தை அவளுக்கு இன்பத்தைக் கொடுக்கிறது. கர்த்தருடைய பாதத்தில் காத்திருந்து வேதத்தைப்படிக்குந்தோறும் வேதவசனம் மதுரத்தையே கொடுக்கும். அந்த அனுபவம் தாவீது ராஜாவுக்கு இருந்தபடியால் கர்த்தருடைய வேதம் தேனிலும் தெளிதேனிலும் விரும்பப்படதக்கது என்கிறார். சங் 19:10. ஆவிக்குரியவனுக்கு தேவனுடைய வசனம் மதுரமாகவே இருக்கும். அதை அவன் படிக்கும் போது அவன் உள்ளம் ஆனந்தத்தால் நிரம்பும். புதிய புதிய பெலனைக் கொடுத்து ஆவிக்குரிய ஜீவியத்தில் வளரச் செய்விக்கும். அதோடு பரலோக நம்பிக்கையும் பெருகும். அப்போது உலகத்தை வெறுக்கவும் கசப்பாய் எண்ணவும் செய்விக்கிறது. ஆதலால் தான் மணவாட்டி அதின்கனி என் வாய்க்கு மதுரம் என்கிறாள்.

## 4—ம் வசனம்

**என்னை விருந்து சாலைக்கு அழைத்துக் கொண்டு போனார்:—**

உலகமக்கள் பண்டிகை நாட்களிலும் கலியாண நாட்களிலும் சந்தோஷ தினங்களிலும் தங்களுக்கு பிரியமானவர்களை விருந்து கொண்டாட அழைப்பார்கள். அப்படியே ஆகாஸ்வேரு ராஜாவும் தனது ராஜ்யத்தின் மகத்வத்தை உலகத்திற்கு வெளிப்படுத்துவதற்காக-தன்னுடைய ராஜ்ஜியத்திலுள்ள பிரபுக்களுக்கும் ஊழியருக்கும் நூற்றி என்பது நாள் ஒரு விருந்து நியமித்தான். எஸ்தர் 1:3-4. பின்னர் பெரியோர்களுக்கும் சிறியோர்களுக்கும் ஏழுநாள் விருந்து நியமித்தான். இந்த விருந்து நாட்களில் அவர்களின் மாம்ச இன்பத்துக்குரிய விலையுயர்ந்த ஆகாரங்களைப் புசித்துக் குடித்து வெறிப்பதற்கென மது வகைகளையும் ஏற்படுத்தினான். இதுவே உலகமக்களின் விருந்து கொண்டாடல்.

தேவனோ தாம் தமக்கு பிரியமான ஆவிக்குரியவர்களுக்கு, ஆவிக்குரிய விருந்தை கொடுக்கிறார். இவர் கொடுக்கும் விருந்தோ உலகம் கொடுக்கக் கூடாத விருந்து. அவர் கொடுக்கும் விருந்து பரலோக சந்தோஷத்தாலும் கிருபையாலும் நிரப்பி வரங்களைக் கொடுத்து ஆவியில் நிரப்புவதாகும். இதற்காகவே காத்திருக்கச் செய்கிறார். பரிசுத்தாவிககாக காத்திருக்கும் கூட்டமே தேவஜனங்களின் விருந்து சாலை. அங்கிருந்து எல்லாகிருபைகளையும் தாராளமாய் பெற்றுக்.

கொள்ளலாம். இழந்துபோன கிருபைகளையும் பெற்றுக்கொள்ளலாம். தற்காலத்தில் பலரும் காத்திருப்புக்கூட்டங்களின் மேன்மையை புரிந்து கொள்வதில்லை. சிலர் கடமைக்காக காத்திருப்பவர்களும் உண்டு. ஆதலால் அவர்கள் மாம்சத்துக்குரியவர்களாகவே போகிறார்கள். ஆவியில் ஆரம்பித்து மாம்சத்தில் நடக்கிறார்கள். கலா. 3:3. சகலமும் மாம்சத்துக்கு உரியதாய் நடக்கப்படுவதால் நன்மை தூஷிக்கப்படுகிறது. ரோமர் 14:16. தேவனே தம்மை நேசிக்கிறவர்களை பரிசுத்தத்திலிருந்து பரிசுத்தத்திற்கும் மகிமையிலிருந்து மகிமைக்கும் நடத்துகிறார். ஆவியின் நிறைவை பெற்றுக்கொள்வதற்காக காத்திருப்புக் கூட்டமாகிய விருந்து சாலைக்கு அழைத்துக் கொண்டு போகிறார். மணவாட்டி ஆவியில் மகிழ்ந்து களிகூருகிறாள். இதுவே விருந்து சாலையின் அனுபவம்.

**என்மேல் பறந்த அவருடைய கொடி நேசமே:**– மணவாளன் தமது விருந்து சாலையாகிய காத்திருப்பு கூட்டத்தில் மணவாட்டியை கொண்டுபோய் தேவ அன்பால் நிரப்பிவிட்டார். தாங்கமுடியாத அன்பினால் அவள் நிறைந்து விட்டாள். ஆதலால் அவருடைய அன்பாகிய கொடி தன்னில் பறப்பதாக கூறினாள்.

## கொடி பறப்பதற்குள்ள அநேக காரணங்கள்

**பிள்ளைகள் சந்தோஷத்திற்காக தாளிலோ துணியிலோ கொடி உண்டுபண்ணி பறக்கவிடுவார்கள்.**

இது பரிசுத்தாவி பெற்றால் பரிசுத்தாவியால் உண்டாகும் சந்தோஷத்தைக் காட்டுகிறது. ரோமர் 14 : 17. பரிசுத்தாவியினால் உண்டாகும் சந்தோஷம் விருந்து சாலையின் அனுபவத்தை அடைந்தவர்களுக்கு கொடி காற்றில் பறக்க விடுவதுபோல் யாவரும் காண ஆனந்த சந்தோஷத்தால் நிறைந்திருப்பதாகும். அந்த சந்தோஷத்தை எடுக்க ஒருவனாலுமையாலும் கூடாது. இன்பத்திலும் துன்பத்திலும் சந்தோஷமே. பவுல் கூறும்போது நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே பரிசுத்தாவியின் சந்தோஷத்தோடே திருவசனத்தை ஏற்றுக்கொண்டீர்கள். என்கிறார். 1 தெசலோ 1 : 6. பிள்ளைகள் சந்தோஷத்திற்காக கொடியை பறக்க விடுவதுபோல பரிசுத்தாவியின் சந்தோஷத்தால் நிரம்பி எல்லோரும் அறிய சாட்சியாய் விளங்குவதாகும்.

உ. கப்பல்களில் தங்கள் கப்பல் என்று அறிய தங்கள் தேச கொடியை பறக்கவிடுவார்கள். கப்பல்கள் பிரயோஜனத்திற்காக உண்டாக்கப்பட்டவைகள். அவைகள் போகிற இடமெல்லாம் அந்த தேசக்கொடியை கப்பல்களில் கட்டி பறக்க விடுவார்கள். அப்பொழுது இன்ன தேச கப்பல் என்று அறிந்து கொள்வார்கள். மணவாட்டி கப்பலுக்குச் சமானம். அவள் போகிற இடமெல்லாம்தான் இன்னதேசக் கப்பல் என்பதை காட்டுவதற்காக தன்னுடைய கொடியைப் பறக்க விடுவது போல, மணவாட்டியும் தான் இன்னதேசக்கப்பல் என்பதைக் காட்டத் தனது கொடியைப் பறக்க விடவேண்டும். இவள் பரலோகத்துக்குரியவள். இவள் பறக்க விட வேண்டியது நேசமென்னும் கொடியே: அதாவது அன்பின் கொடி. அவள் போகுமிடமெல்லாம் பரிசுத்தாவி பெற்றவள் அல்லது தேவனுக்குரியவள் என்பதை மற்றவர்கள் அறிய வேண்டும். அதற்காக அவளது கிரியை, பேச்சுவார்த்தை.நடை உடை, பாவனை எல்லாவற்றிலேயும் வித்தியாசமாய் காணத்தக்க விதத்தில் நடக்கவேண்டும். பாபிலோனில் தானியேல் குற்றமற்றவன் என்று அறியதக்க விதத்தில் ஜீவித்தது போல ஜீவிக்க வேண்டும். இதுவே முன் மாதிரியான ஜீவிதம். 1 தீமோ 4 : 12. அப்போது மற்றவர்கள் இவர்கள் ஆவிக்குரியவர்கள் என்று அறிந்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும். இதுவே நம்மில் பறக்கும் கொடி.

3. இராஜாங்கக் கொடி. இன்ன தேசகப்பல் என்று கப்பல்களில் கொடிகட்டுவது போல இன்னராஜ்ய மென்றுங் காட்ட அந்த தேசக் கொடியைக் கட்டுவார்கள். அந்தக் கொடியைக்கண்டவுடன் இன்னதேசம் என்பதை அறிந்து கொள்வார்கள். அவ்விதமே ஆவிக்குரியவன் தான் பரலோகவாசி என்பதைக் காட்டவேண்டும். ஏனென்றால் இவனில் காணப்படுவதெல்லாம் பரலோகத்துக்குரியவைகளாய் இருக்க வேண்டும். பூமிக்குரிய யாதொன்றும் இவனில் காணக்கூடாது. என்னுடைய குடியிருப்பு அதாவது இராஜ்யம் பரலோகம் தான் என்பதை இவனுடைய எல்லா கிரியையிலும் வெளிப்படுத்த வேண்டும். அப்போது மற்றவர்கள் இவன் பரலோகவாசி தான் என்பதை அறிந்து கொள்வார்கள். இதுவே பரலோகக் கொடி.

4 கோடீஸ்வரன் என்று காட்ட கொடிகட்டுவார்கள். எக்காலங்களிலும் பூலோகத்திலுள்ள ஐசுரியவான்கள் தங்கள் செல்வம் கோடியாய் பெருகி விட்டது என்றுகண்டால்

தாங்கள் கோடீஸ்வரர் என்பதை உலகத்துக்குக் காட்டும்படியாக தங்கள் வீடுகளில் கொடியைக்கட்டி பறக்க விடுவார்கள். அந்தக் கொடியைக் கண்டவுடன் இன்னான் கோடீஸ்வரன் என்பதாக அறிந்து கொள்வார்கள். இவ்வாறு ஆவிக்குரிய மணவாட்டியும் ஐசுவரியவாட்டியே. பவுல் தரித்திரர் எனப்பட்டாலும் அநேகரை ஐசுரியவான்கள் ஆக்கவும் ஒன்றுமில்லாதவர்களெனப் பட்டாலும் சகலத்தையும் உடையவர்களாகவும் எங்களை விளங்கப்பண்ணுகிறோம் என்கிறார். 2 கொரி. 6 : 10. யாக்கோபு தேவன் இவ்வுலகத்தில் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும் தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு தாம் வாக்குதத்தம் பண்ணின ராஜ்யத்தை சுதந்தரிக்கிறவர்களாவும் தெரிந்து கொள்ளவில்லையா என்கிறார். யாக்கோபு 2 ; 5.

ஆகவே ஆவிக்குரியவன் உலகத்துக்கு முன்னதாக ஒன்றுமில்லாதவனே. பூமியில் அவனுக்கு ஆஸ்தியுமில்லை. சம்பாத்தியமுமில்லை. எவ்விதவருவாயுமில்லை. ஆயினும் விசுவாசத்தில் ஐசுவரிய சம்பன்னனே. கர்த்தர் பூமியிலிருந்தபோது ஐயாயிரம் பேரை போஷித்த வேளையில் சீஷரைப்பார்த்து நீங்களே அவர்களுக்கு ஆகாரம் கொடுங்கள் என்றார் மத் 14: 16.எலியாவின் காலத்தில் உலகம் பஞ்சத்தால் வாடும் போது சாகப்போகும் சாரிபாத் விதவைக்கும் அவள் குமாரனுக்கும் எலியாமூலம் பஞ்சத்தில் ஆகாரம் கொடுத்து போஷித்தார். எலியாவுக்குள் விசுவாசம் இருந்தபடியால் அவன் ஐசுவரியவானாகவே ஜீவித்தான். 1 இராஜா 17 : 12—16 தேவ ஜனம் பூமியில் ஏழைகளைப்பிழைப்பூட்டும் ஐசுரியவான்களே.

அநேகர் விசுவாசம் இல்லாதபடியால் வீடு வீடாய் அலைந்து தங்களின் வறுமையை மற்றவர்களுக்குச் சொல்லி நிந்திக்கபடத்தக்கவர்களாய் நடக்கிறார்கள். அவர்களால் தேவனுடைய நாமம் வாதிக்கப்படுகிறது. ஒரு விசுவாசி கர்த்தருடைய நாமத்திற்காக செலவு செய்யும் போது அவன் பொக்கிஷம் பரலோகத்தில் சேர்க்கப்படுகிறது. ஆத்துமாக்களின் ஆதாயத்திற்காக எவ்வித பாடுபடுகிறவனோ அவையாவும் பரத்தில் சேர்த்து வைக்கப்படும். ஆதலால் கர்த்தருக்காக பூமியில் செலவு செய்கிறவன் ஆவிக்குரியபடி அவன் ஐசுவரியவானே. சீக்கிரத்தில் இராஜாவாய் இயேசு சிங்காசனத்தில் இருந்து உலகத்தை ஆளுகை செய்யும் போது இவனும் அவரோடு கூட சிங்காசனத்திலிருந்து ஆளுகை செய்வான்.2தீமோ 2. 12. ஏனென்றால் இவன் ஐசுரியவான். இவனின் ஐசுரியத்தின் கொடிபறந்து தன்னை ஐசுரியவான் எனக்காட்டுகிறது.

**5. ஜெயக்கொடியை பறக்க விடுவார்கள்:—** இராஜ்யங்களுக்கு ராஜ்யம் யுத்தம் செய்யும் போது எந்த இராஜ்யம் தோற்றுப் போகிறதோ உடனே தங்கள் ராஜ்யக்கொடியை தாழ்த்தி விடுவார்கள். எந்த ராஜ்யம் ஜெயிக்கிறதோ உடனே தங்கள் கொடியை பெரிய ஸ்தம்பங்களில் நாட்டியும் வாகனங்களில் கட்டியும் வெற்றியடைந்ததைக் காட்டுவதற்காக பறக்க விட்டு ஜெய கோஷம் கொண்டாடுவார்கள். இது ஆவிக்குரிய மணவாட்டிக்கு பிசாசு மாம்சம் உலகத்தோடு யுத்தமுண்டு என்பதையும், சாத்தான் அடிமைப்படுத்த எப்பொழுதும் போராட்டம் உண்டு என்பதையும் காட்டுகிறது இச்சத்துருக்களை ஜெயிப்பதற்காக மணவாட்டி சுய பெலத்தால் போராடி ஜெயிக்க முடியாது. அப்படி யுத்தம் செய்தவர்களையெல்லாம் சாத்தான் கீழ்ப்படுத்தி விட்டான். தேமாவை இப்பிரபஞ்சத்திற்கு அடிமையாக்கினான். 2 தீமோ 4: 10. உலகம் போற்றும் சாலோமோனை மாம்ச இச்சையில் கட்டி சிறையில் போட்டு அழித்து விட்டான். 1 இராஜா 11: 1—5 யூதாசை பண ஆசைக்குள்ளாக்கிக் கொன்றான். இவ்வாறு பலரையும் பலவிதமாய் அழித்து விட்டான். ஆதலால் இவனை ஜெயிப்பதற்காகவே புசித்துக் குடித்து பெலனடையவே மணவாட்டியை மணவாளன் விருந்து சாலைக்கு அழைத்துக் கொண்டு போனார். ஆத்துமா்வில் புதுப்புது பெலனடையும் போது சத்துருவை ஜெயிக்கலாம் எந்த சோதனையிலும் வெற்றியைக் காணலாம். அப்பொழுது ஜெபத்தை லோகத்திற்கு காட்டலாம். நாமும் ஜெயம் பெற்றவர்களாய் விளங்குவோம். இதுவே கிறிஸ்தவ ஜீவியத்தின் ஜெயக்கொடி பறப்பதாகும்.

## 5—ம் வசனம்

திராட்சை ரசத்தால் என்னைத் தேற்றுங்கள் (திராட்சை ரசத்தைப்பற்றி 1—ஆம் அதிகாரம் 3—ம் வசனம் பார்க்கவும்) கிச்சிலி பழத்தைப் பற்றி 2—ம் அதிகாரம் 3—ம் வசனம் பார்க்கவும்)

**தேற்றுங்கள் ஆற்றுங்கள் நேசத்தால் சோகமடைந்திருக்கிறேன்.** உலக பிரகாரம் ஒரு தோழனைப் பற்றிய சிநேகம் பெருகும் போது அந்த தோழனைக் காணாதிருக்க முடியாது. ஏனென்றால் அவனைப்பற்றிய அன்பு அவன் உள்ளத்தில் பெருகியிருக்கிறது. அது போலவே மணவாட்டிக்கும் மணவாளனாகிய இயேசுவைப் பற்றிய அன்பு பெருகி விட்டது. ஏனென்றால் மணவாளன் மணவாட்டியை விருந்து சாலைக்கு அழைத்துக் கொண்டு போனார். அதாவது ஆவியில் நிறைந்து

மகிழும் இடத்துக்குக் கொண்டு போய் அவளை பல விதமான கிருபைகளால் நிரப்பி விட்டார். இதனால் அவள் உள்ளம் நன்றியால் நிரம்பி விட்டது. ஆனபடியால் அவரோடு எப் போதும் இருக்க விரும்புகிறாள். அவரை விட்டு கொஞ்ச நேரமும் பிரிய முடியவில்லை. தாங்க முடியாத அன்பு. ஆதலால்தான் என்னைத் தேற்றுங்கள் ஆற்றுங்கள் உலகம் எனக்கு வேண்டாம் என்கிறாள். எப்போது என் ஆத்தும மணவாளனை முகமுகமாய்ச் சந்திப்பேன், அவரைக் காண்பேன் என்று கவலைப்படுத்த விக்கினாள். ரோமர் 8:23 இதுவே ஆற்றுவதும் தேற்றவது மாகும்.

## 6-ம் வசனம்

**அவர் இடது கை என் தலையின் கீழ் இருக்கிறது அவர் வலது கை என்னை அணைத்துக் கொள்கிறது.**

மணவாட்டி மணவாளனைப் பற்றிய சோகத்தால் கலக்க மடைந்து விட்டாள். ஆதலால் மணவாளன் வந்து தாய் தன் பாலகனின் தலைக்கீழ் தனது இடது கையை வைத்தும் வலது கையால் அணைத்தும் தூங்கவைப்பது போல அவளை ஆற்றுகிறார்.

**இடது கையை தலைக்கீழும் வலது கையால் அணைப்பதனால் உண்டாகும் பலன் என்ன?**

**1. பிள்ளையின் பயம், கவலை இவை நீங்குகிறது.**

தாயின் கை பிள்ளையை அணைத்திருந்தால் பிள்ளையின் பயம் கவலை இவையாவும் நீங்கிவிடும்.

இது போலவே கர்த்தர் நம்மோடிருந்தால் விசுவாசிக்கு பயமில்லை. பயம் முற்றுமாய் விலகிப்போகிறது. சங்கீதக்காரன் நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன். தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர் என்கிறார். சங் 23:4 கர்த்தர் கூடே இருக்கிறபடியால் பய மற்றுப் போகிறது. கர்த்தரும் தம்முடைய மக்களுக்கு, "பயப் படாதே நான் உன்னுடனே இருக்கிறேன், திகையாதே நான் உன் தேவன். நான் உன்னை பெலப்படுத்தி சகாயம் பண்ணுவேன். என் நீதியின் கரத்தினால் தாங்குவேன்" என்று வாக்கு தத்தம் செய்திருக்கிறார். ஏசாயா 41 : 10 இவ்வித வாக்குதத் தங்களே மணவாட்டியின் பயத்தை நீக்கி அவளைத்தாங்குகிறது. இதுவே அவரது கரம் அரவணைப்பதால் உண்டாகும் பலன்.

2. **ஆறுதலான நித்திரை கொடுக்கிறது:-** பிள்ளைகள் கலங்கித்திகைக்கும்போது தாயின் அரவணைப்பானது பிள்ளைகளின் கலக்கத்தை நீக்கி ஆறுதலாய் தாயின் கரத்தில் தூங்கச்செய்விக்கிறது.

மணவாட்டிக்கோ இந்த உலகத்தில் எவ்வித ஆறுதலும் இல்லை. கர்த்தரை எவ்வளவுக்கதிகமாய் நேசிக்கிறாளோ அவ்வளவுக்கதிகமாய் போராட்டங்களும் அதிகரிக்கிறது. இனத்தாரால், கூட்டுவிசுவாசிகளால், ஊழியர்களால் நெருக்கப்பட்டும், பொருள் நஷ்டத்தினாலும், வியாதியினாலும், இன்னும் பலவிதமாய் சோதிக்கப்பட்டும், சோதனை மாறிமாறி பெருகிக்கொண்டும் இருக்கிறது. அப்போது மணவாளனில் பாரத்தை சுமத்துகிறாள். அவரே பாரங்களை சுமப்பேன் என்றும், கவலைகளைப் போக்குவேன் என்றும் வாக்களித்திருக்கிறார். ஆதலால் அவரது கரத்தில் கவலையற்றவளாய் ஜீவிக்கிறாள். எவ்வித கவலையுமில்லை; கலக்கமுமில்லை. ஆறுதலான ஜீவிதம் செய்கிறாள். இதுவே அவரது கரத்தின் கீழ் ஆறுதலாய் நித்திரை செய்வதாகும்.

## 7-ம் வசனம்

எருசலேம் குமாரத்திகளே எனக்குப் பிரியமானவளுக்கு மனதாகுமட்டும் நீங்கள் அவளை விழிக்கப் பண்ணுமலும் எழுப்பாமலும் இருக்கும்படி வெளிமான்கள்மேலும் வெளியின் மரைகள் மேலும் உங்களை ஆணையிடுகிறேன்.

மணவாட்டி இப்பொழுது மணவாளனின், அதிகமான கிருபைகளைப் பெற்று ஆவிக்குள்ளாகி விட்டாள். எப்பொழுதும் அவரோடே உறவாடிக் கொண்டிருக்கிறாள். தனது குடும்பத்தைப்பற்றியோ, பிள்ளைகளைப்பற்றியோ, உத்தியோகங்களைப் பற்றியோ எண்ணமில்லை. மணவாளனே போதுமென திருப்தியடைந்து விட்டாள்.

எருசலேமின் குமாரத்திகளுக்கோ அதாவது இரட்சிப்பின் அனுபவத்திலிருப்பவர்களுக்கோ இவ்விதமேலான அனுபவமில்லை. ஆதலால் மணவாட்டியின் ஆழமான பிரதிஷ்டையையும் தியாகத்தையும் தடை செய்ய முயலுகிறார்கள். அப்பொழுது மணவாளன் இரட்சிக்கப்பட்டவர்களோடு மணவாட்டியின் தீர்மானங்களை தடுக்காதே அவர்கள் எடுத்துக்

கொண்ட பிரதிஷ்டையில் முன்னேறிப் போகட்டும்; அவர்களின் சுயவெறுப்பை தடுக்காதே யென அதிவேகத்தில் தடை செய்கிறார்.

அதாவது ஈசாக்கை ஆபிரகாம் பலி செலுத்தும் போது ஆபிரகாம் ஈசாக்கை வெட்ட கத்தியை ஓங்கும் வேளையில் 'ஆபிரகாமே உன் குமாரன் மீது கைபோடாதே' என்று ஆத்திரமாய் கூறித்தடை செய்தது போல எருசலேம் குமாரத்திகளைத் தடுத்தார். மானும் மரையும் எந்த குன்றிலேயும் எந்த பள்ளத்திலேயும் துள்ளிக்குதிக்கும் தன்மை வாய்ந்தது. அப்படியே எவ்வித இன்னல்கள் இருந்தாலும் மணவாட்டி மணவாளனோடு உறவாடி ஜீவிக்கும் வல்லமை உடையவள். ஆதலால் தடை செய்யாதே என்று ஆத்திரத்தோடு அவர்களைத் தடுத்ததாகும். விழிக்கப் பண்ணுமலும் எழுப்பாமலும் இரு என்பது உறவாட்டத்தைத் தடுக்காதே என்தாகும்.

## 8-ம் வசனம்

இது என் நேசருடைய சத்தம். இதோ அவர் மலைகள் மேல் குதித்தும் மேடுகள் மேல் துள்ளியும் வருகிறார்.

மணவாட்டி கர்த்தரோடு உறவாடி எப்போதும் ஆவிக்குள் ஜீவிக்கிறபடியால் அவரும் அவளோடு பேசி உறவாடுகிறார். ஆவிக்குரியவர்கள் கர்த்தரோடு பேசி உறவாடி ஜீவிக்கும் போது பிசாசும் அவர்களை வழிவிலகச் செய்யும்படியாக அவர்களோடு பேசுவான். இதை மணவாட்டி அறிந்திருந்தாள். ஆதலால் அவள் இப்பொழுது இது என் நேசருடைய சத்தம் எனச் சொல்லுகிறாள். ஏனென்றால் இது அன்னிய சத்தமல்ல, என்நேசரின் சத்தந்தான் எனத்திட்டமாய் அவிசுவாசப்படாமல் தைரியமாய்க் கூறினாள்.

**இது என்நேசரின் சத்தந்தான் எனத்திட்டமாய் கூறக்காரணமென்ன?:—** மணவாட்டி நேசரோடு நன்றாக பழகி விட்டாள். மணவாளனுடைய சத்தத்தைக் கேட்டுக்கேட்டு நிச்சயமாகி விட்டாள். நேசர் இவ்விதமாய்த் தான் வருவார், அவர்சத்தம் இப்படித்தான் கேட்கும் எனத்திட்டமாய் அறிந்து விட்டாள். அதில் கலக்கமே இல்லை. ஆதலால் தைரியமாய் இருக்கிறாள்.

## நேசர் எவ்விதமெல்லாம் பேசுவார்

1. **கர்த்தர் சொப்பனத்தில் பேசுவார்:-** சாலமோன் ராஜா கர்த்தரோடுள்ள ஐக்கியத்தை விட்டு வழி விலகும்போது இரண்டு தடவை சொப்பனத்தில் தரிசனமாகி அன்னிய தேவர்களைப் பின்பற்ற வேண்டாமென்று பேசினார். 1 இரா 11:9. கர்த்தர் சாமுவேலிடம் ஏலி தன் மக்களை கண்டியாமல் விட்டதையும், மக்களின் மீறுதலையும் அதனால் இஸ்ரவேலுக்குண்டாகும் நியாயத்தீர்ப்பையும் எச்சரித்தார். 1 சாமு 3:1-13. இவ்விதமாய்க் கர்த்தர் மனிதனோடு காரியங்களைச் சொப்பனத்தில் பேசி நடத்துகிறார். அப்போ 16:9

2. **தீர்க்கதரிசி மூலம் பேசுகிறார்:-** கர்த்தர் தமது ஜனத்துக்கு தீர்க்கதரிசியோடு பேசி அறிவிப்பதும் உண்டு. ஏலியிடம் ஓர் தேவ மனுஷன் வந்திருந்தான். அவன் கர்த்தர் கொடுத்தச் செய்தியை ஏலிக்கு அறிவித்தான். 1 சாமு 2:27-29. பவுலின் கச்சையை ஒருவன் எடுத்து பவுலுக்கு வரப்போகும் பாடுகளை அறிவித்தான், அப்போ 21 : 11. இவ்விதமாய்க் கர்த்தர் தீர்க்கதரிசிமூலம் பேசுவதுமுண்டு.

3. **தீர்க்கதரிசனத்தில் பேசுகிறார்:—** தீர்க்கதரிசனவரம் ஒருவனுக்கு இருந்தால் விசுவாசிகள் கூடி ஜெபிக்கும் போது வரமுடையவர்கள் மூலமாய்ப் பேசுகிறார். ஆதிச் சபையிலும் அப்படியே கிரியைச் செய்தார். அப்போ 13:2

4. **உள்ளத்தில் பேசுகிறார்:—** ஒருவன் ஆவியைப் பெற்று ஆவிக்குள் ஜீவிக்கும் போது ஆவியானவர் அவனில் வாசமாயிருக்கிறார். யோவான் 14:23. அப்போது அவன் போக வேண்டிய பாதையை அவனோடு பேசி நடத்துகிறார். 1 யோவா 2:27 பவுலோடும் அப்படியே பேசி நடத்தினார். அப்போ 21:4 இவ்விதமாய் உள்ளத்தில் பேசி நடத்துகிறார்.

5. **தண்டனைமூலம் பேசுகிறார்:—** தெய்வ ஜனம் கர்த்தரை விட்டு விலகும்போது அவர்கள் திரும்பி வரும்படியாக கர்த்தர் அவர்களுக்குப் பலவிதமான தண்டனைகளைக் கொடுத்துப் பேசுகிறார், ஆமோஸ் 4:8-12 அப்பொழுது மனிதன் கர்த்தர் என்னோடு பேசுகிறார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்-அநேகர் கர்த்தர் பேசும் விதத்தை அறிந்துகொள்ளுவதில்லை. கர்த்தரால் தண்டிக்கப் படுகிற மனுஷன்பாக்கியவான் யோ 5:17 ஏனென்றால் தண்டனையைக் காணும் போது கர்த்தர் என்னோடு பேசுகிறார் என உணர்ந்து திருந்திக் கொள்வான். அப்பொழுது ஆசீர்வதிக்கப்படுவான். இவ்வாறு, தண்டனைவழியாகவும் கர்த்தர் பேசுகிறார்.

இவ்விதமாக விசுவாசியின் முன்னேற்றத்திற்காக கர்த்தர் பலவிதமாகப் பேசுகிறார். கர்த்தர் பேசி வழி நடத்தும் போது சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்து நம்மை வழி மறிப்பதற்காக நம்மோடு கலந்து கொள்வான்.

**சாத்தானுடைய வேஷம்:—** (1) சொப்பனங் காட்டுவான். 2) கள்ள ஊழியர் மூலம் பேசுவான். (3) பொய்த்தீர்க்க தரிசனஞ் சொல்லுவான். (4) இருதயத்தின் நினைவை ஆவியானவர் சொன்னதாகத் தூண்டுவான். இவ்விதமாகச் சாத்தானும் பல உபாய தந்திரங்களை உபயோகப் படுத்துவான். விசுவாசி இவற்றைக் கண்டு பிடிக்கப் பழக வேண்டும். இவ்வித தப்பிதங்களை மணவாட்டி கண்டு பிடித்து பழகிவிட்டபடியால் இது அன்னிய சத்தம். இது நேசரின்; சத்தம் என பகுத்து அறிகிறாள். ஆனபடியால் இப்பொழுது அவள் இது என்நேசரின் சத்தம் என்கிறாள்.

இதோடு அவர் மலைகள்மேல் குதித்தும் மேடுகள்மேல் துள்ளியும் வருகிறார் என்கிறாள். அதாவது மணவாளன் மணவாட்டியோடு உறவாடும் போது உற வாட்டத்துக்குச் சிலதடைகள் உண்டு. ஆனாலும் அந்தத்தடைகளை அவர் பொருட் படுத்தாமல் வருகிறதாகச் சொல்லுகிறாள். ஏனென்றால் அவளில் சில துர்க்குணங்கள் இருப்பதை அவள் உணருகிறாள். இந்த துர்க்குணங்கள் அவர் அவளோடு உறவாடுவதற்குத் தடையே. அதற்காக அவள் மனஸ்தாபப் பட்டு அழுகிறாள். புலம்புகிறாள். ஆனபடியால் நேசர் அவற்றைப் பாராதபடி அவளை மகிழ்விக்கிறார் என்பதே.

## 9-ம் வசனம்

என் நேசர் வெளிமானுக்கும் மரைக்குட்டிக்கும் ஒப்பாயிருக்கிறார். இதோ அவர் எங்கள் மதிலுக்குப் புறம்பே நின்று பலகணி வழியாய்ப் பார்த்து கிராதியின் வழியாய் தமது மலர்ந்த முகத்தைக் காண்பிக்கிறார்.

அதாவது மணவாட்டி மணவாளனைக் கூப்பிட்டபோது அவர் தடைகளைப் பாராதபடி தன்னண்டை அதிவிரைவில் வருவதாகக் கூறினாள். இப்பொழுதோ மணவாட்டி மான் மரை காடுகளில் துள்ளிவருவதுபோல ஜெபத்தைக் கேட்டு வந்திருக்கிறார் என்பதாகச் சொல்லுகிறாள். என்று

லும் அவர் மதிலுக்குபுறம்பே நின்று ஜன்னல் கம்பிவழியாய் பார்த்துக் கொண்டு இருப்பதுபோல் இருக்கிறார் எனவும் கூறுகிறாள். ஏனென்றால் அவர் அவளை நேசித்தாலும் அவள் பரிபூரண பரிசுத்தத்தை அடைவதற்கு தடையாய் இருக்கும் சில குறைவுகளை எடுத்துக் காட்டி பூரணத்திற்க்குக் கொண்டு போவதற்காக தடைகள் இன்னும் இருக்கிறது என்பதை உணர்த்திக் கொடுக்கிறார். கர்த்தரைத் தரிசிக்க போதுமான பரிசுத்தம் இன்னும் மணவாட்டிக்கு வந்து சேரவில்லை. பரிசுத்தாவி பெற்றவள்தான். மணவாளனின் அன்பால் சோகமுற்றவளாகவே இருக்கிறாள். அவரது சத்தம் கேட்கிறாள். என்றாலும் அவரைத் தரிசிக்க எவ்வளவோ பரிசுத்தம் தேவையாயிருக்கிறது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

மாம்ச சுபாவம் இன்னும் மாற்றப்பட வேண்டியதாயிருக்கிறது அவர் அவள் கூப்பிடுதலைக் கேட்கிறார் என்றாலும் சற்று தூரமாகவே நின்று அவரது அன்பான முகத்தைக் காட்டி அவளைக் கிட்டத்தில் இழுத்துக் கொள்ள முயலுகிறார். அப்படியானால் மாத்திரம் அவள் அவரை அண்டிச் சேருவாள் என்பதை அறிந்து தமது மலர்ந்த முகத்தைக் காட்டினார்.

## 10-ம் வசனம்

என்நேசர் என்னோடுபேசி என் பிரியமே. ரூபவதியே எழுந்துவா

**என் பிரியம்:—** உன்னதபா 1 : 9 பார்க்கவும்

**ரூபவதி:—** உன்னதபா 1 : 8 பார்க்கவும்

**எழுந்துவா:—** இது நீ இருக்கும் நிலைமையில் இருந்து விடாதே பிரதிஷ்டைகளை புதுப்பித்து முன்னேறிவா என்பதாகும். கிறிஸ்துவின் பரிசுத்தம் மனித அளவுக்கு எட்டாதது. அவரது அன்புக்கோ தாழ்மைக்கோ சாந்தத்துக்கோ பொறுமைக்கோ அளவு கிடையாது. மணவாளனின் குணங்கள் மணவாட்டியில் காணப் படவேண்டும். அதைப் பெற்றுக் கொள்வதற்காக தினந்தோறும் வாஞ்சித்தே ஜீவிக்க வேண்டும். பரிசுத்த யோவான் இயேசுவோடு ஜீவித்தவாரயிருந்தான். பெந்தேகோஸ்தே நாளில் பரிசுத்தாவி பெற்றிருந்தான் பேதுருவோடு சேர்ந்து அலங்கார வாசலண்டையிலிருந்த சப்பாணியைத் தூக்கி விட்டான். சுவிஷேஷத்தினிமித்தம் பத்மு தீவுக்கு நாடு கடத்தப்பட்டான். கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்

ளானுன். அப்பொழுது சபைகளைப் பற்றிய வெளிப்படுத்து தலைப் பெற்றுன். இவ்வித அனுபவமிருந்த போதிலும் கர்த்தர் யோவானிடம் ஏறிவா என்று அழைத்தார். உடனே அவன் ஆவிக்குள்ளானுன். அப்போது யோவானுக்கு ஆழ மான வெளிப்படுத்துதலைக் கொடுத்தார். வெளி 4 : 1-2. இவ்வாறே முன்னேற, முன்னேற அதாவது பரிசுத்த மடைய பரிசுத்தமடைய, ஆழமான வெளிப் படுத்துதலைக் கொடுக் கிறுர் என்பதை அறிந்துகொள்ள வேண்டும். அதற்காகவே எழுந்துவா என்று அழைத்தார்.

## 11-ம் வசனம்

**இதோ மாரிகாலம் சென்றன மழை பெய்து ஒழிந்தது.** மண வாட்டியை முன்னேற வேண்டிய காரணத்தையும் கீழேவிவரிக் கிறுர். **அதாவது மாரிகாலம் சென்றது.** யோவேல் தீர்க்க தரிசியால் கூறப்பட்ட முன்மாரி பெய்தாகி விட்டது. அதா வது வயலாகிய சபை ஸ்தாபிக்கப் படுவதற் கேதுவானபோது பரிசுத்தாவியை ஊற்றிஞர். அது பெந்தோகோஸ்து நாளில் ஊற்றப்பட்டது. இடைக் காலங்களில் பெய்யும் மழையாகிய ஆவியும் பெய்தாகிவிட்டது. இப்பொழுதோ பின்மாரி காலம். பயிராகிய சபை அறுவடையாகப் போகிற காலம். பயிர் ஆரம்பிப் பதற்கு முதலில் முன்மாரி பொழியும். அப்போது பயிரிடுகிறவன் பயிர் செய்ய ஆரம்பிக்கிறுன். நல்ல விளைச் சல் கிடைக்க வேண்டுமானுல் இடைக்காலங்களில் மழை பெய்ய வேணடும். அதன் பின்னர் அறுவடை யாவதற்கு முன்னர் நல்லபலன் கிடைப்பதற்காக பின்மாரியும் பெய்ய வேண்டும். அப்படியானுல் நல்ல பலனைக் காணலாம். இது போலவே சபைக்கும் பரிசுத்தாவியாகிய முன்மாரி ஊற்றப் பட்டது. மாத்திரமல்ல பின்மாரியும் பெய்து விட்டது. ஆதலால் முடிவு காலத்திற்கு வந்திருக்கிறோம். ஆகவே மண வாட்டி நிலமையை ஆசிக்கிறவர்களே காலம் இனி இல்லை. முன்னேறிவா என்றழைக்கிறுர். இதுவே தேவ எச்சரிப்பு.

## 12-ம் வசனம்

**பூமியிலே புஷ்பங்கள் காணப்படுகிறது.** குருவிகள் பாடும் **காலம் வந்தது. காட்டுப்புருவின் சத்தம் நமது தேசத்தில் கேட்கப்படுகிறது.**

பூமியிலே புஷ்பங்கள காணப்படுகிறது:—

ஆவியின் மழை பெய்தபடியால் ஆயிரமாயிரமான ஆத்துமாக்களைக் கர்த்தர் எல்லா ஜாதிகளிலும் பாஷைக்காரர்களிலுமிருந்து இரட்சித்துக் கொண்டே வருகிறார். காடுகளில் புஷ்பங்கள் விரிந்து பிரகாசிப்பதுபோல துஷ்ட உலகத்தில் தெய்வஜனம் புஷ்பங்களைப் போல கிறிஸ்துவுக்கு சாட்சியாய் விளங்குகின்றனர். சில காலங்களுக்கு முன்னதாக இரட்சிக்கப் பட்டவர்களைக் காண்பது அரிதாயிருந்தது. இப்பொழுதோ எல்லா பட்டணங்களிலும் எல்லா ஜாதிகளிலும் எல்லா பாஷைக்காரரிலும் எல்லா தேசங்களிலும் பரிசுத்தவான்களைக் காணலாம். இவர்களே புஷ்பங்கள். ஆதலால் விசுவாசியே இது கடைசிகாலம் நீ முன்னேறிவா என்றழைக்கிறார்.

குருவிகள் பாடும் காலம் வந்தது:—குருவிகள் பாடுவதைக் கேட்கிறோம். ஆனால் அந்த பாட்டின் பொருள் அறியோம். இதுபோல வ பரிசுத்தவான்கள் அந்நிய பாஷையில் பாடிக் கொண்டிருப்பதைக் கேட்கிறோம். அவைகள் குருவிகள் பாடுவதுபோல் காணப்படுகிறது. ஒரு காலம் ஆவியால் நிரம்பும் போது அந்நியபாஷை உண்டென்று அறியாதிருந்தோம். ஆனால் இந்தக் கடைசிக் காலத்திலோ கர்த்தர் அந்தப்பரம ரகசியத்தை வெளிப்படுத்திக் கொடுத்தார். ஆனபடியால் எல்லாகர்த்தருடைய பிள்ளைகளும் ஆவியினால் நிறைந்து குருவிகள் பாடுவது போல கர்த்தரை மகிமை படுத்தும் காட்சியை காண்கிறோம். ஆம் இதுகடைசி காலமே அதனால் மணவாட்டியே எழும்பிவா என அழைக்கிறார்.

அந்நிய பாஷையைக் குறித்து சுருங்கிய விளக்கம்:— அப்போஸ்தலர் மூன்றரை வருஷ காலம் இயேசுவோடு நடந்தனர். அப்போது இரட்சிக்கப் பட்டிருந்தார்கள். பிசாசுகளைத் துரத்தினார்கள். என்றாலும் பரிசுத்தாவியைப் பெற்றுக்கொள்ளவில்லை—யோவா 16:7 பெந்தேகோஸ்தின், நாளில் தான் பரிசுத்தாவியைப் பெற்றார்கள். அப்படியே எபேசு விசுவாசிகளும் இரட்சிக்கப்பட்ட வர்களாயிருந்தார்கள் பின்னர் தான் பரிசுத்தாவியைப் பெற்றார்கள் அப்போ 19: 1—6

பரிசுத்தாவி பெற்றுக் கொள்வது இரண்டாவது அனுபவம். பரிசுத்தாவி பெற்றேன் என்பதற்கு அடையாளம் அந்நிய பாஷையே, பெந்தே கோஸ்தே நாளிலும் கொர்நேலியூவின் வீட்டிலும் எபேசிலுள்ள சீஷரும் பரிசுத்தாவியை

பெற்றபோது அந்நிய பாஷையையே பேசினார்கள். அப்போ 2: 1-4, 10 : 43-46 : 19 : 1—6 அப்படியே நமது கர்த்தரும்; ஏசாயாவைக் கொண்டுபரியாச உதடுகளாலும் அந்நிய பாஷையாலும், இந்த ஜனத்தோடே பேசுவேன் என்றார். ஏசா 28:11 ஆகவே ஆவியினால் நிறையப் படும்போது அந்நிய பாஷையே பேசப் படுகிறது.

சிலர் அந்நிய பாஷை வரத்திற்கும் அந்நிய பாஷை அடையாளத்திற்கும் வித்தியாசம் அறிந்து கொள்கிறதில்லை. விசுவாச வரத்துக்கும் இரட்சிப் புக்கேற்ற விசுவாசத்திற்கும், எப்படி— வித்தியாசமோ அப்படியே அந்நியபாஷை வரத்திற்கும்அந்நிய பாஷை அடையாளத்திற்கும் வித்தியாசம் உண்டென்பதை அறிந்து கொள்ள வேண்டும். அந்நிய பாஷை வரம் வேறே அந்நிய பாஷை அடையாளம் வேறே. அந்நிய பாஷை வரமாயிருந்தால் எப்பொழுதும் அந்நிய பாஷை பேசிக் கொண்டேயிருப்பார்கள். அந்நிய பாஷை அடையாளமாயிருந்தால் ஆவியினால் நிறையும் போது மாத்திரம் அடையாளம் கிரியை செய்யும். ஆதலால் அந்நிய பாஷை அடையாளத்துடன் ஆவியை பெற்று இயேசுவின் வருகைக்கு ஆயத்தப்பட வேண்டும். இதுவே அந்நிய பாஷையைப் பற்றிய சுருக்க விவரம்.

**காட்டுப்புறுவின் சத்தம் பூமியிலே கேட்கப் படுகிறது.**

காடுகளில் இணைப்புறாவைக்காணவிட்டால் தனித்த புறாக்கள் அழுவதுபோல தற்காலத்தில் பரிசுத்தவான்கள், எல்லா உலகத்திலும் புலம்பி கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கும் காட்சியைக் காணலாம். ஏனென்றால் தேவாதி தேவன் ஊரில் ஒன்றும் வம்சத்தில் இரண்டுமாக பரிசுத்தவான்களைச் சேத்துக் கொண்டே இருக்கிறார். எரேமியா 3:14. அதற்காக தமது ஆவியை உலகமெங்கும் உற்றிக்கொண்டுமிருக்கிறார். இந்த ஆவி உள்ளத்தில் ஊற்றப்பட்டிருக்கிற படியால் பரிசுத்தவான்கள் பெருமூச்சோடு ஆவியானவர் மூலம் ஜெபிக்கிறார்கள். ரோமர் 8:26 ஆதலால் பரிசுத்தவான்கள் அழிந்துபோகிற ஆத்துமாக்களுக்காக அழிந்துபோகிற உலகத்துக்காக இடுப்பு நொறுங்க யாவரும் காண ஓலமிடுவதைக் காண்கிறோம். எசே 21:3-5 எரே 9:1

இதோடு தங்களுக்கு உலகத்தின் பாடு நீங்கி எப்போது மகிமையின் ராஜ்யத்தைச் சேருவேன்; அருமை மணவாளனைக் காண்பேன் அதற்காக என்னை ஆயத்தப்படுத்து மென தவித்-

துக் கதறி அங்கலாய்த்துக் கொண்டுமிருக்கின்றனர். ரோமர் 8:23. இவையாவும் காட்டுப் புரு ஒலமிடுவதைப் போல கண்ணீர் விட்டுக் கதறிக் கொண்டே மணவாளனை அழைப்பதாகும். ஆதலால் மணவாளியே எழுந்துவா என்கிறார்.

## 13-ம் வசனம்

**அத்திமரம் காய் காய்த்தது.**

யூத ஜாதியார் தங்கள் அரசியல் சம்மந்தமான ஆளுகையை குறிப்பிட ஒலிவமர அடையாளச் சின்னத்தையும் தங்கள் ஜாதியைக் குறிப்பிட அத்திமர அடையாளச் சின்னத்தையும் தங்கள் மார்க்கத்தைக் குறிப்பிட திராட்சைச் செடியின் அடையாளச் சின்னத்தையும் உபயோகப் படுத்துவார்கள்.

**இப்போது யூதஜாதியாகிய அத்திக்காய் காய்த்தது:—**

அத்தியாகிய யூத ஜாதி தங்கள் சொந்த தேசமாகிய பலஸ்தீனு தேசத்தில் திரளாகக் கூட்டிச் சேர்க்கப் பட்டிருக்கிறார்கள். இயேசு பூலோகத்திலிருந்த போது யூதர்கள் பலஸ்தீனு தேசத்தின் ஒரு பெரிய ஜாதியாய்ப் பெருகியிருந்தார்கள். அப்போது இயேசு யூதஜாதியாகிய அத்தி பட்டுப் போகுமென்று சபித்தார் அது கி. பி. எழுபதாம் வருஷம் ரோம ராயனுகிய தீத்து எருசலமுக்கு விரோதமாக படையெடுத்தான். எருசலேம் மதில் சூழ்ந்த பட்டணமாயிருந்தது ரோம படை கோட்டைக்குள் பிரவேசியாதபடி யூதர் கோட்டையை காத்துக் கொண்டிருந்தார்கள். தீத்து நான்கு மாதம் எருசலேமை முற்றுகைப் போட்டுக் கொண்டிருந்தான். முடிவாக பட்டணம்பிடி பட்டது. தீத்து பத்து லட்சம் யூதரைக் கொன்றான். தொண்ணூற்று ஏழாயிரம் பேரை சிறைபிடித்து ரோமாபுரிக்குக் கொண்டு சென்றான். பட்டணத்தையோ சுட்டெரித்தான். ஆலயம் இடிக்கப் பட்டது. கோட்டை மதில்கள் தகர்க்கப் பட்டது. எண்ணிறந்த ஸ்திரி புருஷர் தேசத்தின் நாலா பாகங்களிலும் சிதறடிக்கப் பட்டார்கள். முடிவாக தீத்து எருசலேமை உப்பு புதைத்து யானைகட்டி உழுதான். பலஸ்தீனு பாழ் பூமியானது. அத்தியாகிய யூதஜாதி பலஸ்தீனுவில் பட்டுப்போனது.

பட்டுப்போன யூதஜாதி மறுபடியும் மணவாட்டியைக் கூட்டிச்சேர்க்கும் காலம் வரும்போது அத்தியாகிய யூதஜாதி திரும்பவும் துளிர் விடும் என்பதாகக் கூறியிருந்தார். அப்படியே 1948-ம் வருஷத்தோடு கூட உலகத்தின் நாலா திசைகளிலிருந்தும் ஏகதேசம் 1900-ம் வருஷங்களாச்சிதறடிக்கப் பட்டிருந்த யூதர்கள் கூட்டிச் சேர்க்கப் படவும் இஸ்ரேல் ராஜ்யம் என்ற பெயரோடு ராஜியத்தை ஸ்தாபிக்கவும் வல்லவர்களாய் விளங்கி நிற்கின்றனர். பாழாய்க் கிடந்த பலஸ்தீன முள்ளும் குருக்கும் முளைத்து பாழ்பூமியாய்க் கிடந்தது. இப்பொழுதோ பாலும் தேனும் ஓடும் தேசமாக செழிப்புற்று வருகிறது. ஆகவே பட்டுப் போன அத்தியாகிய யூதர் துளிர் விட்டு கொப்பும் கவரமும் வீசி காய்காய்த்து பலன் கொடுத்து உலகத்துக்கு பரபரப்பை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றனர். ஆதலால் மணவாளியே மணவாளன் சீக்கிரமாய் வரப்போகிறபடியால் எழுந்துவா என்கிறார். சகரி 12:1-6

**திராட்சைக் கொடி பூ பூத்து வாசனையும் பரிமளிக்கிறது.**

திராட்சை கொடி யூதருடைய மார்க்கச்சின்னம் என்று குறிப்பிட்டோம். யூத ஜாதி மார்க்கத்தில் மிகவும் பக்தி வைராக்கிய முடைய வர்கள். பண்டிகைகளை மிகவும் விமரிசையாகக் கொண்டாடுவார்கள். ஓய்வு நாள் கொண்டாடுவதிலும் சடங்காசாரங்களை கைக்கொள்ளுவதிலும் ஆசாரங்களை அனுசரிப்பதிலும் ஆலய பக்தியைக் காட்டுவதிலும் அவர்கள் மிகவும் கவனம் செலுத்தி வந்தார்கள். இவ்வித காரியங்களை அவர்கள் வேஷபக்தியாகக் கையாடியிருந்தார்கள். உள்ளான பரிசுத்தத்தை கைவிட்டு நடத்தினபடியால் எகோவாவாகிய தெய்வம் அவர்களின் ஆராதனைகளையும் பண்டிகையையும் காணிக்கையையும் வெறுத்தார். ஆனபடியால் கர்த்தர் புறஜாதிகளை எழுப்பி அவர்களது மாய்மால ஆராதனைகளை அழிக்க சித்தங் கொண்டார். அவ்வேளைகளில் யூத ஜனம் தங்கள் நியாயப்பிரமாணத்தில் சொன்ன மேசியா வந்த போது மேசியாவை ஏற்றுக்கொள்ளவில்லை. அவரையோ பகைத்து சிலுவையில் அறைந்தார்கள். அதோடு அவருடைய இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் வரட்டும் என்றுக்கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் வேண்டிக்கொண்டபடியும் தேவ தண்டனையின்படியும் அவர்களின் மாய் மால ஆராதனையை அழிக்க சித்தங்கொண்டார்.

அப்படியே ரோம ராஜனுகிய தீத்து எருசலேமில் படையெடுத்தான். ஆலயத்தைச் சுட்டெரித்தான். இயேசு உரைத்த வார்த்தைப்படியே ஆலயத்தில் ஒரு கல்லின் மேல் ஒரு கல் இராதபடி இடிக்கப்பட்டது. யூத ஜாதி சிதறடிக்கப்பட்டது. ஆராதனை இல்லாமற்போயிற்று. அவர்கள் பெருமையாய் எண்ணிக் கொண்டிருந்த ஆலயமுமில்லை. பெருமையாய் ஆசரித்த மாதப்பிறப்பு கொண்டாட்டமும் பண்டிகைக் கொண்டாட்டமும் நின்று போயிற்று. யூதர் நாலாதிசைகளிலுமாய் சிதறடிக்கப்பட்டார்கள். அவர்கள் மார்க்கமற்றவர்கள் போலாகி விட்டார்கள். இப்பொழுது கர்த்தரின் வாக்கு நிறைவேறவும் யூதர்கள் திரும்பவும் கூட்டிச்சேர்க்கப்படுகிறார்கள். அவர்கள் தெய்வத்தை ஆராதிக்கவும் ஆரம்பிக்கிறார்கள். வேதப்பிரமாணத்தையும் ஆராய்ச்சி செய்கின்றார்கள். சிலர் வேதத்தில் சொன்ன மேசியாவை சிலுவையிலறைந்தோமென உணர்ந்து அவரை ஏற்றுக்கொண்டு அவருக்கு சாட்சியாகவும் ஜீவிக்கிறார்கள்.

ஆம்! திராட்சைக்கொடி பூ பூத்து பரிமளிக்கிறது. ஆதலால் மணவாட்டியே இவையாவும் மணவாளன் வருகைக்கு அடையாளமாயிருப்பதால் எழுந்து வா. அதாவது நீ இருக்கிற நிலமையில் திருப்தியடையாமல் முன்னேறிவா. பரிசுத்தத்திலிருந்து பரிசுத்தத்துக்கு வா எனக்கூப்பிடுகிறார்.

## 14-ம் வசனம்

கன் மலையின் வெடிப்புகளிலும் சிகரங்களின் மறைவிடங்களிலும் தங்குகிற என் புறாவே உன் முகரூபத்தை எனக்குக் காண்பி. உன் சத்தத்தை நான் கேட்கட்டும். உன் சத்தம் இன்பமும் உன் முக ரூபம் அழகுமாயிருக்கிறது.

புறாக்களுக்கு அதிகமான சத்துருக்கள் உண்டு. மனிதர் புறாவை தங்களுக்கு ஆகாரமாக்கிக்கொள்ள விரும்புவார்கள். அதற்காகப் புறாக்களை வேட்டையாடிப் பிடிக்க வேட்டை நாய்களைக்கொண்டோ புறா பிடிக்கும் கூண்டுகளைக்கொண்டோ பிடிக்கசெல்வார்கள். அதற்கு தப்பிக்கொள்வதற்காகப் புறாக்கள் காடுகளில் கன்மலையின் வெடிப்புகளிலோ மலைச்சிகரங்களிலோ தங்கள் கூடுகளைக்கட்டி முட்டைகளையிட்டு வாசஞ்செய்யும்.

புரு கன்மலையின் வெடிப்புகளில் வாசமாயிருந்தால் வேட்டைநாய்களுக்கு உள்ளே பிரவேசித்து பிடிக்க முடியாது. சிகரங்களின் உச்சிகளிலானுல் அதிகமாக மனிதர்கள் அங்கு சஞ்சரிப்பதில்லை. ஆகையால் புருக்கள் ஆபத்துக்கு தப்பி காக்கப்படுகிறது. இதுபோலவே ஆவிக்குரிய ஜீவவாசிகள் சோதனைக்காரனின் வலைக்குள் அகப்பட்டபின்னர் அல்ல, அகப்படுமுன்னரே அகப்படாதிருக்க வழி தேடிக்கொள்ள வேண்டும். இம் மாய உலகில் ஜீவிக்கும் காலமெல்லாம் சோதனையுண்டு. சோதனை எவ்விதமாய் வரும், எப்போது வரும், யார் மூலம் வரும் என்பதை அவன் அறியமாட்டான். சோதனைக்குள் அகப்படாதிருக்க கன்மலையின் வெடிப்புகளில் கூடு கட்டி வாசமாயிருக்கும் புருவைப்போல் விழிப்பாயிருந்து சோதனைக்காரனுடைய கண்ணிக்குத் தப்புவிக்கப்படுவதற்காக போராடி ஜெபித்துக் கொண்டேயிருக்க வேண்டும்.

நமது கர்த்தரும் பரலோக ஜெபத்தைக் கற்றுக்கொடுக்கும்போது சோதனைக்குட்படப்பண்ணுமல் தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளுமென்று அன்றன்றும் கருத்தோடு விண்ணப்பம் பண்ணச் சொன்னுர். மத். 6:13.

பிரதான அப்போஸ்தலனுகிய சீமோனிடம் நீங்கள் நித்திரை பண்ணுகிறதென்ன சோதனைக்குட்படாதிருக்கும்படிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்களென்று இயேசு சொன்னுர். மத். 26:41 அவர்களோ தூக்கத்துக்கு இடங்கொடுத்திருந்தார்கள். விழித்திருந்து ஜெபிக்கவில்லை. சற்று நேரத்திற்குள்ளதாக சோதனைக்காரன் வந்தான். இயேசுவை சத்துருக்கள் பிடித்தார்கள். இதைக்கண்ட பேதுரு இயேசுவை பிடிக்க வந்த மல்குசுவை பட்டயத்தினுல் வெட்டினுன். மல்குசுவின் காது அறுபட்டது. அதுமாத்திரமல்ல, சற்று தாமதித்த பின்னர் இயேசுவைப்பிடித்து நியாய விசாரணை நடத்தும்போது என்ன நடக்குமென்று பார்க்கச் சென்ற பேதுரு ஓர் அற்ப ஸ்திரிக்கு முன்னதாக இயேசுவை எனக்குத் தெரியாது, அவர் யார் எனக்கூறி மறுதலிக்கவும் சபிக்கவும் செய்தான்.

அதனுல் சோதனை வராதென்பதல்ல பொருள், சோதனை வரும்; சோதனை வந்தால் ஜெயிக்க வேண்டும். பேதுருவோ சோதிக்கப்பட்டபோது தோல்வியடைந்தான்.

வேட்டைக்காரனும் வேட்டை நாயும் வராதென்றெண்ணக் கூடாது. வேட்டைக்காரன் வரும்போது புருவோ

கன்மலையின் வெடிப்பிலிருக்க வேண்டும். சத்துரு கையில் அகப்படாதிருக்க ஒவ்வொரு நாளும் சோதனையுண்டென்று அறிந்து கன்மலையாகிய கிறிஸ்துவுக்குள் மறைந்து இருந்து கொள்ள வேண்டும். அப்பொழுது சத்துரு வெட்கத்தோடே போவான்.

அப்படியே சிகரத்தின் மறைவிடத்தில் வாசமாயிருக்கவும் வேண்டும். சிகரமென்னுமிடம் ஆள் சஞ்சாரமில்லாத இடம் உன்னதமான இடம். இது ஏனோவா, ஏனோக்கு இவர்கள் தேவனோடு சஞ்சரித்தது போல எப்போதும் தேவனோடே சஞ்சரிக்கும் அனுபவம். மனிதரோடு சஞ்சரிக்கும்போது ஆபத்தே உண்டாகும். நாம் உலகத்தில் தான் இருக்கிறோம். ஆனால் நாமோ உலகத்தாரல்லாதவர்களாகவே ஜீவிக்க வேண்டும். அதாவது வீண்பேச்சு, ஆகாத சம்பாஷணை, அலப்புகிற நாவு, மற்றவர்களைப் பற்றி பேசுவது, கேட்பது, வீண்சிரிப்பு, பெருந்தீனி, துர் இச்சைக்கான அலங்கரிப்பு, ஆடம்பரம், கண்காட்சியில் பிரியம், கடுஞ்சொல், மற்றவரை அற்பமாய்ப் பேசுவது, நினைப்பது, இப்படிப்பட்டவைகளை அகற்ற வேண்டும். மற்றவர்களினால் வார்த்தையினாலோ செய்கையினாலோ எவை நமக்கு எதிராய் வந்தாலும் அதைப் பற்றி பரவாயில்லை சாரமில்லை என்று சொல்லி காதுக்குள் எடுத்துக்கொள்ளாமல் விட்டுவிட வேண்டும். இதுவே மனித சஞ்சாரமில்லாத வாசஞ் செய்யுமிடம். அப்படியானால் சோதனைக்காரனுக்கு அங்கு இடமேயில்லை. மணவாட்டி இவ்விதமாகவே ஜீவிக்கிறாள். இதுவே சிகரத்தில் வாசம் செய்வது.

முகரூபத்தை எனக்குக் காண்பி:- மணவாட்டி சோதனைக் காரனுடைய கண்ணிக்குள் அகப்படாமல் ஞானமாய் ஜீவிக் கிறாள். ஆனால் இந்த மேன்மையான அனுபவங்களைப்பற்றி சாட்சி சொல்லி ஜீவிக்கவில்லை. மணவாளனோ அவர் கொடுத்த கிருபைகளைக் குறித்து சாட்சி சொல்லி ஜீவிப்ப தையே விரும்புகிறார். இயேசுவும் இவைகளுக்கு நீங்கள் சாட்சிகள் என்று சொன்னார். லூக். 24:48. அப்படியே நீ வெட்கப்படாமல் நீ பெற்ற கிருபைகளைக் குறித்தும் உனது அனுபவங்களைக் குறித்தும் சாட்சி பகர் எனக் கூறினார். அது தான் உன் முகரூபத்தை எனக்கு காட்டு என உற்சாகப் படுத்துவது.

சாட்சி சொல்வதால் பாவிகள் இரட்சிக்கப்படவும் பின் மாற்றக்காரர் உணர்வடையவும் ஜெயஜீவியமில்லாமல்

தவிப்பவர்கள் ஜெயஜீவியத்தையடையவும் விசுவாசிகள் முன்னேறவும் இயேசுவின் பரிசுத்த நாமம் மகிமைப்படவும் செய்கிறது. ஆதலால் எல்லா இடங்களிலும் "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் சாட்சியாய் இருக்க வேண்டியது முக்கியமென அறிந்து கொள்ள வேண்டும்.

## 15-ம் வசனம்

திராட்சைத்தோட்டத்தைக் கெடுக்கிற குழிநரிகளையும் சிறு நரிகளையும் நமக்குப் பிடியுங்கள். நம்முடைய திராட்சைத் தோட்டங்கள் பூவும் பிஞ்சுமாய் இருக்கிறதே.

சபைக்கு வேதபுஸ்தகத்தில் மந்தையென்றும் கட்டட மென்றும் ஸ்திரியென்றும் பயிர் என்றும் திராட்சைத்தோட்ட மென்றும் இவ்வாறு அநேகம் பெயர்கள் கொடுத்திருப்பதைக் காணலாம். இங்கு சபைக்கு திராட்சைத்தோட்டம் என்ற பெயரைக் கொடுத்திருக்கிறது. சபையென்பது பாவ மன்னிப் பைப் பெற்று இரட்சிகக்ப்பட்ட ஜனங்களின் கூட்டம். இரட் சிக்கப்பட்டவர்களைத்தான் கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்தார். இவ்வாறு இரட்சிக்கப்பட்ட ஜனம் நாளுக்கு நாள் பரிசுத்தபட்டு இயேசுவின் வருகைக்கு ஆயத்தப்பட வேண்டும்.

ஆனால் சபையாகிய திராட்சை தோட்டத்தைக் கெடுக்க குழிநரிகளும் சிறுநரிகளும் முயற்சியெடுப்பதுண்டு. குழிநரியும் சிறுநரியும் என்பது இரு வித பாவத்தைக் காட்டும். அதாவது சபைக்கு உள்ளேயிருந்து எழும்பும் பாவத்தையும் சபைக்கு வெளியேயிருந்து சபைக்குள் நுழைந்து சபையை பாழாக்கும் பாவங்களையும் குறிக்கும்.

குழிநரி - இது சபைக்குள்ளிருந்து உண்டாகும் பாவம். திராட்சைகளுக்கு அதிகமாக மரித்த மிருகங்கள், எலும்புகள், மிருகங்களின் இரத்தம் இவற்றை வளமாக உபயோகப் படுத்துவார்கள். இவற்றைப் புசிப்பதற்காகக் குழிநரிகள் தோட்டத்துக்குள் பிரவேசிக்கும். குழிநரிகளோ உள்ளே சென்றதும் திராட்சைக்கு வளமாக வைத்திருக்கும் இரத்தம் மாமிசம் இவற்றை புசித்தபின்னர் தோட்டத்துக்குள் குழி தோண்டி உள்ளே படுத்துக் கொள்ளும். திராட்சைச் செடி யின் பக்கங்களில் குழி தோண்டுவதால் திராட்சையின் வேர்

அறுந்து போகிறது. பின்னர் திராட்சையைப் பார்த்தால் வாடிப்போய் பட்டுப்போகிறது. மறுபடியும் இரவானதும் குழிநரி குழியிலிருந்து எழும்பிவருகிறது. திராட்சைக்காய் பழம் முதலியவற்றைப் புசிக்கிறது. மறுபடியும் குழி தோண்டி படுத்துக்கொள்கிறது. இதனுல் திராட்சையின் வேர் அறுந்து போகவும் திராட்சைச் செடி பட்டுப்போகவும் செய்கிறது. இதனுல் திராட்சை தோட்டம் பலனற்றுப் போகிறது, இந்தக் குழிநரி பதுங்கிக்கிடக்கும் பின்மாற்றக் காரனைக் காட்டும். கொரிந்து சபையில் துன்மார்க்கமாய் ஜீவித்துக் கொண்டு சபைக்குள்ளே ஒருவன் இருந்தான். இவனுல் சபை பாழாகிப்போகும் என பவுல் அறிந்து கொஞ்சம் புளித்த மா பிசைந்த மா அனைத்தையும் புளிப்பாக்கி விடும். ஆகையால் அந்தப் பொல்லாதவனை உங்களை விட்டுத் தள்ளிப் போடுங்கள் என்று கட்டளைக் கொடுத்தார் 1 கொரி 5:1-13.

இஸ்ரவேலர் கானானுக்குள் வந்ததும் எரிகோவை பிடிப்பதற்காக கர்த்தர் சொன்னபடி கோட்டையைச் சுற்றி துதித்துப் பாடினுர்கள். கோட்டை இடிந்து விழுந்தது. சத்துரு தோற்கடிக்கப்பட்டான். இராஜ்யத்தையோ பிடித்தார்கள். அதன் பின்னர் பாளயத்திற்குள் ஆகான் ஒருவன் பதுங்கியிருந்தான். அவன் தேவ கட்டளையை மீறி இச்சைக்குரிய பொருட்களை எடுத்து மறைத்து சபையில் பதுங்கியிருந்தான். ஆதலால் இரண்டாவது பட்டணமாகிய ஆயியைப் பிடிக்கப் போனபோது தோல்வியுற்று சத்துருவுக்கு முன்னதாக முதுகைக் காட்டி ஓட வேண்டியதாயிற்று. இந்த தோல்விக்குக் காரணம் சபைக்குள்ளிருந்த பாவியே.

ஆகையால் இரட்சிக்கப்பட்ட சபைக்குள்ளே பின்மாற்றமுண்டாகும்போது அவனை எச்சரித்தும் சீர்ப்படாவிட்டால் அவன் எப்படிப்பட்டவனுயிருந்தாலும் சபையை விட்டுத் தள்ள வேண்டும். இல்லாவிட்டால் குழிநரி குழிதோண்டி திராட்சை தோட்டத்தைக் கெடுப்பதுபோல ஒவ்வொரு ஆத்துமாவையும் ஒவ்வொன்ருய் கெடுத்துவிடுவான். முடிவாக சபை பாழாய்ப்போகும். ஆதலால் அந்த குழிநரியைப் பிடித்து விட வேண்டும்.

**சிறுநரி :-** சிறுநரி குழி தோண்டும் தன்மையுடையதல்ல, இந்த நரி காடுகளில் பாறை இடுக்குகளில் பதுங்கி ஜீவிக்கும் நரி. இந்த நரியும் திராட்சைப் பழங்களையும் திராட்சைக்கு

வைத்திருக்கும் வளங்களையும் சாப்பிடும். ஆதலால் சிறுநரி யானது வேலியைத் தாண்டிவந்து வளங்களைத் தின்றுவிட்டு புதைத்து வைத்திருக்கும் மாமிசங்களை தோண்டி புசிக்கும். இதனால் திராட்சைகளின்வேர் அறுபட்டுபோகிறது. இந்த நரிகள் உள்ளே பதுங்கியிருக்கவழியில்லாதபடியால் காலையில் தோட்டத்தைவிட்டு வெளியே போய்விடும். மறுபடியும் இரவானதும் தோட்டத்துக்குள் வந்து தனது கிரியையை நடப்பிக்கும்.

இது வெளியிலிருந்து வரும் பாவத்தைக் காட்டுகிறது. அதாவது இரட்சிக்கபடாத பாவியைக் காட்டுகிறது. இரட்சிக்கப் படாமல் பக்கவழியாய் சபைக்குள் பாவிவந் தால் அவன் விசுவாசிகளோடும் ஜீவிப்பான், பாவிகளோடும் ஜீவிப்பான்: முடிவாக அவனுடைய கெட்ட நடக்கையால் அநேகர் இடறுவதோடு அவன் போன்ற பாவிகளால் சபை பெருகி சபையின் பரிசுத்தம் கெட்டு பாழாக்கப்படும். சபை உலகமாகி விடுகிறது. முடிவாக பேர்க்கிறிஸ்தவ சபையாய் மாறிவிடும்.

ஆதலால் சபை காக்கப்பட இருவித நரிகளையும் காவல் இருந்து கண்டு பிடித்து அதாவது உபவாசித்து ஜெபித்து இவற்றை சபையை விட்டு புறம்பாக்க வேண்டும். அப்போது சபையாகிய திராட்சை வளர்ந்து நல்ல பலனைக் கொடுக்கும். இதற்காகத்தான் நரிகளைப் பிடிக்கக் கூறினார்.

## 16-ம் வசனம்

என் நேசர் என்னுடையவர் நான் அவருடையவள் அவர் லீலி புஷ்பங்களுக்குள்ளே மேய்கிறார்.

**என் நேசர் என்னுடையவர் :-** மணவாட்டி மணவாளனை என்நேசர் என்னுடையவர் என்கிறாள். ஏனென்றால் நேசரைத் தன்னுடையவராக்கிக் கொண்டாள். ஒருபொருளை என்னு டைய பொருளென்று சொல்ல வேண்டுமானால் அதற்கு கொடுக்க வேண்டிய கிரயத்தைக் கொடுத்து தனதாக்கிக் கொள்ளும்போது சொல்லுவான். அப்படியே தாவீது ராஜா வும் கர்த்தர் என்மேய்ப்பர் என்கிறார். காரணமென்னவென் றால் தாவீதைக் கர்த்தர் தான் நடத்துகிறார். தாவீதும் கர்த்தர் சொல்லாமல் யாதொன்றும் செய்வதில்லை. எங்கே

யாவது போக வேண்டுமானுல் தாவீது கர்த்தரிடம் கேட்டே செய்வார். I சாமு 23:11-12. யுத்தம் செய்யப்போக வேண்டு மானுலும் தாவீது கர்த்தரிடம் கேட்பார். 1 சாமு 23:1-4 இவ்விதமாய் தாவீது கர்த்தரிடம் கேட்டே எல்லா காரியங் களையும் நடப்பித்தார். கர்த்தரும் தாவீதை நடத்திக் கொண்டே இருந்தார். தாவீது கர்த்தருக்கு பிரியமில்லாததை வெறுத்தார். தாவீதுக்கும் கர்த்தருக்கும் எப்பொழுதும் நல்ல தொடர்பு இருந்தது. ஆதலால் தாவீது என்மேய்ப்பர் என்கிருர். இந்த அனுபவங்கள் மணவாட்டிக்குள் இப் பொழுது வந்துவிட்டது. ஆதலால் தான் என்நேசர் என்கிருள்.

**நான் அவருடையவள் :-** ஒரு காலம் உலகத்துக்குரிய வளாகவும் பிசாசுக்குரியவளாகவும் ஜீவித்தாள். இப் பொழுதோ அவைகளை முற்றுமாய் வெறுத்துவிட்டாள். தனது ஆவி ஆத்தும சரீரத்தை தனது நேசருக்கென்றே கொடுத்துவிட்டாள். அவரைப்பிரியப்படுத்த வேண்டுமென் பதே அவளது ஆசை. கலா 5:24. ஆனபடியால் தைரியமாய் நான் அவருடையவள் என்கிருள்,

**லீலிபுஷ்பங்களுக்குள்ளே மேய்கிருர் :-** முற்றுமாய் மண வாளனுக்கு ஒப்புக் கொடுத்தவர்களை லீலிப்புஷ்பத்தோடு ஒப்பிடுகிருர். அப்படிப்பட்டவர்களின் மத்தியில் மணவாளன் இருந்து அவர்களின் துதிதோத்திரங்களை ஏற்றுக் கொள் கிருர். அவர் துதியில் பிரியப்படுகிற வரும் தோத்திரத்துக்குப் பாத்திரரும் துதியின் மத்தியில் வாசம் பண்ணுவருமாகவே இருக்கிருர். ஆதலால் பரிசுத்தவான்கள் மத்தியில் வாசம் பண்ணும் மணவாளனே நமது ஆத்தும நேசர்.

## 17-ம் வசனம்

**என் நேசரே பகல் குளிர்ச்சியாகி நிழல் சாய்ந்துபோகும் வரைக்கும் நீர் திரும்பி குன்றும் பிளப்புமான கன்மலைகளில் குதித்துவரும் கலைமானுக்கும் மரைகுட்டிக்கும் சமானமாயிரும்.**

மணவாளனுக்கென்று தன்னை முற்றுமாய் ஒப்புக் கொடுத்த மணவாட்டிக்கு தான் இன்னும் எவ்விதமான பாதையெல்லாம் போகவேண்டியதாயிருக்கிறதென்ற அறி வும் அனுபவமுமில்லை. அவள் தன்னை மணவாளனுக்கு ஒப்புக்

கொடுத்தாள். மணவாளனின் இன்பத்தை அனுபவிக்கிறாள். அவளோடு அவர் பேசிவருகிறார். அவள் வாஞ்சித்ததை அவர் கொடுத்து நடத்துகிறார். ஆனபடியால் இவ்வளவு தான் ஜீவியம் என்ற நிலைமையிலேயே இருக்கிறாள். ஆகையால் தான் நிழல் சாய்ந்துபோகும் வரை அதாவது பகல் முழுதும் என்னோடிரும். நான் கூப்பிடும்போது உடனே மறுபடி விரைவாகத் தாரும் என்று மணவாளனோடு இன்பமாய்ப் பேசுகிறாள்.

இராக்காலம் பயங்கரமானது. அதுவும் நம்முடைய ஜீவியத்திலுண்டாகும். அப்போதும் மணவாளன் என்னோடிருக்க வேண்டும். அல்லாவிடில் ஜீவியம் கெட்டுப்போகுமென்ற எண்ணமில்லை. இந்த சந்தோஷமான பகற்காலத்தில் என்னோடிரும். எங்கேயாவது போனால் உடனே வந்துவிடும் என்று மணவாளனிடம் கூறுகிறாள். இந்த அனுபவங்களைப் பார்க்கும்போது இவளுக்கு கிறிஸ்தவ ஜீவியத்தின் ஆழங்கள் இன்னும் வெளிப்படவில்லை. குழந்தையின் அனுபவத்தில் இருக்கிறாள் என்பதைத் தெளிவிக்கிறது.

## 3-ம் அதிகாரம்

இந்த அதிகாரமானது ஒரு விசுவாசி எப்பொழுதும் ஆண்டவரின் சமூகம் இருக்க வேண்டுமென்று அவர் சமூகம் இல்லாவிடில் கவலைக்கு இடமுண்டாகுமென்று அவர் சமூகமே மகிழ்ச்சியை உண்டாக்குமென்றும் படிப்பிக்கிறது.

### 1-ம் வசனம்

இராக்காலங்களில் என்படுக்கையிலே என் ஆத்தும நேசரைத் தேடினேன். தேடியும் நான் அவரைக் காணவில்லை.

ஒரு விசுவாசி தனது கிறிஸ்தவ ஜீவியத்தில் இராக்காலம் அதாவது சோதனையின் காலம் உண்டென்பதை அறிந்திருக்க வேண்டும். இரட்சிக்கப்பட்டவுடனும் பரிசுத்தாவி பெற்றவுடனும் சொல்லி முடியாத மகிழ்ச்சியுண்டாகும். ஜெபித்தவுடன் வியாதியஸ்தர் குணமடைவார்கள். பிசாசுகள் ஓடிப்போகும். மணவாளனைக் கூப்பிட்டவுடனே மறுபடி கிடைக்கும். இவையாவும் மகிழ்ச்சியின் அனுபவங்களே இதனால்

எல்லாமாகி விட்டதென்று மனதில் எண்ணம் எழும்பும் அவை யாவும் மதியீனமே.

பயங்கரமான காரிருள் காலம் கிறிஸ்தவ ஜீவியத்தில் உண்டு. இதையறிந்து அவற்றை ஜெயிப்பதற்காக ஆயத்த மாயிருக்க வேண்டும். நமது இயேசு அனுதினமும் சிலுவையை சுமந்து கொண்டு என்னைப் பின்பற்ற வேண்டுமென்றும் லூக் 9 : 23; ஒருவனுக்கு அவன் வீட்டாரே சத்துரு என்றும் என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள் என்றும் இடுக்கமான வாசல் வழியாய் பிரவேசிக்க வேண்டு மென்றும் இவ்விதமான பல பாதைகளைக் கூறியிருக்கிறார். விசுவாசிகள் சந்தோஷமான காலங்களில் இவற்றை ஞாபகத் தில் உறுதியாக வைத்துக் கொண்டேயிருக்க வேண்டும். இப் பொழுதோ மணவாட்டிக்கு இராக்காலம் வந்து விட்டது.

**இராக்காலம் !— (1) மரண இருளாகிய இராக்காலம்**

விசுவாசிகள் விசுவாசத்தில் வந்தவுடன் இயேசு இரட்சக ரென்று மாத்திரமல்ல இயேசு வியாதியை சுகமாக்கும் வைத்தியர் என்றும் விசுவாசிக்கிறான். மத் 8 : 17 இந்த விசு வாசத்தில் வந்தபின்னர் தனக்கு வியாதி வந்தது, விசுவாசத் தால் ஜெயித்தான். மருந்தின்றி உடனே குணமடைந்தான். அநேக வியாதிகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்தது. விசுவாச ஜெபத்தால் சுகம் பெற்றான். அநேக நோயாளிகளை சந்தித்து ஜெபித்தான். அற்புத சுகம் பெற்றார்கள். சபையில் இயேசு வைத்தியர் என சாட்சி பகர்ந்தான். போகிற போகிற இட மெல்லாம் இயேசு வைத்தியர் என சாட்சி கொடுக்கிறான். காண்பவரிடமெல்லாம் இயேசு வைத்தியர் எனப்புகழுகிறான். கூடுமானால் அனுபவங்களை தாள்ப்பிரதிகளடித்தும் வெளிப் படுத்துகிறான். மகிழ்ச்சியோடு ஜீவிக்கிறான்.

வருகிறது இராக்காலம். வீட்டில் கடுமையாய் ஏக குமாரனுக்கு வியாதி வந்தது. தான் விசுவாசத்தோடு ஜெபிக்கிறான். உபவாசித்து ஜெபிக்கிறான். பல பரிசுத்த வான்களைச் சேர்த்து ஜெபிக்கிறான். கூப்பிட்டார்கள், அழுதார் கள்; புலம்பினார்கள், தேவ சமூகத்தைக் காணவில்லை அவர் மறைந்தே நிற்கிறார். சங் 10 : 1 வியாதி அதிகரித்தது. குமாரன் மரித்து போனான். பலர் பரிகாசிக்கிறார்கள். இனத் தார் நிந்திக்கிறார்கள். இதுதான் விசுவாசிக்கு ஆத்ம நேசரைத் தேடியும் காணமுடியாத மரண இருளாகிய இராக்காலம்.

இப்பொழுது மணவாட்டி என்ன செய்ய வேண்டும். மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன் எனக் கூறி விசுவாசத்தைக்காட்ட வேண்டும். தைரியத்தோடு நின்று யோபோடு சேர்ந்து கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் எனக் கூறி ஸ்தோத்திரப் பாட்டுகள் பாட வேண்டும்.

தாவீது அரசனிடம் கேள்: அவர் சொல்லுவார். என் குழந்தை வியாதிப்பட்டது. நான் கர்த்தரை நோக்கி ஜெபித்தேன். வியாதி அதிகரித்தது. உபவாசித்துத் தரையில் புரண்டு அழுதேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்கவில்லை. பிள்ளை மரித்துப்போனது. பிள்ளை மரித்துப்போனதை வேலைக்காரர் எனக்கு அறிவிக்கப் பயந்தார்கள். நானே அதை அறிந்தேன். படுக்கையிலிருந்து எழுந்தேன். எண்ணெய் பூசி குளித்து வஸ்திரம் மாற்றி கர்த்தருடைய ஆலயத்தில் சென்று கர்த்தரைத் தொழுது கொண்டேன் என்பார். 2 சாமு 12 : 15 - 23.

மரித்த பின்னர் விசுவாசிகள் மரித்தவர்களுக்காக அழக் கூடாது. எரே 22 : 10 மரித்தவர்களுக்காக அழுவது நம்பிக்கையில்லாத அஞ்ஞானிகளென்று பவுல் கூறுகிறார். 1 தெச 4:13 கர்த்தரை நேசிக்கிறவர்களுக்கு கர்த்தரை அறியாமல் ஒன்றும் நேரிடாது. வருகிறது யாவும் நன்மைக்கே வரும். ரோமர் 8 : 28 ஆதலால் விசுவாசிகள் மரண இருளாகிய இராக்காலம் நம்மைப் பிடிக்கும்போது விசுவாசத்தைக் கலங்க விடாதபடி உறுதியுடன் காப்பாற்ற வேண்டும்.

## 2. எல்லாம் நஷ்டமாகிவிடும் இதுவும் இராக்காலமே

கர்த்தரை விசுவாசித்த காலங்களில் எல்லாவிஷயங்களிலும் இலாபமாகவே இருக்கும். இப்பொழுது இராக்காலம் ஆரம்பித்து விட்டது. எல்லாம் நஷ்டமாகவே முடிகிறது. பயிரிட்டால் பலனில்லாத நஷ்டம். ஆடுமாடுகள் பலனற்றதாய் போகிறது. தொழில் செய்தால் பலனில்லை. ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்குந்தோறும் நஷ்டமாக இருக்கிறது. அப்போதும் விசுவாசத்தோடு தேவனைத் துதிக்க வேண்டும். அத்தி மரம் துளிர் விடாமற் போனாலும் திராட்சைச் செடிகள் பழம் உண்டாகாமற் போனாலும், ஒலிவ மரத்தின் பலன் அற்றுப் போனாலும், வயல்கள் தானியத்தை

விளையாமற்போனாலும், கிடையில் ஆட்டு மந்தைகள் முத லற்றுப் போனாலும், தொழுவத்தில் மாடுகள் இல்லாமற் போனாலும் நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப் பேன். என் இரட்சிப்பின் தேவனுக்குள் களி கூருவேன். ஆபகூக் 3 : 17 - 18 ஆகவே இவ்வித அனுபவமே இராக் காலம் உண்டென்றும் அப்போது விசுவாசம் குன்றிப்போகா மல் அசையாத கன்மலையைப்போல் உறுதியாய் இருக்க வேண்டுமென்று கற்பிக்கிறது.

**இராக்காலங்களில் விசுவாசி எவ்வாறு ஜீவிக்க வேண்டும்.**

1. **இராக்காலங்களில் விசுவாசி உணர்வடைய வேண் டும்.** சங் 16 : 7 இராக்காலங்களில் விசுவாசி தன்னை நன்றாய் ஆராய்ச்சி செய்ய வேண்டும். குற்றங்களை அறிந்து உணர் வோடு அறிக்கைச் செய்ய வேண்டும். கர்த்தருக்கு முன்ன தாக தன்னைத் தாழ்த்தி வெறுமையாக்கி அருவருக்க வேண் டும். அப்போது சரியான சுத்திகரிப்பும் தைரியமும் உண்டாகும்.

2. **ஆத்துமா வாஞ்சிக்க வேண்டும்.** ஏசா 26 : 9 இராக் காலங்களில் எனக்கு ஏன் இப்படி வந்தது ஏன் இப்படி வர வேண்டும் நான் மட்டுமா துரோகி எனக் கூறி கலங்கக் கூடாது. கர்த்தர் தீமை செய்யமாட்டார். எல்லாம் நன்மை தான் செய்வாரெனக் கூறி மனதை உறுதிப்படுத்த வேண்டும். கலக்கத்துக்கு இடங்கொடுக்கக் கூடாது. கர்த்தரை அதிகமாய் வாஞ்சிக்க வேண்டும். ஆவிக்குரிய காரியத்தில் முன்னிலும் அதிகமாய் விருப்பம் வைக்க வேண்டும். கர்த்தரோடு உற வாடி கிருபைகளுக்காய் வாஞ்சித்து காத்திருக்க வேண்டும். அப்பொழுது அந்தகாரம் ஓடிப்போகும். உள்ளம் நன்றியால் நிறையும்.

3. **கர்த்தரை துதித்துப்பாட** வேண்டும். சங் 42 : 8 இராக்காலங்களில் கர்த்தரை பக்தியுடன் பாட வேண்டும். அவரைத் துதிக்கும் துதி நாவைவிட்டு விலகக் கூடாது. எப் பொழுதும் துதித்துக் கொண்டேயிருக்க வேண்டும். சங் 34:1 அப்பொழுது மகிழ்ச்சியுண்டாகும் கிருபையில் வளர்வோம். அதற்காக இராக்காலங்களில் துதித்துப் பாட வேண்டும்.

4. **இராக்காலங்களில் கர்த்தரின் ஆலயங்களில் நிற்க வேண்டும்.** சங். 34 : 1 கிறிஸ்தவ ஜீவியத்தில் இராக்காலம்

வரும்போது தேவனையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். மனித கரங்களை எதிர்பார்க்கலாகாது. மனிதபுயம் நாம் விரும்பின விருப்பத்தைக் கொடுக்காது. அது முன்னிலும் அதிகமான சஞ்சலத்தையே கொடுக்கும். கல்வாரி சிலுவை யையே பார்த்துக் கொண்டிருப்போமானால் நாம் வாஞ்சித்த தற்கதிகமான நன்மைகளால் நிரப்புவார். ஆதலால் எப் பொழுதும் ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராகக் கண் களை ஏறெடுத்து துதித்துக் கொண்டிருக்க வேண்டும். அப் போது அவர் நமது காலை தள்ளாடவொட்டார். சங் 121 : 1 இராக்காலங்களில் தெய்வ சமூகத்தில் நின்று நமது அனு பவங்களைப் பக்குவப்படுத்திக் கொள்வோமானால் இராக் காலமும் பகற்காலமும் ஒன்றுபோலவே தோற்றமளிக்கும். தேவ சமூகம் காணப்படாமற்போனாலும் கர்த்தர் என்னோ டிருக்கிறார் என்ற விசுவாசம் குன்றாது. தெய்வ சமூகத்தில் எப்போதும் இருப்போமானால் உலகம் இப்படித்தான் இருக் கும் இதற்குமேல் ஒன்றுமில்லையென்று பகற்காலமாகவே விளங்கும். உலகில் இராக்காலமும் பகற்காலமும் எல்லாம் ஒன்றுபோல தான் என்ற அனுபவத்திற்கு வந்துவிடுவோம். இப்பொழுது மணவாட்டிக்கோ அவ்வித அனுபவமில்லை. ஆதலால் இராக்காலத்தில் தேடினாள். காணாததால் அங்க லாய்த்து நகரத்தின் வீதிகளுக்கு ஓடுகிறாள். ஆதலால் இராக் காலத்திலும் கர்த்தருடைய ஆலயத்தில் நிற்க வேண்டும்.

## 2-ம் வசனம்

*நான் எழுந்து நகரத்தின் வீதிகளிலும் தெருக்களிலும் திரிந்து என் ஆத்துமநேசரை தேடுவேன் என்றேன். தேடியும் நான் அவரைக் காணவில்லை.*

**நான் எழுந்து:—** இது மணவாட்டி தனது ஜீவியத்தை ஒன்று கூட ஆராய்வதாகும். நிர்விசாரமாய் ஜீவித்ததும், சோதனைகாலம் தனக்கில்லையென்று எண்ணியதும், சந்தோஷ மான வேளை மாத்திரம் மணவாளனின் இன்பத்தை நாடின தும், எப்பொழுதும் ஜெபிக்காததுமான, குறைவையும் ஆராய்ச்சி செய்து உணருகிறாள். அறிக்கையிட்டு எழும்பு கிறாள். இப்படிப்பட்ட குணமே உண்மையான விசுவாசியில் காணப்படும் நல்ல குணம். எந்த நிலமையை விரும்பினாளோ அந்த நிலமையைப் பெற்றுக் கொள்ளும்படியாகத் தன்னைத் தாழ்த்துவதும் ஆராய்ச்சி செய்வதும் அறிக்கையிடுவதும் பிர திஷ்டையைப் புதுப்பிப்பதுமாயிருப்பார்கள். இப்படிப்பட்ட

வர்களே உத்தமர்கள். சிலரோ தங்களை ஆராய்ச்சி பண்ணி சிறுமைப்படுத்தமாட்டார்கள். அறிக்கையிடவும் மன்னிப்புக் கேட்கவும் பின்வாங்குவார்கள். இவர்கள் பூரணப்படார்கள். மணவாட்டியோ தன்னை உணர்ந்து எழும்புகிறாள். உடனே நகரத்தின் வீதிக்கு ஓடுகிறாள்.

**நகரம் :—** இது தேவனுடைய சபையைக் காட்டுகிறது.

**வீதி :—** இது சபையிலுள்ள விசுவாசிகள் தங்கும் கூடாரத்தைக்காட்டுகிறது. ஆதலால் விசுவாசிகளிடம் சென்று குறைவை அறிக்கையிடுகிறாள். தனது ஆத்மநேசரைக் காணவில்லை என்பதாகச்சொல்லி அங்கலாய்க்கிறாள். ஆதலால் விசுவாசிகளும் சேர்ந்து மணவாட்டி பூரணமான சந்தோஷத்தைப்பெற்றுக் கொள்ளும்படியாக ஜெபிக்கிறார்கள். ஆயினும் அவள் விரும்பின சந்தோஷ சமாதானம் கிடைக்கவில்லை. இவ்வாறு திகைத்தவளாய் நிற்கவே காவலாளரைக்காண்கிறாள்.

## 3-ம் வசனம்

நகரத்தில் திரிகிற காவலாளர் என்னைக்கண்டார்கள். என் ஆத்துமநேசரைக் கண்டீர்களா? என்று அவர்களைக்கேட்டேன்.

நகரம் என்பது சபை என்று பார்த்தோம் **காவலாளர்** என்பது சபையைக்காக்கிறதற்காக நியமிக்கப்பட்ட ஜெப வீரர்கள். இவர்களே இராப்பகல் பிசாசு மாம்சம் உலகம் சபைக்குள் நுழையாமலும் கள்ள ஊழியர்களோ கள்ள சகோதரர்களோ சபையைக்கெடுத்துப்போடாமலும் காக்கும் படியாக ஜெபித்துக் கொண்டேயிருப்பவர்கள். ஏசா.62:6,7. இந்த ஜெபவீரர்களான சகோதரர் அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் மணவாட்டியின் குற்றங்களை எடுத்துக் காட்டினார்கள். இன்ன காரணங்களினால் தான் ஆத்ம நேசரின் சமூகம் உன்னைவிட்டு விலகி விட்டது, நீ தேடியும் தென்பட வில்லை என்றார்கள். அதற்கு மணவாட்டியோ நீங்கள் அவரைக் கண்டீர்களா அவர் என்னைக்குறித்து என்னசொன்னார். அதாவது என்னுடைய குற்றத்தைச்சொன்னாரா? வெளிப்படுத்தல் ஏதாவது கிடைத்ததா எனக்கேட்டாள்.

தற்காலம் அபிஷேகம் பெற்ற அனைவரும் இப்படியே ஜீவித்துப்போகிறார்கள். அபிஷேகம் பெற்றபோதும் திருப்தி

யில்லை. அபிஷேகம் அவர்களைப்போதிக்கவுமில்லை. அபிஷேகத்தில் நிலைத்திருப்பதுமில்லை. வேத வசனத்தில் உறுதிப்படுவதுமில்லை. வசனப்படி நடப்பதுமில்லை. தனது ஜீவியத்தை திருத்திக்கொள்வதுமில்லை. ஜீவியத்தின் உண்மையை அறிந்துக் கொள்ளும் அனுபவமுமில்லை. ஆதலால் எப்பொழுதும் அங்கலாய்ப்பு உடையவர்களாகவே ஜீவிக்கிறார்கள்.

கர்த்தர் எங்கேயிருக்கிறார்; யாரிடமிருக்கிறார்; சொப்பனக்காரர் யாருண்டு; தீர்க்கத்தரிசனம் சொல்லுகிறவர்கள் எங்கேயாவது உண்டா? வெளிப்படுத்தல் உள்ளவர்கள் யார் எனத்தேடி நடக்கிறார்கள்.

யாராவது மாமிசத்தில் ஏதாவது சொன்னாலும் உறுதிப்படுத்திக்கொள்வார்கள். முடிவாக வஞ்சகத்தில் பழகி மோசம்போகிறவர்களாவார்கள். யூதா 8 இப்படியாக நிற்க நிலையறியாதவர்களாகவே அங்கலாய்த்து நடக்கிறார்கள்.

## 4-ம் வசனம்

நான் அவர்களை விட்டு கொஞ்சதூரம் போனவுடனே என் ஆத்துமநேசரைக் கண்டேன். அவரை நான் என் தாயின் வீட்டிலும் என்னைப்பெற்றவளின் அறையிலும் கொண்டுவந்து விடுமட்டும் விடாமல் பற்றிக்கொண்டேன்.

**அவர்களை விட்டு கொஞ்ச தூரம் போனவுடனே:**—அதாவது சொப்பனக்காரர்களையும் வெளிப்படுத்தல் காரர்களையும் தீர்க்கதரிசிகளையும் தேடியலைந்து என் குறைவு என்னவென்று தெரியுமா? ஏதாவது கர்த்தர் என்னைப்பற்றி பேசினாரா என்று மற்றவர்களிடம் கேட்டு நடக்கிறது சரியல்லவென்றும் நான் எப்பொழுதும் வேத வசனமாகிய கண்ணாடிமூலம் என் குறைவை ஒவ்வொரு நிமிஷமும் அறிந்துக்கொள்ளவேண்டுமென்றும் என்நேசர் என் காரியங்களை என்னிடம பேசுவார், பேசாவிட்டால் நானே அவரிடம் சென்று பேசாத காரணம் என்னவென்று அறிந்து திருத்திக்கொள்ளுவேன் என்ற தீர்மானத்துக்கு வந்தாள். இதுதான் அவர்களை விட்டு விடும் அனுபவம்.

அப்படிப்பட்ட தீர்க்கத்தரிசிகளிடம் வைக்கும் நம்பிக்கையை விடுவதால் மணவாட்டி மணவாளனிடம் நேராகப்பேசு

கிருள். மணவாளனோடு நேராகப் பேசாவிட்டால் மணவாட்டிக்கு மணவாளனிடம் அன்பு இல்லை என்றுகிறது. ஒருகாலும் நேராக பேசினவள் இப்பொழுது பேசாவிட்டாலும் அவள் வெறுக்கப் பட்டவளே. ஆதலால் மணவாளனோடு நேராகப்பேசி பழக வேண்டும். மற்றவர்களை நாடியலையும் அங்கலாய்ப்பு மாற்றப்படவேண்டும். இப்போது அப்படிப் பட்டகுணங்களை விட்டதாக தீர்மானித்துக் கொண்டாள். உடனே மணவாளன் வெளிப்பட்டார்.

**தாயின் வீடும் பெற்றவளின் அறையும்:**—விசுவாசிகளுக்கு தேவனுடைய சபையும் விசுவாசிகளின் ஐக்கியமுமே தாய் வீடு. தாய் வீடு செல்லும் பிள்ளைகளுக்கு உண்டாகும் சந்தோஷமும் மகிழ்ச்சியும் ஆதரவும் விசுவாசிகளின் கூட்டத்தில் காணலாம். பெந்தேகோஸ்தே சபையில் இந்த அனுபவமுண்டு. ஒருவனும் தனக்குள்ளதை தனதென்று சொல்லவில்லை. சகலமும் யாவருக்கும் பொதுவாயிருந்தது. அப் 4;32. இதுவே அப்போஸ்தல அனுபவம். ஆதி சபையின் ஆரம்பமும் இவ்வாறுதான். கிறிஸ்துவின் சபையாகிய சரீரமும் இதுவே. இந்த அனுபவமுள்ள சபையே தாயின் வீடு. இந்த சபைக்கே தனது ஆத்மநேசரைக்கொண்டு வந்து காட்டி சாட்சி பகருகிருள்.

பெற்றவள் என்பது இரட்சிப்புக்கு வழி நடத்தினவர்களை காட்டுகிறது. பவுல் பிலமோனிடம் ஒநேசுமுவைக் குறித்து நான் பெற்ற மகன் என்கிருன். பில.1:10 ஆனபடியால் மணவாட்டி தன்னுடைய ஆத்தும நேசரைக்குறித்து இரட்சிப்புக்கு வழிநடத்தினவர்களிடமும் போய்ச்சொல்லி ஆறுதலடைகிருள் என்பதாகும்.

## 5-ம்வசனம்

எருசலேமின் குமாரத்திகளே எனக்குப்பிரியமானவளுக்கு மனதாகுமட்டும் நீங்கள் அவளை விழிக்கப்பண்ணுமலும் எழுப்பாமலும் இருக்கும்படி வெளிமான்கள்மேலும் உங்களை ஆணையிடுகிறேன். உன்னதபாட்டு 2:7-ஐப்பார்க்கவும்.

## 6-ம்வசனம்

வெள்ளைப்போளத்திஞலும் சாம்பிராணியினுலும் வர்த்தகருடைய சகலவித கந்தப்பொடியினுலும் உண்டாகிய வாசனை

யை வீசி தூப ஸ்தம்பங்களைப்போல் வனாந்திரத்திலிருந்து வருகிற இவர் யார்?

மணவாட்டி எப்பொழுதும் ஆவிக்குள் ஜெபித்து ஜீவிக்கிறபடியால் அவள் அதிகமான தரிசனங்களைக்கண்டு மகிழுகிறாள். மணவாளனாகிய இயேசு தம்மைக்கொஞ்சங்கொஞ்சமாய் வெளிப்படுத்திக் கொடுக்கிறார். இயேசு பூலோகத்தில் இருக்கும்பொழுதும் ஒரு தடவை சமாரியா நாடு சென்றார். அங்கு கிணற்றண்டையில் நின்ற சமாரியப் பெண்ணை சந்தித்தார். அவர் அவளோடு பேசினபோது முதலில் அவள் இயேசுவை ஒரு புருஷனாக அறிந்தாள். அதன் பின்னர் தீர்க்கத்தரிசியாக அறிந்தாள். யோவா. 4:9-25. கர்த்தர் தன்னை வெளிப்படுத்தவே தனது வல்லமையை அறிந்து அறிந்து முன்னேறமுடியும் இப்போது கர்த்தர் தம்மை கொஞ்சங் கூடுதலாகக்காட்டினார்.

**வெள்ளைப்போளம்:**—உன். 1:13-ஐப்பார்க்கவும்.

**சாம்பிராணி:**—இதை தூபத்துக்காக உபயோகப்படுத்துவார்கள். அதை நெருப்பில் போடும்போது உருகிப்புகைந்து வாசனைக்கொடுக்கும். அப்படியே நமது இயேசுவை அக்கினியில் தூபத்தை உருக்குவதுபோல பிதாவானவரும் இவரை நொறுக்க சித்தம் கொண்டார். அதனால் இயேசுவின் வாசனை உலகமெங்கும் வீசினது, என்பதையும் காட்டவே சாம்பிராணியைக்கொண்டு வெளிப்படுத்தினார்.

இயேசுவின் ஜீவியசரித்திரத்தில் கெத்சமனேயில் வைத்து பிடிப்பதும், சத்துருக்கள் அவரைக்கட்டி சனதரீம் சங்கம் அன்னா, காய்பா, ஏரோது, பிலாத்து, இந்த இடங்களிலெல்லாம் ஒரு இரவுக்குள் நியாய விசாரணைநடத்தினதையும், துப்பினதையும், குட்டினதையும் தாடைமயிர் பிடுங்கினதையும், கண்களைக்கட்டி அடித்ததையும், கற்றூணில் கட்டி வாரினால் அடித்ததையும், பாரச்சிலுவையைச்சுமந்து எருசலேம் வீதி வழியாக கொல்கதா மேடுபோவதையும், குருசிலறையப்படுவதுமான எல்லா இன்னல்களையும் அனுபவித்தபோதும், நலமானதையும் பேசாமல் பிதாவே இவர்களிக்கு மன்னியுமென்று வாய் திறந்து அவர்களின் வாழ்வுக்காகப் பரிந்துபேசினதையும் சிந்திக்கும்போது உலகமுள்ளளவும் புகைந்துக்கொண்டிருக்கும் கந்தப்பொடியின் வாசனையென்றே சொல்லலாம். இதுவே வாசனை வீசும் சாம்பிராணியின் அனுபவம்.

**சகல வித கந்தப்பொடியின்வாசனே:—** இயேசுவின் ஜீவியத்தின் எல்லாபாகமும் வாசனே நிறைந்ததாகவே இருந்தது, கொடுப்பதென்ருல் கொடையில் சிறந்தவர். நம்மை செய்வதென்ருல் நானிலத்தில் இவரைப்போல யாருமிலர், தாழ்மையென்ருல் நியாயமெடுபட தாழ்த்தினர். அன்பு என்ருல் ஜீவனைக் கொடுத்து நேசித்த அன்பு இவ்விதமாய் எல்லா நற்குணமும் நிறைந்தவர் இயேசுவே. இதுவே. கந்தப் பொடியின் வாசனையாகும்.

**தூபஸ்தம்பம்:—** கண்சாட்சிகளுக்காக யாவரும் நாட்டும் தூணே ஸ்தம்பம் இதுவே தூபஸ் தம்பம். இது வாசனே வீசும் தூண். சகல நற்குணங்களும் நிறைந்த ஸ்தம்பம் இயேசுவென்று எல்லா லோகமும் அறியவே ஸ்தம்பமாக நாட்டி இருக்கிருர் பூலோகத்தில் தோன்றிமறைந்த பெரியார்களிடம் ஏதாவது ஒரு நற்குணங்களைக் காணலாம். ஆனுல் இயேசுவிலோ எல்லா நற்குணங்களும் நிறைந்திருந்தது. இவரைப்போல் வேறு ஒருவருமில்லையென்று சொல்லத்தக்க விதத்தில் ஸ்தம்பமாக விளங்கிக் கொண்டிருக்கிறவரும் இவரே. ஆகவே இந்த இயேசுவே மாற்றமில்லாதவரும் மதிப்புக்கடங்காதவருமான தூபஸ்தம்பமாயிருக்கிருர்.

**வனுந்திரத்திலிருந்து வருகிற இவர் யார்:—**இந்த வல்லமையுள்ள இயேசு பூலோகத்தில் மனுஷ ஜாதியை இரட்சிக்க கஷ்டத்தின் பாதையைத் தெரிந்து கொண்டார். அதுதான் வனுந்தரம். தலைசாய்க்க இடமில்லாதவர். இவரை பின்பற்ற வேண்டியவர்கள் அவர் போன கஷ்டத்தின் பாதையில் செல்ல வேண்டுமென பாதைக் காட்டவே வனுந்தரத்திலிருந்து வருவதாகக் காட்டினுர். எபிரெ 13 : 13 அவரது ஜீவியம் முழுவதும் கஷ்டத்தின் பாதையே. அதுவே வனுந்தரம்.

## 7-ம் 8-ம் வசனம்

. . இதோ சாலமோனுடைய மஞ்சம் இஸ்ரவேலின் சவுரியவான்களில் அறுபது சவுரியவான்கள் அதைச்சுற்றி நிற்கிருர்கள் இவர்களெல்லாரும் பட்டயம் பிடித்து யுத்தத்துக்கு பழகினவர்களாயிருக்கிருர்கள். இராக்காலம் பயத்தினிமித்தம் அவனவன் பட்டயம் அவனவன் அரையிலிருக்கிறது.

**சாலமோன்:-** சாலமோன் என்ருல் சமாதானப்பிரபு எனப் பொருள்படும். எபி 7-2 நமது சமாதானப்பிரபு இயேசுவாகும்.

இயேசுவுக்குத் தாவீதின்வேர், நீதியின் சூரியன் எனப் பல பெயர்களுண்டு. அதில் ஒன்று சமாதானப் பிரபு என்பதாகும். ஏசா 9:6.

இந்த தேவன் மனிதர் மத்தியில் வாசம் பண்ணுவதற்காக முதலில் ஆசரிப்புக் கூடாரத்தையும் பின்னர் ஆலயத்தையும் கட்டுவதற்காகக் கட்டளைக் கொடுத்தார். இப்பொழுதோ மனிதருடைய இருதயத்தில் தங்குவதற்காகத் தெரிந்து கொண்டார்.

முதலில் ஆசரிப்புக் கூடாரத்தில் வாசம் பண்ணுவதற்காகக் கட்டளைக் கொடுத்தபோது பிரகாரத்தைச் சுற்றிலும் அறுபது தூண்களை நிறுத்தி அதன்மேல் தொங்குதிரையைத் தொங்கவிட கட்டளைக் கொடுத்தார். இந்த அறுபது தூண்களும் அறுபது சவுரியவான்களாகும். அது யுத்தவீரர்களைக் காட்டுகிறது. தேவனுடைய வாசஸ்தலம் காக்கப்பட இரவும் பகலும் யுத்த வீரர்களாகிய காவலாளிகள் உண்டு என்பதை விளங்கப்பண்ணுகிறது.

இப்படியே ராஜாக்களுடைய படுக்கையறைகளைச் சுற்றிலும் பட்டயம் பிடித்து ராஜாவைக் காக்கிற காவலாளிகள் எப்பொழுதும் இருப்பதுபோல இயேசு ராஜாவின் கூடாரத்தைக் காக்க நியமிக்கப்பட்ட காவலாளிகள் எப்பொழுதும் தேவையென்பதையும் காட்டுகிறது.

**வீரர்கள் பட்டயம் பிடித்து யுத்தத்துக்கு பழகினவர்களுமாய் இருப்பார்கள்:—** இராஜாக்களை காவல் பண்ணுகிற காவலாளிகளிடம் பட்டயம் இருப்பது மாத்திரமல்ல யுத்தத்துக்குப் பழகினவர்களுமாயிருப்பார்கள்.

**யுத்தத்துக்குப் பழகாவிட்டால் உண்டாகும் கெடுதி:—**

**1. உண்மையானபடி கடமையைச் செய்ய மாட்டான்.** அதாவது இராஜாவை சரியானபடி காக்க மாட்டான். தூங்கவோ வேறுவிதமாக அஜாக்கிரதையாயிருக்கவோ செய்வான். அப்பொழுது சத்துருக்கள் வந்து இராஜாவுக்குத் தீங்கிழைப்பார்கள். யுத்தத்துக்குப்பழகினவன் கட்டளையைக் கைக்கொள்ள நன்ருய் படிப்பிக்கப் பட்டிருப்பான். காக்காவிடில் இராஜாவுக்கு உண்டாகும் கெடுதியையும் தனக்குக் கிடைக்கும் தண்டனையையும் நன்ருய் அறிந்திருப்பான். தனது பழக்கமே உண்மையானபடி காவல் செய்ய வேண்டுமென்றுள்ள கருத்தை உண்டாக்கும். இது பழகினவனின் அனுபவம்.

2. பட்டயத்தை உடனே உபயோகிப்பான்:— யுத்தத்துக்குப் பழகினவன் எப்போதும் விழித்திருப்பது மாத்திரமல்ல தூரத்தில் ஒருவனைக் கண்டவுடனே அவனுக்கு இவன் கொடுக்கும் கட்டளையைக் கொடுக்கிறான். காவலாளி கட்டளையைக் கொடுத்தவுடன் காணப்பட்டவன் கீழ்ப்படியாவிட்டால் உடனே யாரென்றும் பாராமல் இரக்கமின்றி பழிவாங்கி விடுவான். இரங்கினால் சத்துருவாயிருப்பானானால் இராஜாவைக் கொலை செய்து விடுவான். ஆதலால் இரங்கான்.

இவை யாவும் சபைகைக் காப்பதாகும். நமது சமாதானப் பிரபுவாகிய இயேசுவே இக்கடைசிக்காலத்தில் தமது சபையாகிய பரிசுத்தவான்கள் மத்தியில் வாசம் பண்ணுகிறார். சபை பரிசுத்தத்தில் வளரவும் கறைப்படாமல் காக்கப்படவும் யுத்தத்துக்குப் பழகின பட்டயம் பிடித்த காவலாளிகள் வேண்டும். அதாவது உத்தரவாதமுள்ளவர்களும் உண்மையுள்ளவர்களும் சபையைப்பற்றிய பாரமுள்ளவர்களும் வேதத்தில் பழகினவர்களும் ஜெப ஜீவிகளுமான பரிசுத்தவான்களாகிய காவலாளிகள் தேவையென்பதைக் காட்டுகிறது.

பட்டயம்:- பட்டயமென்பது வேதவசனத்தைக் காட்டுகிறது. எபி 4 : 12 வேதவசனம் நன்றாய்ப்படித்திருக்க வேண்டும். அநேகர் இரட்சிக்கப்பட்டிருப்பார்கள் நல்ல விசுவாசிகளாயிருப்பார்கள். ஆனால் வேதவசனத்தைப் படிக்க மாட்டார்கள். பெரேயாப் பட்டணத்தார் வேதவாக்கியங்களை நன்றாய் ஆராய்ச்சி பண்ணுகிறவர்களாயிருந்தார்கள். அப் 17 : 11 ஆதலால் நற்குணசாலிகளாயிருந்து, விளங்கினார்கள். சங்கீதக்காரன் கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் என்கிறார். சங் 1 : 2.

பேதுரு கூறும்போது வசனம் படிப்பதால் நாம் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளரலாம் அதற்காக துர்க்குணங்களை ஒழித்து வசனத்தை பாலைப்போல குடிக்க வேண்டுமென்று கூறுகிறார். 1 பேது 2:1-3 அதுமாத்திரமல்ல வசனத்தை நன்றாயிருதயத்தில் பதித்து வைத்திருக்க வேண்டுமென்றும் எச்சரிக்கிறார் சங் 37 : 31 நீதி 22 : 17 ஏசா 51 : 7 இதுவே பட்டயம்.

யுத்தத்துக்கு பழக வேண்டும்:- வசனம் படித்தாலும் போதாது வசனத்தை இருதயத்தில் பதித்தும் வைத்திருக்க வேண்டும். இருதயத்தில் பதித்து வைத்திருந்தாலும் போதாது

எந்தெந்த வசனங்களை எந்தெந்த இடத்துக்கு உபயோகப் படுத்தவேண்டுமோ அந்தந்த இடத்துக்கு உபயோகப்படுத்த வும் பழக வேண்டும், வசனத்தைப்பற்றிய அறிவும் பரி ஞானமும் அடைந்திருக்க வேண்டும். வசனத்தைப்பற்றிய பொருளும் வெளிப்படுத்தலும் இல்லாவிட்டால் படித்தாலும் பிரயோஜனப்படாது. ஆதலால் வசனத்தை உபயோகப் படுத்தவும் பழக வேண்டும். ஏனென்றால் இராக்காலம் வந்திருக்கிறது.

**இராக்காலம்:—** இது சபைக்கு ஏற்படும் சோதனை காலத்தைக் காட்டுகிறது. சபைக்கு பலவிதமான சோதனை களுண்டு. இராக்காலத்தில் சத்துருக்களும் திருடர்களும் அலைந்து நடப்பதுபோல சபையை கெடுப்பதற்காக கள்ள சகோதரர்களும் கள்ள போதகர்களும் அலைந்து நடப்பார்கள். நாம் அதைக் கண்டு பிடித்து சபையைக் காப்பதற்காக விழிப் பாயிருக்க வேண்டும்.

பட்டயம் அரையிலிருக்க வேண்டும். அதாவது வேத வசனமாகிய பட்டயத்தால் எதிர்த்து போராட ஆயத்த மாயிருக்க வேண்டும். 2 தீமோ 2 : 15; 4 : 12 அரையில் வைத்திருக்க வேண்டும். அதாவது துர்உபதேசங்களை எதிர்க் கவும் கள்ள சகோதரர்களை துரத்தவும் வேதவசனமாகிய பட்டயத்தைக் கையிலெடுத்து அவர்களோடு போராட ஆயத் தமாயிருக்க வேண்டும். எல்லா வசனங்களை அறியும் அறி விலும் தேறினவனுயிருக்க வேண்டும். இதுவே பட்டயம் அரையில் வைத்திருப்பதாகும்.

## 9-ம் 10-ம் வசனம்

சாலமோன் இராஜா தனக்கு லீபனோனின் மரத்தினால் ஒரு இரதத்தை பண்ணுவித்தார்.

அதன் தூண்களை வெள்ளியினாலும் அதின் தட்டை பொன்னினாலும் அதின் ஆசனத்தை இரத்தாம்பரத்தினாலும் பண்ணுவித்தார். அதின் உட்புறத்திலே எருசலேம் குமாரத் திகளினிமித்தம் நேசமென்னும் சமுக்காளம் விரித்திருந்தது.

**லீபனோன்:—**பலஸ்தீனாவிலிருக்கும் மலைப்பாகத்தின் ஒரு பகுதிக்கு லீபனோன் என்று பெயர் இதற்கு வெண்மையென்று பொருள்படும்.

**மரம்:—** இது மனுஷீகத்தைக் காட்டும்.

**இரதம்:—** இது சபையைக் காட்டும். சபையென்றால் இரட்சிக்கப்பட்டவர்கள். இவர்களே சபை.

**வெள்ளித்தூண்:—** இது இரதத்தை நிறுத்துவதற்காக உபயோகப்படுத்துவது. அதாவது இரதத்தைத் தாங்குவது. இது சபையில் பெலவீன விசுவாசிகளைத் தூண்போல் தாங்குகிற பெலமுள்ள விசுவாசிகளைக்காட்டுகிறது. 1 தெச 5 : 14 கலா 6 : 2 அது மாத்திரமல்ல தூண்கள்தான் கட்டிடங்களை நிலை நிறுத்துவது. கர்த்தருடைய ஊழியத்தில் பேதுரு, யாக்கோபு, யோவான். முதலியோர் தூண்களாயிருந்தார்கள். கலா 2 : 9 இது சபையை நிலைநிறுத்தும் தன்னமயுள்ள பரிசுத்தவான்களைக் காட்டுகிறது.

**தட்டுப்பொன்:—** பொன் விசுவாசத்தைக் காட்டும். I பே 1 : 7 சபைக்குள் எப்போதும் விசுவாசம் உறுதியாய் இருக்க வேண்டும். விசுவாசம் இல்லாவிட்டால் சோதனையில் நிலை நிற்க முடியாது. விசுவாசம் இல்லா விட்டால் தேவனுக்கும் பிரியமாய் இருக்க முடியாது. எபி 11 : 6 ஆதலால் தேவனால் நியமிக்கப்பட்ட சபை விசுவாசத்தில் நிலை நிற்கும சபை என்பதாகும்.

**ஆசனம் இரத்தாம்பரம்:—** இரத்தாம்பரம் பரிந்து பேசுவதைக் காட்டும். இயேசு மற்றவர்களுக்காய் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறது போல ( I யோ 2 : 1 ) ஆவிக்குரிய சபை மற்றவர்களுக்காய் இரவும் பகலும் பரிந்து பேசிக் கொண்டிருக்க வேண்டும். ரோ 8 : 26,27.

**விரித்திருந்தது நேசமென்னும் சமுக்காளம்:—** சபையில் வருகிற போகிற யாவரும் சமுக்காளம் விரித்திருப்பதைக் காண்பது போல் இயேசுவின் அன்பை எல்லோரும் காண வேண்டும். அதற்காக தேவனுடைய பிள்ளைகளாகிய எல்லா விசுவாசிகளும் அன்பினால் நிறைந்திருக்க வேண்டும். அன்பில்லாத ஊழியம், அன்பில்லாத பாஷை பேசுதல், யாவும் பயனற்றதென்றே பவுல் கூறுகிறார். I கொரி 13 : 1,2.

ஆகவே நமது கர்த்தர் மரமாகிய மனுஷனை மீட்டு இரதமாகிய சபையைக் கட்டி இரதத்தை தாங்கும் தூண் போன்ற பரிசுத்தவான்களை சபையைத் தாங்க நியமித்து, பொன் தட்டு

களாகிய விசுவாசத்தை சபைக்குள் வைத்து இரத்தாம்பர மாகிய ஆத்துமாக்களுக்காய் பரிந்து பேசி ஜெபிக்கும் ஜெப ஜீவிகளை சபையில் ஏற்படுத்தி நேசமென்னும் சமுக்காள மாகிய இயேசுவின் அன்பினால் சபையை நிரப்பி வைத்திருக் கிறார். எதற்கென்றால் எருசலேம் குமாரத்திகளாகிய இரட் சிக்கப் பட்டவர்கள் மணவாட்டி நிலைமைக்கு வந்து சேராத வர்கள் அன்பினால் இழுகக்பட வேண்டும். அதற்காகவே நேச மென்னும் சமுக்காளத்தையும் விரித்து வைத்திருக்கிறார். அன்புதான் மற்றவர்களை இழுத்து முன்னேற்றி கொண்டு போகிறதென்பதை அறிய வேண்டும்.

## 11-ம் வசனம்

சீயோன் குமாரத்திகளே நீங்கள் புறப்பட்டுப்போய் இராஜாவாகிய சாலோமோனின் கலியாண நாளிலும் மன மகிழ்ச்சியின் நாளிலும் அவருடைய தாயார் அவருக்குச் சூட்டின முடியோடு இருக்கிற அவரைப் பாருங்கள்.

**சாலோமோனுடைய கலியாண நாள்:—**

மணவாட்டி மற்றவர்களுக்கு சாலோமோனுடைய மஞ் சத்தை வர்ணித்தாள். பின்னர் அவரது இரதத்தை வர்ணித் தாள். இப்பொழுது அவருடைய கலியாண நாளை வர்ணிக் கிறாள்.

தாவீதின் குமாரனாகிய சாலோமோன் இராஜா் பதவி யைப் பெற்று இராஜ முடி சூடி சிங்காசனத்தில் உட்காரும் மேன்மை கிடைக்கக் காரணமாய் இருந்தது அவரது தாயாரே. தாவீதுக்கு அநேக மனைவிகளும் அநேக பிள்ளை களும் உண்டு. சுதந்தரவாளியாயிருந்த அப்சலோம் தகப் பனோடு எதிர்த்த படியால் மரித்துப் போனான். பின்னர் தாவீதின் குமாரனாகிய அதோனியாவே பட்டத்துக்கு வர வேண்டியவன். தாவீதுக்கு வயதான வேளையில் சாலோ மோனின் தாயாகிய பத்சேபாள் தனது குமாரனாகிய சாலோமோனுக்கு இராஜ் பதவி கொடுக்க வேண்டுமென்று தாவீதை வேண்டிக் கொண்டாள். அவள் வேண்டுதலுக்குத் தாவீது இணங்கியே சர்லோமோனை இராஜாவாக முடி சூட்டினான், ஆதலால் தான் சாலோமோனின் தாயார் அவரை முடி சூட்டினான் என்று சொல்வதாகும்.

நமது சாலோமோன் இயேசு கிறிஸ்துவே. இவரும் இராஜ மேன்மை பெற்று இராஜாவாய் முடிசூடக் காரணம் நமது தாயாகிய ஏவாளே. அவள் பாவஞ் செய்யாவிட்டால் பிதாவாகிய தெய்வம் தமது ஏக குமாரனை பூமிக்கு அனுப்பி யிருக்கமாட்டார். அவரும் பூமியில் வந்து பாடு படா விட்டால் இந்த மேன்மையான பதவியை அடைந்திருக்க மாட்டார், ஆதலால் ஆதித் தாயாகிய ஏவாளே இந்தப் பதவியை அடையச் செய்தாள் எனச் சொல்லலாம்.

**இயேசுவின் கலியாணநாள்:—**

இதைக் குறித்து ஒரு விதமாகச் சொன்னால், இயேசு கஸ்தி பட்ட நாளென்றே சொல்லவும் செய்யலாம், சத்துருக் கள் அவரை பிடித்து பாடுபடுத்தி சிவப்பு அங்கியை உடுத்தி முள்முடியைச் சூடி கோலினால் தலையில் அடித்து சிலுவையில் அறைந்தார்கள். அவரை அறைந்த சிலுவையில் யூதருக்கு இராஜா என்றும் எழுதி வைத்தார்கள்.

ஆதாமைக் கர்த்தர் உண்டாக்கி உலகத்தை அவன் கையிலே ஒப்புவித்தார். ஆதி 1 : 26 ஆதாம் உலகத்துக்கு இராஜாவாய் இருந்தான். அவனோ ஒரு பழத்துக்காக உலகத்தை பிசாசுக்கு விற்றுப் போட்டான். ஆதலால் இப் பொழுது உலகத்துக்கு அதிபதி பிசாசாகக் காணப்படுகிறான் யோவா 14 : 30. இயேசு உலகத்தில் வந்து சத்துருவோடு போராடி உலகத்தை மீட்டார். அதாவது அவரது பாடு மரணமே உலகத்தை மீட்டது. அவரது சிலுவை மரணத் தால் பிசாசையும் வென்றார். இவ்விதமாய் உலகத்தில் ஜெயக் கொடி நாட்டினாலும் அவனை முற்றுமாய் சிறையாக்கி இயேசு இராஜாவாய் ஆளுகை செய்யும் நாள் சீக்கிரமாய் வரப் போகிறது. அப்பொழுது அவர் இராஜாவாயிருப்பார். சத்துருவாகிய சாத்தானைப் பிடித்து பாதாளத்தில் தள்ளி அடைப்பார். ஆதலால் அவர் கஸ்தி அடைந்த நாள் அவரது கலியாண நாளின் சந்தோஷத்திற்கு ஆரம்ப நாள் எனவும் கூறலாம்.

**மன மகிழ்ச்சியின் நாள்:—** இயேசுவைப் பிடித்து சத் துருக்கள் சிலுவையில் அறைந்து கொன்ற பின்னர் யோசேப் பின் புதிய கல்லறையில் அடக்கம் பண்ணினார்கள், அவர் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுவேனென்று முன்னர் சொல்லி யிருந்தார். ஆதலால் அவருடைய சீஷர்கள் அவரைக் கள

வாய் கொண்டு போய் விட்டு இயேசு உயிர்த்தெழுந்தார் என்று பொய் பிரச்சாரம் செய்வார்கள். அப்பொழுது அவரது முந்தின எத்தைப் பார்க்கிலும் பிந்தின எத்து கொடிதாயிருக்கும். ஆனபடியால் அவரது கல்லறைக்கு காவல் வைக்க வேண்டுமென்று தேசாதிபதியாகிய பிலாத்துவிடம் சத்துருக்கள் வேண்டிக் கொண்டார்கள். அப்பொழுது தேசாதிபதி உங்களுக்கு சேவகர் இருக்கிறார்களே நீங்களே காவல் பண்ணிக் கொள்ளுங்களென்று உத்தரவு பிறப்பித்தான். உடனே ரோமப் போர்ச் சேவகர் கல்லறைக்கு ரோம முத்திரையைக் குத்தி காவற்சேவகரை நிறுத்தினார்கள். மூன்றாம் நாள் அதிகாலையிலே கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்து இறங்கி வந்து கல்லறையின் கல்லைப் புரட்டி தள்ளினான். காத்துக் கொண்டிருந்த காவலாளர் பயந்து செத்தவர்கள் போல் கீழே விழுந்தார்கள் அவரோ உயிர்த்தெழுந்தார்.

வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக் கல்லாயிற்று. அது கர்த்தராலே ஆயிற்று அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது. இது கர்த்தர் உண்டுபண்ணின நாள். இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம் சங் 118 : 22-24.

வேதபாரகர், பரிசேயர், சதுசேயர் இவர்கள் இயேசுவாகிய ஜீவனுள்ள கல்லை எங்களுக்கு வேண்டாம் சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும், எனக்கூக்குரலிட்டுத் தள்ளினார்கள். அந்த நாள் ஆறாம் நாளாகிய வெள்ளிக்கிழமையே. மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். அந்த நாள் வாரத்தின் முதலாம் நாளாகிய ஞாயிற்றுக் கிழமையாகும், அந்த நாள் கர்த்தர் உண்டு பண்ணின நாள். அந்த நாள் கர்த்தரை மகிழ்ச்சியோடே ஆராதிக்கும் நாள்.

ஆகவே இயேசு இராஜாவாக சிங்காசனம் ஏறி பொன் முடி தரிப்பதற்கு முன்னதாக முள்முடி தரித்து சிலுவை மரம் ஏறினார். மூன்றாம் நாளில் பிசாசையும் ஜெயித்து ஜெய வேந்தராக எழுந்து துக்கத்தோடு இருந்த தம்முடையவர்களுக்கு மன மகிழ்ச்சியை உண்டு பண்ணினார். இனிமேல் சீக்கிரம் மத்திய ஆகாசத்தில் வெளிப்படுவார். அப்போது தம்முடைய இரத்தத்தால் சம்பாதித்த மணவாட்டியைக் கூட்டிச் சேர்ப்பார். அப்போது முள்முடி பொன் முடியாகமாறும். அந்த பரம காட்சியை நீயும் அறிந்து கொள் என்பதாக

ஆவியானவர் சீயோன் குமாரத்திக்கு சொல்லி, நீயும் அந்த நாளுக்காகப் புறப்படு என்பதாகக் கூறுகிறார்.

புறப் டல்:— மணவாளனைப் பற்றிய சரியான வெளி படுத்தலை மணவாட்டி அடைய வேண்டுமானால் மணவாட்டி உலகத்திலிருந்து முற்றுமாய் வேறு பட்டேயிருக்க வேண்டும். அதற்காக ஆவியானவர் நீங்கள் புறப்படுங்கள் என்கிறார். ஏசாயா புறப்படுங்கள், புறப்படுங்கள் அவ்விடம் விட்டுப் போங்கள், அசுத்தமானதைத் தொடாமலிருங்கள், கர்த்தரு டைய பாத்திரங்களைச் சுமக்கிறவர்களே அதின் நடுவிலிருந்து புறப்பட்டு உங்களை சுத்திகரியுங்கள் என்கிறார். ஏசா 52 : 11 ஆகவே மணவாட்டி எப்பொழுதும் எல்லாவற்றிலிருந்தும் சுத்திகரிக்கப்பட்டவளாகவே விளங்க வேண்டும். அப் பொழுது அவர் தமது சாயலை வெளிப்படுத்துவார்.

**எவற்றிலிருந்து மணவாட்டி விலகி சுத்திகரிக்கப்பட வேண்டும்:—**

1. பாவிகளிலிருந்து விலகி சுத்திகரிக்கப்பட வேண்டும் [II கொரி 6:14-18
2. பாபிலோன் சபையிலிருந்து ,, வெளி 18 : 4
3. ஒழுங்கற்று நடப்பவனிலிருந்து ,, II தெச 3 : 6, 14
4. துர் உபதேசக் காரனிலிருந்து ,, ரோ 16 : 17 - 18
5. துர் உபதேசத்திலிருந்தும் விலகி சுத்திகரிக்கப் பட வேண்டும். கலா 5 : 8 - 9

ஆகவே மணவாட்டி கறைதிரையற்றவளாய் கற்புள்ள கன்னிகையாய் விளங்க வேண்டும். இதையே மணவாளன் விரும்புகிறார். இதற்காகவே தன்னை விலக்கிக் காத்துக் கொள்ள கட்டளையிடுகிறார்.

# 4-ம் அதிகாரம்

இவ்வதிகாரத்தில் மணவாளனுன இயேசு மணவாட்டியின் அழகையும் ஊழியத்தையும் புகழ்ந்துரைப்பதைக் காணலாம். அதற்காக அவர் அவள் மேன்மையை வெளிப்படுத்த அவளது ஒவ்வொரு அவயங்களையும் வர்ணிப்பதை காணலாம்.

## 1-ம் வசனம்

நீ ரூபவதி என் பிரியமே நீ ரூபவதி உன் முக்காட்டின் நடுவே உன் கண்கள் புறுக்கண்களாய் இருக்கிறது. உன் கூந்தல் கீலேயாத் மலையில் தழைமேயும் வெள்ளாட்டு மந்தையைப் போல் இருக்கிறது.

**நீ ரூபவதி:**— மணவாட்டி மணவாளன் பார்வைக்கு அழகுள்ளவளாய் காணப்படுகிருள். ஆதலால் மணவாளன் அவளை புகழ்ந்து பேசுகிருர். அகாஸ்வேரு ராஜாவுக்கு தனது இராணியாகிய வஸ்தி கீழ்படியாமல் போனபடியால் அவள் ஸ்தானத்தில் பட்ட ஸ்திரியை தெரிந்து கொள்வதற்காக நூற்றிருபத்தேழு தேசத்திலுள்ள கன்னிப் பெண்களையும் கூட்டிச் சேர்த்தான். பின்னர் அவர்களின் சுத்திகரிப்புச்கான வைகளை கொடுத்துப் போஷிப்பித்தான். முடிவாக அழகுள்ள ஸ்திரியை தெரியும்படி தீர்மானித்தான் அப்பொழுது அகாஸ்வேருவின் பார்வைக்கு எஸ்தர் ரூபவதியாய் காணப்பட்டாள். ஆதலால் அகாஸ்வேரு ராஜா அவளை பட்ட ஸ்திரியாகத் தெரிந்து கொண்டான், இந்த அழகு சரீர பிரகாரமுள்ள அழகு: ஆனுல் மணவாளனுகிய இயேசு விரும்பும் அழகோ சரீர அழகல்ல: ஆவிக்குரிய அழகாகும் இதுவே பரிசுத்த ஜீவியம். இது தேவனுடைய ஜனத்தில் காணப்பட வேண்டும். உன் இளமையைக்குறித்து ஒருவனும், அசட்டை பண்ணுதபடிக்கு வார்த்தையிலும், நடக்கையிலும் அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாக இரு என்றுர். I தீமோ. 4:12. ஆகையால் ஜீவியத்தை காப்பாற்றி முன் மாதிரியாய் இருப்பதே அழகு.

**என் பிரியமே:**— உன் 1:9—தை பார்க்கவும்.

**உன் முக்காட்டின் நடுவே உன் கண்கள் புருக்கண்கள்:—**

**முக்காடு:—** ஸ்திரியானவள் முக்காடு போட வேண்டும் என்று கர்த்தர் கட்டளையாகக் கொடுத்திருக்கிறார். I கொரி. *11:5-13.*

**முக்காடு தாழ்மையைக் காட்டுகிறது:—**

வேத புத்தகத்தில் ஸ்திரியானவள் புருஷனை கனப்படுத்த வேண்டுமென்றும், புருஷன் ஸ்திரிக்கு தலை என்றும் காட்ட ஸ்திரியானவள் முக்காடு போடவேண்டும் என்று கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறார். இது ஸ்திரியின் தாழ்மையைக் காட்டுகிறது. அப்படியே ஆபிரகாமின் குமாரனாகிய ஈசாக்குக்குப் பெண் கொள்ள எலியேசர் போயிருந்தான். கர்த்தரின் நடத்துதல்படியே எலியேசர் ரெபேக்காளை அழைத்துக் கொண்டு வரும்போது ஈசாக்கு ஜெபம் பண்ணுவதற்காக வெளியிலே போயிருந்தான். தூரத்தில்வைத்தே ரெபேக்காள் ஈசாக்கைக் கண்டாள். உடனே ரெபேக்காள் தனது புருஷன் என்று அறிந்து ஒட்டகத்தை விட்டு கீழே இறங்கி முக்காடு போட்டுக் கொண்டாள். ஆதி. 24:64, 65. இது என்னத்தைக் காட்டுகிறது என்றால் அவளது தாழ்மையைக் காட்டுகிறது.

இரட்சிக்கப்பட்ட ஸ்திரிகளும் புருஷர்களும் சேர்ந்ததே தேவனுடைய சபை. சபையில் ஆண் என்றும் பெண் என்றும் இல்லை. கிறிஸ்துவுக்குள் நாம் எலலாரும் ஒன்றாக இருக்கிறோம். நம்முடைய மணவாளன் இயேசுவே. அவரே ஸ்திரியாகிய சபைக்குத்தலைவர். ஸ்திரி புருஷர்களுக்கு முன்பாக தாழ்மையுள்ளவள் என்று காட்ட முக்காடு இட்டுக் கொள்வதைப் போல கிறிஸ்துவுக்கு முன்னதாக தாழ்மையுள்ளவர்களாய் காணப்பட வேண்டும். தாழ்மை கிறிஸ்தவ ஜீவியத்தின் முக்காடாய் இருக்க வேண்டும். தாழ்மையுள்ளவர்களுக்கு கர்த்தர் கிருபை அளிக்கிறார் யாக் 4 : 6 பெருமையை கர்த்தர் அருவருக்கிறார்.

ஆபிரகாமின் அடிமைப் பெண்ணாகிய ஆகார் கர்ப்பவதியானாள். உடனே அவளது மேன்மைக்குக் காரணமாய் இருந்த சாராளை அற்பமாய் எண்ணினாள். அவளோ பெருமை கொண்டாள். ஆனபடியால் ஆபிரகாமுடைய வீட்டை விட்டு துரத்தப்பட்டாள். ஆதி 16 : 4 இவ்வாறு மேட்டிமையால் கேடுகளை சம்பாதித்த ஆயிரங்களைக் காணலாம். ஆனபடி

யால் எப்பொழுதும் தாழ்மையை முக்காடாய் தரித்திருக்க வேண்டும். அப்பொழுது கிருபையில் வளரலாம். இராஜா வும் பிரியப்படுவார்.

**முக்காடு மறைந்து ஜீவிப்பதைக் காட்டுகிறது:**— தூதர் களின் நிமித்தம் ஸ்திரியானவள் முக்காடிட்டுக் கொள்ள வேண்டும். I கொரி 11 : 10. இந்த தூதர் என்பது பரலோ கத்தின் தூதன் என வியாக்கியானம் செய்வதுண்டு. அது துர் உபதேசமாகும். ஊழியர்களுக்கு தூதர்கள் என்ற பெயர் கொடுத்திருப்பதைக் காணலாம். மல் 2 ; 7. தூதன் என்பது காரணப் பெயர். கர்த்தரிடத்திலிருந்து தூது அல்லது செய்தி வாங்கி சபைக்குக் கொடுக்கிறவர்கள் அவர்கள்தான் தூதர் கள்.

கர்த்தருடைய ஊழியன் தேவனால் உபயோகப் படுத்தப் படும் போது யாவரும் அவனை நேசிப்பார்கள். விசேஷமாக ஸ்திரிகளின் சிநேகம் பெரியது. அன்பின் பெருக்கால் மிக நெருங்கிப் பழகும் பழக்கம் ஏற்படுகிறது. இதை சாத்தான் பார்க்கிறான். உடனே அவன் தந்திரத்தை உபயோகப் படுத்திக் கொள்கிறான். மறைவாகக் கண்ணியை வைத்து இழுத்துக் கீழே தள்ளுகிறான். இதை ஆவியானவர் அறிந்தே பவுலைக் கொண்டு தூதர்களின் நிமித்தம் ஸ்திரி யானவள் முக்காடிட வேண்டுமென்று சொன்னார்.

ஆகவே மணவாட்டியாக விரும்பும் பரிசுத்தவான்கள் தேவனால் உபயோகப் படுத்தப்படுந்தோறும் மறைந்தே ஜீவிக்க வேண்டும். தங்களைக் காட்டலாகாது. ஸ்திரியான வள் தன்னை முக்காட்டால் மூடுவது போல எப்பொழுதும் கிறிஸ்துவுக்குள் மறைந்திருக்க வேண்டும். கிறிஸ்துவையே காட்ட வேண்டும். தன்னையோ மறைக்க வேண்டும். நான் என்பது மரிக்க வேண்டும். அலங்கார வாசலண்டையில் ஒரு சப்பாணி இருந்தான். பேதுருவும் யோவானும் அங்கு சென்று இயேசுவின் நாமத்தில் அவனைத் தூக்கி எழுப்பினார் கள். இதைக் கண்ட யாவரும் பேதுருவையும், யோவானை யும் நோக்கிப் பார்த்தார்கள். அப்பொழுது பேதுரு ஜனங் களைப் பார்த்து எங்களை நோக்கிப் பார்க்கிறதென்ன? ஆபிர காம், ஈசாக்கு யாக்கோபின் தேவன் தமது பரிசுத்த பிள்ளை யாகிய இயேசுவை மகிமைப் படுத்தினாரென்று இயேசுவை உயர்த்திக் காட்டினார். அப் 3 : 12-13.

தற்கால உலகில் சிறிய காரியத்தை செய்த அநேகர் பெரிய காரியத்தை செய்வது போல் பெருமையாய் பேசுவதும் பத்திரிகைகளில் பிரசாரம் செய்வதும் காணலாம். முடிவாக அவர்கள் பெற்ற கிருபைகளை இழந்து நிர்ப்பந்தராய்ப் போகின்றனர். ஆதலால் கர்த்தர் பாவிக்குந்தோறும் நாம் மறைந்தே ஜீவிக்க வேண்டும். நாம் மறைந்து ஜீவிப்பதையே முக்காடு வெளிப்படுத்துகிறது.

**முக்காட்டின் நடுவே உன்கண்கள் புறக்கண்கள்:—** உன் 1 : 15-ஐ பார்க்கவும்.

ஆகவே மணவாட்டி தாழ்மையோடு எப்பொழுதும் கர்த்தருக்குள் மறைந்து ஜீவித்து ஆவிக்குரிய மேலான காரியத்தை நாடி, ஆத்தும தாகத்தோடு மணவாளனை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறுள் என்பதை முக்காடு படிப்பிக்கிறது. **உன் கூந்தல் கீலேயாத் மலையில் தழையையும் வெள்ளாட்டு மந்தையைப் போல் இருக்கிறது:—** மணவாட்டியின் கூந்தலை வெள்ளாட்டு மந்தையோடு ஒப்பிட்டிருக்கிறுர்.

**கீலேயாத் மலை:—** இது பலஸ்தீனு தேசத்திலுள்ள மலைகளில் ஒன்று. இது ஒரு சிறிய மலை. பலஸ்தீனு தேசத்திலுள்ள எல்லா மலைகளிலும் மழை ஏராளமாகப் பெய்யும் வெயிலடிப்பதோ மிகக் குறைவு. ஆனுல் கீலோத் மலையிலோ மழையும் பெய்வதுண்டு வெயிலும் அடிப்பதுண்டு. ஆனபடியால் மற்றும் மலைகளில் வளரும் புல்லைவிட கீலேயாத் மலையில் வளரும் புல்லோ செழிப்புள்ளதும் பலபுஷ்டி உள்ளதுமாயிருக்கும். ஆடுகள் புசிப்பதால் புஷ்டியடைவதோடு பலுகிப் பெருகுவதையுங் காணலாம். மற்ற மலைகளின் புல்லுகளைப் புசித்தால் ஆடுகளுக்கு அதிகமான ஜீரணம் உண்டாவதால் ஆடுகள் பலவீனப்பட்டு பலனும் குறைந்து போகிறது. ஆனபடியால் ஆடு மேய்க்கும் பலஸ்தீனுவாசிகள் கீலேயாத் மலையையே மேன்மையாக நினைப்பார்கள். இது ஆத்துமாக்களின் முன்னேற்றத்தைக் காட்டுகிறது. ஆத்துமாக்கள் முன்னேற வேண்டுமானுல் மணவாட்டி தியாகமுள்ளவளும் ஆவியில் நிறைவுமுள்ளவளுமாக இருக்க வேண்டும். இந்த தியாகத்தின் அனுபவமே வெயிலும் மழையும், அடிக்கும் அனுபவத்தைக் காட்டுகிறது. அப்படிப் பட்டவர்கள் கொடுக்கும் உபதேசந்தான் ஆத்துமாக்களை ஆவிக்குரிய ஜீவியத்தில்

வளர்த்துவதும் ஆத்துமாக்களை அனுதினமாய் கர்த்தரிடத்தில் கொண்டு வருவதுமாயிருக்கும், ஆத்துமாக்கள் வளர்ந்து பெருகி வரும் அனுபவத்தைத் தான் கூந்தலோடு ஒப்பிட்டிருக்கிறார்.

1 **கூந்தல்:—** இது ஸ்திரிகளுக்கு மகிமை I கொரி 11:15 கூந்தல் ஸ்திரிகளுக்கு மகிமையாயிருப்பது போல இவள் சம்பாதித்த ஆத்துமாக்கள் அவளுக்கு மகிமையாயிருக்கிறது I தெச 2 : 20. அவள் ஓடிஓடி அலைந்து ஏராளமான ஆத்துமாக்களை சேர்த்து விட்டாள். இவள் சேர்த்த, ஆத்துமாக்களைத் தான் கூந்தல் என்கிறார்.

2 **கூந்தல் மந்தையைப் போல் பெருகி ஐக்கியமாயிருக்கிறது :—** அவள் சம்பாதித்த ஆத்துமாக்களை ஐக்கியமாய் நடத்துகிறாள். கூந்தலை ஒரே கட்டாய் கட்டி வைத்திருப்பது போல இவளது ஆத்துமா ஐக்கியத்தில் உறுதியாயிருக்கிறதுயாதொரு விதமான பிரிவினையும் இல்லை. பிரிவினை இல்லாதபடியால் சபை பெருகுகிறது, பிரிவினை இல்லாதபடியால் சபை வல்லமையால் நிரம்பியாவரும் விரும்பத் தக்க நிலைமையிலிருக்கிறது, இதுவே கூந்தலின் ஐக்கியம்.

3 **கூந்தலில் தினமும் எண்ணெய் பூசி அழகு படுத்துவார்கள்:—** ஆத்துமாக்களைப் பற்றி மணவாட்டி கவலையாய் இருக்கிறாள். அவர்களை எப்பொழுதும் முன்னுக்கு கொண்டு வர விரும்புகிறாள். விசுவாசிகளில் காணப்படும் குறைவுகளைக் கண்டுபிடித்து தினமும் சுத்திகரிக்க செய்விக்கிறாள். கூந்தலில் எண்ணெய் பூசி அழகு படுத்துவது போல் அத்துமாக்களை ஆவியினால் நிறைப்பித்து தினமும் சந்தோஷமாய் இருக்க செய்விக்கிறாள். ஆனபடியால் சபை அனலாகவும் உற்சாகமாகவும் இருக்கிறது. இதுவே மணவாட்டியின் கூந்தலில் எண்ணெய் பூசுவதாகும்.

## 2-ம் வசனம்

உன் பற்கள் மயிர் கத்திரிக்கப்பட்டபின் குளிப்பாட்டப்பட்டு கரையேறுகிறவைகளும் ஒன்றாகிலும் மலடாயிராமல் எல்லாம் இரட்டைக் குட்டி ஈன்றதுமான ஆட்டு மந்தையைப் போலிருக்கிறது

**உன் பற்கள்:—** மணவாளன் மணவாட்டியின் பல்லை புகழ்ந்து பேசுகிறார். உலக பிரகாரம் ஒரு ஸ்திரியை

அழகுள்ளவளென்று புகழ வேண்டுமானால் அவளது பல்லும் அழகுள்ளதாய்க் காணப் பட வேண்டும். இங்கே மணவாளன் பல்லை ஆட்டு மந்தையோடு உவமானித்துப் பேசுகிறார்.

பல்லானது எவ்வித பொருட்களையும் மென்று புசித்து சரீரத்தை வளர்த்துகிறது அதற்காக பல் கெட்டுப் போகாதிருக்க பல்லை சுத்தஞ்செய்து காப்பாற்றுகிறோம். இந்த பல் என்ன வெளிப்படுத்துகிறதென்றால் ஆவிக்குரிய ஜீவியத்தின் வளர்த்திக்காகவும் முன்னேற்றத்திற்காகவும், வேத வசனமாகிய ஜீவ ஆகாரத்தைப் புசிப்பதைக் காட்டுவதாகும். பல்லால் ஆகாரத்தை மென்று சாப்பிடுவதுபோல வேத வசனத்தை நன்றாய் சாப்பிட வேண்டும். யோபு அவருடைய வாயின் வார்த்தைகளை எனக்கு வேண்டிய ஆகாரத்தைப் பார்க்கிலும் அதிகமாய் காத்துக் கொண்டேன் என்கிறார். யோபு 23 : 12 எரேமியா உம்முடைய வார்த்தைகள் கிடைத்த உடனே அவைகளை உட்கொண்டேன் என்கிறார் எரே 15 : 16. சங்கீதக்காரன் உம்முடைய கற்பனைகளை நான் வாஞ்சிக்கிறபடியால் என் வாயை ஆவென்று திறந்து அவைகளுக்கு ஏங்குகிறேன். என்கிறார். சங் 119 : 131. இவ்விதமாக மணவாட்டியும் வேதவாக்கியங்களை நன்றாகப் படித்தும், அவற்றை இருதயத்தில் பதித்து வைத்தும் ஏசாயா 51 : 7 சங் 37 : 31 II தீமோ 2 : 5 தனது ஜீவியத்தை பக்குவப் படுத்தியும் மற்றவர்களுக்கு வேத வசனத்தைப் போதித்தும் வருகிறாள். I தீமோ 4 : 6 II தீமோ 4 : 2 இதுவே பல்லின் ஒரு விதமான அனுபவம்.

**பல்லை எவ்விதம் உவமானப் படுத்துகிறார்.**

**ஆடுகளின் மயிர் கத்தரித்தல்:—** நல்ல மேய்ப்பர்கள் ஆடுகளின் வளர்ச்சிக்காக ஆடுகளின் மயிர்களை அடிக்கடி கத்தரிப்பார்கள். முக்கியமாக மயிரை இரண்டு காரியத்திற்காக கத்தரிப்பார்கள். மூன்று ஆடுகள் குப்பை கூளங்களிலும் தூசிகளிலும் படுத்து தூங்குவதும் மண்களில் புரண்டு உருண்டு ஜீவிப்பதுமான மிருகம், ஆதலால் அதன் முடிகளுக்குள் மண் தூசி முதலிய அழுக்குகள் படிந்திருக்கும், நாள் செல்லச் செல்ல இவ்விதமான அழுக்குகளினால் ஆடுகளின் சரீரத்தில் ஈர்பேன் போன்ற ஜீவிகள் உற்பத்தியாகும். இவைகள் ஆட்டின் இரத்தத்தைக் குடித்து ஆட்டின் பெலனைக் குன்றிப் போகச் செய்விக்கும், இதற்காக ஆட்டிடையன் ஆட்டின் மயிரைக் கத்தரித்து பேன், ஈர், இவற்றைப் போக்கி குளிப்பாட்டி காப்பாற்றுவான்.

இரண்டாவதாக ஆடுகளின் சரீரத்தில் அடர்த்தியான மயிர் இருப்பதால் வேனிற்காலம் வரவும் ஆடுகளின் சரீரத்தில் அதிகமான சூடு ஏறி ஆடுகள் பெலவீனப்படும் அவற்றிலிருந்துக் காப்பாற்றப்பட நல்ல மேய்ப்பர்கள் மயிரைக்கத்தரித்துக் குளிப்பாட்டுவார்கள்.

இவைகள் எவற்றை வெளிப்படுத்துகிறதென்றால் எப்பொழுதும் சுத்திகரிக்கப்பட்ட ஜீவியம் செய்யவும் வல்லமையான ஊழியம் செய்யவும் நம்முடைய ஆவிக்குறிய அனுபவங்களையெல்லாம் அடிக்கடி உடைத்து நொறுக்கி, அதன் பின்னர் ஆவிக்குறிய அனுபவத்திற்குள் மறைந்திருக்கும் துர்க்குணங்களைக் கண்டு அகற்ற வேண்டும் என்பதையும் படிப்பிக்கிறது. அப்பொழுதுதான் நாம் பெலனடைந்து சக்திபடுவோம். அநேகருக்கு பிரயோஜனமாயும் இருப்போம். இதுவே மயிர் கத்தரிக்கப்படுவதைக் காட்டுகிறது.

**குளிப்பாட்டப்பட்டுக் கரையேறுகிறது:—** ஆடுகளை அடிக்கடி குளிப்பாட்டுகிற படியால் அது சுத்தமாக்கப்படுவதோடு அதின் சரீரத்திலிருக்கும் உஷ்ணம் நீங்கி சுகம் அனுபவிக்கிறது. அதனால் சரீரத்திலிருக்கும் பெலவீனம் நீங்கிப் போகிறது.

அதோடு தண்ணீரிலிருந்து கரையேறி வரும்போது ஆடுகளுக்கு இன்னொரு அனுபவம் உண்டாகிறது. ஆடுகள் தண்ணீரிலிருந்து கரையேறி வரும்போது தகான் அதிகமாக பொலிவதுண்டு ஆதி. 30:37, 38. இதை யாக்கோபு அறிந்தான். இது என்னத்தைக் காட்டுகிறது என்றால் விசுவாசி ஆவியினால் நிறைவதால் உண்டாகும் சுத்திகரிப்பை அடையும் போதுதான் அநேக ஆத்துமாக்களையும் கொடுக்கிறார் என்பதை அறிவிக்கிறது. II தீமோத். 2:20,21; யோவா.15:1-5. இதுவே குளிப்பாட்டப்பட்டு கரையேறும் அனுபவம்.

**மலட்டாடு:—** மலட்டாடு என்றால் நன்றாய் புசித்துக் கொழுத்திருந்தாலும் பலன் கொடுப்பதில்லை. இது போலவே பரிசுத்தாவிப் பெற்றிருந்தாலும் நன்றாய் வேத வாக்கியங்களைக்கற்றிருந்தாலும் மற்றவர்களுக்கு பிரயோஜனப்படாத அனுபவத்தைக் காட்டுகிறது. அதாவது ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுவதோ சபைக்குப் பிரயோஜனமாகக் காணிக்கை கொடுப்பதோ நற்காரியங்களை செய்வதோ, ஏழைகளுக்கு இரங்குவதோயாதொன்றிலும் பிரயோஜனப்படாத அனுபவம். இதுதான் மலட்டாட்டின் அனுபவம்.

**இரட்டைக் குட்டி ஈன்ற ஆடு:—** பொதுவாக யாவரும் இரட்டைக் குட்டி ஈனும் ஆடுகளை விருபுவார்கள். ஏனென்றால் நல்ல பலனைக்கொடுக்கிறது. இது ஆத்துமாக்களைப் பெற்றெடுப்பதாகும். ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணிக் கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன். நீதி. 12:30. ஆத்துமாக்களை ஆதாயம் பண்ண பாடுபடவேண்டும். ஆத்துமாக்களுக்காய் ஜெபிக்கவேண்டும். எப்படியாகிலும் ஆத்துமாக்களை கர்த்தரண்டைக் கொண்டு வர நம்மைச் சிறுமைப் படுத்த வேண்டும். அப்பொழுது கர்த்தர் ஆத்துமாக்களைக் கொடுப்பார்.

**இரட்டைக் குட்டி:—** இது இரண்டு விதமான பலன் கொடுப்பதைக் காட்டுகிறது. நல்லவர்களுக்கும், தீயவர்களுக்கும் நன்மை செய்ய பழக வேண்டும். மத்.5:45. அது மாத்திரமல்ல யாவருக்கும் நன்மை செய்வதோடு விசேஷமாக விசுவாச வீட்டாருக்கும் நன்மை செய்ய வேண்டும். கலாத்.6:10. எந்தெந்த விதத்திலெல்லாம் தேவனுடைய நாமத்துக்கு மகிமையாய் ஜீவிக்க வேண்டுமோ, ஆத்துமாக்களுக்குப் பிரயோஜனமாய் நடக்கவேண்டுமோ அவற்றிலெல்லாம் நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். எவ்விதத்திலாகிலும் ஆத்துமாக்களுக்கு பிரயோஜனமாய் இருக்க வேண்டுமோ அவ்விதத்திலெல்லாம் ஆத்துமாக்களுக்குப் பிரயோஜனமாய் இருக்க வேண்டும். இதுவே இரட்டைக்குட்டி.

**மந்தைக்கு சமம் :—** மணவாட்டி வேத வசனத்தில் தேர்ச்சியுற்று தன்னை சுத்திகரித்து ஆவியால் நிரம்பி ஜீவித்தபடியால் கர்த்தர் உபயோகப்படுத்தி விட்டார். தினந்தினம் ஆத்துமாக்களைக் கொடுக்கிறார். கர்த்தர் கொடுத்த ஆத்துமாக்களை தேற்றி வளர்த்தினாள். அவைகள் விருத்தியடைந்து பலுகிப்பெருகினது. இப்போது பெரிய மந்தையைப்போல் பெருகிவிட்டது. இதுவே பல்லின் அனுபவம்.

## 3-ம் வசனம்

உன் உதடுகள் சிவப்பு நூலுக்கு சமானமும் உன் வாக்கு இன்பமுமாயிருக்கிறது. உன் முக்காட்டின் நடுவே உன் கன்னங்கள் வெடித்த மாதுளம்பழம்போலிருக்கிறது.

**உன் உதடு சிவப்பு நூலுக்கு சமானம்:—** மணவாட்டியின் உதட்டை சிவப்பு நூலுக்கு சமானமாய் மணவாளன் பேசுகிறார். சிவப்பு நூல் ஆசரிப்புக்கூடார வாசல் தொங்கு

திரையிலும், ராகாப் வேசியின் வீட்டின் வாசலிலும், தொங்க விட்டிருந்ததைக் காணலாம். இந்த சிவப்பு நூலானது இயேசுவின் இரத்தத்தைக் காட்டுகிறது. அதாவது இரத்தத்தினால் உண்டாகும் இரட்சிப்பைக் காட்டுகிறது. மணவாட்டி சந்திக்கும் ஆத்துமாக்களுக்கெல்லாம் தன் உதட்டினால் இரட்சிப்பையே பேசுகிறாள். வீண் வார்த்தைகளையோ, ஆகாத சம்பாஷணைகளையோ, கிழவிப்பேச்சோ, குறை பேசுவதோ, தூற்றுவதோ, அலப்பி நடப்பதோ இவற்றிற்கு இடங்கொடுப்பதில்லை. பக்தி விருத்திக்கேதுவான திவ்யமான வார்த்தைகளையே மணவாட்டி பேசுகிறாள். ஆதலால் மணவாளன் மணவாட்டியின் உதட்டை மெச்சிப் பேசுகிறார்.

**உன் வாக்கு இன்பமாயிருக்கிறது:—** மணவாட்டி கடுஞ்சொல்லை விட்டு விட்டாள். பட்டயக்குத்து போல் பேசுவதை விட்டு விட்டாள். இப்பொழுது உப்பால் சாரமேற்றப்பட்டதும், கிருபை பொருந்தினதுமான வார்த்தைகளையே வசனிக்கிறாள். கொலோ.4:6. நாவில் பாம்பின் விஷம் இல்லை; கசப்பு இல்லை; பொய் நாவு இல்லை; நாவில் பாலும் தேனும் மாத்திரம் இருக்கிறது. ஆதலால் மணவாட்டியின் வாக்கு இன்பமாயிருக்கிறது.

**உன் கன்னங்கள் வெடித்த மாதளம் பழம்போலிருக்கிறது :—**

மாதளம் பழம் பழுத்தவுடன் வெடிக்கிறது. ஆதலால் ஜனங்கள் வெடித்த மாதளம் பழத்தை விரும்புவார்கள். ஏனென்றால் வெடித்த மாதளம் பழம் புசிப்புக்கு மதுரமாய் இருக்கும். சரீரத்திற்கு நல்ல குளிர்ச்சியைக் கொடுக்கும். இதுபோலவே மணவாட்டியை யாவரும் விரும்புகிறார்கள். அவளோடு ஜீவிக்கிறவர்களுக்கு அவள் இன்பத்தைக் கொடுக்கிறவளாயிருக்கிறாள். வியாகுலத்தோடு அவளண்டை வருகிறவர்கள் ஆறுதலடைகிறார்கள். இப்படிப்பட்ட மகிழ்ச்சியைக் கொடுக்கும் அனுபவமே அவளில் காணப்படுகிறது. சிலரின் முகம் வெடித்த மாதளம் பழம் போன்றதல்ல. மற்றவர்களுக்கு துக்கத்தைக் கொடுக்கக்கூடியதே. இஸ்ரவேலுக்கு மீட்பை உண்டு பண்ணின தாவீதைப் புகழ்ந்து. ஸ்திரிகள் பாடினவுடன் சவுலின் முக நாடி வேறுபட்டது. Iசாமு. 18:7-9 ஆபேலின் காணிக்கை ஏற்றுக்கொள்ளப்படவும் காயீனின் முகநாடி வேறுபட்டது. ஆதி. 4:3-6. செபதேயுவின் தாய் மக்களுக்கு பரத்தில் வலது இடதுபுறம் கேட்ட போது மற்ற சீஷரின் முக நாடி வேறுபட்டது. மத்.20:21-24.

மணவாட்டியோ அப்படிப்பட்டவளல்ல. யாரைப்புகழ்ந்தாலும், யாரை ஏற்றுக்கொண்டாலும், யாருக்குக் கனம் கொடுத்தாலும் அவள் சந்தோஷப் படுகிறவளே. I கொரி. 12:26. மற்றவர்களின் வாழ்வைக் கருதுகிறவள். ஆனபடியால் அவள் சந்தோஷமாயிருக்கிறாள். அகத்தினழகு முகத்தில் காண்கிறது. அவள் வெடித்த மாதளம் பழத்தை விரும்புவது போல அவளை யாவரும் விரும்புகிறார்கள். யாவருக்கும் அவள் மகிழ்ச்சியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறாள். ஆதலால் அவள் கன்னம வெடித்த மாதளம்பழமே.

## 4-ம் வசனம்

உன் கழுத்து, பராக்கிரமசாலிகளின் கேடகங்களாகிய ஆயிரம் பரிசைகள் தூக்கியிருக்கிற ஆயுத சாலையாக்கப்பட்ட தாவீதின் கோபுரம் போலிருக்கிறது.

**உன் கழுத்து ஆயுதம் தூக்கப்பட்ட தாவீதின் கோபுரம் போலிருக்கிறது :—** தாவீது இராஜா நல்ல யுதத வீரனாய் இருந்தது மாத்திரமல்ல, அவன் இராஜ்ய பாரம் நடத்தின காலம் முழுவதும் அதிகமான யுத்தமும் இருந்தது. யுத்தத்திற்கோ அதிகக்குறைவில்லை. ஆதலால் அவன் யுத்தத்திற்கான கேடகங்களையும், பட்டயங்களையும், பரிசைகளையும் செய்வித்து அதைப்பத்திரமாய்ப் பாதுகாக்க ஆயுதசாலைகளையும் உண்டு பண்ணினான். ஆயுதங்களையோ எப்போதும் ஆயுத சாலையில் தொங்க விட்டிருந்தான்.

ஆயுதங்கள் பத்திரமாய் காக்கப்படவும், திடீரென்று சத்துருக்கள் வரும்போது ஆயுதங்களைத் தேடவும், யாருடையதென்று ஆராய்வதற்கும் இடமின்றி அப்படியே எடுத்துக்கொண்டு போவதற்கு உதவியாக ஆயுத சாலையில் தொங்க விட்டிருந்தான். இது போலவே மணவாட்டியின் கழுத்தும் இருந்தது. மற்றவர்களை சுமக்கிறவளாகவும் மற்றவர்களை சத்துருவுக்குக் கொடாதபடி காக்கிறவளுமாயுமிருந்தாள். ஆக்கில்லா, பிரிஸ்கில்லா இவர்கள் என் பிராணனுக்காகக் கழுத்தைக் கொடுத்தார்கள் என்கிறார் பவுல். ரோ. 16:14. அதாவது பவுலின் ஊழியத்தின் முன்னேற்றத்திற்காக என்ன செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் உத்திரவாதத்தோடு செய்தார்கள். எவ்விதமான உதாசினமுமின்றி கழுத்தினால் பாரத்தை சுமப்பது போல் சுமந்தார்கள்.

ஆத்துமாக்களை தேடுவதிலும், ஆதரிப்பதிலும், ஆத்து மாக்களுக்காய் உபவாசிப்பதிலும், கண் விழித்திருப் பதிலும், விழித்திருந்து ஜெபிப்பதிலும், ஊழியத்துக்காய் தங்கள் பணத்தைச் செலவு செய்வதிலும், எப்பொழு தும் கழுத்தைப்போல் எல்லா பாரத்தையும் சுமந்தார் கள். ஆதலால் மணவாட்டியின் கழுத்து கோபுரம் போல் இருந்தது.

## 5-ம் வசனம்

உன் இரண்டு ஸ்தனங்களும் லீலி புஷ்பங்களில் மேயும் வெளிமானின் இரட்டைக் குட்டிக்குச் சமானம்.

**ஸ்தனம் :—** 1. இது ஸ்திரிகளின் அழகைப் பூரணப் படுத்த அமைக்கப்பட்ட அவயவங்களில் ஒன்று. இதனாலும் அவளது அழகு விளங்குகிறது. இது ஆவிக்குறிய மண வாட்டியின் ஆவியின் நிறைவுள்ள ஜீவியத்தைக் காட்டுகிறது. அதாவது ஆவிக்குறிய கனிகளைக் கொடுத்து ஜீவிக்கிறாள். ஆதலால் அவள் பார்வைக்கு அழகுள்ளவளாகவே இருக் கிறாள். அவளது அழகு மற்றவர்களையும் இழுத்துக்கொள்ளக் கூடியதாகவேயிருக்கிறது. அவ்வளவுக்கதிகமாய் அவள் கனி கொடுக்கிறாள். அன்பினால் நிறைந்த ஜீவியம் செய்கிறாள். சகலத்தையும் தாங்கி நம்பி ஜீவிக்கிறாள். பொறுமையிலே, இறுமாப்பில்லை ஆதலால் அவள் அழகு மற்றவர்களைக் கவர்ந்து இழுக்கிறது.

**2. பிள்ளைகளைப் போஷிக்கும் பால் அமைந்தது :—**

தாய் பிள்ளைகளைப் பெற்றவுடன் பிள்ளைகளைப் பாலூட்டி வளர்ப்பதற்காக பால் அவளுக்குள் அமைந்திருக்கிறது. ஆன படியால் பெற்ற தாய் பிள்ளைகளைப் பாலூட்டி வளர்க்கிறாள். இது போலவே மணவாட்டியும் ஆத்துமாக்களைப் பெற் றெடுத்து பால் கொடுக்கிற தாயைப்போல அவர்களைக் காப் பாற்றுகிறாள். பவுல் கூறும்போது பால் கொடுக்கிற தாயா னவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறது போல நாங்கள் உங்கள் மேல் வாஞ்சையாயிருந்து, தேவனுடைய சுவி சேஷத்தை உங்களுக்குக் கொடுத்ததுமல்லாமல் நீங்களெங் களுக்குப் பிரியமானவர்களானபடியினாலே எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருந்தோம் என்கிறார்.

1 தெச. 2:7,8. மணவாட்டி ஆத்துமாக்களுக்காய் இரவு பகல் விழித்திருந்து வேத வசனமாகிய ஞானப்பாலைக் கொடுத்து போஷிக்க வேண்டியவளே. அதற்காக வசனங்களை நன்றாகப்படித்து சேர்த்து வைத்திருக்கிறாள். சமயா, சமயம் ஆத்துமாக்களின் தேவையையறிந்து ஊட்டி வளர்த்து கிறாள். தன்னுடைய சிரமத்தைப் பாராதபடி தாயைப் போல் பாடுபடுகிறாள். எப்படியாகிலும் ஆத்துமாக்களை வளர்க்கப் பிரயாசப்படுகிறாள். இவளே பிள்ளைகளைப் போஷிக்கும் பால் அமைந்தவள்.

3. **வாழ்க்கைப் படாதவளும் மலடியும் போஷிக்கும் பால் இல்லாதவர்கள் :—** அநேகர் ஸ்திரிகளாயிருந்தாலும், போஷிக்கும் பால் இல்லாதவர்களாயிருப்பார்கள். காரணம், சிலர் புருஷனுக்கு வாழ்க்கைப்பட வில்லை. இது பரிசுத்தாவிப் பெற்றுக் கொள்ளவில்லை என்று விளக்குகிறது. இரட்சிக்கப்பட்டிருந்தாலும் பரிசுத்தாவியைப் பெற்றுக் கொள்ளாவிட்டால் மணவாட்டிக்குரிய முத்திரைத் தரிக்கவில்லை. பரிசுத்தாவியை அன்னிய பாஷை அடையாளத்தோடு பெற்றுக்கொள்ளும் போதுதான் மணவாட்டிக்குரிய முத்திரையைத் தரிக்கிறார்கள். எபே. 1:13, 14. இவ்விதமாய் பரிசுத்தாவிப் பெற்றுக் கொள்ளாதபடியால் ஆவியின் அன்பு உள்ளத்திலில்லை. ரோமர். 5:5 ஆனபடியால் ஆவிக்குறிய ஆழமான இரகசியத்தைக் கொடுத்து ஜனத்தைப் பூரணத்துக்கு வழி நடத்தத் திராணியற்றவர்களாயிருக்கிறார்கள்.

வாழ்க்கைப்பட்டும் மலடியாயிருக்கிறவளோ ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுதவளைக் காட்டுகிறது. ஆத்துமாக்களுக்காய் பாடுபட்டு, அழுது அன்னாளைப்போல், பெற்றெடுத்தல்லாமல் ஜீவிக்கிறதில்லை என்ற வைராக்கியம் இல்லாதவர்கள்.

குழந்தையில்லாத அன்னாளை புருஷனாகிய எல்க்கானா எவ்வளவோ ஆற்றினான். இரண்டு பங்கு எல்லாவற்றிலும் கொடுத்தான். அவளோ அதில் திருப்திப்படவுமில்லை. ஆறுதலடையவுமில்லை. அவளோ கர்த்தரிடத்தில் மிகவும் அழுதாள். சமாதானத்தை அடைந்தாள். பிள்ளையைப் பெற்றாள். 1 சாமு. 1:10-1, தற்காலம் அநேகம் பரிசுத்தாவியைப் பெற்றவர்கள் ஆத்தும தாகமற்றவர்களாய் ஜீவிக்கிறார்கள். ஆத்துமாக்களுக்காய் கவலைப்படுவதுமில்லை. அதைப் பற்றி பாரமடைவதுமில்லை. மரணமட்டும் மலடியாகவே ஜீவிக்க விரும்புகிறார்கள். அப்படிப்பட்ட

வர்களுக்கு ஆத்துமாக்களுக்கு ஆகாரம் கொடுக்கப் பாலுமில்லை. ஏனென்றால் அவர்கள் பிள்ளை பெறாத மலடி போன்றவர்களே.

**4. பிள்ளை பெற்றாலும் பாலில்லாதவர்களுமுண்டு :—**

இப்படிப்பட்டவர்கள் பரிசுத்தாவி பெற்றவர்களும் ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணினவர்களுமே. ஆனால் இவர்களுக்கு சுரந்து கொடுக்கப் பாலில்லை ஏனென்றால் சரீரத்தில் இரத்தம் இல்லை. இது ஆவியின் வல்லமையில்லாமையையும் வேத ஞானமில்லாமையையும் காட்டுகிறது.

ஸ்தேவான் விசுவாசத்தினாலும், வல்லமையினாலும் நிறைந்தவனாயிருந்தான். அப். 6:8 மணவாட்டி ஆத்துமாக்களை நடத்திக்கொண்டுபோக வேண்டுமானால் அவளுக்கு ஆவியின் வல்லமையும், வசனத்தை அறிகிற அறிவும் வேண்டும். பவுல், நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையினால் பலப்படவேண்டும் என்கிறார். எபே. 3:16. அதோடு சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து போதிக்க வேண்டுமென்றும் கூறுகிறார். வல்லமையும் வசனத்தை அறியும் அறிவும் இல்லாவிட்டால் சத்துருவை துரத்த முடியாது. பெலவீனரை தாங்க முடியாது. பாலில்லாத அனுபவம் போல் காணப்படும்.

**5. பால் கொடாதவள் :—** தற்கால நாகரிக காலத்தில் அநேக தாய்மார் தாங்கள் பிள்ளைகளைப் பெற்றாலும் தாங்கள் பெலகீனப்படாதிருக்க தங்கள் பாலை தங்கள் பிள்ளைகளுக்குக் கூட கொடுப்பதில்லை. வேறுபாலைக் கொடுத்து தங்கள் பிள்ளைகளை வளர்க்கிறார்கள். இது சுய வெறுப்பில்லாத குணத்தை வெளிப்படுத்துறது.

ஆத்துமாக்கள் வேண்டும். அவர்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர வேண்டும். சபை நன்றாயிருக்க வேண்டும். இவற்றிற்கெல்லாம் ஆசையுண்டு. ஆனால் அதற்காகத் தங்களை வெறுக்கவோ, குப்பையாக்கவோ விரும்பார்கள். பால் கொடுக்க வேறு யாரையாவது, அழைத்து அவர்களை வளர்த்த முயலுவார்கள். அதாவது அதற்கேற்ற ஊழியர் எங்கேயாவது உண்டானால் கூலிக்கு அவர்களை அழைத்து போதனைகளைக் கொடுத்து வளர்த்த முயலுவார்கள்.

மணவாட்டியோ அவ்வித அனுபவமுள்ளவளல்ல. ஆத்துமாக்களுக்காய்த் தன்னை வெறுக்கிறவள். ஜீவனைக் கொடுக்கிறவளே ஜீவனை சம்பாதிப்பாள். ஏசா 43:4 ஆகவே மணவாட்டி ஆத்துமாக்களுக்காய் ஜீவனைக் கொடுத்த படியால் அவளது ஜீவியம் பிரயோஜனமுள்ளதும் மணவாளனை சந்தோஷிப்பிக்கிறது மாயிருக்கிறது. ஆதலால் மணவாளன் அவளைப் புகழுகிறார்.

## 6-ம் வசனம்

பகல் குளிர்ச்சியாகி நிழல் சாய்ந்து போகும் வரைக்கும், நான் வெள்ளைப் போள மலையிலும், சாம்பிராணி மலையிலும் போயிருப்பேன்.

மணவாட்டியின் ஆவிக்குரிய அனுபவங்களை மணவாளன் புகழ்ந்து பேசினார். இதைக் கேட்டவுடன் அவள் உள்ளத்தில் பெருமைக்கு இடங்கொடாமல்—பகல் காலமாகிய இந்த சந்தோஷமான காலத்திலும் தன்னை கிறிஸ்துவோடுள்ள ஐக்கியத்திலிருந்து பிரிப்பதற்கு ஏராளமான சோதனைகளிருக்கிறது. ஆன படியினால் சும்மாயிருப்பது சரியில்லை, என்று அறிந்து சந்தோஷமான காலத்திலேயும், தன்னைக் காத்துக் கொள்ள வேண்டுமென்று எண்ணி அவள் வெள்ளைப் போள மலைக்கும், சாம்பிராணி மலைக்கும் போகத் தீர்மானித்துக் கொண்டாள்.

வெள்ளைப் போளம் இயேசுவின் இரத்தத்தையும் சாம்பிராணி துதிப்பதையும் காட்டும். அதாவது அவள் ஓய்வில்லாமல் இயேசுவின் இரத்தத்திலும் ஸ்தோத்திரத்திலும் விழித்திருப்பேன் என்று தீர்மானித்துக் கொண்டாள். இயேசுவின் இரத்தத்தினால் தான் சாத்தானை ஜெயிக்க முடியும். வெளி 12 : 11 துதிப்பதால் தேவனுடைய கிருபையும் அதிகமாகப் பெருகும். 2 கொரி 4 : 15. இதை மணவாட்டி புரிந்து கொண்டாள். அதை எப்பொழுதும் அனுபவமாக்கத் தீர்மானித்துக் கொண்டாள். அது மாத்திரமல்ல இந்த அனுபவத்தைவிட்டு விலகுவதில்லையென்னும் உறுதி பண்ணிக் கொண்டாள். இதுவே வெள்ளைப்போள மலையிலும், சாம்பிராணி மலையிலும் போயிருப்பதாகும்.

## 7-ம் வசனம்

என் பிரியமே நீ பூரண ரூபவதி உன்னில் பழுதொன்றுமில்லை. உலகப் பிரகாரம் ஒரு ஸ்திரியை அழகியென்று

சொல்ல வேண்டுமானால் அவளது அவயவங்கள் குறையற்றதாக இருக்க வேண்டும். அப்படியே ஆவிக்குரிய மணவாட்டியை மணவாளன் புகழத்தக்க விதத்தில் அவளது கிரியைகளெல்லாம் காணப்படுகிறது. ஆதலால் அவளது கிரியைகளை, அவளது அவயவங்களைக் கொண்டு புகழ்ந்து பேசுகிறார். மணவாட்டியின் கண்கள், கூந்தல், பற்கள், உதடு, கழுத்து, கன்னம், ஸ்தனங்கள் இவற்றைடெல்லாம் புகழ்ந்துரைக்கிறார். அவளோ இவற்றையெல்லாம் கேட்டும் தன்னை ஒன்றுமில்லையென்றே எண்ணி இயேசுவின் இரத்தத்தில் மறையவும், அதிகக் கிருபைகளைப் பெற்றுக் கொள்ளவும், ஸ்தோத்திரத்தில் தரித்திருக்கவும் தீர்மானித்து விட்டாள். இதைக்கண்ட மணவாளன் அவளைப் பார்த்து என் பிரியமே நீ பூரண ரூபவதி உன்னில் பழுதொன்றுமில்லை யென்கிறார்.

ஆகவே இயேசுவும் உங்கள், பிதா பூரண சற்குணராயிருப்பதுபோல் நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்களென்றும், மத். 5 : 48 கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்க பூரண புருஷராயிருங்களென்றும், எபே 4:11 நான் பரிசுத்தர் ஆகையால் உங்கள் நடக்கைகள் யாவற்றிலும் பரிசுத்தராயிருங்கள் என்றும் 1 பேது 1 : 15 நம்முடைய கர்த்தராகிய இயேசு வரும்போது உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் குற்ற மற்றதாயிருக்க வேண்டுமென்றும் கூறியிருக்கிறார். 1 தெச 5 : 23. ஆதலால் மணவாட்டி உள்ளும், புறமும் பூரண பரிசுத்த முள்ளவளாகவே இருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்களே சாட்சியும் பெற்றவர்கள். இவ்விதமான விசுவாசியைப் பார்த்தே பூரண ரூபவதி உன்னில் பழுதொன்றுமில்லை என்கிறார். இவளே மணவாட்டி.

## 8-ம் வசனம்

லீபனோனிலிருந்து என்னோடேவா! என் மணவாளியே!! லீபனோனிலிருந்து என்னோடேவா! அமனாவின் கொடுமுடியிலிருந்தும், சேனீர் எர்மோனின் கொடுமுடியிலிருந்தும், சிங்கங்களின் தாபரங்களிலிருந்தும், சிவிங்கிகளின் மலைகளிருந்தும் கீழே பார்.

**லீபனோனிலிந்து என்னோடேவா! லீபனோனிலிருந்து என்னோடேவா!**

மணவாளன் மணவாட்டியைப் பார்த்து பரிசுத்தமாய் ஜீவிப்பதாக சாட்சி பகர்ந்தார். ஆயினும் அவளது பரிசுத்தம் இமைப்பொழுதில் கெட்டுப் போகுமெனவும் அவர் அறிவார். ஆதலால் அவளை லீபனோனிலிருந்து என்னோடே வா, லீபனோனிலிருந்து என்னோடே வா என்று இரட்டித்து அழைத்தார். ஏனென்றால் தாமதியாதே சீக்கிரமாய் மணவாளனோடே புறப்படு, சாத்தான் அழித்துப்போடுவான் எனக் கண்டிப்பாய் அழைத்தார்.

**லீபனோன்:—** இது பரிசுத்தத்தை வெளிப்படுத்துமிடம். லீபனோன் எப்பொழுதும் பனிநிறைந்த இடம். பனி வெண்மையைக் காட்டும். ஆதலால் பரிசுத்தத்தைக் காப்பாற்றிக் கொள் என எச்சரித்து அவரை பின்தொடர்ந்து போகும் படியாக அழைத்தார்.

**அமனாவின் கொடுமுடியிலிருந்து:—** இதன் பொருள் உண்மையென்பது உள்ளத்தில் உண்மையிருந்தால் தான், பரிசுத்தத்தைக் காப்பாற்றலாம். உண்மையுள்ளவனைக் கர்த்தர் கைவிடுவதில்லை. சங் 84 : 11 அப்படிப் பட்டவனைக் கர்த்தர் உயர்த்துகிறார். கொஞ்சத்தில் உண்மையாயிருந்தால், அதிகத்தில் அதிகாரியாய் வைப்பேன் என்றார். ஆதலால் உண்மையுள்ளவர்களாயிருக்கவும் எச்சரிக்கிறார்.

**சேனீர் எர்மோன் கொடுமுடியிலிருந்து:—** இதன் பொருள் யுத்தாயுதங்களால் அழிக்கும் வல்லமை என்பதாகும். மணவாட்டி சர்வாயுதவர்க்கம் தரித்தவளாயிருக்க வேண்டும். எபே 6 : 11. ஏனென்றால் பரிசுத்தத்துக்கு விரோதமாய்ப் போராடும் சத்துருவை அழிக்கப் போராயுதங்களும் வேண்டும். ஆதலால் தான் மணவாளன் சர்வாயுத வாக்குகளை எப்பொழுதும் தரித்துக் கொண்டிரு என்றும் எச்சரித்தார்.

**சிங்கங்களின் தாவரங்களிலிருந்தும் :—** சிங்கம் இது சாத்தானைக் காட்டுகிறது. அவனைக் கெர்சிக்கிற சிங்கமென்றும் கூறியிருக்கிறது. I பேது 5 : 8 இந்த சிங்கம் அலைந்து திரியும் தன்மையுள்ளது. ஆமோ 3:4 இதைப் பற்றியும் கவனமாயிரு எப்போதும் அவன் உன் மத்தியில் இருக்கிறான் என்பதையும் எச்சரித்தார்.

**சிவிங்கி:—** இது அதிவேகமாக ஓடும் தன்மையுள்ளது ஆபகூக் 1 : 8 இதற்கு பதிவிருக்கும் சுபாவமுண்டு. ஓசி 13:7 பட்டணங்களை நோக்கிக் கொண்டிருக்கும் குணமுமுண்டு. எரே 5 : 8.

ஏனென்றால் பரிசுத்தத்தை நாடிப் போகிறவர்களை இல்லாமலாக்கவே கெர்ச்சிக்கிற சிங்கமாகிய சாத்தான் அவர்கள் மத்தியிலே தாபரமாகவே இருந்து சுற்றி நடக்கிறான். சிவிங்கியைப்போல எப்பொழுது நுழையலாம், ஏதாவது வழியுண்டா; என்று பதிவிருந்து யோசித்துக் கொண்டு சமயம் கிடைக்கும் போது, அதிவேகமாக உள்ளே பிரவேசித்து, அஸ்திபாரங்களை அழித்துப் போடுவதற்காக காத்துக் கொண்டேயிருக்கிறான்.

ஆதலால் நீ எப்பொழுதும் **கீழேபார்.** அதாவது மரண பரியந்தம் தாழ்த்தின இயேசுவைபோல் எல்லா விதத்திலும் தாழ்மையைத் தரித்துக் கொள் என்கிறார். தாழ்த்தும்போது நியாய மற்றவராய்க் காணப்பட்ட இயேசுவைப்போல தாழ்மையைத் தரித்துக் கொள்என்கிறார். உள்ளத்தில் மனத்தாழ்மை மட்டுமல்ல வெகு மனத்தாழ்மையுமிருக்க வேண்டும். சாத்தான் புகழ்வான். உயர்த்துவான். பின்னர் அற்பமாய்ப் பேசுவான். குற்றவாளியாக்குவான். அப்போது ஊமையனாகவும், செவிடனாகவும் இருக்க வேண்டும். இதுவே தாழ்மை. இதில் உறுதியாயிரு. மேலேபார்க்காதே. அதாவது உயர்வை எண்ணாதே. மனதில் கூட எடாதே. எப்போதும் கீழேபார். அப்போது பூரண ஜெயத்தைக் காண்பாய் என மணவாட்டியை எச்சரித்து உணர்த்தினார்.

## 9-ம் வசனம்

என் இருதயத்தைக்கவர்ந்து கொண்டாய்! என் சகோதரியே! என் மணவாளியே! உன் கண்களில் ஒன்றினாலும் உன் கழுத்திலுள்ள ஒரு சரப்பணியினாலும் என் இருதயத்தைக் கவர்ந்து கொண்டாய்.

மணவாட்டி நாளுக்கு நாள் பரிசுத்தத்தில் முன்னேறுகிறாள். மணவாளன் கொடுக்கும் ஆலோசனையைக்கேட்டு அதன்படியே செய்கிறாள். அவளது தாழ்மையும் மணவாள

னுக்கு கீழ்ப்படிவதும் அவனை முன்னிலும் அதிகமாய் நேசிக்கச் செய்கிறது. அது மாத்திரமல்ல அவள் முதலில், அவரை இரகசியத்தில் மாத்திரம் நேசித்தாள். அதாவது உலக மணவாட்டி, தனது புருஷனை இரகசியத்தில் நேசிப்பதுபோல நேசித்தாள். இப்பொழுதோ ஒரு சகோதரி தன் சகோதரனை பகிரங்கமாய் யாவரும் காண நேசிப்பதுபோல, காண்கிற யாவருக்கும், வெளியரங்கமாய், சாட்சி சொல்லி ஆத்தும மணவாளனை நேசிக்க ஆரம்பித்து விட்டாள். ஆதலால் அவர் அன்பு அவள்மீது பெருகி விட்டது. தாங்க முடியாமல் சகோதரியே ! மணவாளியே ! என் இருதயத்தைக் கவர்ந்து கொண்டாய் என்கிறார்.

**உன்கண்களில் ஒன்றினல் இருதயத்தைக் கவர்ந்து கொண்டாய்:—** உலக பிரகாரமான கண்ணுக்கு மற்றவர்களைக் கவர்ந்து கொள்ளும் தன்மையுணடு. இங்கே கூறப்பட்ட **கண்** ஆவிக்குரிய கண். ஆத்துமாக்களுக்காயும், ஊழியங்களுக்காயும் பாரப்பட்டு கண்ணீர் விடுவதும், உன்னதத்தைப் பார்ப்பதும், மணவாளனிடம் ஆலோசனைக் கேட்பதும், அழுகையோடு அவரையே காத்திருந்து ஜெபிக்கவும் செய்கிறாள். ஆதலால் மணவாளன் அவளது கண்ணீரைக் கண்டு அனுதாபப்படுகிறார். அவளை துக்கத்தோடு அனுப்ப மனமில்லை. அவளுக்கு பதில் கொடுக்க அனுதாபத்தோடு வருகிறார். அப்பொழுது மணவாளன் மணவாட்டியைப் பார்த்து, உன் கண்களிலொன்றினல் என்னை இழுத்துக் கொண்டாய் என்கிறார்.

ஒரு ஸ்திரிக்கு இரண்டு கண்களிருக்க ஒரு கண்ணினல் என்னைக்கவர்ந்து கொண்டாய் என்றுரைக்கக் காரணமென்னவென்றால் ஒரு கண்ணினல் மணவாளனைப் பார்த்தாலும், அதாவது ஆலோசனைக் கேட்டு எதிர்பார்ப்புடன் இருந்தாலும் சிலவேளை சுயசித்தத்தையும் செய்கிறாள். இவ்வித சுயசித்தம் செய்வதே மற்ற கண்.

**கழுத்திலுள்ள சரப்பணியினலும் இருதயத்தைக் கவர்ந்து கொண்டாய்:—** உலக பிரகாரமுள்ள மாலைகளையணிவதாலுண்டாகும் அழகு மற்றவர்களைக் கவர்ந்து கொள்ளுவதைப் போல ஆத்தும மணவாளனை மணவாட்டியின் சரப்பணி கவர்ந்து கொண்டது என்கிறார். மணவாட்டியின் சரப்பணி என்றால் கர்த்தருக்குப் பயந்து அவருடைய போதனைக்குக் கீழ்ப்படிந்து நடப்பதே அவளது சரப்பணி. நீதி 1:7-9. மண

வாட்டி எப்பொழுதும் தனது நாயகனின் ஆலோசனையைக் கேட்டு அவரைப்போல் தாழ்த்தியே நடக்கிறாள். அவளது தாழ்மையே அவளது அழகிய மாலை. விசுவாசியின் மனத் தாழ்மையே அவர்களது அலங்காரம். இது மணவாளனை இழுத்துக் கொண்டது.

தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபையளிக்கிறவரே, நமது கர்த்தர் என் நாமம் தரிக்கப்பட்ட ஜனம் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, தங்கள் பொல்லாத வழியை விட்டுத் தேடினால், அவர்கள் தேசத்துக்கு சேமத்தைக் கொடுப்பேன் என்கிறார். 2 நாளா 7 : 14. ஆனபடியால் தாழ்மையில் பிரியப்படுகிறவரே நமது கர்த்தர் என்று அறிந்து, தாழ்மையை ஆபரணமாய் அணிந்துகொள்ள வேண்டும். இந்த தாழ்மையே அவளது சரப்பணி.

## 10-ம் வசனம்

உன் நேசம் எவ்வளவு இன்பமாயிருக்கிறது. என் சகோதரியே, என் மணவாளியே, திராட்சை ரசத்தைப் பார்க்கிலும் உன் நேசம் எவ்வளவு மதுரமாயிருக்கிறது சகல கந்தவர்க்கங்களைப் பார்க்கிலும் எவ்வளவு வாசனையாயிருக்கிறது. உன்னதபாட்டு 1-ம் 3-ம் வசனங்களைப்பார்க்கவும்.

## 11-ம் வசனம்

என் மணவாளியே உன் உதடுகளிலிருந்து தேன் ஒழுகுகிறது. உன் நாவின் கீழ் தேனும் பாலும் இருக்கிறது. உன் வஸ்திரங்களின் வாசனை, லீபனோனின் வாசனைக்கு ஒப்பாயிருக்கிறது.

**உன் உதடுகளிலிருந்து தேன் ஒழுகுகிறது. நாவின் கீழ் பாலும் தேனும் இருக்கிறது :—** வேத வசனங்களை பலகாரியங்களோடு ஒப்புமைப்படுத்திக் கூறியிருக்கிறார். ஒவ்வொரு ஆவிக்குரிய காரியங்களை விளக்க அந்தந்த பொருட்களோடு ஒப்பிட்டிருக்கிறார். இங்கே பாலையும், தேனையும் எடுத்துக் காட்டியிருக்கிறார். கர்த்தருடைய வேதம் தேனிலும் தேன் கூட்டிலிருந்தொழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதாயிருக்கிறது. சங். 19:10 நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த

குழந்தைகளைப்போல திருவசனமாகிய, களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள். I பேது. 2:3.

உதடும் நாவும் சேர்ந்த வார்த்தைகளை உச்சரிக்க ஒத்துழைக்கிறது. மணவாட்டியின் நாவின் கீழ், பாலும் தேனும் இருக்கிறது. உதட்டிலிருந்து தேன் ஒழுகுகிறது.

**தேன்** :— மதுரமான ஆகாரம். இதை விரும்பாத ஒருவர் உண்டென்று சொல்ல முடியாது. யாவரும் விரும்பக் கூடிய ஆகாரம். இதை மனிதர் சாதாரணமாகவே உபயோகப்பபடுத்துவார்கள். அப்படியே பாலையும், பொதுவாக யாவரும் உபயோகப்படுத்துவார்கள். ஆனால் தேனையும் பாலையும் உபயோகப்படுத்துவது எதற்கென்றால்,

1. பெலவீனமானவர்கள் பெலனடையும்படியாக பாலையும் தேனையும் கலந்து புசிப்பார்கள்.

2. வியாதியஸ்தர் தங்கள் வியாதி காலத்தில் தங்கள் வியாதி நீங்கவும் கலந்து புசிப்பார்கள்.

3. சுகமுள்ளவர்கள் பெலத்தின்மேல் பெலனடையப் புசிப்பார்கள்.

ஆகவே மணவாட்டியின் உதட்டிலும், நாவிலும்,தேனும் பாலும்தான் இருக்கிறது. வேதவசனமே தேனும் பாலுமாகும். அவள் எங்கு சென்றாலும், யாரோடு பேசினாலும் தேன்போல், மதுரம் கொடுக்கத்தக்கதான. வேத வசனங்களைக் கொடுத்து, அவர்களை ரசிக்கச் செய்கிறாள். சோர்ந்துபோய் இனிமேல் ஆவிக்குரிய ஜீவியம் செய்ய முடியாதென்று தளர்ந்திருக்கிறவர்களுக்கு அருமையான தேனும் பாலும் போன்ற திடப்படுத்தத்தக்கதான வேதவசனங்களைக் கொடுத்து, திடப்படுத்துகிறார்.

பாவத்தில் விழுந்து தவித்து நிற்கிறவர்களுக்கு அதற்குரிய ஜீவ வார்த்தைகளைக் கொடுத்து அவர்களைப் பின்மாற்றத்திலிருந்து, தூக்கியெழுப்பி முன்னேற்றுகிறாள்.

விசுவாசிகளைச் சந்திக்கும்போது பரிசுத்தமடைவதற்கான ஆவிக்குரிய ஆகாரங்களைக் கொடுத்து உற்சாகப்படுத்துகிறாள். ஆகவே மணவாட்டியின் நாவில் வேதவசனம் நிறைந்

திருக்கிறது. ஆசாரியனது உதட்டில் வேதத்தைத் தேடுவ வார்கள். அவன் சேனைகளின் கர்த்தரின் தூதன். மல். 2:7.

அநேக விசுவாசிகளில் நாவில் இவ்வித அனுபவங்களைக் காணமுடியாது. அவர்களின் நாவின் கீழ், பாம்பின் விஷம் இருப்பதைக் காணலாம். ரோமர் 3:13. விஷம் மற்றவர்களை உயிர்ப்பிக்கிறதற்குப் பதிலாக அவர்களை அண்டுகிறவர்களைக் கொல்லுகிறது. சங்கீதக்காரன் இந்த நாவைக் கருக்கான பட்டயத்தோடும், சவரன் கத்தியோடும் கூறுகிறார். சங். 57:4, 52:2 இதை ஞானி கூர்மையான அம்பு என்கிறார். இவ்வித நாவுகள் இச்சகம் பேசி சங். 5:9 பொய்பேசி, புறங்கூறி நீதி 25:23 இருமனதாய்ப் பேசி சங். 12:2 இவ்வித அறுவறுப்பு களால் நிறைந்திருக்கிறது என்கிறார். இவற்றை மணவாளன் வெறுக்கிறார். மணவாட்டியோ, மணவாளன் வெறுக்கும் துர்க்குணத்தை வெறுத்தபடியால், யாவரும் விரும்பத்தக்க தான தேனும் பாலும் நிறைந்த நாவுடையவளாயிருக்கிறாள் என்கிறார். இதுவே மணவாட்டியின் நாவின் அனுபவம்.

**உன் வஸ்திரவாசனை லீபனோனின் வாசனை:—** லீபனோனில் அழகிய வாசனை கொடுக்கும் புஷ்பங்களும், வாசனை மரச் சோலைகளும் உண்டு. குளிர்ந்த காற்று ஓயாமல் அடித்துக் கொண்டிருக்கும். அக்காற்றுகளில், புஷ்பங்களின் வாசனை கலந்திருப்பதால் முகருவதற்கு ஆனந்தமாயிருக்கும். லீபனோ னின் மரச்சோலைகளில் உட்கார்ந்து காற்றை உட்கொள்ளுவ தற்காக யாவரும் விரும்புவார்கள். இதுபோலவே மணவா ளன் மணவாட்டியின் வஸ்திரமும் வாசனை வீசுவதாகக் கூறுகிறார்.

**மணவாட்டியின் வஸ்திரம் :—** மணவாட்டிக்கு அநேக வித வஸ்திரங்களுண்டு. அவை இரட்சிப்பின் வஸ்திரம் ஏசாயா 61:10 துதியின் உடை ஏசாயா 61:3 நீதியின் சால்வை வெளி. 19:8 சித்திரத் தையலாடை சங். 45:14 என்பன. இந்த வஸ்திரங்கள் அவளில் வாசனை கொடுத்துக் கொண்டே யிருக்கிறது. அதாவது யாவரும் விரும்பத்தக்க விதத்தில் ஜீவிக்கிறாள். மிகுந்த பொறுமையிலும்,உபத்திரவங்களிலும், நெருக்கங்களிலும், இடுக்கண்ணிலும், அடிகளிலும், காவல் களிலும், கலகங்களிலும், பிரயாசத்திலும், கண் விழிப்பிலும், உபவாசங்களிலும், கற்பிலும், அறிவிலும், நீடிய சாந்தத் திலும், தயவிலும், பரிசுத்தாவியிலும், மாயமற்ற அன்பிலும், கனத்திலும், கனவீனத்திலும், துர்க்கீர்த்தியிலும், நற்கீர்த்தி

யிலும், எத்தரென்னப்பட்டாலும், சகலத்திலும் எங்களைக் குற்றமற்றவர்களென்று விளங்கப்பண்ணுகிறோம். II கொரி. 6:3-10. எல்லா இடங்களிலும், எவ்வித சந்தர்ப்பத்திலும், மணவாட்டி குற்றமற்ற ஜீவிதத்தை விளங்கப்பண்ணுகிறாள். இதுவே உலகத்துக்கு வாசனைக்கொடுப்பதாகும்.

## 12-ம் வசனம்

என் சகோதரியே, என் மணவாளியே, நீ அடைக்கப்பட்ட தோட்டமும், மறைவு கட்டப்பட்ட நீரூற்றும், முத்திரிக்கப்பட்ட கிணறுமாயிருக்கிறாய்.

**அடைக்கப்பட்ட தோட்டம் :—** ஒருவன் ஒரு தோட்டத்தை உண்டுபண்ணினால் அதை அடைத்து காவந்து பண்ணி வைத்திருக்க வேண்டும். அவன் எவ்வளவு பிரயாசத்தோடு, தோட்டத்தை உண்டுபண்ணினாலும், வேலி போடாவிட்டால் அவன் பட்டபிரயாசப் வீணாகவே போகும். ஏனென்றால், மாடு, ஆடு, பன்றி இவ்வித மிருகங்கள் தோட்டத்திற்குள் சென்று பயிரை அழித்துவிடும். திருடரும் பயமின்றி உள்ளே புகுந்து திருடிக் கொண்டு போய்விடுவார்கள். அப்போது தோட்டம் அழிந்துபோகும். ஆதலால் தோட்டம் காக்கப்பட தோட்டத்தைச் சுற்றி வேலி கட்டவேண்டும்.

இது மணவாட்டி ஆவிக்குரியவளாய் விளங்க வேண்டுமானால், அவளுக்குத் தோட்டம் போன்ற காவல் வேண்டும். அவளை பின்மாற்றத்துக்குக் கொண்டுபோக, எப்பொழுதும் எதிராளி உண்டு. ஆதலால் அவள் காவல் காக்கப்பட வேண்டும். கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா. கர்த்தர் நகரத்தைக் காவாராகில், காவலாளர் விழித்திருப்பது விருதா. சங். 127:1,2 ஆதலால் மணவாட்டிக்குக் கர்த்தரே காவலாளியாக இருக்க வேண்டும். அப்பொழுது அவள் காக்கப்படுவாள்.

**மறைவு கட்டப்பட்ட நீரூற்று :—** நீரூற்று சுத்தமாயிருப்பதற்காக அதற்கும் மறைவு கட்டியிருக்க வேண்டும். இல்லாவிட்டால் பாமர ஜனங்கள், பானை சட்டிகளைக் கழுவி, நீரூற்றை அசுத்தஞ் செய்வார்கள். இதோடு, ஆடு மாடு, தண்ணீர் குடிக்க நீரூற்றில் இறங்கித் தண்ணீரைக் கலக்கிக் கெடுத்துவிடும். நீரூற்றின் கரைகளும் உடைந்துபோகும். இதற்காக

நீரூற்றை மறைவு கட்டிவைத்திருக்க வேண்டும். அப்படியானால் நீரூற்று சுத்தமாயிருக்கும். மணவாட்டியின் நீரூற்று பரிசுத்தாவியானவரே. ஒருவன் பரிசுத்தாவி பெற்றால், அந்த வல்லமை நின்றுபோகாமல் நீரூற்றுபோல், ஊறிக்கொண்டேயிருக்க வேண்டும். அப்போது அநேகர் வந்து தாகத்தைத் தீர்த்துக் கொள்வார்கள். ஏசாய கூறும்பொழுது அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்த்து, பசியுள்ளவனுக்கு ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுத்து, வஸ்திரமில்லாதவனுக்கு வஸ்திரம் கொடுத்து, மாம்சமானவனுக்கு ஒளிக்காமலிருந்து, ஜீவித்தால் வற்றாத நீரூற்றைப்போலிருப்பாய் என்கிறார். ஏசாயா 58:6-11

அநேகர் பரிசுத்தாவி பெற்றாலும் வற்றிப்போகிற நீரூற்றாயிருக்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் தங்களுக்குரியவைகளைத் தேடுகிறவர்கள். பிலிப். 2:21 சுகபோக பிரியர் தற்பிரியர் ஆனபடியால் இப்படிப்பட்டவர்கள் பிரயோஜனப்படாமல் போகிறார்கள். மணவாட்டியோ தன்னை தியாகம் செய்து உலகத்தை வெறுத்து, அற்பமும் குப்பையுமாய் எண்ணிக் கொண்டிருக்கிறபடியால், அவள் உலகத்துக்கு, பிரயோஜனப்படுகிறாள். அவள் உலகத்துக்குப் பிரயோஜனப்படுகிறாள். வற்றாத நீரூற்றாயிருக்கிறாள். அதுமாத்திரமல்ல, அவள் தன் வாய்க்கு காவல் வைத்து சங். 17:3 தன் நாவை கடிவாளத்தால் கட்டி, சங். 39:1 எல்லா அவயவங்களையும் கீழ்ப்படுத்தி, II கொரி. 10:5 மறைவு கட்டப்பட்ட நீரூற்றுப் போல் ஜீவிக்கிறாள். ஆனபடியால் கறைபடாதபடி காக்கப்படுகிறாள். அநேகருக்கு பிரயோஜனப்படவும் செய்கிறாள். இதுவே மறைவு கட்டப்பட்ட நீரூற்று.

**முத்திரிக்கப்பட்ட கிணறு :—** கிணறுகளும் மனிதரின் உபயோகத்துக்காக வெட்டப்பட்டவைகள். கிணற்றிலிருந்து தண்ணீரை மொண்டெடுக்கும்போது, தண்ணீர் குறைகிறது. பின்னர் தண்ணீர் ஊறிக் கொள்கிறது. இதுபோலவே மணவாட்டியும் இருக்கிறாள். கர்த்தருடைய நாமத்துக்காக, வியாதியஸ்தருக்காகவும், பிசாசினால் வாதிக்கப்படுகிறவர்களுக்காகவும் ஊக்கமாய் ஜெபிக்கிறாள். சாட்சி கொடுக்கிறாள். நல்ல தூது கொடுக்கிறாள். பின்னர் தேவ சமூகம் சென்று தாழ்த்தி ஜெபித்து ஆவியில் நிரப்புகிறாள். மறுபடியும் மறுபடியும் புதுப்பித்துக் கொண்டே போகிறாள். ஆனபடியால் அநேகருக்குப் பிரயோஜனப்படுகிறாள்.

அதோடு இவள் முத்திரிக்கப்பட்ட கிணறுபோல் இருக்கிறாள். அதாவது முத்திரை குத்தியிருக்கிறபடியால் இன்

ளுருக்கு உடைமை என்று உறுதிப்படுகிறது. அப்படியே மணவாட்டியும், பரிசுத்தாவியாகிய முத்திரையைப் பெற்றிருக்கிறபடியால், இயேசு மணவாளனுக்கு வாழ்க்கைப்பட உறுதிபடுத்தப்பட்டிருக்கிருள், என்று தெளிவாகிறது. அது மாத்திரமல்ல பரிசுத்தாவியாகிய முத்திரையை துக்கப் படுத்தாதபடி காத்துக்கொண்டுமிருக்கிருள். ஆனபடியால் முத்திரிக்கப்பட்ட கிணறு போலவேதான் இருக்கிருள்.

## 13-ம் 14-ம் வசனம்

உன் தோட்டம் மாதளஞ் செடிகளும், அருமையான, கனிமரங்களும், மருதோன்றிச் செடிகளும், நளதமும், குங்குமமும், வசம்பும், இலவங்கமும், சகலவித தூபவர்க்க மரங்களும் வெள்ளைபோள செடிகளும், சந்தன விருச்சங்களும், சகலவித கந்தவர்க்கச் செடிகளுமுள்ள சிங்கார வனமாயிருக்கிறது.

தோட்டம் தேவனுடைய சபையைக் காட்டுகிறது. மணவாட்டியின் உழைப்பால், ஒரு சபையை உண்டுபண்ணியிருக்கிருள். சபையில் அநேகவிதமான அனுபவமுள்ள விசுவாசிகளுண்டு. அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான பிரயோஜனத்தைக் கொடுக்கிறவர்களாயிருக்கிருர்கள். அவர்களது நற்கிரியைகள் யாவரையும் மகிழ்விக்கிறது. குணப்படாத கிறிஸ்தவர்களும், புற மதஸ்தர்களும் இவர்களை நாடி வந்து, இவர்களோடு ஜெபிப்பதும், ஆறுதலான வார்த்தைகளைக் கேட்பதும், அவர்களோடு உறவாடி மகிழ்ந்து ஆனந்திக்க விரும்புவதும், சிங்கார வனத்தில் சென்று சந்தோஷித்து ஆனந்திப்பதுபோல் இருக்கிறது. இந்த சந்தோஷத்தைக் கொடுக்கும் சபையே மணவாட்டியின் தோட்டம்.

## 15-ம் வசனம்

தோட்டங்களுக்கு நீரூற்றும், ஜீவதண்ணீரின் துரவும், லீபனேனிலிருந்து ஓடிவரும், வாய்க்கால்களும் உண்டாயிருக்கிறது.

தோட்டமிருந்தால் தோட்டத்துக்கு எப்பொழுதும் தண்ணீர் வேண்டும். தண்ணீர் இருக்குமானல் தோட்டம் செழித்

தோங்கும். இந்தத் தோட்டமாகிய சபையில் ஆவிக்குரிய வளர்த்தியடைவதற்காக நீரூற்றும் துரவும் வாய்க்காலும் இருப்பதாகக் கூறியிருக்கிறார். இவை மூன்று முக்கிய அனுபவத்தைக் காட்டுகிறது.

**நீரூற்று :** இது கடும் வெயில் காலம் தவிர எல்லா வேளைகளிலும் தண்ணீர் ஊறி செழிப்பாக்கும் தன்மை உடையது. அதாவது சபை சமாதானத்தோடும், அன்போடும் இருக்கும் வேளையிலும் ஆவியானவர் சபைகளில் கிரியை செய்துகொண்டிருக்கிறார் என்பதைக் காட்டுகிறது.

**துரவு :** தண்ணீர்க் குறைந்த இடங்களில் தண்ணீர் கிடைக்க பூமியின் ஆழத்தில் துரவுகளைத் தோண்டி தண்ணீர் மொண்டெடுப்பார்கள். இது பரிசுத்தாவியானவர் கிரியை செய்வதற்காக விசுவாசிகள் ஆழமான பிரதிஷ்டைகள் செய்யவேண்டுமென்பதைக் காட்டுகிறது, ஆதலால் இந்த இந்த சபை ஆழமான பிரதிஷ்டை செய்கிறபடியால் பரிசுத்தாவியானவரின் கிரியை நடக்கிறது என்று காண்கிறோம்.

**லிபனோனிலிருந்து வாய்க்கால் :—** லிபனோன் பலஸ்தீனாவிலுள்ள உயரமான மலை. இதன் உச்சியில் பனிக்கட்டி படிந்திருக்கும். லிபனோன் மலையில் மழைக்காலம் மழை பெய்யும்போது அந்தத் தண்ணீர் மலைகளிலுள்ள வளங்களை அடித்துக்கொண்டு வாய்க்கால்கள் வழியாக ஓடி தோட்டத்தைச் செழிப்பாக்கும். அது மாத்திரமல்ல வேனில் காலத்தில் மழை இல்லாதிருக்கும்போது வெயில் ஏற ஏற லிபனோனிலுள்ள பனிக்கட்டித் தண்ணீராய் உருகி வாய்க்கால் வழியாய் ஓடி தோட்டத்துக்குள் பாய்ந்து தோட்டத்தைச் செழிப்பாக்கும். இக்காரணங்களால் தோட்டமானது மாரிகாலத்திலும், இளவேனிற் காலத்திலும், முதுவேனிற் காலத்திலும் செழிப்பாகவே இருக்கும்.

ஆகவே சபையில் எல்லா வேளைகளிலும் ஆவியானவர் கிரியை செய்துகொண்டே இருக்கிறார். ஏனென்றால் பயங்கரமான வேனிற்காலமல்லாத வேளையில் நீரூற்று தோட்டத்தைச் செழிப்பாக்குகிறது போல சபையிலுள்ள எல்லா விசுவாசிகளும் எப்பொழுதும் தேவ சமாதானத்தைக் காத்துக்கொள்வதால் ஆவியானவர் தடையின்றி கிரியை செய்துகொண்டேயிருக்கிறார். அதுவுமன்றி வேனிற்காலமென்பது சபையிலுள்ள குழப்ப காலத்தைக் காட்டுகிறது. ஆனால்

மணவாட்டி மேய்க்கும் சபையோ சமாதானத்தால் நிறைந்து இருக்கிறது. அதனால் ஆவியானவர் கிரியை செய்கிறார்.

சபையில் ஏதாவது குறைவு உண்டானால் ஆவியானவர் கிரியை செய்வதற்குத் தடையாயிராமல் ஆழமான பிரதிஷ்டைகளைச் செய்து கிருபைகளைப் பெற்றுக்கொள்ளும் தன்மையுடைய விசுவாசிகளுமாயிருக்கிறார்கள். அதோடு மழைக் காலம் மழைத் தண்ணீரால் செழிப்பும், வேனிற் காலம் பனி உருகித் தண்ணீராய் மாறிதோட்டம் செழிக்கிறது போல ஆவியின் மழை சபையில் எப்பொழுதும் செய்துகொண்டிருப்பது மாத்திரமல்ல விசுவாசத்தில் உறுதியாயிருந்து சோதனை வேளையிலும் ஆவியில் மகிழ்ச்சியாய் ஜீவிப்பதற்குத் தகுதியுள்ள விசுவாசிகளுமாயிருக்கிறார்கள். இவ்வித அனுபவங்கள் சபையில் காணப்படுகிறபடியால் சபையின் உறுதியை விளக்கவே தோட்டத்தில் நீரூற்றும் துரவும் வாய்க்காலும் இருக்கிறதெனக் கூறுகிறார்.

## 16-ம் வசனம்

வாடையே எழும்பு தென்றலே வா. கந்தப்பிசின்கள் வடிய என் தோட்டத்தில் வீசு. என் நேசர் தம்முடைய தோட்டத்துக்கு வந்து தமது அருமையான கனிகளைப் புசிப்பாராக :

**வாடை :—** வடக்கிலிருந்து வீசிக்கொண்டிருக்கும் குளிர்ந்த காற்றிற்கு வாடை என்று பெயர்.

**தென்றல் :—** தென் திசையிலிருந்து அடித்து வீசும் கொடுங்காற்றுக்குத் தென்றல் என்று பெயர்,

இக் காற்றுகள் வீசி அடிக்கும்பொழுது மரங்கள் பூ பூக்கிறதும் காய் காய்க்கிறதும் பழுக்கிறதுமாயிருக்கும். இக்காலங்களில் மரங்கள் துளிர் விடுகிறதுமுண்டு.

ஆகவே மணவாட்டி மணவாளனிடம் தனது தோட்டமாகிய சபையிலுள்ள விசுவாசிகள் நல்ல விதமான கனிகள் கொடுப்பதற்காக வாடையும் தென்றலும் வீசும்படியாக விரும்புகிறாள். அதாவது பரிசுத்தாவியானவரின் கிரியை நடத்தப்படுவதற்காக ஜெபிக்கிறாள். அதற்காகக் காத்திருப்புக் கூட்டமும் வைக்கிறார்கள். பரிசுத்தாவியானவர்

வல்லமையாய் கிரியை செய்யும்போதுதான் சிறு சிறு குறைகளையும் கண்டுபிடித்து அறிக்கையிடுவார்கள். அதோடு புதிய புதிய தீர்மானங்களையும் செய்வார்கள். புதிய புதிய நிறைவையும் ஆவியின் வரங்களையும் ஆவிக்குரிய கனிகளையும் பெற்றுக்கொள்ள ஜெபிப்பார்கள். அப்பொழுது ஆவியானவர் அவரவர் வாஞ்சைப்படியும் அவரவர் தேவைப்படியும் பகர்ந்து கொடுப்பார். இதை அறிந்தே மணவாட்டி வாடையே தென்றலே வீசு என்று விண்ணப்பம் செய்கிறாள்.

நிற்க ஆவியானவரின் காற்று அடிக்கும்போது கந்தப் பிசின் வடிவதுபோல இயேசுவின் வாசனை வீசுவதால் அநேகரை சிலுவையின் அன்புக்குள் இழுத்துக்கொள்ளுகிறார்கள். கந்தப் பிசின் என்றால் வாசனை வீசும் பசை. பசை ஒட்டும் தன்மையுடையதுபோல சபையின் விசுவாசிகள் பாவிகளான அநேகரை இழுத்துக்கொள்ளுகிறார்கள். இவ்வித மேன்மையான அனுபவங்கள் சபையில் பெருகி வளர்ந்து வரவே பரிசுத்தாவிக்காகக் காத்திருக்கும் கூட்டங்களை அமைத்து ஜெபிக்கிறார்கள். இதுதான் வாடையும் தென்றலும் வீசுவது.

## 5-ம் அதிகாரம்

இவ் அதிகாரத்தில் ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னேறிப்போன விசுவாசி சற்று அசதியாக இருப்பதாகக் காணலாம். மணவாளன் பேசும்போது கவனியாதபடியால் அவர் போய்விட்டார். மணவாட்டியோ விழித்தெழும்பி மணவாளனைத் தேடி மற்றவர்களிடம் அவரின் அழகை வர்ணிப்பதைக் காணலாம்.

### 1-ம் வசனம்

என் சகோதரியே! என் மணவாளியே நான் என் தோட்டத்திலே வந்தேன். என் வெள்ளைப்போளத்தையும் கந்தவர்க்கங்களையும் சேர்த்தேன்; என் தேன் கூட்டைத் தேனோடு புசித்தேன். என் திராட்சை ரசத்தை என் பாலோடு குடித்தேன். என் சிநேகிதரே புசியுங்கள்; பிரியமானவர்களே குடியுங்கள். பூர்த்தியாய் குடியுங்கள்.

மணவாட்டி புதிய கிருபைக்காகக் காத்திருந்தபடியால் சபையில் பெரிதான எழுப்புதல் உண்டாயிற்று. புதிய புதிய

கிருபைகளையும், வரங்களையும் பெற்றனர். சாட்சி சொல்லத் தக்கதான பெலனும், போதிக்கத்தக்கதான அறிவும் பிசாசு களைத் துரத்தத் தக்க அதிகாரமும், வியாதியைக் குணமாக்கு வதற்கேதுவான சக்தியும் பின் மாற்றக்காரனைத் திருப்பத் தக்க திறமையும் பாவிகளை இரட்சிப்பிலே கொண்டு வரத்தக்க அன்பும், இவ்விதமான கிருபைகள் சபையில் ஏராள மாய்ப் பகரப்பட்டிருக்கின்றன.

இவற்றையெல்லாம் மணவாளன் தனது தோட்டமாகிய சபையிலே வந்து கண்டார். சபையைப் பற்றிய மகிழ்ச்சி உண்டானது. உடனே அவர் சபையின் உண்மையை அறிந்து வழி தப்பி அலையும் ஆத்துமாக்களைச் சந்திக்கிறார். வாருங்கள் இந்த சத்தியங்களை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று உணர்த்து கிறார். வேத வசனத்தின் தெளிந்த உபதேசங்களைத் தேனுக் கும் பாலுக்கும் உபமானமாக எடுத்துக் காட்டுகிறார். சபையின் வல்லமையை வெள்ளப்போளத்தோடும் திராட்சை ரசத்தி தோடும் ஒப்பிட்டு அழைக்கிறார். ஏனென்றால் யாவரும் சத்திய உபதேசத்தின் ஆழத்திலே செல்லவேண்டுமென்று விரும்பியே மற்றவர்களோடு பேசுகிறார்.

## 2-ம் வசனம்

நான் நித்திரை பண்ணினேன். என் இதயமோ விழித் திருந்தது. கதவைத் தட்டுகிற என் நேசரின் சத்தத்தைக் கேட்டேன். என் சகோதரியே என் பிரியமே என் புறாவே என் உத்தமியே கதவைத் திற என்தலை பனியினாலும் என் தலைமயிர் இரவில் பெய்யும் தூறலினாலும் நனைந்திருக்கிறது என்றார்.

மணவாட்டி பாடுபட்டு ஆரம்பித்த சபையில் மண வாளன் தமது கிரியையை வல்லமையாய் நடத்துவதால் புதிய புதிய ஆத்துமாக்கள் அடிக்கடி சபையில் சேர்க்கப்படுகிறார்கள். இதனால் சபை நாளுக்கு நாள் பெருகி வளருகிறது. ஆனால் சபைக்கு ஆரம்ப காலத்திலிருந்த உபத்திரவம் இப்போது இல்லை. பலரும் சபைகளைப் புகழுகிறார்கள். முன்னர் பகைத்தவர்கள் இப்போது நேசிக்க ஆரம்பிக்கிறார்கள். ஆதலால் மணவாட்டி குணப்படாத இனஜன பெந்துக்க ளோடுள்ள ஐக்கியத்தை மெள்ள மெள்ள நாட ஆரம்பித்து விட்டாள். ஏனென்றால் முன்னே பகைத்தார்கள் இப்போது நேசிக்கிறார்கள். என்றாலும் ஆவிக்குரியவர்கள் ஆதியிலுள்ள

பிரதிஷ்டையைக் கெடுக்காமல் வேறுபட்டே ஜீவிக்க வேண்டும். இப்பொழுது வேறுபாடோ குறைந்துவிட்டது. குணப்படாதவர்களோடு ஐக்கியம் உடையவளாயிருக்கிறாள். ஆதலால் ஆவியானவர் தூங்குகிற நீ விழித்து மரித்தோரை விட்டு எழுந்திரு. அப்போது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பார் என்று சொல்லியிருக்கிறார். எபே 5:14

ஆவிக்குரிய நித்திரை எப்படிப்பட்டவர்களையும் இல்லாமல் ஆக்கும். தூங்கிற வேளை சத்துரு கோதுமைக்குள் களையை விதைத்தான் என்று இயேசு சொன்னார். மத் 13:25 பேதுரு யோவானிடம் ஒருமணி நேரமாவது என்னோடே கூட விழித்திருக்கக் கூடாதா நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள். ஆவி உற்சாகமுள்ளதுதான். மாம்சமோ பலவீனமுள்ளதென்று இயேசு எச்சரித்தார். மத் 26:40—41. தூக்கம் மகா கெடுதியை உண்டாக்கும். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவனும் நசரேய விரதமுள்ளவனும் பராக்கிரமசாலியுமான சும்சோன் தெலீலாளின் மடியில் போய் படுத்துத் தூங்கினான். முடிவாக அவன் மயிர் சிரைக்கப்பட்டது, பெலன் குறைந்தது, சத்துருக்கள் அவனைப் பிடித்து கண்ணைத் தோண்டி, குருடாக்கி, மாவரைக்கச் செய்தனர். நித்திரை மகா பரிதாபமான படுமோசத்துக்குள் நடத்தினது.

இப்போது மணவாட்டி மரித்தவரோடுள்ள ஐக்கியத்துக்குள் போய்விட்டாள்; அப்படிச் செய்வதால் கறைப்படமாட்டேன் என்பதே அவளது எண்ணம். ஆவிக்குரிய தூக்கம் பிடித்துவிட்டதால் கர்த்தருடைய வசனத்துக்கு தவறுதலான காரியம் என்பதை உணரவில்லை. 2 கொரி 6:14-18. வசனத்தினாலுண்டான விழிப்பு விலகிப்போய்விட்டது. சுகமாய் வீட்டில் தூங்குகிறவள்போல் தூங்கிவிட்டாள்.

மணவாளன் வந்து தட்டுகிறார். மணவாட்டியே உன் நடக்கைத் தவறுதல் என்று உணர்த்துகிறார். அவிசுவாசிக்கும் விசுவாசிக்கும் பங்கில்லை. ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியம் இல்லை என்றெல்லாம் கூறுகிறார். மணவாட்டியோ இவற்றை ஒத்துக்கொண்டாலும் தப்பிதத்தை விட்டு விலகவில்லை. குணப்படாதவர்களுக்கு இருதயத்தில் இடங்கொடுத்துவிட்டாள். அவர்களை உள்ளத்தில் நேசித்துவிட்டாள். ஆதலால் இயேசுவுக்கு இடங்கொடுக்கவில்லை. அப்போது மணவாளன் மறுபடியும் கதவைத் தட்டி எச்சரிக்கிறார்.

என் தலை பனியினாலும் என் தலை மயிர் தூறலினாலும் நனைந்து இருக்கிறது. நீ நேசிக்கிற ஆத்தும மணவாளனாகிய எனக்கு உன் இருதயத்தில் இடமில்லை நான் வெளியேதான் நனைந்து கொண்டு நிற்கிறேன். நீ என்னுடைய பரிதாப நிலைமையைப் பார் என்று தட்டினார். இந்த தட்டுதலைக் கேட்டாவது உணர்வாள் என்பதே அவரது நோக்கம். அவளோ அதற்கு மாறாகப் போக்குச் சொல்லுகிறாள்.

## 3-ம்வசனம்

என் வஸ்திரத்தைக் கழற்றிப் போட்டேன். நான் எப்படி அதை திரும்பவும் உடுப்பேன்.

ஐசுவரியமாய் வாழ்கிற குடும்பங்களில் ஸ்திரி புருஷர் வெவ்வேறான வஸ்திரங்கள் சமயா சமயம் தரிப்பது வழக்கம். அப்படியே நாகரீக நாடுகளிலும் நவீன முறைகளைக் கையாளுகிறவர்களுமான ஸ்திரி புருஷர் எப்பொழுதுமே நவீன முறைகளில் உடை தரிப்பதுண்டு விசஷேமாக இரவு படுக்கையறையில் அணியும் உடைகளின் உருவம் வேறே. இரவு படுக்கைக்குப் போகும்போது படுக்கைக்குரிய வஸ்திரங்களை அணிந்துகொண்டே போவார்கள். இரவு படுத்த பின்னர் அன்னியர் அவர்களைச் சந்திக்க வேண்டுமானால் அந்த வஸ்திரத்தை மாற்ற வேண்டியதாகும். வேற்று வஸ்திரம் தரிக்கவேண்டும். அதன் பின்னரே சந்திப்பார்கள். அப்படிப் போல மணவாட்டி மணவாளனுடைய சத்தம் கேட்ட பின்னரும் அவரைச் சந்திக்கத் தகுதியில்லாதவளாயிருக்கிறாள். ஆனபடியால் அவள் வஸ்திரத்தைக் கழற்றிப் போட்டேன் திரும்ப எப்படி உடுப்பேன் என்கிறாள்.

இது எவற்றைக் காட்டுகிறது என்றால் மணவாளனை இப்பொழுது இருக்கும் நிலையில் அவள் அவரைச் சந்திக்க வெட்கமுடையவளாயிருக்கிறாள். ஏனென்றால், மணவாளன் என்ற எண்ணம் அவளைவிட்டு விலகிவிட்டது. தைரியத்தோடு அவர் சமுகத்தில் நிற்க தைரியம் இல்லை. பாவம் அவளுக்குள்ளிருக்கிறது. உலக நேசம் உள்ளே புகுந்துவிட்டது. ஆதலால் வஸ்திரத்தைக் கழற்றி விட்டேன் என்கிறாள். இப்பொழுது கர்த்தருக்காகப் பாடுபட மனமில்லை. எதையும் நடப்பிக்கவும் செலவு செய்யவும் பிரியமற்றவளாகிவிட்டாள். ஒருகாலம் கர்த்தருக்காகச் செலவு செய்து நற்கிரியை நடப்பித்தவள். அப்பொழுது

நீதியின் வஸ்திரத்தை உடுத்தியிருந்தாள். இப்பொழுது உலகத்தில் சம்பாதிக்கவேண்டும் நாலுபேர் போல் நடக்க வேண்டும் நாலு பேர்போல் ஜீவிக்கவேண்டுமென்ற எண்ணம் உள்ளத்தில் வந்துவிட்டது. அதற்காக அவிசுவாசிகளோடு தொடர்பு வைத்துவிட்டாள். ஆகலால் வஸ்திரத்தைக் கழற்றி விட்டேன் இனி எப்படி உடுப்பேன் என்கிருள். சாத்தான் திரும்புவதற்கு வெட்கத்தைக் கொடுத்துவிட்டான். சாத்தானுடைய தந்திரம் பெரிய தந்திரம். நாம் ஏதாவது தவறுதல் செய்துவிட்டால் தவறினதிலிருந்து திரும்புவதற்கு ஒரு நாளும் வெட்கப்படக் கூடாது, உணர்வடைந்து கண்ணீர் விடவேண்டும். இவளோ குற்றத்தை அறிக்கை செய்து விட்டுவிட்டு திரும்புவதற்கு வெட்கப்படுகிருள். ஆதலால் தான் வஸ்திரத்தைக் கழற்றிப் போட்டேன் என்கிருள்.

**பாதங்களைக் கழுவினேன் நான் எப்படி அவைகளைத் திரும்பவும் அழுக்காக்குவேன் :—** ஐசுவரியவான்களின் படுக்கை மெத்தைகளில் மெல்லிய பட்டுப் பஞ்சு நூல் போர்வை இவற்றைப் விரித்திருப்பார்கள். எவ்வித சிறு அழுக்கு தூசி இவைகூடப் படிவதை விரும்பார்கள். எப்பொழுதும் தூய்மையாகவே வைத்திருப்பார்கள்.. ஆதலால் கனம் பெற்றான ஸ்திரி புருஷர் படுக்கப்போகும் முன்னதாக தங்கள் பாதங்களைச் சுத்தமாகக் கழுவிவிட்டே படுக்கையறைக்குள் செல்வார்கள். படுக்கச் சென்ற பின்னர் குறிப்பான வேளையே வெளியே கிளம்புவார்கள். அதற்கு முன்னே வெளியே வரார்.

இப்பொழுது மணவாளன் என் தலை பனியினுலும் இரவில் பெய்யும் தூறலினுலும் நனைகிறது. என் புருவே கதவைத் திற என்றபோது மணவாட்டியோ என் பாதங்களைக் கழுவினேன். திரும்ப எப்படி அழுக்காக்குவேன் என்கிருள்.

**பாதம் :—**பாதம் என்ருல், சமாதானத்தைக் கூறி நற்காரியங்களை சுவிசேஷமாய் அறிவிக்கிறவனுடைய பாதம். ஏசா 52:4 ஓர் காலம் ஓடி ஓடி களைக்கக் களைக்க பசியோடும், பட்டினியோடும், தாகத்தோடும், கிழிந்த வஸ்திரத்தோடும், படுக்க இடமின்றி சமாதானத்தின் சுவிசேஷத்தை அறிவித்தார்கள். இப்பொழுது பாடுபடுவதும் நிந்தையும் பரிகாசமும் சகிப்பதும் பசியும் பட்டினியும் அனுபவிப்பதும் பிரியமில்லை. தாங்க மனமுமில்லை. குணப்படாதவரின் ஐக்கியம்

வந்தவுடன் அவர்களைப்போல் சுகமான வாழ்க்கை நடத்த எண்ணம் வந்துவிட்டது. அதற்காக கஷ்டத்தின் பாதையை விட்டுவிட தீர்மானித்து விட்டாள். ஆனபடியால் இப்போது சொல்லுகிருள். சுகமாய் வாழலாம் என்று தீர்மானித்து விட்டேனே. கர்த்தரும் வெளியே நிற்பதாகச் சொல்லுகிருரே இனிமேல் நான் சுவிசேஷத்துக்காகப் பாடுகளை அனு பவிப்பேன் என்று புலம்பினுள்.

## 4-ம் வசனம்

என் நேசர் தமது கையைக் கதவு துவாரத்தின் வழி யாய் நீட்டினுர். அப்பொழுது என் உள்ளம் அவர் நிமித்தம் பொங்கினது.

முற்காலங்களில் திருடர் பயம் அதிகமாய் தேசங்களில் இருந்தது. அந்த ஆபத்திற்குத் தப்பும்படியாக ஒவ்வொரு தேசவாசிகளும் ஒவ்வொரு முறைமைகளைக் கையாடி வந்தனர். பலஸ்தீன தேசத்தில் புருஷர் வீட்டில் இல்லாததை உள வறிந்து இராக்காலங்களில் புருஷன்மார் போலோ, சொந்தக் கார் போலோ கூப்பிட்டுக் கதவைத் திறக்கச் செய்து பலாத்காரமாய்க் கொள்ளையடிப்பார்கள். அதற்குத் தப்பும் படியாக, கதவுகளில் கை நுழையத்தக்க துவாரம் எடுத்துக் கதவுகளைச் செய்திருப்பார்கள். இரவு வேளைகளில் யார் எப்படித் தட்டினுலும் கதவைத் திறவார்கள். இந்த துவா ரத்தின் வழியாய் கையை நுழையவிடவேண்டும். அப்போது ஸ்திரிகள் இன்னுருடைய கைதான் என்றுத் திட்டமாய் அறிந்த பின்னர்க் கதவைத்திறப்பார்கள். அதன் பின்னர் உள்ளே வரலாம்.

இது எவ்வித காரியத்தைப் படிப்பிக்கிறதென்ருல் மணவாளனுக்காய் முற்றுமாய் பிரதிஷ்டைச் செய்து பாடு பட்டுச் சபைகளை உண்டாக்கின மணவாட்டி இப்போது உலக மக்களோடு இசைந்து தியாகத்தை மறந்து ஜீவிக்கி ருள். ஆதலால் மணவாளன் இனிய வார்த்தைகளைப் பேசின போதிலும் அவளுடைய உள்ளத்தில் அவருக்கு இடமில்லை யென்று துக்கப்பட்டபோதிலும் அவள் அதைக் கேட்டுவிட்டு சாக்குப் போக்கு சொல்லிக்கொண்டிருக்கிருள். தன்னைப் புதுப்பிக்க மனமில்லை.

இதைக் கண்ட மணவாளன் வெளியே நிற்கும் புருஷர் மனைவிகள் அறிவதற்காகக் கதவுத் துவாரத்தின் வழியாய்

நீட்டித் தங்கள் கையைக் காட்டுவதுபோல மணவாட்டியின் இருதயம் திறக்கப்பட அவளது ஆத்தும கண் காணப்பட அவருடைய ஆணி கடாவப்பட்ட அழகிய அன்பின் கையைக் காட்டுகிறார். அவரது காயப்பட்ட அன்பின் கரத்தைக் கண்டவுடன் அவளது உள்ளத்துக்கு வேதனை ஆரம்பிக்கிறது. அவரது சிலுவையின் கஷ்டப்பாடு அவளது உள்ளத்தை உடைக்கிறது. அவரது அன்பு உள்ளத்தில் ஊடுருவி உருக்குகிறது. உடனே அழுகிறாள். உள்ளத்தை உடைத்து உலகத்தை வெறுத்து சுகஜீவியத்தை அரோசிக்கிறாள். தன்னைக்குப்பையாக்கி புதுப்பித்து எழும்புகிறாள். சிலுவையின் அன்பே அவளது உள்ளத்தை உடைத்து எழுப்பினது. இதுவே கதவு துவாரக் கை படிப்பிக்கிறது.

## 5-ம் வசனம்

என் நேசருக்குக் கதவைத்திறக்க நான் எழுந்தேன். பூட்டின கைப்பிடிகள்மேல் என் கைகளிலிருந்து வெள்ளைப் போளமும் என் விரல்களிலிருந்து வாசனையுள்ள வெள்ளைப் போளமும் வடிந்தது.

தேவ சமூகத்தில் அதாவது சிலுவையின் தரிசனத்தைத் திரும்பவும் தரிசித்தவுடனே குற்றங்களை உணர்ந்து பிரகாசிக்க ஆம்ரம்பித்து விட்டாள். தவறுதலாக அவள் எடுத்துக் கொண்ட எல்லா காரியங்களையும் விட்டுவிடடாள். என்னென்ன நற்கிரியைகளை விட்டுவிட்டாளோ அவற்றையெல்லாம் திருபச் செய்ய துவக்கினாள்.

கை பரிசுத்தத்தையும் விரல் நற்கிரியையையும் காட்டும். அசுத்த கையென்றால் பரிதானம் வாங்கும் கை கள்ளத்தராசு பிடிக்கும் கை இவை யாவும் அசுத்தமானது. உடனே கையிலிருந்து வெள்ளைப்போளமும் விரலிலிருந்து வாசனையுள்ள வெள்ளைப்போளமும் வடிந்தது. இவை என்னத்தைக் காட்டுகிறது என்றால் முன்போல தனது கிரியையை ஆரம்பித்து விட்டாள். ஊழியத்தின் முன்னேற்றதுக்காக செலவுசெய்யவும் பாடுபடவும் தீர்மானித்துவிட்டாள். கிரியை செய்யவும் துவக்கிவிட்டாள். ஆதலால் வாசனை கொடுக்க ஆரம்பித்து விட்டது.

## 6-ம் வசனம்

என் நேசருக்குக் கதவைத் திறந்தேன் என் நேசரோ இல்லை போய்விட்டார். அவர் சொன்ன வார்த்தையால் என் ஆத்துமா சோர்ந்து போய்விட்டது. அவரைத் தேடினேன் அவரைக் காணவில்லை. அவரைக் கூப்பிட்டேன் அவர் எனக்கு மறு உத்தரவு கொடுக்கவில்லை.

மணவாட்டியின் அசதியை உணர்ந்து ஊழியங்களை மறு படியும் தொடர்ந்து நடத்தினாள். மணவாளனே அவளை உணர்த்திவிட்டு போயவிட்டார்.

**மணவாளன் மனிதரோடு எவ்விதமெல்லாம் பேசுவார்:—**

1. தண்டனை கொடுத்து பேசுவார். ஆமோஸ் 4:8-12
2. சொப்பனத்தில் பேசுவார். 1 இராஜா 11:9-10
3. தூதினால் பேசுவார். வெளி 2:19-23
4. தீர்க்கத்தரிசிகளை அனுப்பி பேசுவார். எரே 25:4 1 சாமு 2:27-29
5. மற்றவர் மரணங்களைக் கொண்டு பேசுவார். ஏசாயா 6:1-6

இவ்விதமாக கர்த்தா விசுவாசிகளோடு பல விதமாகப் பேசி எச்சரிப்பதைக் காணலாம். எச்சரிக்கும்போது செவி கொடுத்தால் ஆசீர்வதிக்கப்படுவோம். மணவாட்டியோ தாமதியாமல் செவிகொடுத்து மணவாளனைத்தேட ஆரம்பித் தாள். அவரோ போய்விட்டார். சிலவேளைக் கர்த்தர் தம்மை மறைந்திருக்கும் தேவனாகவே காண்பிப்பார். ஏசா 45:15. அவர் இப்போது தம்மை மறைத்துக்கொண்டார். எதைற் கென்றால் அவரை மனப்பூர்வமாய் நேசிக்கவும் அவரைக் காணும்போது மாத்திரமல்ல காணப்படாத வேளையிலும் ஜெபம் கேட்கும்போது மாத்திரமல்ல ஜெபம் கேட்கப்படாத வேளையிலும் சந்தோஷமான சமயத்தில் மாத்திரமல்ல தொடர்பாகவே சஞ்சலத்தின் வழியாய் நடத்தப்படும்போ தும் அவரை நேசிக்கவேண்டும். அதையே மணவாளன் விரும்புகிறார். அற்காக அவர் மறைந்துகொண்டார். அவளோ அவரைத் தேடினாள். கூப்பிட்டாள் மறு உத்தரவு கொடுக்க வில்லை. இதுவே மறைந்த அனுபவம்.

## 7-ம் வசனம்

நகரத்தில் திரிகிற காவலாளர் என்னைக்கண்டு என்னை அடித்து என்னை காயப்படுத்தினார்கள். அலங்கத்தின் காவல்க்காரர் என்மேல் இருந்த என் போர்வையை எடுத்துக்கொண்டார்கள்.

**நகரத்தின் காவலாளர்:—** நகரம் என்பது சபையைக் காட்டும். காவலாளர் என்பது சபைக்காய் விழித்திருந்து ஜெபிக்கிறவர்களைக் காட்டும். சபையில் பாவிகள் பக்கவழியாய் நுழையாமலும் பின்வாங்கினவர்களால் சபை பாழாக்கப்படாமலும் கள்ள ஊழியரால் சபையில் களை விதைக்கப்படாமல் சபை காக்கப்படுவதற்காகவும் எவ்வித நிலைமையிலும் சபை பரிசுத்தத்தைக் காத்து பிரகாசிக்கவும் பாரமெடுத்து கண்ணீர்விட்டு ஜெபிக்கிற விசுவாசிகளே நகரத்தின் காவலாளர்களாகும். மற்ற விசுவாசிகள் பொறுப்பில்லாதவர்கள். ஊழியத்தின் மேன்மையை அறியாதவர்கள்.

ஆனால் இப்போது ஜெபஜீவிகளான உடன் விசுவாசிகள் இவளை அடித்து காயப்படுத்துகிறார்கள். அதாவது இவளில் வந்த மதியீனத்தை ஓயாமல் எடுத்துக்காட்டுகிறார்கள். சுகத்தை நாடினாள். உலகத்தாரோடு கை கொடுத்தாள் என்பதான காரியங்களை எல்லாம் போகிற வருகிற இடமெல்லாம் எல்லா வேளையிலும் தட்டி உணர்த்திக் கொண்டேயிருக்கிறார்கள். அது மாத்திரமல்ல அவள் பிரதிஷ்டையை புதுப்பித்தபோதிலும் பின்மாற்றக்காரி என்றும் சுக ஜீவி என்றும் பேசிக்கொண்டேயிருக்கிறார்கள். இவை யாவும் அவளுக்கு அடிமேல் அடியடித்து இடித்து பொடித்து காயப்படுத்தின மாதிரியாகவே இருக்கிறது. இவ்விதம் நொறுக்கப்பட்டபோதிலும் அவள் சோரவில்லை. விழுகை வரும்போது கூட்டுவிசுவாசிகளால் வரும் கடிந்துகொள்ளுதலை பொருட்படுத்தாமல் முன்னேற வேண்டும். இவளோ இதால் கலங்கவில்லை. தைரியமாயிருக்கிறார்கள். அநேகர் இந்த இடத்தில் கலங்குவார்கள். அதைரியப்படுவார்கள். கடிந்துகொள்ளுதலை வெறுப்பார்கள். இவளோ கலங்கவில்லை.

**அலங்கத்தின் காவல்காரர் என்மேல் இருந்த போர்வையை எடுத்துக்கொண்டார்கள்:—** அலங்கம் என்பது பட்டணங்களைச் சுற்றியிருக்கும் கோட்டைகளின் வாசலோரமாய்க் காவல்காரர்க்காய் கட்டியிருக்கும் உயர்ந்த கோபுரமே அலங்

கம். இந்த அலங்கம் எதற்காகக் கட்டப்படுவதென்றால் முற் காலங்களில் பகைவர்களான இராஜாக்கள் பரிவாரங்களோடு திடீர் என்று படையெடுத்து வருவார்கள். அப்பொழுது அவர்கள் கைக்கு தப்புவிக்கப்படுவதற்காக கோட்டை வாசல் களில் உயர்வான அலங்கங்களைக் கட்டி காவல்க்காரரை நியமித்து வைப்பார்கள். காவல்க்காரர் தூரத்தில் சத்துரு வருவதைக் கண்டவுடன் உடனே எக்காளத்தை ஊதி எச்சரிப்பான். அதற்காக காவல்காரன் விழித்துக்கொண்டே இருப்பான். எக்காளசத்தத்தைக் கேட்டதும் அரசனும் சேனை யும் யுத்தத்திற்கு தங்களை ஆயத்தப் படுத்திக்கொள்வார்கள். குடி ஜனங்களும் அரசர் கட்டளையைக் கேட்க ஆயத்தப் படுவார்கள். இதற்காகவே அலங்கத்தைக் கட்டி காவல் காரரை நியமித்திருந்தனர்.

நமது அலங்கத்தின் காவல்காரர் யாரென்றால் ஊழியத் தில் உத்தரவாதமுள்ள ஜெப ஜீவிகளான பரிசுத்தவான் களே ஆவர். இவர்கள் சபைக்காகப் பாடுபடும்படியாக இரவும் பகலும் போராடி ஜெபித்துக்கொண்டே இருப்பார்கள், ரோமர் 15:32, 1 தெச 1:10. இவ்விதமாக ஜெபிக்கிற காவ லாளிகள் சபையில் இல்லாவிட்டால் சபைகள் அழிந்துபோ கும். ஆதலால் ஆவிக்குரிய ஜீவியத்தில் அசதியாயிருந்தவர் களின் போர்வையை காவலாளிகளான ஜெப ஜீவிகள் எடுத்து போட்டார்கள்.

**போர்வை:—** இது குளிர்காலங்களில் மனிதர்கள் குளிர் நீங்கி வாழ்வதற்காக உபயோகப்படுத்தும் வஸ்திரம். ஆவிக்குரிய ஜீவியத்தில் அனல்குறைந்துபோகாதிருக்க பரிசுத்தவான்கள் அடிக்கடி கூடி ஜெபித்து அனல்மூட்டிவந்தார்கள். குடும்ப பாரம் நெருங்கி தளர்ந்துபோகாதிருக்க பரிசுத்தவான்கள் தாங்கி பெலப்படுத்தி வந்தார்கள். வியாதி காலங்களில் இரவும் பகலும் உபவாசித்து ஜெபித்து அவர்களைவிட்டு விலகாமல் விசுவாசத்தில் உறுதிபடுத்தி வந்தார்கள். இவ் விதமாய் இவள் தளர்ந்து போவதற்கு ஏதுவாயிருந்த எல்லா காரியங்களிலும் ஊழியர்கள் போர்வைபோல் மூடி அனல் மூட்டியே வந்தார்கள்.

இவ்விதமான தாங்குதல் இருந்தும் அவிசுவாசிகளின் ஐக்கியத்தைச் சம்பாதித்து ஊழியத்தில் அஜாக்கிரதை காட்டி சுகத்தை நாட்டினாள். இப்போது மணவாளனால் உணர்த்தப்பட்டு ஆத்ம நேசரை தேடி அலைகிறாள்.

இதை ஊழியர்கள் கண்டார்கள். என்றாலும், முன்னர் ஊழியர் எவ்வளவோ தாங்குதல் கொடுத்தார். ஆயினும் உலக மனிதரோடு தொடர்பு வைத்து ஊழியத்தின் உற்சாகத்தை விட்டுவிட்டதால் இனிமேல் கொஞ்ச காலம் விசுவாசிகள், ஊழியர் இவர்களுடைய எவ்வித தாங்குதலும் இன்றி ஜீவிக்கட்டும், பார்ப்போம் என அவர்கள் கொடுத்த எல்லா கைத் தாங்குதல்களையுங் கொஞ்சம் குறைத்து வைத்தார்கள். அதாவது அனல் மூட்டிக்கொண்டிருந்த அனுபவத்தை நிறுத்தி வைத்தார்கள். இதுவே அலங்கத்தின் காவற்காரர் போர்வையை எடுத்துக்கொள்வதாகும்.

## 8-ம் வசனம்

எருசலேம் குமாரத்திகளே என் நேசரைக் கண்டீர்களானால் நான் நேசத்தால் சோகமடைந்திருக்கிறேன் என்று அவருக்குச் சொல்லும்படி உங்களை ஆணையிடுகிறேன்.

மணவாட்டி என்பது சீயோன் குமாரத்தியாகும் எருசலேம் குமாரத்தி என்பது இரட்சிக்கப்பட்டவர்களாகும். மணவாட்டிக்குள் உலக நேசம் சற்று நுழையவும் மணவாளன் அதை உணர்த்தினார். மணவாட்டி தனது பின்மாற்றத்தை உணர்ந்து தன்னை புதுப்பித்தாள். என்றாலும் மணவாளனோ தனது சமூகத்தை அவளுக்குக் கொடுக்கவில்லை. இவ்வேளைகளில் தன்னைப்போன்ற விசுவாசிகளும் ஊழியரும் இவளோடு முன்னர் நடந்து கொண்டதுபோல் நடந்துகொள்ளவுமில்லை. இவளோடு பேசும்போது உருவக் குத்துகிறதுபோல் இருக்கிறது. இந்த நிலமையைக் கண்டும் அவள் கவலைப்படவில்லை. இதுவும் தனது ஜீவியத்துக்கு அவசியம் தான் என்ற எண்ணத்தோடு ஜீவிக்கிறாள்.

ஆனால் அவளுக்கு ஒரு கவலை இருக்கிறது. அது என்னவென்றால் எப்படியாவது தனது ஆத்துமா மணவாளனைக் கண்டுபிடிக்கவேண்டும். அவரைப் புத்தியீனமாய் விட்டுவிட்டேன். இனிமேல் அவரில்லாமல் ஜீவிக்க முடியாது யார் மூலமாவது அவரைக் கண்டுபிடிக்கவேண்டும். அதற்காக இரட்சிக்கப்பட்டவர்களான எருசலேம் குமாரத்திகளிடம் செல்கிறாள்: என் நேசரைக் கண்டீர்களா! என்னைப் பற்றி ஏதாவது சொன்னாரா! என்று கேட்கிறாள். நீங்கள் அவரைக் கண்டதுண்டானால் நான் நேசத்தால் சோகமடைந்திருப்பதாகச் சொல்லுங்கள் என்கிறாள். இதுவே ஆவிக்கு

உரிய ஜீவியத்தில் குறைவடையும் போதுமுன்னேற்றமடைய ஆசிக்கிறவர்கள் எவ்வித குறைந்த அனுபவமுடையவர்கள் ஆயிருந்தாலும் அவர்களுக்கு முன்னதாகவும் தங்களைத் தாழ்த்தி தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் முன்னேற்றத்திற்காக ஜெபிக்கச் சொல்வதாகும். அப்பொழுது கர்த்தர் அவர்களின் தாழ்மையைக் கண்டு கிருபை அளிக்கச் செய்கிறார் என்பதாகும்.

## 9-ம் வசனம்

ஸ்திரிகளுக்குள் ரூபவதியே! மற்ற நேசரைப் பார்க்கிலும் உன் நேசர், எதினால் விசேஷித்தவர் நீ இப்படி எங்களை ஆணையிட மற்ற நேசரைப் பார்க்கிலும் உன் நேசர் எதனால் விசேஷித்தவர்.

**ஸ்திரிகளுக்குள் ரூபவதி:—** சபைக்கு ஸ்திரி என்ற பெயர் உண்டு. II கொரி *11:2-3* அகாஸ்வேரு இராஜாவிற்கு முன்பாக 127 தேசங்களிலுள்ள கன்னிப் பெண்களை கொண்டுவந்து நிறுத்தினார்கள். ஆனால் எஸ்தரோ அவர்களில் ரூபவதியாய்க் காணப்பட்டாள். இப்படிப்போல் இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டத்தில் மணவாட்டி ரூபவதியாகவே காணப்படுகிறாள். அதாவது உன்னத ஜீவியம் செய்கிறாள், ஆனபடியால் மணவாட்டியோடுள்ள விசுவாசிகள் அவளைப் பார்த்து ஸ்திரிகளில் ரூபவதி என்று சாட்சி பகருகிறார்கள். தீமோ 4:12 Iதெச 2:10, மணவாட்டி தேவனாலும், உடன் சகோதரராலும் சாட்சி பெற்றவளே. இதுவே ஸ்திரீகளில் ரூபவதி என்பதாகும்.

**மற்ற நேசர்:—** உலகில் ஒவ்வோர் ஜனங்களுக்கும் வெவ்வேறு விதமாக நேசித்தத்தக்க பொருட்களுண்டு, ஒவ்வொருவரும் ஒவ்வொன்றை விதவிதமாக நேசிப்பார்கள். புருஷனை, மனைவியை, பிள்ளைகளை, ஆஸ்தியை, பொருட்களை உத்தியோகத்தை, ஜாதியை, தங்கள் குடும்பங்களை, படிப்பை, அழகை, ஆடம்பரத்தை, உலக உற்சாகத்தை, கண்காட்சியை, இவை போன்ற காரியங்களை நேசிப்பார்கள். இவைகள் மனுஷனால் நேசிக்கப்படதக்கவைகள். ஆனால் இருதய பூர்வமாய் மனிதன் எவற்றை நேசிக்கிறானோ அது தான் அவர்கள் நேசர் ஆனபடியால் தான் ஆவிக்குரிய உன்னதமான அனுபவத்தில் ஜீவிக்கிறவர்களிடம் மற்ற நேசரை பார்க்கிலும் உன் நேசர் எதனால் விசேஷித்தவர் என்று கேட்கிறாள். ஏனென்றால்

மணவாட்டியோ உலகத்தார் நேசிக்கிற ஒன்றையும் அவள் நேசிக்கவில்லை. ஆத்ம நேசரையே நேசிக்கிருள். அவள் உலகத்தையே வெறுக்கிருள்.

**உன் நேசர் எதனுல் விசேஷித்தவர்:—** இந்த கேள்வியைக் கேட்கிவர்கள் இரட்சிக்கப்பட்டவர்கள். இரட்சிக்கப்பட்ட வர்களில் அநேகர் இயேசுவை இரட்சகராகவும் ஆண்டவராக வும் மாத்திரம் வைத்திருக்கிருர்கள். ஏனென்ருல் பாவத்தி லிருந்து விடுதலே கிடைக்காவிட்டால் நித்தியமான நரகம் உண்டென்று பயந்து, கற்பனேக்கு கீழ்ப்படிந்து பாவத்திற்கு விலகி ஜீவிக்கிருர்கள். இயேசு பூமியில் மனிதனுய் சஞ்சரித்த வேளேயில் ஒரு வாலிபன் அவரண்டை வந்து நல்ல போதகரே நித்திய ஜீவனேயடைய என்ன செய்ய வேண்டுமென்று கேட்டான். அதற்கு இயேசு கற்பனேயைக் கைக்கொள் ளென்று கூறினுர். அதற்கு அவன் நான்;என் சிறுவயது முதல் கைக்கொண்டிருக்கிறேனென்று கூறினுன். பின்பு அவன் அவரிடம் இன்னும் என்னிடம் என்ன குறைவு இருக்கிற தென்று கேட்டான். அதற்கு இயேசு பூரண சற்குணனுயிருக்க விரும்பினுல் உனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று தரித்திரருக்கு கொடு என்று கூறினுர். அது அவனுக்கு விருப்பமில்லாதபடியால் துக்கத்தோடுபோய் விட்டான். மத் 19:16-22. எருசலேம் குமாரத்திகள் என்பது இந்த வாலி பனேபோல கற்பனேயை கைக்கொண்டு ஜீவிக்கிறவர்களே. இவர்கள் நித்திய ஜீவனுக்கு பங்காளிகளாய் காணப்படுகிற வர்கள். மணவாட்டியோ பூரண ரூபவதி. பூரணத்திற்காய் ஒப்புக்கொடுத்தவள். இவளுக்கு பூமியில் நேசிக்கத்தக்க தொன்றுமில்லே, பரம தரிசனம் பெற்றவளானபடியால் பூமியில் நேசிக்கபடதக்க யாவையும் விட்டு விட்டாள். ஆத்ம மணவாளனேக் கண்டுகொண்டபடியால் அவரது இன் பத்தையே ருசிப்பார்த்து வரப்போகும் மகிமையின் •மேன்மை யை எண்ணி கொண்டிருக்கிருள். அதனுல் பூமிக்குரியதை அற்பமும், குப்பையுமாக எண்ணி விட்டாள். பிலி 3:7:11.

எருசலேம் குமாரத்திகளுக்கோ, பரம வெளிப்படுதுத்த லில்லே. இயேசுவை மணவாளனுகக் கண்டு அவரது இன் பத்தை ருசிப்பார்க்கவில்லே. அவர்கள் இயேசுவை இரட்சக ராகக் கண்டார்கள். அதனுல் கற்பனேயைக் கைக்கொணடு ஜீவிக்கிருர்கள். மேன்மையான உயிர்த்தெழுதலேப்பற்றி வெளிப்படுத்தலில்லாத படியால் உலகத்தோடு இருந்து ஜீவிக்கிருர்கள். உலகத்தை முற்றுமாய் வெறுத்து மணவா ளனே பின்பற்றி ஜீவிப்பதென்ருல் அவர்களுக்கு பயத் தைக் கொடுக்கிறதாயிருக்கிறது. அதே வேளேயில் நாங்களும்

ஆண்டவரை தானே சேவிக்கிறோம். உனக்கு விசேஷப்பட்ட ஆண்டவருண்டோ என்பதான கேள்விகளைக் கேட்கிறார்கள். ஏனென்றால் மணவாட்டி ஆழமான பிரதிஷ்டையில் போய் கொண்டிருக்கிறாள். ஆனபடியால்த்தான் நாங்கள் ஜீவிக்கிறது போல் ஜீவித்தால் போதாதா, உனக்கு ஒரு விசேஷப்பட்ட தெய்வம் உண்டோ எனபதாகக் கேட்கிறார்கள்.

## 10-ம் வசனம்

என் நேசர் வெண்மையும் சிவப்புமானவர். பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்.

**என் நேசர்:—** உன் 2:16 ஐப் பார்க்கவும்

**வெண்மையும் சிவப்புமானவர்:—** மணவாட்டி மணவாளனை பரிசுத்தரும் மீட்பரும் எனக் கூறுகிறாள். இயேசு பரிசுத்தர் மாத்திரமல்ல மீட்பருமாயிருக்கிறார். I கொரி 1:31. மணவாளனாகிய இயேசு தமது பூலோக வாழ்க்கையில் எவ்வித மான குற்றமுமில்லாதவராகவே ஜீவித்தார். அவரை குற்றம் கண்டு பிடிக்க வேத பாரகரும், பரிசேயரும், சதுசேயரும் நியாயசாஸ்திரிகளும், ஏரோதியரும் ஒய்வில்லாமல் சுற்றி நடந்து உற்றுப்பார்த்ததுமின்றி பல கேள்விகளையும் கேட்டார்கள். எவ்வித குற்றத்தையும் கண்டு பிடிக்க முடியாமற் போய் விட்டது. அவரை கொலைக்கு ஒப்புக்கொடுத்த நியாயதிபதியும் இவரில் ஒரு குற்றமும் காணேன் என்றான். லூக் 23:4. அவரோடு சிலுவையிலறையப்பட்ட ஒரு கள்ளனும் அவர் குற்றமற்றவரென்று சாட்சி பகர்ந்தான். லூக் 23:41. இவரது மரணத்தைப் பார்த்துக்கொண்டிருந்த நூற்றுக்கதிபதியும் இவர் குற்றமில்லாதவர் தான் என்று சாட்சி கொடுத்தான். லூக் 23:47. ஆகவே பகைக்கிறவர்களால் கூட குற்றமற்றவரென்று சாட்சி கொடுக்கத்தக்க பரிசுத்தர் இயேசு மாத்திரமே. இந்த இயேசுவை மணவாளனாகக் கொண்ட மணவாட்டி அவரை வெண்மையானவர் என்கிறாள். வெண்மை அவரது பரிசுத்தமே.

அது மாத்திரமல்ல அவர் சிவப்புமானவர்; அதாவது உலகத்தை இரட்சிக்க வந்த இரட்சகருமானவர்; இயேசு இரட்சகரே தான். பட்டணத்து பாவியாகிய சமாரிய ஸ்திரீயை இரட்சித்தார். கொலை பாதகனாகிய சவுலை இரட்சித்தார். ஆயக்காருக்குத் தலைவனாகிய சகேயுவை இரட்சித்தார். நூற்றுக்கதிபதியான கொர்நெலியுவை இரட்சித்தார்.

இரத்தாம்பரம் விற்கிற லீலியாளை இரட்சித்தார். இவ்விதமாய், அன்றும், இன்றும், என்றும் ஆயிரமாயிரங்களை இரட்சித்துக் கொண்டேயிருக்கிறார். இதுவே அவரின் சிவப்பாகும்.

**பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்:—** உலகத்தில் சிறப்பாய் தோன்றுகிறவைகளை உலகம் தெரிந்துக்கொள்ளும். அப்படிப்போல மணவாட்டியும் உலகத்தில் சிறப்பாய் எண்ணக்கூடியது ஏதாவதுண்டா என்று தேடி ஆராய்ந்து பார்த்தாள். அவள் பார்த்தபோது யாவும் மாயையும், மனதுக்கு சஞ்சலத்தையும் கொடுக்கக் கூடியதுமாயிருக்கிறதென்று அறிந்துக்கொண்டாள். பிர 1:13-14. அதே வேளையில் அவளது அளவுக்கு அடங்கக்கூடாத சிவப்புக்குரியவர் இயேசு என்பதை கண்டு அவரைத் தெரிந்துகொண்டாள். ஏனென்றால் இயேசு கலியான வீட்டில் சென்றார். திராட்ச ரசம் குறைவுபட்டபோது குறைவை நீக்கி கலியாண வீட்டை சிறப்பித்தார். பசியாயிருந்த ஐயாயிரம் பேர் மீது மனதுருகி, அவர்களது பசியை ஆற்றினார். பாடையில் கொண்டு போன வாலிபனை உயிரோடு எழுப்பி, அவர்கள் கண்ணீரைத் துடைத்தார். இவ்விதம் சொல்லரிய காரியங்களை செய்து சிறப்பித்த புண்ணிய புருஷன் இயேசுவே, ஆனதால் அவள் அவரை தெரிந்துக்கொண்டாள். அது மாத்திரமல்ல, உலகில் பலரும் பல பல மதிப்பிற்குரிய காரியங்களை நடத்துவார்கள். அப்படி புகழ்ச்சிக்குரிய காரியங்களை நடத்துகிற பதினாயிரம் பேர் இருந்தாலும் மணவாளனாகிய இயேசுவோ அவர்களெல்லாரிலும் சிறந்தவரென்று மணவாட்டி கூறுகிறாள். ஏனென்றால் என் நேசரால் செய்யக்கூடாத காரியம் ஒன்றுமில்லையென்பதை அறிந்து தைரியமாய் என் நேசர் பதினாயிரம் பேரிலும் சிறந்தவரென்று கூறுகிறாள். மெய்யாகவே அவர் பதினாயிரம் பேரிலும் சிறந்தவரே.

## 11-ம் வசனம்

அவர் தலை தங்க மயமாயிருக்கிறது. அவர் தலை மயிர் சுருள் சுருளாயும், காகத்தைப்போல் கருமையுமாயிருக்கிறது.

அவர் தலை தங்க மயமாயிருக்கிறது. அதாவது அவர் தலையில் தங்கம் கலந்திருக்கிறது. தலை மயிர் சுருளாயும் காகத்தைப்போல் கருமையுமாயிருக்கிறது. தலை மயிர் சுருளாயிருந்து கறுப்பாயிருந்தால் யாவரும் விரும்புவார்கள். அதே வேளையில் அந்த தலையில் தங்கம் கலந்திருந்தால்

மிகவும் மினுக்கமாயிருக்கும். கறுப்பில் ஒருவித மின்னும் மினுக்கம் ஜொலித்துக்கொண்டிருக்கும். அதனால் அழகு மிகுந்ததும், யாவரும் மெச்சிக்கொள்ளக் கூடியதும் யாவரையும் கவரக்கூடியதுமாயிருக்கிறதென்பதாகும்.

இத் தலையின் சகல சௌந்தரியமும் அவரது ஞானத்தைக் காட்டுகிறது. நமது மணவாளனாகிய இயேசுவின் ஞானம் எல்லாராலும் புகழப்படத்தக்கதே. அவர் பூமியில் மனிதனாகப் பிறந்த போதே ஞானத்தில் நிறைந்து அதிக மதிகமாய் விருத்தியடைந்தாரென்று எழுதியிருக்கிறது, லூக் 2 - 40, 52. அவருடைய உபதேசம் முழுவதும் ஞானம் நிறைந்ததாகவேயிருந்தது, அவருடைய வார்த்தையை குற்றப்படுத்த நியாயசாஸ்திரிகளும், வேதபாரகரும், சதுசேயரும் முயன்றும் அவர்களின் வாயை அடைத்தார். ஆதலால் அவர்கள் ஆச்சரியப்பட்டு இவருக்கு இந்த ஞானமும் பலத்த செய்கையும் எப்படி வந்ததென்று சொல்லி திகைத்தார்கள் மத் 13 : 54. அவ்வளவு பெரியதான ஞானம் அவரில் இருந்தது.

இவ்வித பூரண ஞான சம்பன்னரிடம் பேதையாகிய மனிதன் எவ்வித சந்தேகமுமின்றி ஞானத்தைக் கேட்டால் பகர்ந்து கொடுக்கிறவரார்கவேயிருக்கிறார். யாக் 1 : 5. தாவீதின் குமாரனாகிய சாலோமோன் கர்த்தரிடம் சென்று ஞானத்தைக் கேட்டான். கர்த்தரோ அவனுக்கு ஏராளமான ஞானத்தைக் கொடுத்தார். I இராஜா 3:9-11. பேதைகளை ஞானியாக்கும் வல்லவரை மணவாட்டி ருசித்தறிந்த படியால் யாவரும் விரும்பதக்க ஞானம் நிறைந்தவரெனப் புகழ்ந்து பேசுகிறாள்.

## 12-ம் வசனம்

அவருடைய கண்கள் தண்ணீர் நிறைந்த நதிகளின் ஓரமாய் தங்கும் புறா கண்களுக்கு ஒப்பானவைகளும். பாலில் கழுவப்பட்டவைகளும் நேர்த்தியாய்ப் பதிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது.

**கண்கள் தண்ணீர் நிறைந்த நதிகளின் ஓரமாய் தங்கும் புறா கண்கள்:-** புறா எப்பொழுதும் சுத்தமாயிருப்பதை விரும்பும் பட்சி. அதற்காக அடிக்கடி குளிக்க வேண்டும் ஆனபடியால் தண்ணீர் நிலையங்களின் பக்கம் வாசமாயிருப்பதை.

விரும்பும், புரு எவ்விதகவலையுமின்றி தேவைப்படும் போதெல்லாம் தண்ணீர் குடிக்கவும், குளிக்கவும் செய்யும். அதனுடைய கண்களில் எவ்வித கவலைக்கும் இடமில்லை. இன்ன காரியம் எனக்கு தேவையுண்டு; அதை தேடவேண்டுமென்றுள்ள கவலையுமில்லை. அப்படியே மணவாளானும் கவலையற்றவரே. ஏனென்றால் பிதா அவரோடு கூட இருக்கிறார். பிதா அவருக்குத் தேவையான எல்லாவற்றையும் கொடுக்கிறார். கெத்சமெனே தோட்டத்தில் உலகத்தின் பாவபாரம் அவர் மேல் சுமத்தப்படும்போது, பிதா தேவதூதனை அனுப்பி அவரை தேற்றினார். லூக் 22:42,43. நாற்பது நாட்கள் உபவாசம் முடிந்ததும், சாத்தானால் சோதிக்கப்படும் வேளையில் காட்டு மிருகங்களின் மத்தியில் சஞ்சரித்தார். அவ்வேளைகளில் தேவதூதர்கள் அவருக்கு ஊழியம் செய்தார்கள் மாற்கு 1:12,13. இவ்விதமாக அவருக்கு தேவைப்பட்ட வேளைகளிலெல்லாம் அவருக்கு ஒத்தாசையிருந்தபடியால் அவருடைய கண்களில் எவ்வித கலக்கமுமில்லை. ஏனென்றால் அவருடைய வாசம் பிதாவோடிருந்தது. இதனால் கண்ணில் கலக்கமில்லாதவர் என்று மணவாட்டி கூறுகிறார்.

**பாலில் கழுவப்பட்டவைகளும், நேர்த்தியாய் பதிக்கப்பட்டவைகளுமாயிருந்தது :—** கண்களில் தூசி விழுந்து வேதனைப்படும்போதும், தலை சூட்டினால் கண்களில் சிவப்பு உண்டாகும்போதும், கண்ணுக்கு ஒருவித நெரிசல் தோன்றும்போதும், பாலினால் கண்ணைக் கழுவுவார்கள். அப்பொழுது கண்களிலுள்ள கேடுகள் நீங்கி சொஸ்தமாகின்றன. இதற்காகவே பாலில் கழுவுவது வழக்கம். இது நமது மணவாளனாகிய இயேசுவின் கண்கள் சுத்தமான கண்கள் என்பதை மணவாட்டி எடுத்துக் காட்டுகிறாள்.

**பாவக் கண்கள் :—**

1. மேட்டிமையான கண் சங். 18:27
2. பாவத்தை விட்டோயாத கண் 2 பேதுரு 2:14.
3. தெய்வ பயமற்ற கண் ரோமர்.3:18.
4. சொருகிப்போன கண். II பேதுரு 1:5—9.
5. ஏழைக்கு விலக்கும் கண் நீதி 28;27

இயேசுவுடைய கண்கள் இப்படிப்பட்ட தன்மையுடைய வைகளல்ல. இயேசு தீமையைப் பார்க்கமாட்டாத சுத்த கண்ணன். ஆபகூக் 1:13. உத்தம இருதயமுள்ளவர்களை அறிந்து தமது வல்லமையை வெளிப்படுத்தும் கண்களையு டையவர். II நாளா. 16 : 9. ஜனங்களின் பாவத்தினால் வரும் தண்டனையை அறிந்து அழுகிற கண்களையுடையவர் லூக் 19:41—44. பசியாயிருக்கிறவர்களைப் பார்த்து பரிதபிக்பிக்கும் கண்களையுடையவர். மாற்கு 8:1-3. வியாதியஸ்தர்களைப் பார்த்து பெருமூச்சி விட்டு மனதுருகும் கண்களையுடைய வர் மாற்கு 7:31-35. இவ்வித பரிசுத்தமும், இரக்கமுமுள்ள கண்களே இயேசுவுடைய கண்கள். இந்த கண்கள் நேர்த்தியாய் பதிந்திருக்கின்றன, அதாவது யாதொரு முகதாட்சண்ணியமுமின்றி நீதியாய் உள்ளித்திரியங்களை அறிந்து II கொரி 4:4-5. யதார்த்தத்தின்படியே நியாயம் தீர்க்கிறவர் ஏசாயா 11:2-4, ஆமோஸ் 9:8. இப்படிபட்ட கண்களையுடைய மணவாளனின் கண்களை மணவாட்டி புகழ்ந்துரைக்கிறாள்.

## 13-ம் வசனம்

அவர் கன்னங்கள் கந்தவர்க்க பாத்திகளைப் போலவும் வாசனையுள்ள புஷ்பங்களைப் போலவும் இருக்கிறது. அவர் உதடுகள் லீலி புஷ்பங்களைப் போன்றது. வாசனையுள்ள வெள்ளைப்போளம் அதிலிருந்து வடிகிறது.

மணவாட்டி மணவாளனுடைய கன்னங்களை கந்தவர்க்க பாத்தியென்றும் வாசனையுள்ள புஷ்பமென்றும் புகழ்ந்து பேசுகிறாள். அகத்தின் அழகை முகத்தில் காணலாம். அவருடைய உள்ளம் சுத்தமுள்ளதும் சகலத்தையும் தாங்கக்கூடியதுமாயிருக்கிறபடியால் எப்படிபட்ட சோதனை வேளையிலும் அவருடைய முகநாடிக்கு எவ்வித மாற்றமுமுண்டாகவில்லை. சோதனையின் மேல் சோதனை நேரிட்ட வேளையிலும் அவர் முகநாடி மாற்றமற்றதாகவே இருந்தது. மற்றோர் அவரை புகழ்ந்த போதிலும் அவரது முகநாடி மாற்றப்படவேயில்லை சில முகநாடிகளோ அதது வேளைகளில் மாற்றமடைகிறது. அதாவது மாம்ச சுபாவஙகள் தலை காட்டுகிறதென்பதாகும். அப்படி முகநாடிகள் மாற்றமடைந்த சில முகங்களை (கன்னங்களை) வேத புத்தகத்தில் காணலாம்.

1. ஆபேலுடைய காணிக்கை ஏற்றுககொள்ளப்பட்டபடியால் காயீனுடைய முகநாடி வேறுபட்டது. ஆதி 4:3-5.

2. யாக்கோபு ஆசீர்வதிக்கப்பட்டதால் லாபானுடைய முகநாடி வேறுபட்டது. ஆதி 31:1-2.

3. தேவன் கொடுத்த சொப்பனத்தால் பொருள் விளங்காதபடி முகநாடி வேறுபட்டது. ஆதி 40:5-22.

4. ஸ்திரீகள் தாவீதை கனப்படுத்தின படியால் சவுலின் முகநாடி வேறுபட்டது. I சாமு 18-7-9.

ஆனால் :இயேசுவின் முகநாடியோ, அவருக்கு நேரிட்ட எவ்வித காரியங்களில் மாற்றமடையவில்லை.

1, அவரை இராஜாவாக்க முயன்றார்கள், அதை அவர் விரும்பவில்லை. யோ. 6:15.

2. நிக்கொதேமு புகழ்ந்தான். புகழ்ச்சியை விரும்ப வில்லை. யோ. 3:1-3.

3. பிசாசு பிடித்தவனென்று இகழ்ந்தார்கள். கவலைப் படவில்லை. மத். 9:34, 12:24.

4. பொய்யாய்க் குற்றம் சாட்டினார்கள். எதிர் பேச வில்லை மத். 27:12-14.

5. முள்முடி சூட்டி கோலினால் அடித்தார்கள். எவ்வித கசப்பும் எழும்பவிலலை. மத். 27:28—31.

6. சிலுவையிலறைந்து தூஷித்தார்கள். அவர்களுக் காக பரிந்து பேசினார். மத். 27:39—43.

இந்த வேளைகளிலெல்லாம் அவருடைய சுபாவத்திற்கு எவ்வித மாற்றமும் காணப்படாதபடியால் மணவாட்டி மணவாளனின் முகம் கந்தவர்க்க பாத்தியென்றும். வாசனையுள்ள புஷ்பமென்றும் புகழ்ந்து பேசுகிறாள்.

**உதடுகள் லீலிப் புஷ்பங்களைப்போன்றது. வாசனையுள்ள வெள்ளைப்போளம் அதிலிருந்து வடிகிறது** :— உதடுகளென்றால் வார்த்தைகள் புறப்படுவதைக் காட்டுகிறது. அவருடைய வாயிலிருந்து கிருபையுள்ள வார்த்தைகளே புறப்பட்டுக் கொண்டிருந்தது. அதைக் கண்ட மற்றவர்களும் ஆச்சரி யப்பட்டார்கள். லூக். 4:22. வாக்குவாதம் பண்ணவுமில்லை. கூக்கிரலிடவுமில்லை. மத். 12:19. கேட்கிறவர்களுக்கு பிரயோ னமான வார்த்தைகளையே பேசினார். அவைகள் யாவும் நித்திய ஜீவனுக்குரிய வார்த்தைகளாகவே இருந்தது.

யோ. 6:69. ஆனபடியால் அவரது வார்த்தைகளை லீலிப் புஷ்பத்தை விரும்புவதுபோல் விரும்பினார்கள். அதோடு அவரது வார்த்தையைக் கேட்ட மரித்தோர் உயிரடைந்தனர். யோ. 11:43,44, லூக். 7:11-15. வியாதியஸ்தர் சுகம் அடைந்தனர். மாற்கு. 2:1-12. பிசாசினால் வாதிக்கப்பட்டோர் விடுதலையடைந்தனர். லூக். 8:26—36. சமாதானமில்லாதவர்கள் சமாதானமடைந்தனர். லூக். 8:48. பாவிகள் இரட்சிக்கப்பட்டனர். யோ. 4:41,42. இவைகள் யாவும் வெள்ளைப்போளம் வாசனை கொடுத்து வீசினதுபோல் வீசியது. ஆனபடியால் மணவாட்டி மணவாளனுடைய உதட்டை புகழ்ந்து பேசுகிறாள்.

## 14-ம் வசனம்

அவர் கரங்கள் படிகப்பச்சை பதித்த பொன் வளையங்கள் போலிருக்கிறது. அவர் அங்கம் இந்திர நீல இரத்தினங்கள் இழைத்த பிரகாசமுள்ள யானை தந்தத்தைப் போலிருக்கிறது.

**கரங்கள் :—** படிகபச்சை பதித்த பொன் வளையங்கள் போலிருக்கிறது. படிகபச்சை என்பது விலையேறப்பெற்ற கற்களில் ஒன்றாகும். படிகப்பச்சை கல் புதிய எருசலேமிலும், ஆசாரியனாகிய ஆரோனின் மார்பதக்கத்திலும் இருந்ததாகவும் காண்கிறோம். வெளி. 21:9, யாத் 28:20.

பொன் வளையல்களை அதிகமாக ஸ்திரிகளே அணிவார்கள். புருஷர்கள் பொன் வளையல்களை அணிவது அரிது. அப்படி அணிகிறவர்கள் உலக வித்தைகளில் வெற்றி பெற்றவர்கள் என்பதைக் காட்டவே அணிவார்கள். மணவாட்டி மணவாளனின் கரத்தை படிகப்பச்சை பதித்த பொன் வளையங்கள் போலிருப்பதாகச் சொல்லுகிறாள். இது அவரது கரம் பரீட்சிக்கப்பட்டு ஜெயம்கொண்ட கரம் என்பதைக் காட்டுகிறது. இயேசு முற்றிலும் பரீட்சிக்கப்பட்டவரே, அவரது கரங்களை மாத்திரம் குறிப்பாகக் கூறும் போது, அவரது கரமும் பரீட்சிக்கப்பட்டது தான் கெத்சமெனே தோட்டத்தில் வைத்து சத்துருக்கள் அவரை பிடித்து அவரது கரத்தைக் கட்டினார்கள். ஒரு இரவுக்குள்ளாக ஐந்து நியாயாசனத்திற்கு முன்னதாக ஆறு தடவை விசாரிக்கப்பட்டபோதும் கள்ளனைப்போல் கை கட்டப்பட்டவராகவே நிறுத்தப்பட்டார். முடிவாக கற்றூணில் கைகளைச் சேர்த்து இறுகக் கட்டி வாரினால் அடித்தார்கள் சரீரம்

முழுவதும் சாட்டையால் அடிக்கப்பட்டது. அதன் பின்னர் பாரச்சிலுவையை தோள்மீது சுமந்துகொண்டு கொல்கொதா மேட்டிற்குச் சென்றார். சிலுவையை சுமக்க மாட்டாதவராய் கையினால் தாங்கி இழுத்துச் சென்றார். கொல்கொதா சென்றதும் சிலுவையின்மேல் அவரைப் படுக்க வைத்து இரு கரங்களையும் இழுத்து ஆணிகளால் கடாவினார்கள். அதன் பின்னர் கன்மலையில் தோண்டப்பட்ட குழியில் பாரச் சிலுவையைத் தூக்கி நாட்டினார்கள். அப்போது அவர் சரீரம் முழுவதுமாகவே வதைக்கப்பட்டது.

ஆகவே நன்மை செய்த இயேசுவின் கரம், பசியாயிருந்தவர்களை ஆற்றித் தேற்றியனுப்பின கரம், ஐந்து அப்பங்களை எடுத்து ஆசீர்வதித்து ஐயாயிரம் பேர்களைப் போஷித்து அனுப்பின கரம், குஷ்டரோகிகளைத் தொட்டு சொஸ்தமாக்கின கரம். குருடர்களுடைய கண்களைத் தொட்டு பார்வையடையச் செய்த கரம், ஊமையும் செவிடுமானவனை தொட்டு பெருமூச்சுவிட்டு திறக்கச் செய்த கரம், சிறு பிள்ளைகளைத் தொட்டு ஆசீர்வதித்த கரம். இவ்விதம் எண்ணரிய வன் காரியங்களை நடப்பித்த கரம். இப்போது பொல்லாத அதிகாரிகளாலும் சேவகராலும் வதைக்கப்பட்டு பரீட்சிக்கப்பட்டது. அப்போது முறுமுறுக்கவோ, சஞ்சலப்படவோ இடம் கொடுக்கவில்லை. சற்றுமே தளராமல் சந்தோஷமாய் பொறுத்து, ஜெயம் பெற்றவராய் விளங்கினார். இப்பொழுதும் பிதாவின் வலது பாரிசத்திலிருந்து தமது காயப்பட்ட கரத்தைக் காட்டி பரிந்து பேசிக்கொண்டேயிருக்கிறார், 1 யோ 2:1,2. இதுவே மணவாளனாகிய இயேசுவின் கரங்களின் அனுபவம்.

**அங்கம் :—** இந்திர நீல இரத்தினங்கள் இழைத்த பிரகாசமான யானைத் தந்தங்கள் போலிருக்கிறது.

**இந்திர நீலம் :—** இதுவும் விலையேறப்பெற்றதும் பரீட்சிக்கப்பட்டதுமான கல்லே.

**யானை தந்தம் :—** இதுவும் விலையேறப்பெற்ற மதிப்பிற்குரிய பொருளே. மணவாட்டி அவரது அங்கத்தை இந்திர நீலம் இழைத்த யானைத் தந்தத்தோடு உவமித்திருக்கிறாள். அவருடைய சரீரத்தில் சத்துருக்களின் சாட்டையடி படாத இடமே இல்லை. சத்துருக்கள் அவரை வதைத்தார்கள்.

சரீரம் முழுவதும் உளவுசால்போல் காணப்பட்டது. மாமி சமெல்லாம் கிழிக்கப்பட்டது. இரத்தம் முழுவதும் தாரை தாரையாக வடிந்தது. அப்போதும் வாய் பேசாதவராக குற்றமற்றவராக விளங்கினார். சிலுவையில் சரீர வேதனை அடையும்போதும் பிதா குமாரனின் பாடுகளை சகிக்கக் கூடாதவராக கலங்கினார். அப்போது குமாரனே என் தேவனே ! என் தேவனே மனிதரின் மீட்பிற்காகவல்லவோ என்னைக் கைவிட்டீர். பின்னர் ஏன் வேதனைப் படுகிறீர் ரென்று ஆற்றினார். சொல்ல முடியாத பாடுகளைச் சரீரத்தில் அடைந்தபோதும் குற்ற மற்றவராகவே விளங்கினார். ஆதலால் மணவாட்டி மணவாளனின் சரீரம் பரீட்சிக்கப் பட்ட பின்னர் இந்திர நீல கல் போலும், விலையேறப்பெற்ற தந்தம் போலும் பரிசுத்தராய் விளங்குகிறார் என புகழுகிறாள்.

## 15-ம் வசனம்

அவர் கால்கள் பசும் பொன் ஆதாரங்களின்மேல் நிற்கிற வெள்ளை கல் தூண்களைப் போலிருக்கிறது. அவர் ரூபம் லீபனோனைப் போலவும். கேதுருக்களைப் போலவும் சிறப் பாயிருக்கிறது.

கால்கள் பசும் பொன்னின்மேல் நிற்கிற வெள்ளை கல் தூண்கள்போல் இருக்கிறது. காலைத் தூணோடு உவமிக்கிறாள். வீட்டை தாங்கி நிற்பது தூணகள். இந்த தூண்கள் பொன்னின்மேல் நிற்கிறது. பொன் விசுவாசத்தைக் காட்டு கிறது. I பேது 1:7. சபையாகிய வீட்டை விசுவாசத்தில் தான் ஸ்தாபித்திருக்கிறது. இந்த சபையை சுமக்கிறவர் இயேசு. தூணாகிய இயேசுவை வெள்ளை கல்லோடு உவமிக் கிறாள். இயேசு பரிசுத்தமான ஜீவனுள்ள கல் I பேது 2:4. ஏசாயா சொல்லும்போது இதோ அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனில் வைக்கிறேன் அது பரீட்சிக்கப்பட்டதும். விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக் கல். இந்த கல்லே இயேசுவாகிய தூண். இவர் தான் சபையைத் தாங்குகிறவர். இவருக்கு வல்லமையுள்ள தேவன் எனப்பெயருண்டு. இந்த வல்லமையுள்ள தேவனை மண வாட்டி அறிந்திருந்த படியால் மணவாளன் சபையை தாங்க வல்லவரான புகழ்ந்து பேசுகிறாள்.

அவர் ரூபம் லீபனோனைப்போலவும் கேதுரு போலவும் சிறப்பாயிருக்கிறது:— லீபனோன் என்பது ஒருமலை. கேதுரு என்பது ஒருவித மரம். லீபனோன்மலையில் கேதுரு மரம்

ஏராளமுண்டு. கேதுரு மரப்பலகையால்தான் ஆலயத்தைக் கட்டினார்கள். இது அழகும், பெலமும், வாசனையும்முள்ளது மான மரம். இயேசுவிலிருந்துதான் அவரது சபை உளவாகிறது. அந்த சபை அழகும், பெலமும், வாசனை வீசக் கூடியதுமாயிருக்கிறது. மலையில் மரம் நிற்குமாப்போல் கிறிஸ்துவில் சபை நிலைநிற்கிறது. அசையாமல் நிலைநிற்கிறது. ஆனபடியால் அது உலகிற்கு பிரகாசிக்கிறது. இதை தான் அவரது ரூபம் விளங்கப் பண்ணுகிறது.

## 16-ம் வசனம்

அவர் வாய் மிகவும் மதுரமாயிருக்கிறது. அவர் முற்றிலும் அழகுள்ளவர் இவரே என் நேசர் எருசலேம் குமாரத்திகளே ! இவரே சிநேகிதர்.

**அவர் வாய் மிகவும் மதுரமாயிருக்கிறது:—** அவரது வாய் என்றால், வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகளைக் காட்டும். அவரது வாயில் வீண் வார்த்தைகளில்லை; அலப்புகிற குணங்களில்லை; கபடில்லை. வஞ்சனையில்லை; பொய்யில்லை; தூஷணமில்லை; பட்டயகுத்துப்போன்ற :வார்த்தையில்லை; கடுஞ்சொல்லில்லை. இப்படிப்பட்ட எவ்விதமான துர்க்குணங்களுமில்லை. அவரது வாயில் தேன் போன்ற ஜீவவார்த்தைகள் உண்டு. அவர் கேட்போரை இழுத்துக்கொள்ளும் கிருபை பொருந்தின வார்த்தைகளையே பேசுவார். தீமை செய்கிறவர்களுக்காக வாயிலிருந்து ஜெபம் எழும்பிக் கொண்டேயிருந்தது. மற்றவர்களது அழிவை கண்டு அழுதார். இதை அறிந்து மணவாட்டி மணவாளனது வாய் மதுரமானது என்கிறாள்.

**அவர் முற்றிலும் அழகுள்ளவர்;—** ஒருவனை அழகில் சிறந்தவனென்று பெரியோர்கள் புகழ வேண்டுமானால் அவனது அவயங்களெல்லாம் ஒழுங்கே அழகில் சிறந்ததாகக் காணப்படவேண்டும். சில அவயங்கள் அழகுள்ளதாகவும், சில அவயங்கள் பொதுவாகவும் தோற்றமளிப்பினும் புகழார், ஆனால் நமது மணவாளனாகிய இயேசுவோ முற்றிலும் அழகுள்ளவர். உலகில் தோன்றின மதகர்த்தாக்களோ, அரசியல் வாதிகளோ, கலைஞரோ, ஒவ்வோர் குணங்களில் புகழ்ச்சிக்குரியவர்களாயிருந்தார்கள்; முற்றிலும் மெச்சதக்கவர்களல்ல. ஆனால் இயேசுவோ முற்றிலும் அழகுள்ளவர் அவரது தலை, தலைமயிர், கண்கள், கன்னங்கள், உதடு, கரங்கள்,

அங்கம், கால், ரூபம், வாய் எல்லாம் அழகே. ஒரு பூரண புருஷனுக்குரிய எல்லா தன்மைகளும் அடங்கப் பெற்றவரா யிருக்கிறார்.

இவரது அவயவங்கள் இவரது குணங்களையே காட்டுகி றது. ஆனபடியால் மணவாட்டி அவரது குணங்களையறிந்து முற்றிலும் அழகுள்ளவரென உறுதிப் படுத்திப் பேசுகிறாள்.

இதோ இவர் தான் என் நேசர்; என் சிநேகிதர் என்றும் எருசலேம் குமாரத்திகளுக்கும் சொல்லுகிறாள். நான் மற்ற நேசரைக் காட்டிலும இவரை நேசிக்க காரணம் இதுவே; இவர் எனக்கு ஆலோசகராகவும், இரகசியங்களை அறிவிக்கிற வராகவும் இருக்கிறார். ஆனபடியால் தான் இவரது நேசத் தால் சோகமுற்றிருக்கிறேன் என்றாள்.

## 6-ம் அதிகாரம்

இவ்வதிகாரத்தில் ஆவிக்குரிய ஜீவியத்தில் சற்று அசதி யாயிருந்த மணவாட்டி தனது குறைவுகளை உணர்ந்து புதுப் பிக்கப்பட்டு மணவாளனோடு நெருங்கி ஜீவிப்பதையும், தன்னை ஆயத்தப்படுத்துவதையும், சடுதியாக எடுத்துக் கொள்ளப் படும் அனுபவத்தையும் படிக்கலாம்.

### 1-ம் வசனம்

உன் நேசர் எங்கே போனார் ஸ்திரீகளில் ரூபவதியே உன் நேசர் எவ்விடம் போய் விட்டார். உன்னோடு கூட நாங்களும் அவரைத் தேடுவோம்.

மணவாட்டி இழந்துபோன மணவாளனை என் நேசரைக் கண்டீர்களா என்று எருசலேம் குமாரத்திகளிடம் கேட்கச் சென்றாள். அப்போது அவர்கள் சீயோன் குமாரத்தியின் அங்கலாய்ப்பைக் கண்டு உன் நேசர் எதினால் விசேஷித்தவர் இவ்வளவுக்கதிகமாய் அங்கலாய்க்கிறாயே என்று கேட்டார்கள். அதற்கு சீயோன் குமாரத்தியாகிய மணவாட்டி தனது மண வாளனின் அழகை உச்சம் தலை முதல் உள்ளம் கால் மட்டும் ஒவ்வொரு அவயவமாய் வர்ணித்தாள். அதாவது இயேசுவின் ஒவ்வொரு திவ்விய குணங்களையும் வர்ணித்தாள். இதைக்

கேட்ட இரட்சிப்பின் அனுபவமுள்ள எருசலேம் குமாரத்தி களுக்குள் ஓர் பெரிதான உணர்ச்சி உண்டானது. இவ்வளவு விசேஷமான ஆத்தும மணவாளனை நாமும் மணவாளனாகத் தெரிந்து கொள்ளாதது குறைவுதான் என உணர்ந்தார்கள். இயேசுவை ஆண்டவராகவும் இராஜாவாகவும் வைத்திருந் தால் போதாது, மணவாளனாகத் தெரிந்தெடுப்பது எவ்வளவு மேன்மை என்பதை அறிந்து, அவர்களும் மணவாட்டியோடுத் தேட ஆரம்பித்தார்கள், ஆகவே நமது நேசரை உண்மை யாகவே நாம் வர்ணிப்போமானால் பாவிகளும், ஆவியில் குளிர்ந்தவர்களும், பின்மாற்றக்காரர்களும், இரட்சிக்கப் பட்டவர்களும், முன்னேற்றமடைந்து கர்த்தரை நேசிப் பதற்குக் காரணமாகும். ஆதலால் நாம் நமது மணவாளனா கிய இயேசுவின் அன்பையும் அவரது பரிசுத்தத்தையும், எப் பொழுதும் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்ட கடனாளிகளாக இருக்கிறோம். அப்பொழுது அனேகரை ஆதாயம் பண்ண லாம்.

## 2-ம் வசனம்

தோட்டங்களில் மேயவும் லீலிபுஷ்பங்களைக் கொய்யவும் என் நேசர் தமது தோட்டத்துக்கும் கந்தவர்க்கப் பாத்திகளுக் கும் போனார்.

மணவாட்டியின் உபதேசம், எருசலேம் குமாரத்திகளை அதாவது இரட்சிக்கப்பட்டவர்களை உற்சாகப்படுத்தினபடி யால் இருவகுப்பாருமாக சேர்ந்து மணவாளனைத் தேட ஆரம் பித்தார்கள். அதாவது ஊக்கமாக ஒரு மனதோடு ஜெபிக்க ஆரம்பித்தார்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியானவர், மண வாளனாகிய இயேசு தமது, தோட்டமாகிய சபையிலேயே இருக்கிறார் என்பதாக காட்டிக் கொடுக்கிறார். அப்பொழுது மணவாட்டி இயேசு எங்கும் போய்விடவில்லை, தமது தோட்ட மாகிய சபையில்தான் இருக்கிறார் என்பதை அறிகிறாள்.

**தோட்டத்தில் மேயவும்:—** இது தமது பரிசுத்தவான்கள் சபையாகிய தோட்டத்தில் எவ்விதம் ஜீவிக்கிறார்கள் என் பதைக் காட்டுகிறது, யோவான் பத்முத்தீவில் இருக்கும்போது சின்னாசியாவிலுள்ள ஏழு சபையிலும் அவர் உலாவுவதையும் அவர்களது குறைவை எடுத்துரைப்பதையும் காணலாம். அவ்வாறு இயேசு பூலோகத்திலிருக்கும்போது, ஒரு உவமை யும் சொன்னார். ஒருவன் தன் தோட்டத்தில் அத்திமரத்தை

நட்டிருந்தான் அவன் வந்து கனியைத் தேடினபோது ஒன்றையும் காணவில்லை. மூன்று வருஷமாய் கனியைத்தேடினேன், தேடியும் காணாததால் வெட்டிப்போடு நிலத்தையும் கெடுக்கிறது என்றான். தோட்டக்காரனே ஐயா, இந்த ஒரு வருடமும் நிற்கட்டும், பார்ப்போம், இல்லாவிட்டால் வெட்டிப் போடலாம் எனப் பரிந்து பேசினான். லூக்கா 13:6-9. நமதுத் தோட்டக்காரராகிய இயேசுவும் எப்பொழுதும் ஒவ்வொரு ஆத்துமாவுக்காகவும் பரிந்து பேசுகிறவராகவே இருக்கிறார். அதற்காக அவர்கவலைப் பட்டு சபையில் உலாவிக் கொண்டே இருக்கிறார்; இதுவே தோட்டத்தில் மேய்வதாகும்-

**லீலி புஷ்பங்களை கொய்தல்:—** தோட்டங்களில் அனேக விதமான கனிதரும் மரங்களும் செடிகளும் புஷ்பங்களும் உண்டு. இவை விசுவாசிகளில் விதவிதமான அனுபவம் உள்ளவர்கள் உண்டு என்பதைக் காட்டுகிறது. தோட்டங்களிலுள்ள புஷ்பங்களில் ஒன்று லீலி புஷ்பம். இந்த புஷ்பம் அழகானதும் யாவரையும் சந்தோஷிப்பதுமான புஷ்பம். தோட்டத்தில் எஜமான் உலாவ வரும்போது தனக்கு தேவையானவற்றை வெட்டவோ. பிடுங்கவோ கொய்யவோ செய்கிறார். இது தேவன் தமது தோட்டமாகிய சபையிலிருந்து தமக்கு அருமையானவர்களை தம்மண்டை சேர்த்துக் கொள்வதாகும். கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது. சங் 116:15, கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள பாக்கியவான்கள். வெளி 14:13, இவ்விதப் பெரிய பாக்கிய பதவியை அடைய விசுவாசிகள் காத்து ஆயத்தமாயிருக்க வேண்டும் அவ்வேளைகளில் சஞ்சலப்பட்டு துக்கப்படுகிறவர்களாய் இருக்கக்கூடாது. 1 தெச 4:13 இவ்விதமான வேளைகளில் யோபு கர்த்தரை துதிக்கிறதாகப்பார்க்கிறோம். யோபு 1:21 மரித்தவர்களுக்காகத் துக்கப்படக்கூடாது. எரே 22:10 அப்படிச் செய்கிறவர்கள் நம்பிக்கை இல்லாத அஞ்ஞானிகள். பரிசுத்தவான்களை தம்மண்டை சேர்த்து கொள்ளும் போது நாம் சந்தோஷப்பட வேண்டும். ஏனென்றால் அவர்கள் பூமியின் எல்லா தொல்லைகளையும் விட்டு நீங்கி இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்திருக்கிறார்கள். ஆகையினால்தான் சந்தோஷப்பட வேண்டும் இதுவே லீலிப் புஷ்பங்களைக் கொய்வதாகும்.

**கந்த வர்க்கப் பாத்திகள்:-** பாத்திகள் என்பது தோட்டங்களில் தண்ணீர் சிதறி போகாதபடி பத்திரமாய் கட்டி நிறுத்துவதற்காக் கண்டம் கண்டமாக கட்டி நிறுத்தியிருக்கும்

பாகங்களுக்குத்தான் பாத்திகள் என்று கூறுவது. இது தேவனுடைய சபையாகிய தோட்டத்தில் ஊற்றப்பட்ட பரிசுத்தாவியாகிய தண்ணீர் பிரயோஜனமற்ற முறையில் சிதறப்பட்டு தூஷிக்கப்படாதிருக்க கட்டுபாடோடு கவனமாய் ஜீவிக்க, எச்சரிக்கிறார் என்பதாகும். அவ்விதமாக ஜீவிக்காவிட்டால் நன்மை தூஷிக்கப்படும். ரோமர் 14:16. தேவனுடைய இராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல. அது நீதியும், சமாதானமும், பரிசுத்தாவியினால் உண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது. ரோ 14:17 பரிசுத்தாவியைப் பெற்றும், நீதியும், சமாதானம் ஆவிக்குரிய சந்தோஷம் இவைகள் யாவும் இல்லாவிட்டால் பாத்தி உடைக்கப்பட்டு தண்ணீர் பிரயோஜனப் படாதது போல பரிசுத்தாவி பெற்றதாலுள்ள பிரயோஜனத்தை அடைய மாட்டார்கள். ஆதலால் அவற்றை சரிவர கவனித்து நாம் ஆவிக்குரியவர்களாய் விளங்க மணவாளன் சபையைக் கவனித்து எச்சரிக்கவும் தமக்குச் சித்தமானவர்களை தம்மண்டை சேர்த்தும் சபையில் உலாவிக் கொண்டும் இருக்கிறார் என்பதையும் அறிகிறோம்.

## 3-ம்வசனம்

நான் என் நேசருடையவள், என் நேசர் என்னுடையவர். அவர் லீலிப்புஷ்பங்களுக்குள்ளே மேய்கிறார்.

மணவாட்டி ஒரு தடவை பிரதிஷ்டை செய்திருந்தாள். இப்போது திரும்பவும் பிரதிஷ்டையை புதுப்பிக்கிறாள். உன் 2:16- ஐப்படிக்கவும்.

## 4-ம் வசனம்

என் பிரியமே நீ! திர்சாவைப் போல் சௌந்திரியமும் எருசலேமைப் போல் வடிவமும் கொடிகள் பறக்கும் படையைப்போல் கெடியுமானவள்.

**என் பிரியம்:—** உன் 1:9 ஐப் படிக்கவும்.

**திர்சாவைப்போல் சௌந்திரியம்:—** யோசுவா கானானுக்குள் வந்த போது பிடித்தடக்கின பட்டணங்களிலொன்று திர்சா. யோசுவா 12:24. பின்னர் இஸ்ரவேலை ஆண்ட பாஷா என்னும் இராஜா இந்த பட்டணத்தை இராஜ தரணியாக்கி

அரசாட்சி நடத்தினுன். I இராஜா 15:33. திர்சாவென்ருல் சந்தோஷம் அல்லது களிப்பு என்பது பொருள். மணவாட்டியின் ஆவிக்குரிய சந்தோஷமே அவளை அழகு படுத்துகிறது. இவள் எப்பொழுதும் ஆவியில் நிறைந்து சந்தோஷமுடையவளாகவே ஜீவிக்கிருள். இவளது சந்தோஷத்தை எடுத்துப் போட ஒரு வல்லமைக்கும் முடியவில்லை.

**விசுவாசி எப்பொழுதெல்லாம் சந்தோஷமாக இருக்க வேண்டும்?**

1 கிறிஸ்துவுக்காக அவமானப்படும் போது சந்தோஷமாக இருக்க வேண்டும். அப் 5:41.

2 உபத்திரவத்தில் சந்தோஷமாக இருக்க வேண்டும் II கொரி 7:4 I தெ 1:6.

3 ஆத்துமாக்களுக்காய் தங்களைச் செலவு பண்ண சந்தோஷமாக இருக்க வேண்டும். II கொரி 12:15, பிலி 2:17.

4 ஆஸ்திகளை கொள்ளையிடும் போது சந்தோஷமாக இருக்க வேண்டும். எபி 10:34.

5 சோதனையில் சந்தோஷமாக இருக்க வேண்டும் I பேது 4:12, 13.

6 பொய்யாய்க் குற்றம் சாட்டும் போது சந்தோஷப் பட வேண்டும். மத் 5:11, 12

7 மரணத்தில் சந்தோஷமாக இருக்க வேண்டும் யோபு 1:21 II சாமு 12:20.

8 நம்பிக்கையில் சந்தோஷமாக இருக்க வேண்டும். ரோமர் 12:12.

இவ்விதமாக மணவாட்டி எவ்வித காரியங்கள் நேரிட்டாலும் சந்தோஷமாகவேயிருக்கிருள். அவளது சந்தோஷமே அழகாயிருக்கிறது. ஆனபடியால் மணவாளன் திர்சாவைப் போல் அழகுள்ளவள் என்கிருர்.

**எருசலேம் போல் வடிவம் :—** நான்கு மலைகளை வெட்டி சமப்படுத்தி கட்டின பட்டணம் எருசலேம கோட்டை மதில் இதைச் சூழ்ந்திருந்தது. இதற்குள் தேவன் வரைந்து காட்டிக்கொடுத்துக் கட்டப்பட்ட ஆலயமிருந்தது. I நாளா.

28:19. தேவன் இதில் வாசமாயிருந்தார். இது பரிசுத்த பூமியென புகழ் பெற்றதாயிருந்தது. ஆதலால் இந்த பட்டணத்தை யாவரும் விரும்புவார்கள்.

இது போலவே மணவாட்டியும் தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்டவளாக இருந்தாள். தேவனே அவளை விரும்பின பரிசுத்தத்திற்கு கொண்டு வந்தார். இப்பொழுது அவரே அவளுக்குள் வாசமாயிருக்கிறார். ஆதலால் அவள் பரிசுத்த வாட்டியென்ற நற்சாட்சியோடு ஜீவிக்கிறாள். யாவரும் அவளை பிரியப்படக் கூடியதாயிருக்கிறது. இதனால் மணவாளன் அவள் உபதேசத்திலும் ஜீவியத்திலும் தன்னை சரிப்படுத்தின படியால் எருசலேம் போல் வடிவம் உள்ளவள் என்கிறார்.

**கொடிகள் பறக்கும் படையைப் போல் கெடியுமானவள் :—** யுத்தித்திற்கு போகிறவர்கள் தங்கள் தேசக் கொடிகளையும் கொண்டுப் போவார்கள். கொடிகளை தைரியத்தோடு யுத்தம் பண்ணும்போது பறக்க விடுவார்கள். ஜெய ஆகோஷத்திற்கும் பறக்க விடுவார்கள். ஜெய நம்பிக்கைக்கும் பறக்க விடுவார்கள். ஜெயத்திற்கும் பறக்க விடுவார்கள்.

சேனைகள் விசேஷமாகச் சத்துருக்களைத் தோற்கடித்து வெற்றியடையும் போது கொடிகளை பறக்க விடுவார்கள். அப்படியே மணவாட்டியும் தன்னுடைய ஜீவியத்தில் எல்லா விதத்திலும் சத்துருவை தோற்கடிக்கச் செய்து ஜெயம் பெற்றவளாக விளங்குகிறாள். ஆதலால் அவள் ஜெயக் கொடி பறக்கிறது.

**கெடியுமானவள் :—** அதாவது மணவாட்டி பயங்கரமான சத்துருவையும் பயப்படுத்தக் கூடியவளாயிருக்கிறாள். மணவாட்டியை கண்டவுடன் சத்துருவாகிய சாத்தான் பயப்படுகிறான். ஏனென்றால் சகல சத்துருவுடைய வல்லமையையும் மேற்கொள்ளும் அதிகாரம் அவளுக்கு இருக்கிறது. லூக். 10:19 மணவாளன் அவளுக்குரியவராகி விட்டார். ஆதலால் அவருக்குரியதெல்லாம் அவளுக்குரியது. அதை சத்துரு அறிகிறான். அவன் பட்ட வியாதியெல்லாம் அவளைக் கண்டதும் ஓடுகிறது. பிசாசும் கதறிக் கதறி ஓடுகிறான். ஆதலால் மணவாட்டி ஆவிக்குரிய சந்தோஷமுடையவளாகவும், சகல உபதேசத்துக்கும் தன்னை ஒப்புகொடுத்து, தன்னைச் சீர்படுத்தி ஜெயம் பெற்றவளாகவும் விளங்குகிறாள் என மணவாளன் கூறுகிறார்.

## 5-ம் வசனம்

உன் கண்களை என்னை விட்டுத் திருப்பு. அவைகள் என்னை வென்றது. உன் அளகபாரம் கீலேயாத் மலையில் தழை மேயும் வெள்ளாட்டு மந்தையைப் போலிருக்கிறது.

**உன்கண்களை என்னை விட்டு திருப்பு அவைகள் என்னை வென்றது :—** கண்களுக்கு மற்றவர்களைக் கவர்ந்து கொள்ளுந் தன்மையுண்டு. நீதி. 6:13,25. இங்கே மணவாட்டி கண்களினால் மணவாளனை இழுத்து வென்று விட்டாள். கண்கள் என்பது கர்த்தரில் ஆலோசனை கேட்டு ஜீவிப்பதாகும். கண்களால் மனிதரைப் பார்ப்பதுபோல கர்த்தரையே நோக்கிக் கொண்டிருப்பதாகும். நீதி. 15:24. சங்கீதக்காரன் எனக்கொத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன் என்கிறார். சங். 121:1. சின்னஞ் சிறு காரியங்களுக்கானாலும் தன் சொந்த ஆலோசனையை உபயோகப்படுத்தாமல் அவரையே கேட்டு ஜீவிக்கிறாள். முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு பெலத்தோடும் மணவாளனையே நேசிக்கிறாள் என்பதை அவர் அறிகிறார். ஆதலால் அவருக்கும் அவளை நேசியாமலிருக்க முடியவில்லை. ஆனபடியால் அவர் உன் கண்களை என்னை விட்டு திருப்பு. என்னை வென்றது என்கிறார். அதாவது நீ எதைக் கேட்டாலும் கொடாமலிருக்க முடியவில்லை. நீ ஒரு காரியத்தை சொன்னால் செய்யாமலிருக்க முடியவில்லை. ஏனென்றால் மணவாட்டியின் பாசம் அவர் மேல் பற்றுதலாயிருக்கிறது. ஆனபடியால்தான் உன் கண்களை என்னை விட்டு திருப்பு என்கிறார்,

**உன் அளகபாரம் கீலேயாத் மலையில் தழை மேயும் வெள்ளாட்டு மந்தையைப் போலிருக்கிறது :—** அளகபாரம் என்பதும், கூந்தலே. இது தலைமயிரையே கூறுவதாகும். உன். 4:1 ஐப் படிக்கவும்.

## 6-ம் வசனம்

உன் பற்கள் குளிப்பாட்டப்பட்டு கரையேறுகிறவைகளும், ஒன்றாகிலும் மலடாயிராமல், இரட்டைக் குட்டியீனுகிற ஆட்டு மந்தையைப்போலிருக்கிறது. உன். 4:2 ஐப் படிக்கவும்.

## 7-ம் வசனம்

உன் முக்காட்டின் நடுவே உன் கன்னங்கள் வெடித்த மாதுளம் பழம் போலிருக்கிறது.

**உன்முக்காடு :—** உன். 4:1 - ஐப் படிக்கவும்.

**வெடித்த மாதுளம் பழம் :—** உன். 4:3-ஐப் படிக்கவும்.

## 8-ம், 9-ம் வசனம்

இராஜஸ்திரீகள் அறுபது பேரும், மறுமனையாட்டிகள் எண்பது பேருமுண்டு. கன்னியருக்குத் தொகையில்லை. என் புறாவோ உத்தமியோ ஒருத்தியே. அவள் தன் தாய்க்கு ஒரே பிள்ளை. அவள் தன்னைப் பெற்றவளுக்கு அருமையானவள். குமாரத்திகள் அவளை கண்டு அவளை வாழ்த்தினார்கள். இராஜஸ்திரீகளும், மறு மனையாட்டிகளும் அவளைப் போற்றினார்கள்.

இயேசு இராஜாவின் வீடாகிய தேவனுடைய சபையிலே பற்பல அனுபவமுடைய தேவனுடைய ஜனங்கள் இருப்பதை படித்தோம். ஒவ்வொரு அனுபவமுள்ளவர்களையும் வித்தியாசம் வித்தியாசமான பெயர்களோடு கூறியிருக்கிறார். இப்பொழுது அவர்களை இராஜஸ்திரீ, மறு மனையாட்டி, புறா எனப் புகுத்திருக்கிறார்.

**இராஜஸ்திரீ :—** இவர்கள் இராஜ குமாரத்திகள். இவர்கள் தான் இராஜாவின் சுதந்தரவாளிகள். அதாவது பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்றவர்கள். இவர்கள் மகள் தகப்பனை நேசிக்கிறது போல் கர்த்தரை நேசிக்கிறவர்கள்.

**மறு மனையாட்டிகள் :—** இவர்கள் இராஜாவின் கூட வாழ்ந்தாலும் இராஜாவின் சொத்து சுதந்தரவாளிகளல்ல. கூடவே வாழ்கிறார்கள். என்றாலுமோ சுதந்தரமில்லாதவர்கள். இவர்கள் பரிசுத்தாவியின் வல்லமையைப் பெற்றவர்கள். அந்நிய பாஷை அடையாளத்துடன் பரிசுத்தாவியைப் பெறாதவர்கள். அதாவது முற்றுமாய் மணவாளனையே நேசித்து, அவரையே பின்பற்றும் பிரதிஷ்டையில்லாதவர்கள்

**கன்னியர்கள்:—** இராஜ அரண்மனையில் கூட்டிச்சேர்க்கப் பட்டவர்கள். அகாஸ்வேரு இராஜாவின் அரண்மனைக்கு 127 தேசத்திலுள்ள கன்னிப்பெண்களை கூட்டிச்சேர்த்தது போல் சேர்க்கப்பட்டவர்கள். எஸ். 2:1-3. அதாவது பாவத்திலிருந்து மீட்கப்பட்டு, இரட்சிப்புக்குள் கொண்டு வரப்பட்டு தேவனுடைய சபையிலே சேர்க்கப்பட்டவர்கள். அதாவது இரட்சிப்பின் அனுபவமுடையவர்கள்.

**புரு :—** இது மணவாட்டி ஆவி, ஆத்துமா, சரீரம் பரிசுத்தமாக்கப் பட்டவர்கள். I தெச. 5:23. முழு மனதோடு மணவாளனை பின்பற்றுகிறவர்கள். இவர்களே பரிபூரண பரிசுத்தவான்கள்.

இவர்கள் யாவரும் தேவனுடைய இராஜ்யத்திற்கு உட்பட்டவர்களே. ஆனால் உயிர்த்தெழுதலில் அவனவன் வரிசை கிரமம் படியே உயிர்த்தெழுவார்கள். I கொரி 15:23. இவர்களின் கணக்குத் தொகையை மணவாளன்; மணவாட்டியை ஒன்று என்றும், இராஜஸ்திரீயை அறுபதாகவும், மறுமனையாட்டியை எண்பதாகவும், கன்னியர்களை தொகையில்லையென்றும் பொதுவான கணக்கு விகிதப்படி வைத்திருக்கிறார். வெளிப்படுத்தல் 14-ம் அதிகாரம் ஒன்று முதல் நான்கு வசனங்களில் மணவாட்டியை இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் என கணக்காக்கியிருக்கிறார். ஆகவே மணவாட்டி ஒன்று என்பதை இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் என விளங்கலாம். இவ்விதமாய் ஜீவித பரிசுத்தத்திற்கேற்றபடியுள்ள முன்குறிப்பை நிழலாக நினைப்பதற்கோர் நியாயம் கொடுத்திருப்பதாகச் சிந்திக்கலாம்.

**என் புருவோ ஒருத்தியென கூறக்காரணம்?**

1. அநேகாயிரம் பரிசுத்தவான்கள் ஒருமனமாய் ஜீவித்தபடியால் ஒன்று என்று கூறுகிறார்: அப் 4:32.

2. சகோதர ஐக்கியத்தின் ஒருமைப்பாட்டை ஒன்று என்கிறார். I கொரி 1:9,10.

3. ஒருவருக்கு வரும் பாடு எல்லாருக்குமென எண்ணி ஜீவித்தபடியால் ஒன்று என்கிறார். I கொரி 12:25,26,

4. ஒரே ஆவியால் தாகந்தீர்க்கப்பட்டதால் ஒன்று என்கிறார். I கொரி 12:13.

5. மணவாளன் போன பாதை ஒன்று போல் போன படியால் ஒன்று என்றார். வெளி 14:4.

6. கறை திரை ஒன்றுமில்லாமல் ஒன்று போல் ஜீவித்த வர்கள். ஆனதால் ஒன்று என்றார். எபே 5:26.27.

7. ஒரே உபதேசத்தில் நிலைத்திருந்தவர்களானதால் ஒன்று என்றார். I கொரி. 1:5, I தீமோ 4:1.

இவர்கள் எல்லா காரியத்திலும் ஒன்றுபோல் நடந்தபடியால் ஒன்று என்று கூறியிருக்கிறது.

**மற்ற விசுவாசிகள் இருளை புகழக்காரணமென்ன?**

1. எல்லா விசுவாசிகளுக்கும் பிரியமாய் நடந்தாள். I தெச 2:10.

2. எல்லா விஷயத்திலும் முன்மாதிரியாயிருந்தாள். I தீமோ 4:12.

3. எல்லாருக்கும் அடிமையாயிருந்தாள். I கொரி 9:19

4. மற்றவர்களுக்காகச் செலவு செய்தாள். II 12:15.

5. மற்றவர்கள் வாழ்வை நாடினாள். பிலி 2.4.

இவைபோன்ற நற்குணங்களால் மணவாட்டி நிறைந்து ஜீவித்தபடியால் கன்னியர்களும். மறுமனையாட்டிகளும் இராஜஸ்திரிகளும் இவளை வாழ்த்தினார்கள். இதைக் கண்டு மணவாளன் மணவாட்டியின் மேன்மையை எடுத்துக் காட்டுகிறார்.

## 10-ம் வசனம்

சந்திரனை போல் அழகும், சூரியனை போல் பிரகாசமும், கொடிகள் பறக்கும் படையைப்போல் கெடியுமுள்ளவளாய் அருணோதயம் போல் உதிக்கிற இவள் யார்?

**சந்திரனை போல் அழகு:—** சந்திரன் அழகில்லாத ஓர் கறுத்த கோளம் அதற்கு சூரியனிலுள்ள வெளிச்சம் அதில் வீசும்போது பிரகாசிக்கிறது. அப்போது சந்திரனிலிருந்து அழகான ஒளி இராக்காலங்களில் பூமிக்கு கிடைக்கிறது. சந்திரன் சூரியனிலிருந்து ஒளியை வாங்கிப் பூமிக்குக் கொடுக்கிறது.

இதுவே மணவாட்டியின் அனுபவம். மணவாட்டி பாவ இருள் நிறைந்தவள். கிறிஸ்துவாகிய நீதியின் சூரியனால் தான் பிரகாசமாக்கப்படுகிறாள். அதனால் இருட்டிலிருக்கிற பாவிகளுக்கு வெளிச்சம் கொடுக்கிறாள்.

**சூரியன்:—** இது உலகத்திற்கு பகலில் வெளிச்சம் கொடுக்க உண்டாக்கப்பட்ட கோளம். இது யாவருக்கும் வித்யாசமின்றி வெளிச்சத்தைக் கொடுக்கிறது.

சூரியனும், சந்திரனும் மணவாட்டியின் இருவித அனுபவங்களைப் படிப்பிக்கிறது. அந்தகாரத்திலிருப்பவர்களுக்கும். வெளிச்சத்திலிருப்பவர்களுக்கும், உபதேசிப்பது, மாத்திரமல்ல நற்கிரியைகளை காட்டி சாட்சியாயுமிருக்கிறாள். இதனால் ஜனங்கள் இரட்சிப்பில் வருகிறார்கள். விசுவாசிகளுக்கு ஆழமான சத்தியங்களைக்கூறி முன்னேற்றிக்கொண்டு போகிறாள். இவள் முன் மாதிரியாக ஜீவிக்கிறபடியால் இவளோடு ஜீவிக்கிற பாவிகளும் மகிழ்கிறார்கள். விசுவாசிகளும் மகிழ்கிறார்கள். இதைக் கண்ட மணவாளன் மணவாட்டியை சந்திர சூரிய அனுபவத்தோடு எடுத்துக்கூறுகிறார்.

**கொடிகள் பறக்கும் படையைப் போல் கெடியுமுள்ளவள்.**

உன் 6:4. ஐப் படிக்கவும். இவள் ஊழியத்தில் உற்சாகமுள்ளவளும். சத்துருவை தோற்கடித்து ஜெயிக்கும். ஜெய ஜீவியமுள்ளவளும். சத்துருவை பயப்படுத்த கூடிய தைரியமுள்ளவளாயிருக்கிறாளென்று மணவாளன் புகழ்கிறார்.

**அருணோதயம்போல் உதிக்கிற இவள் யார்?**

பெந்தேகொஸ்தே நாள் முதல், அதாவது சபை ஆரம்பித்த காலம் முதல் கிறிஸ்து இரண்டாவது பூமிக்கு வருமட்டுமுள்ள காலத்திற்கு ஒரு இராத்திரி காலமென வேத புஸ்தக ஒழுங்கின் படி கூறலாம். அப்படி குறிப்பிட்டு, வீட்டெஜமான் சாயங்காலத்திலோ, நடு இராத்திரியிலோ, சேவல் கூவும் நேரத்திலோ, காலையிலோ, வருவாரென சபையின் காலத்தை ஒரு இரவுக்கு அடையாளமாக்கி இயேசு சொன்னார். மாற்கு 13:35-36. ஒரு இரவு என்றால் நான்கு ஜாமங்கள் கொண்டதாகும். நான்காம் ஜாம ஆரம்ப வேளையில்தான் அருணோதயம் அதாவது விடி வெள்ளி உதிக்கிறது.

இயேசுவை விடி வெள்ளி என்றும் வேத புஸ்தகத்தில் கூறியிருக்கிறது. வெளி. 22:16, அப்படியே ஜெயம் பெற்ற வர்களுக்கு விடிவெள்ளி நட்சத்திரத்தைக் கொடுப்பேனென்று கூறியிருக்கிறார். வெளி. 2:26-28. அதேவேளையில் இங்கு மணவாட்டிக்கும் அருணோதயம் என்று கூறியிருக்கிறார். அதாவது மூன்றும் ஜாமம் முடியும்போது நான்காம் ஜாமம் துவக்கும் வேளையில் அதாவது விடிவெள்ளி உதிக்கிற காலை யில் ஜெயம் பெற்ற பரிசுத்தவான்களின் தொகை நிறை வேறவும் அவர்கள் உயிர்த்து மறுரூபமடைகிறார்கள். அதற்கு பின்னர் அதாவது சூரியன் உதிப்பதற்கு முன்னதாக பூமியில் காணப்படும் இருளே அந்தி கிறிஸ்துவின் காலம். அந்த காலமே ஒருவரும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் யோவான் 9:4.

அதற்கு முன்னதாக பிரகாசித்து வரும் மணவாட்டியைப் பார்த்து மணவாளன் அருணோதயம் போல் வருகிற இவள் யார் என்கிறார். அதோடு வனாந்தரத்திலிருந்து வருவதாகக் கூறுகிறார். வனாந்தரம் என்பது பெரிய உபத்திரவத்தைக் காட்டுகிறது. மணவாட்டி உபத்திரவத்துக்கு ஒப்புக் கொடுத்தது மாத்திரமல்ல ஆயத்தமாக்கவும் செய்திருக்கி றாள். ஆனபடியால்தான் வனாந்தரத்திலிருந்து வருகிற இவள் யார்? என்கிறார்.

## 11-ம் வசனம்

பள்ளத்தாக்கிலே பழுத்த கனிகளைப் பார்க்கவும், திராட்ச செடிகள் துளிர் விட்டு மாதுளம் செடிகள் பூத்ததா என்று அறியவும், வாதுமைத் தோட்டத்துக்குப் போனேன்.

**வாதுமைத் தோட்டத்துக்குப் போனேன் :—** மணவாட்டி எடுத்துக் கொள்ளப்படும் வேளை வந்ததென்று கண்ட மண வாளன் அவளைச் சேர்த்துக் கொள்ள முடிவு கட்டி விட்டார். அதற்காக வாதுமைத் தோட்டத்திற்கு சென்றார். வாதுமை யென்றால் தீவிரமாய் நிறைவேற்றுவேன் என்பது பொருள் எரேமியா 1:11-12. அதாவது இனிமேல் எக்காளம் தொனிக்க கால தாமதமில்லையென்பதாகும்,

மணவாட்டி எடுக்கப்படும் வேளைக்கு நிறைவேற வேண் டிய யாவும் நிறைவேறி விட்டது. அதற்குரிய அடையாளங் களெல்லாம் காணப்படுகிறது. ஆதலால் சபை பூரணப்

பட்டதா என்று பார்க்க மணவாளன் சென்றார். ஏனென்றால் திராட்சை துளிர் விட வேண்டும்; மாதுளம் செடி பூப்பூக்க வேண்டும்.

**திராட்சை துளிர் விடல்:—** சபைக்கு திராட்சை என்ற பெயர் கொடுத்திருக்கிறது. யூத ஜாதியின் ஆவிக்குரிய அனுபவம் திராட்சை சின்னமாகும் இப்போது யூத ஜாதி பலஸ்தீனாவில் கூட்டி சேர்க்கப்பட்டிருக்கிறது. இயேசு வருங்காலத்தில் அவர்கள் ஆவிக்குரிய காரியத்திலும் உணர்ச்சியடைவார்களென்றும் கூறியிருக்கிறது. ஆகவே யூத இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது மாத்திரமல்ல, மத சம்பந்த மாகவும் துளிர் விட ஆரம்பித்திருக்கிறார்கள். இவை யாவும் இயேசு சீக்கிரம் வருகிறார் என்பதையே காட்டுகிறது. மணவாளனும் இதையே அடையாளமாகச் சொல்லுகிறார்.

**மாதுளம் செடி பூத்ததா?:—** இந்த இடத்தில் மாதுளம் செடி சபையைக் காட்டுகிறது. இயேசு வரும் போது சபைகள் பிரகாசித்து வாசனைக் கொடுத்துக் கொண்டேயிருக்க வேண்டும். அதற்காகவே பின்மாரி மழையை அனுப்பியிருக்கிறார். மழையில்லாமல் சபைகள் பட்டு போயிற்று. இப்பொழுதோ ஆவியின் மழை எல்லா இடங்களிலும், எல்லா ஜாதிகள் மத்தியிலும், எல்லா பாஷைக்காரர்கள் மத்தியிலும் பெய்து கொண்டேயிருக்கிறது. ஆனபடியால் எங்கு பார்த்தாலும் இரட்சிக்கப்படுகிறவர்களையும், பரிசுத்தாவி பெறுகிறவர்களையும் காணலாம். அவர்கள் உணர்வடைந்து பல இடங்களிலும் சாட்சிகள் கூறி வருகிறார்கள். இதுவே மாதுளம் செடி பூ பூப்பதாகும். இதுவும் கர்த்தருடைய வருகைக்கு ஓர் அடையாளமே.

**பள்ளத்தாக்கிலே பழுத்த கனி:—** பழுத்த கனி பறிக்க வேண்டிய பழம். அதாவது எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய மணவாட்டி. இவர்களே பூரணப்பட்டவர்கள். இவர்கள் பள்ளத்தாக்கிலே இருக்கிறார்கள். அதாவது தாழ்மையிலும் வெகு மனத்தாழ்மையிலும் ஜீவிக்கிறார்கள். பழம் பழுக்கும் போது மரக் கொப்புகள் தாழ்ந்து கொடுப்பது போல ஆவிக்குரிய அனுபவத்தில் முன்னேறிப் போகப்போக தாங்கள் தங்களை அறியாமலே தாழ்மை உண்டாகும். அப்படிப்பட்ட உன்னதமான அனுபவம் செய்கிறவர்களாயிருக்கிறார்கள். இவ்விதமான எல்லா அனுபவங்களும் நிறைந்த மணவாட்டி பூரணப்படும் போது மணவாட்டி எடுத்துக்கொள்ளப்

படுவாள், என்பதை குறிப்பிடவே பழுத்த கனிகளை பார்க்கச் சென்றார் என அறியவேண்டும். அதாவது பழுத்த கனியாகிப் பூரணப்பட்டவர்களும், விடியற்கால அருணோதயமாகப் புகழப்பட்டவர்களுமாகிய மணவாட்டி. எடுபடும் வேளை வந்துவிட்டதென மணவாளன் கூறுகிறார்.

## 12-ம் வசனம்

நினையாததற்கு முன்னே என் ஆத்துமா என்னை அம்மினதாபின் இரதங்களுக்கு ஒப்பாகிறது.

**அம்மினதாபின் இரதம்:—** அம்மினதாப் என்றால் இனத்தான் தயவுள்ளவர் என்பது பொருள். நம்மை மீட்க வந்த தயாளப் பிரபு நமது இயேசுவே. அவர் ஏறிச்சென்ற இரதம் மேக வாகனமே. அந்த மேக வானத்திலேயே அடையாளங்களெல்லாம் நிறைவேறினதும் நினையாததற்கு முன்னே ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே மணவாட்டியை மறுரூபமாக்குவார். I கொரி *15:51.* இதோ எக்காளம் தொனிக்கும் அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப் படுவோம். I கொரி *15:52.*

இவ்விதமாக மணவாளன் மணவாட்டியை ஆயத்தப் படுத்தி நினையாத வேளையிலே மறுரூபமாக்கி மத்திய ஆகாயத்தில் சேர்த்துக்கொள்ளுகிறார். I தெச *4:16,17.* ஆயத்தப்படாத மற்றவர்கள் அதாவது பூரணப்படாதவர்கள் கைவிடப்பட்டுப் போகிறார்கள். லூக் *17:34-36.* கைவிடப்பட்டவர்களோ அங்கலாய்ப்பார்கள். இந்த வானத்தில் வரும் போது ஆயத்தப்பட்ட மணவாட்டி எடுத்துக்கொள்ளப் பட்டதையும், ஆயத்தப்படாதோர் கைவிடப் பட்டதையும் காணலாம்.

## 13-ம் வசனம்

திரும்பி வா! திரும்பி வா! சூலமித்தியே நாங்கள் உன்னை பார்க்கும்படி திரும்பி வா! திரும்பி வா!

கைவிடப்பட்ட விசுவாசிகள் தாங்கள் கைவிடப்பட்டு போனோம் என்பதையும், மணவாட்டியோ எடுத்துக் கொள்ளப்பட்டாள் என்பதையும் அறிந்துக்கொண்டாள்

எப்படியென்றால் தாங்களோடு ஊழியம் செய்த சில ஊழியரையும், விசுவாசிகளாயிருந்த சில விசுவாசிகளையும் காணவில்லை: இவ்விதமான சம்பவங்கள் எல்லா கிராமங்களிலும், பட்டணங்களிலும் நடந்திருக்கிறது, இன்ன ஊரில் இன்னாரைக் காணவில்லை; இன்ன சகோதிரியைக் காணவில்லை; இன்ன மாதாவைக் காணவில்லை; என்று இவ்வாறான செய்தி எல்லா இடங்களிலும் பறந்து, பரபரப்பை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. செய்தி தாள்களிலும் பிரசுரிக்கப் படுகின்றன. உடனே ஆவிக்குரிய விசுவாசிகள் இதை விளங்கிக்கொண்டார்கள். இயேசு திருடனைப்போல் வந்து மணவாட்டியை எடுத்துக்கொள்வேனென்று சொல்லியிருந் தார்; அப்படியே இயேசு திருடனைப்போல் வந்து விட்டார்; மணவாட்டியை எடுத்துக் கொண்டு போய் விட்டார்; நாம் பரிசுத்தாவி பெற்றும் பரிசுத்தமாக்கப்படாத படியால் கைவிடப்பட்டு போனோம்; இனிமேல் அந்திக்கிறிஸ்துவின் காலம்: மகா துன்பத்தின் வழியாக தான் போக வேண்டும்; ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வந்து விட்டது; இப்படி ஏழு வருஷம் உண்டு; இனிமேல் இரத்த சாட்சியாகத் தான் மரிக்க வேண்டும்; இல்லாவிட்டால் பயங்கரமான நித்திய நரகத்தை அடைய வேண்டும்; இனி மேல் பூமிக்கு சமாதானம்; மணவாளன் மணவாட்டியோடு பூமியில் வந்து ஆயிரம் ஆண்டு ஆட்சி துவக்கினால் மாத்திரம் பூமிக்கு சமாதானமுண்டாகுமென்று கர்த்தருடைய தீர்க்க தரிசனங்களை நன்றாகக் கற்றிருந்தார்கள். ஆதலால் இனி மேல் சீக்கிரமாக மணவாளனோடு மணவாட்டி வரமாட்டாளா என்று, சூலமித்தியே! சமாதானம் பெற்றவளே! சமாதான மடைந்தவளே! சீக்கிரமாய் திரும்பி வா, சீக்கிரமாய் பூமிக்கு திரும்பி வா என்று கத்துகிறார்கள்.

## 14-ம் வசனம்

சூலமித்தியில் நீங்கள் என்னத்தைப் பார்க்கிறீர்கள். அவள் இரண்டு சேனையின் கூட்டத்திற்கு சமானமானவள். மணவாட்டி பூமியிலிருக்கும் போது கைவிடப்பட்டவர்கள் அவளையும் தங்களைப் போல எண்ணிக் கொண்டிருந்தார்கள். எப்படியென்றால் அவள் ஜெபிப்பதும், உபவாசிப்பதும், சாட்சி கொடுப்பதும், தசமபாகம் காணிக்கை கொடுப்பதும் போலவே நாங்களும் எல்லா காரியங்களையும் செய்கிறோம்: எல்லாரைப் போலவே நாங்களும் இருக்கிறோமென்று எண்ணிக்கொண்டிருந்தார்கள். கைவிடப்பட்ட பின்னர்-

தான் அவள் மணவாட்டியாக எடுக்கப்பட காரணமென்ன நம்மை விட அவளில் என்ன விசேஷம் இருந்ததென சிந்திக்க ஆரம்பித்தார்கள். அப்போதுதான் அவர்கள் கண்கள் திறக்கப்பட்டன. அந்த வேளையில் மணவாட்டியின் மேன்மையை அறிந்து அவள் இரண்டு சேனையின் கூட்டத்திற்கு சமானமானவர் என்கிறார்கள்.

**இரண்டு சேனையின் கூட்டம் :—** சத்துரு ஒரு சேனையாக வரும்போது. அவனை எதிர்த்து இரண்டு சேனைகள் இரண்டு பக்கமாக வந்தால் சத்துரு எளிதாக தோற்றுப் போவான். இரண்டு சேனைகள் என்பது சத்துருவின் வல்லமையைத் தோற்கடிக்கும் வல்லமையுள்ளவளாக இருந்தாளென்பதைக் காட்டுகிறது. மணவாட்டி உள்ளாகவும், புறமாகவும் பரிசுத்தமுள்ளவளாயிருந்தாள். பரிசுத்தம் உள்ளும், புறமும் குடிகொண்டிருந்தபடியால் ஆவிக்குரியபடி உள்ளும், புறமும் பெலசாலியாகவேயிருந்தாள். ஸ்தேவான் விசுவாசத்தினாலும், வல்லமையினாலும் நிறைந்தவனாயிருந்தான். அப்6:8. அப்படியே மணவாட்டி உள்ளான மனுஷனில் வல்லமையாய் பெலனடைந்திருந்தாள். எபே. 3:16. மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும், தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்திருந்தாள். எபே 4:24. ஆதலால் மணவாளன் வரும்போது எடுத்துக்கொள்ளப்பட தகுதியாயிருந்தாள். ஆவி, ஆத்துமா, சரீரம் பரிசுத்தமாய் இருந்தது. I தெச. 5:23. இதுவே அவளது ஆவிக்குரிய ஜீவியம். நமக்கோ இவை ஒன்றும் இல்லாமல் போய் விட்டது: மாம்சத்திலும், ஆவியிலுமுள்ள அசுசி முற்றும் மாறவில்லை; துர்ச்சிந்தனை அழிக்கப்படவில்லை; என்று உணர்ந்து மணவாட்டியை புகழ்ந்தார்கள்.

## 7-ம் அதிகாரம்

இவ்வதிகாரத்தை நாம் படிக்கும்போது ஆவிக்குரிய மணவாட்டி வான மண்டலத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர் அவள் பூலோகத்திலிருக்கும்போது மணவாளனுக்காய் அவள் செய்த எல்லா நற்கிரியைகளையும் மணவாளன் புகழ்வதைக் காணலாம்.

## 1-ம் வசனம்

இராஜ குமாரத்தியே! பாதரட்சையிட்ட உன் பாதங்கள் அழகாயிருக்கிறது. உன் இடுப்பின் வடிவு விசித்திர தொழிற்காரனின் வேலையாகிய பூஷணம் போலிருக்கிறது.

**இராஜ குமாரத்தியே :—** மணவாட்டியை இப்போது இராஜ குமாரத்தியே என்று சொல்லுகிறார். இராஜாக்கள் இராஜ குமாரத்தியையே மணம் புரிவது வழக்கம். இப்பொழுது இயேசு இராஜா மணவாட்டியை இராஜ குமாரத்தியெனக் கூறுகிறார். இவள் முன்னர் பாவசேற்றில் கிடந்தாள். அவளை தூக்கியெடுத்து அவரின் புண்ணிய இரத்தத்தினால் கழுவி தமது ஆவியையும் கொடுத்து அபிஷேகித்து இந்த மேன்மையான பதவிக்கு கொண்டு வந்தார். வெளி, 1:6, I பேதுரு 2:9. அவளுக்கு கிடைத்த பதவியை நினைத்தால் எத்தனை நாவினால் துதிக்க முடியும்; அவ்வளவு பெரிய பதவியைக் கொடுத்த இராஜாவிற்கு மணவாட்டியாக்கினார். இப்பொழுது இராஜா அவளை இராஜ குமாரத்தியே என அழைக்கிறார். இந்தப் பெரும் பதவியை உணருவோமாக.

**பாதரட்சையிட்ட உன் பாதங்கள் அழகாயிருக்கிறது:—** பாதரட்சையென்றால் சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையென்று கூறியிருக்கிறது. எபே. 6:15. ஒரு காலம் அவள் கர்த்தரோடு சமாதானம் இல்லாதவளாக இருந்தாள். பாவம் இருவரையும் பிரித்து வைத்திருந்தது. ஏசா. 59:1,2. இயேசுவின் சிலுவை மரணத்தால் பகையாயிருந்த நடுச் சுவரைத் தகர்த்தார். இருதிறத்தாரையும் ஒப்புரவாக்கி சமாதானப்படுத்தினார். எபே, 2:13—17. தான் பெற்ற இந்த சமாதானத்தின் சுவிசேஷத்தை சமாதானமில்லாதவர்களுக்குச் சொல்லி சமாதானப்படுத்தினார். இதற்காக பகலென்றும், இரவென்றும் பாராமலும், மழையென்றும். வெயிலென்றும் குளிரென்றும், பனியென்றும். காற்றென்றும் நினையாமலும். காடும், மலையும். கல்லும் முள்ளும் கால் தள்ளாட நடந்து, பசியும் தாகமும் பாராமல் களைப்புடன் சுவிசேஷத்தை அறிவித்தாள். இவ்விதமாய் ஆண்டவர் நாமத்தை உயர்த்துவதற்காக நடந்து நடந்து அலைந்து, பாடு பட்டபடியால், மணவாட்டி சுவிசேஷம் என்னும் பாதரட்சை தொடுத்திருக்கிறதென்றும். அந்த கால் அதாவது பாடுபட்ட கால் அழகாயிருக்கிறதென்றும் புகழுகிறார்.

**உன் இடுப்பு பூஷணம் போலிருக்கிறது** :— மணவாட்டி யின் இடுப்பு என்பது அரை.

1. இவள் மனதின் அரை கட்டப்பட்டவளாக ஜீவித்தாள் I பேது 1:13. அதாவது எப்பொழுதும் உபதேசத்திலும் ஜீவியத்திலும் உறுதியுள்ளவளாகவே ஜீவித்தாள். கிறிஸ்தவ ஜீவியத்தில் பலவிதமான போராட்டங்கள் உண்டு. அந்த வேளைகளிலெல்லாம் ஜீவியத்தை கறைப்படுத்தவுமில்லை. உபதேசத்தை நழுவ விட இடங்கொடுக்கவுமில்லை. அப்போதெல்லாம் தலை சாய்க்க இடமில்லாமல் சென்றுபோன நசரேயனாகிய இயேசுவை பிரியப்படுத்தியே நின்றாள். சோதனையின் மேல் சோதனை கடலை போல் மோதியடித்த போதும் மனதின் அரையைக் கட்டவிழ்க்கவில்லை. உறுதியாகவே நின்றாள். இதுவே மனதின் அரை:

2. சத்தியமென்னும் கச்சையை அரையில் கட்டியிருந்தாள். எபே. 6:14. சத்தியம் இரு வகைப்படும். ஒன்று வேத வசனமே சத்தியம். யோ. 17:17. இன்னொன்று உண்மையே சத்தியம், மணவாட்டி இக்காரியங்களிலும் தன்னை காத்துக்கொண்பட ஜீவித்தாள். எப்பொழுதும் தேவ வசனத்தின்படியே ஜீவிக்கிறாள். சங். 129:1. அதோடு எப்பொழுதும் உண்மை பேசுகிறவளாகவேயிருக்கிறாள். பொய் பேசுவதோ, கூட்டி குறைத்து பேசுவதோ, மறைத்து பேசுவதோ, மறை முகமாய்ப் பேசுவதோ, உள்ளத்தில் ஒன்று வைத்து இன்னொன்று பேசுவதோயில்லை. உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் பேசுவாள். மத். 5:37. எல்லாவற்றிலும் உண்மையுள்ளவளாகவே ஜீவிக்கிறாள். இதுவே மணவாட்டியின் அரை.

3. மகிழ்ச்சியால் இடைக்கட்டியிருந்தாள். சங். 30:11. அவளுடைய ஜீவிய காலம் முழுவதும் சந்தோஷமுடையவளாகவேயிருக்கிறாள். சமாதான வேளையிலும் சஞ்சலமான வேளையிலும் சந்தோஷமுடையவளாகவே ஜீவிக்கிறாள். உங்களை நிந்தித்து துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். சந்தோஷப்பட்டு களிகூருங்கள். பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்குமென்று இயேசு சொன்னார். மத். 5:11-12. அப்படியே சஞ்சலப்பட வேண்டிய இடங்களிலும், சஞ்சலத்திற்கு இடங்கொடாமல் சந்தோஷமுடையவளாகவே ஜீவித்தாள். ஆனபடியால்

மகிழ்ச்சியின் அனுபவம் அவளிலிருக்கிறது. ஆதலால் மணவாளன் உன் உடுப்பு பூஷணம் போலிருக்கிறதென்று புகழுகிருர்.

## 2-ம் வசனம்

உன் நாபி திராட்சரசம் நிறைந்த வட்டக்கலசம் போலிருக்கிறது. உன் வயிறு லீலிப்புஷ்பங்கள் சூழ்ந்த கோதுமை அம்பாரம் போலிருக்கிறது.

**உன் நாபி திராட்ச ரசம் நிறைந்த வட்டக்கலசம் போலிருக்கிறது :—** நாபி என்பது தொப்பிள் ஸ்திரீகள் கர்ப்பவதியாகும் போது அவர்களது தொப்பிள் விரி வட்டக்கலசம் போல் விரிந்து கொடுக்கும். தொப்பிள் யும் போது ஸ்திரீயானவள் கர்ப்பவதியாயிருக்கிருளென அறியலாம். இது என்னத்தைக் காட்டுகிறதென்ருல், மணவாட்டி பூமியிலிருக்கும் போது அநேக ஆத்துமாக்களைப் பெற்றெடுத்திருக்கிருள். அதோடு திராட்சரசம் கலந்த வட்டக்கலசமென்று கூறினுர். ஏனென்ருல், அவள் ஆத்துமாக்களை பெற்றெடுத்தது மாத்திரமல்ல, ஆத்துமாக்களுக்கு வேண்டிய ஆகாரத்தையும் சேர்த்து வைத்திருந்தாள். அதோடு கர்ப்பவதி கவனமாய் ஜீவிப்பது போல தன்னையும், தனக்குக்கிடைத்த ஆத்துமாக்களையும் காத்துக் கொள்ள கவனமாகவே இருந்தாள். ஆதலால் மணவாளன் அவள் ஆத்துமாக்களைப் பெற்றெடுத்ததையும், அவர்களைக் காப்பாற்றுவதையும் நாபியோடு உவமித்துக் கூறுகிருர்.

**உன் வயிறு லீலிப்புஷ்பம் சூழ்ந்த கோதுமை அம்பாரம் :—** வயிறை கோதுமை அம்பாரமாகக் குறிப்பிடுகிருர். அநேகம் பிள்ளைகளைப் பெற்றவர்களும், அவர்களின் பிள்ளைகளும் பந்தியைச் சுற்றி ஏராளமாக இருப்பதைப் போல மணவாட்டியும் ஏராளமான ஆத்துமாக்களைச்சேர்த்துவைத்திருக்கிருள். அவள் தனது தியாகத்தால் ஜெபத்தால், உபவாசத்தால், தனது நற்குணத்தால் சேர்த்த ஆத்துமாக்கள் பெரிய கூட்டமாக இருக்கிறது. ஆனபடியால் மணவாளன் கோதுமை அம்பாரமென்று கூறுகிருர்.

அதோடு லீலிப்புஷ்பம் சூழ்ந்த கோதுமை அம்பாரமென்கிருர். அதாவது மணவாட்டி இரட்சிப்பில் கொண்டு வந்த ஆத்துமாக்கள் லீலிப்புஷ்பம் போல் அழகு கொடுக்கக்

கூடியவர்களும், வாசனை வீசக் கூடியவர்களுமான நல்ல சாட்சியுடையவர்களாக ஜீவித்தார்கள் என்பதாகும்.

வயிறு :— 1 பிள்ளைகள் உருவாகும்போது வயிறு விரிவது போல மணவாட்டி ஆவியில் நிறைந்தவளாய் ஜீவித்தாள். எபே. 5:18.

2 பிள்ளைகளை பெற்றெடுத்து வளர்க்க தாய் தன்னை பலியாக ஒப்புக் கொடுத்தது போல் மணவாட்டி ஆத்துமாக்களுக்காய் தன்னை பலியாக்கி ஜீவித்தாள். பிலி. 2:17.

3 பிள்ளைகளைப் பெற்றெடுக்க பிரசவ வேதனை அடைந்தது போல மணவாட்டி ஆத்துமாக்களுக்காய் பிரசவ வேதனை பட்டு ஜெபிக்கிறவளாயிருந்தாள். கலா 4:19

4 பிள்ளைகள் வயிற்றிலிருக்கும் போதும், பெற்ற பின்னரும் தாய் கவனமாய் ஜீவித்தது போல மணவாட்டியும் ஆவிக்குரிய ஜீவியத்திற்காகவும் ஆத்துமாக்களை வளர்த்தவும் கவனமாய் ஜீவித்தாள். இவற்றைக்கண்ட மணவாளன் அவளது வயிற்றை புகழ்ந்தார்.

## 3-ம் வசனம்

உன் இரண்டு ஸ்தனங்களும் வெளிமானின் இரட்டை குட்டிக்குச் சமானமாயிருக்கிறது.

உன் 4:5-ஐப் படிக்கவும்.

## 4-ம் வசனம்

உன் கழுத்து யானை தந்தத்தினால் செய்த கோபுரம் போலவும், உன் கண்கள் எஸ்போனிலே பத்ரபீம் வாசலண்டையிலிருக்கும் குளங்களைப் போலவும், உன் மூக்கு தமஸ்குவின் திசையை நோக்கும் லீபனோனின் கோபுரத்தை போலவும் இருக்கிறது.

**உன் கழுத்து:—** உன் 4:4-ஐப் பார்க்கவும்.

**யானை தந்தம்:—** பரிசுத்தத்தை விளக்கும்.

**உன் கண்கள்:—** உன் 1:5-ஐப் படிக்கவும்.

**அதோடு எஸ்போனிலே பத்ரபீம் வாசலண்டையிலிருக்கும் குளம்.**

**எஸ்போன்:—** இது எமோரியரின் இராஜாவாகிய சீகோனின் இராஜதானிப்பட்டணம். இஸ்ரவேலர் எகிப்திலிருந்து கானானுக்குப் போகும் போது இதன் வழியாகப் போக வேண்டும். அதற்காக இஸ்ரவேலர் சீகோனிடம் உத்தரவு கேட்ட்டார்கள். சீகோன் மறுத்ததுமல்லாமல் இஸ்ரவேலரோடு, யுத்தத்திற்கும் போனுன். இஸ்ரவேலர் சீகோனைக் கொன்று அவனது பட்டணங்களையும், எஸ்போனை சார்ந்த கிராமங்களையும் எடுத்துக் கொண்டார்கள். எண் 21:21-26. அதன் பின்னர் இஸ்ரவேலர் தங்கள் தங்கள் கோத்திரங்களுக்கு இராஜ்யங்களை பங்கிடும் போது எஸ்போன் ரூபனின் பங்கில் வந்தது. யோசுவா 13:15-23 எஸ்போனில் கற்பாறையில் தோண்டப்பட்ட ஆழமான கிணறுகளுண்டு.

**பத்ரபீம் வாசல்:—** எஸ்போன் நகரத்து வாசலுக்கு பத்ரபீம் வாசல் என்று பெயர். இதன் பொருள் அநேகரின் மகள் என்பதாகும். இதில் ஏராளமான கிணறுகளும், மீன்களுள்ள குளங்களுமுண்டு.

**கண்கள் குளங்கள் போலிருத்தல்:—**

1 கிணற்றிலும், குளத்திலும் தண்ணீர் நிறைந்திருப்பது போல் மணவாட்டியின் கண்களிலும் தண்ணீர் எப்போதும் நிறைந்திருக்கிறது. அதாவது ஆத்துமாக்களுக்காய், ஊழியங்களுக்காய், வியாதியஸ்தருக்காய் எப்பொழுதும் அழுது ஜெபித்துக் கொண்டிருக்கிறுள். இந்த கண்களின் குளம் போல் எப்பொழுதும் தண்ணீர் நிறைந்திருக்கிறது.

2 குளத்தில் ஆடு, மாடு கழுவி சுத்தம் செய்வது போல் இவளது கண்ணீரால் அநேக பாவிகளும், பின்மாற்றக்காரரும் உணர்வடைந்து இயேசுவின் இரத்தத்தால் கழுவப்படுகிறுர்கள்.

3 குளத்தில் மீன் வளர்ப்பது போல இவளது கண்ணீரால் அநேக விசுவாசிகள் காக்கப்படுகிறுர்கள்.

4 குளத்தில் தாகமுள்ளவர்கள் தண்ணீர் அருந்திப் போவது போல மணவாட்டி அநேகருக்கு அபிஷேகம் கிடைக்க கண்ணீர் விடுவதால் அபிஷேகம் பெற்று தாகம்தீர்க்கப்படுகிறுர்கள்.

5 கிணறு, குளம், இவற்றில் ஆழம் இருப்பது போல் இவளது கண்களும் விசுவாசிகளின் உள்ளங்களை ஆழ்ந்து பார்த்து அவர்களுக்காய் கண்ணீர் விட்டு ஜெபித்துக் கிருபைகளில் வளர்கிறாள். இதனால் அவளது கண்களை புகழுகிறார்.

**மூக்கு தமஸ்குவின் திசையை நோக்கும் லீபனோனின் கோபுரத்தைப் போலிருக்கிறது** லீபனோன் தமஸ்கு பட்டணத்தையேப் பார்த்துக் கொண்டிருக்கிறது போலிருக்கிறது.

நீண்ட மூக்கை மனிதர்கள் மதிப்பாக எண்ணுவார்கள்

**மூக்கின் தன்மை:—**

1 மூக்கினால் சுவாசிப்பதால் மனிதர்கள் ஜீவிக்கிறார்கள். மணவாட்டி ஜீவ சுவாசத்தை எப்போதும் உட்கொண்டே வந்தாள். அதாவது ஜெபத்தில் ஆண்டவரின் வல்லமையை சுவாசித்தே ஜீவித்தாள். ஆதலால் பெலனடைந்து வந்தாள்.

2 மூக்கு வாசனையின் மோப்பத்தை அறிந்து கொள்வது போல துர் உபதேசத்தையும், ஆரோக்கியமான உபதேசத்தையும் பகுத்து நிதானிக்கிறவளாயிருந்தாள்.

3 மூக்கு நல்ல வாசனையை நாடுவது போல மணவாட்டி பரிசுத்தவான்களின் ஐக்கியத்தையும், பரிசுத்தத்தையும் நாடியே ஜீவித்தாள்.

4 மூக்கு அசுத்தமான காற்றை வெறுப்பது போல மணவாட்டி பாவத்தையும். பாவிகளின் ஐக்கியத்தையும், துர் உபதேசங்களையும் வெறுத்தே ஜீவித்தாள்.

இவ்விதம் மணவாட்டி மெச்ச தக்கதான அறிவுள்ளவளாக ஜீவித்த படியால் மணவாளன் அவளது குணத்தை மூக்கோடு உவமித்துப் பேசினார்.

## 5-ம் வசனம்

உன் சிரசு கர்மேல் மலையைப் போலிருக்கிறது. உன் தலைமயிர் இரத்தாம்பர மயமாயிருக்கிறது. இராஜா நடைக்காவணங்களில் மயங்கி நிற்கிறார்.

**உன் சிரசு கர்மேல் மலையைப் போலிருக்கிறது:—** மணவாட்டியின் சிரசு என்பது அவளின் ஆலோசனையைக் காட்டு

கிறது. அவள் எப்பொழுதும் மேலான காரியங்களையே சிந்தித்துக் கொண்டிருந்தாள்; பூமிக்குரிய எண்ணமே கிடையாது; எப்படியாகிலும் இயேசுவுக்கு மணவாட்டியாக வேண்டும்; அதற்காக எவற்றை விட வேண்டும் எவ்வெவற்றைக் கைக் கொள்ள வேண்டும்; மற்றவர்களுக்கு மணவாளனை எப்படி எடுத்துக் காட்டுவது; ஆத்துமாக்களை கர்த்தரண்டை கொண்டு எவ்விதம் முயற்சி எடுக்க வேண்டும்; இதுவே அவளது யோசனையாயிருந்தது ஆவிக்குரிய காரியங்களையே சிந்தித்துக் கொண்டிருந்தாள். ஆவிக்குரிய காரியங்களை சிந்திப்பதை விட்டு எந்தக் காரணத்திற்கும் அவளுடைய ஆலோசனையை அசைத்து மாற்றுவதில்லை ஆனபடியால் மணவாளன் மணவாட்டியின் தலையை கர்மேல் மலையோடு ஒப்பிட்டு பேசுகிறார். ஏனென்றால் அவளுடைய ஆவிக்குரிய ஆலோசனை மலையைப் போல் மாற்ற முடியாததே.

**தலை மயிர் இரத்தாம்பர மயமாயிருக்கிறது:—** ஸ்திரீகளின் மயிர் அவர்களின் மகிமையே. I கொரி 11:15. மணவாட்டியின் மகிமை அவளுக்கு கிடைத்த ஆத்துமாக்களே 1 தெசலோ 2:19-20. ஓடி ஓடி அலைந்து அநேக ஆத்துமாக்களை சம்பாதித்திருக்கிறாள். இவள் சம்பாதித்த ஆத்துமாக்கள் இரத்தாம்பர மயமாயிருக்கிறார்கள். அதாவது வேத உபதேசப்படி இராஜாவாய் ஆளுகைச் செய்வதற்கேற்ற தகுதி வாய்ந்தவர்களாயிருக்கிறார்களெனப் பொருளாகிறது. மணவாட்டி ஆத்துமாக்களை சம்பாதித்தது மாத்திரமல்ல, அவர்களை முன்னேற்றிக் கொண்டு போவதற்காக பிரசவவேதனைப்பட்டு ஜெபித்து எவ்வித போதனைகளை கொடுக்க வேண்டுமோ, அவற்றைக் கொடுத்து வளர்த்துவதற்காக பாடு பட்டுமிருக்கிறாள். ஆனபடியால் மணவாளன் அவளது ஊழியத்தையும் மெச்சிப் பேசுகிறார்.

**இராஜா நடைக்காவணங்களில் மயங்கி நிற்கிறார்:—** மணவாட்டியின் ஒவ்வோர் திவ்விய குணங்களையும், பிரதிஷ்டைகளையும், தியாகத்தையும், ஆத்தும தாகத்தையும், கண் விழிப்பையும், மணவாளனை உயர்த்துவதையும், பார்த்த மணவாளன் அவளை புகழ்வது மாத்திரமல்ல, அவளது அன்பால் மயங்கியும் விட்டார். பிரிக்க முடியாத அன்பால் நிரம்பி விட்டார். ஆனபடியால் மணவாளன் வேறொருவர் மயங்கி நிற்பதாகக் கூறுகிறது போல, தனது அனுபவத்தைக் கூறுகிறார். II கொரி. 12:2-5.

## 6-ம் வசனம்

மனமகிழ்ச்சியையுண்டாக்கும் என் பிரியமே! நீ எவ்வளவு ரூபவதி எவ்வளவு இன்பமுள்ளவள்.

**மனமகிழ்ச்சியையுண்டாக்கும் பிரியம் :—** மணவாட்டி மணவாளனை எப்பொழுதும் பிரியப்படுத்தி ஜீவித்தபடியால் மனமகிழ்ச்சியை உண்டாக்கும் பிரியமென்று கூறுகிறார். ஏனென்றால் அவர் அனுப்பாத இடம் போகமாட்டாள். அவர் விரும்பாததைச் செய்யமாட்டாள்; அவர் விரும்பாத உடை அணிய மாட்டாள்; அவர் விரும்பாத வார்த்தை பேச மாட்டாள்; அவர் அனுப்புமிடம் காடானாலும், மேடானாலும் சந்தோஷத்தோடேப் போவாள்; அவருக்காக பட்டினியும், நிந்தையும், நிர்வாணமும், சந்தோஷமாக அனுபவிப்பாள்; எதைச் செய்ய வேண்டுமோ, எதை கடத்த வேண்டுமோ அவரிடமே ஆலோசனை கேட்கிறாள். இவை யாவும் அவரது மனதை மகிழ்வித்தது. ஆனபடியால் மன மகிழ்ச்சியையுண்டாக்கும் பிரியமே என்கிறார்.

## 7-ம் வசனம்

**உன்** உயரம் பனைமரத்தொழுங்கு போலவும் உன் ஸ்தனங்கள் திராட்சக்குலைகள் போலவுமிருக்கிறது.

**உன் உயரம் பனைமரத்தொழுங்குபோல் :—** நீதிமான் பனை மரத்தைப்போல் செழிப்பானென்று நீதிமானை பனை மரத்தோடு உவமித்திருக்கிறார். சங். 92:12. இங்கே மணவாட்டியை பனை மரத்திற்கு ஒப்பிட்டிருக்கிறார்.

1. பனை மரம் நாளுக்குநாள் வளர்ந்துபோவதுபோல மணவாட்டியின் ஆவிக்குரிய ஜீவியம் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே போனது. II கொரி 4:16, எபே. 4:11

2. பனை மரம் வளைந்து கொடாததுபோல மணவாட்டியும் சத்தியத்தில் வளைந்து கொடாள். உபதேசத்திலும் வழக்குத் தீர்ப்பதிலும் எல்லா விஷயங்களிலும் நேர்மை உடையவளாகவேயிருந்தாள். ரோமர் 12:8, I தீமோத் 5:21.

3. பனை மரத்தின் ஒவ்வொரு பாகமும் மற்றவர்களுக்குப் பிரயோஜனத்தைக் கொடுப்பதுபோல மணவாட்டி எல்லா விதத்திலும் மற்றவர்களுக்குப் பிரயோஜனமாயிருந்தாள். I கொரி. 10:31,32.

4. பனை மரம் அதிகச் சூடான காலத்திலும் எளிதாகக் கெட்டுப் போகாததுபோல மணவாட்டியும் கடுஞ்சோதனை காலத்திலும் விசுவாசத்தைக் காத்து நின்றாள். யாக் 1:12.

5. பனை மரம் பட்டாலும் மற்றவர்களுக்குப் பிரயோஜனப்படுவதுபோல மணவாட்டி போய்விட்டாலும் அவள் எழுதின பாட்டுகள், அவள் எழுதின புஸ்தகங்கள், அவள் எழுதி வைத்த சாட்சிகள், கைப்பிரதிகள் யாவும் மற்றவர்கள் படித்து பிரயோஜனப்படுத்த உதவுகிறது. ஆதலால் மணவாளன் மணவாட்டியை பனை மரத்தோடு ஒப்பிட்டுப் புகழுகிறார்.

**உன்ஸ்தனங்கள் திராட்சக்குலைகள் போலிருக்கிறது :—**

**ஸ்தனங்கள் :— உன். 4:5 ஐப் படிக்கவும்.**

**திராட்சக்குலைகள் போல் :—**

1 திராட்ச பழங்களை ஜனங்கள் புசிப்பதால் பெலனடைகின்றனர். அதைப்போல மணவாட்டி பெலகீனருக்கு நல்ல புத்திமதிகளைக் கொடுத்து பலப்படுத்தினாள் I தெச. 5:14.

2 திராட்சரசம் குடித்தால் தாகமாயிருப்பவனுக்குத் தாகந் தீர்க்கப்படும். இதுபோல மணவாட்டி அநேகருக்கு ஆத்ம சமாதானத்தை கொடுத்தும், இரட்சிப்புக்கு நேராக நடத்தியும், பரிசுத்தாவிப் பெற்றுக் கொள்ளச் செய்வித்தும், தாகத்தால் அலைகிறவர்களின் தாகத்தை தீர்த்தாள். யோவான் 4:14.

3 திராட்சரசம் குடித்தவுடன் சோம்பல் நீங்கி உற்சாகமுண்டாகும். இதுபோல மணவாட்டியும் நல்ல போதகங்கள் கொடுத்து, ஆவியில் அனல் குறைந்தவர்களையும், அசதியாயிருப்பவர்களையும் போதித்து உற்சாகப்படுத்தினாள். எபே. 5:14, கலா. 3:1-3.

4 திராட்சரசம் அக்களிப்பை உண்டாக்குவது போல மணவாட்டி மற்றவர்களை உற்சாகப்படுத்தி மகிழ்ச்சியின அனுபவத்திற்கு கொண்டு போனாள். இதனால் மணவாளன் மணவாட்டியைப் புகழ்ந்து பேசுகிறார்.

## 8-ம் வசனம்

நான் பனை மரத்திலேறி அதன் மடல்களைப் பிடிப்பே னென்றேன். இப்பொழுதும் உன் ஸ்தனங்கள் திராட்சக் குலைகள் போலவும் உன் மூக்கின் வாசனை கிச்சிலி பழங் களைப் போலவுமிருக்கிறது.

**பனை மரத்திலேறி மடல்களைப் பிடிப்பேன் :—** மணவாட்டி யில் பார்க்கப்பார்க்க அநேகம் காரியங்களைப் பார்க்கலாம். மணவாளனுக்கு அவளை எவ்விதமெல்லாம் வர்ணிப்பதென்று விளங்கவில்லை. சொல்லரிய நற்குணம் படைத்தவளாகக் கண்டார். ஆதலால் இப்பொழுது பனை மரத்திலேறி மடல்களைப் பிடிப்பேனென்கிறார்,

**பனை மரத்திலேறி மடல்களை எதற்காகப் பிடிப்பார்கள் ?**

1 பனைமரத்தில் காய்த்திருக்கும் நுங்குகள், பனம்பழங் கள் இவற்றை மற்றவர்களின் தாகத்தைத் தீர்ப்பதற்காகவும், பசியையாற்றுவதற்காகவும், மரத்திலேறி மடல்களைப் பிடித்து காய்களை வெட்டுவார்கள்.

2 பனம் பூ வெளி வரும்போது பூவைப் பக்குவப் படுத்தி மதுரமான பதநீர் எடுத்துக் குடித்து உற்சாகமடை வார்கள். பதநீரை எடுத்து கருப்புக்கட்டியாக்கி அநேக விதமான உபயோகத்திற்கு எடுக்கவும் மரத்திலேறி மடல் களைப் பிடிக்கிறார்கள்.

ஆகவே மணவாட்டியின் பிரயோஜனம் பலவிதமாகப் பிரயோஜனப் படுகிறதென்பதை விளக்குகிறார்.

**உன் ஸ்தனங்கள் திராட்சக்குலைகள் :—** உன். 7:7 ஐப் படிக்கவும்.

**உன் மூக்கின் வாசனை கிச்சிலிப் பழம்போலிருக்கிறது :—**

**மூக்கு :—** உன். 7:4. ஐப் படிக்கவும்.

**வாசனை கிச்சிலிப் பழம் போல் :—** கிச்சிலிப் பழத்தை யும் புசித்து தாகந்தீர்ப்பது போல, மற்றவர்களுடைய ஆத்தும தாகத்தை நிவிர்த்தியாக்கினாள். ஆத்தும சமாதான

மில்லாதபடி தவித்து நிற்கிறவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளைக் கூறி சமாதானப்படுத்தினுள்.

கள்ளப் போதகர்களாலும், துர் உபதேசத்தினுலும் பொய்யான தீர்க்கத்தரிசனங்களினுலும், மாமிச நடத்து தலினுலும் போதிக்கப்பட்ட படியால் சமாதானத்தை இழந்து, இது உண்மையோ, தவருே என்று தெரியாமல் திகைத்து நிற்கிறவர்கள் மணவாட்டி வாசனையை சுவாசித்து அறிவதுபோல தப்பையும், சரியையும் அறிந்து அநேகரை தப்புவித்தாள். ஆனபடியால் அநேகர் வஞ்சகத்துக்கு தப்பி ஆறுதல் அடைந்தார்கள், ஆதலால் மணவாளன் அவளது மூக்கை கிச்சிலி பழ வாசனையோடு ஒப்பிட்டுப் புகழ்ந்தார்.

## 9-ம் வசனம்

உன் தொண்டை என் நேசர் குடிக்கையில் மெதுவாக இறங்குகிறதும், உறங்குகிறவர்களின் உதடுகளை பேசப் பண்ணுகிறதுமான நல்ல திராட்சை ரசத்தைப் போலிருக் கிறது.

**உன் தொண்டை :—** தொண்டை என்றுல், தொண்டை யிலிருந்து புறப்படும் சத்தத்தையே போதிக்கிறது. மண வாட்டியினுடைய சத்தம் யாவரையும் மகிழப் பண்ணத் தக்கதாயிருக்கிறது. அவள் மணவாளனை இனிமையாகப் புகழ்ந்து பாடுவதை பிதா பிரியப்படுகிருர். தொண்டையை உயர்த்தி ஆயிரம் பதினுயிரங்கள் மத்தியிலும் தேவன் கொடுத்த செய்திகளை அறிவிப்பதையும், சாட்சி பகருவதை யும் பிதாவாகிய தேவன் பாாத்துப் பிரியப்படுகிருர்.

என் நேசர் என்பது மணவாளனுகிய இயேசுவின் பிதா வாகும். பிதாவாகிய தெய்வமே மணவாளனுகிய இயேசு வின் நேசர்.

அதாவது பிதாவாகிய தெய்வம், மணவாட்டியின் ஊழி யத்தை மெச்சி பேசுகிருர் என்பது மாத்திரமல்ல அவளுடைய கிருபை பொருந்தின சத்தத்தையும் மெச்சி பேசுகிருர். அவளுடைய சத்தம் கேட்டதும தூங்கி கிடந்தவர்கள் எழுப்பினது போல ஆவியில் குளிர்ந்து ஆதி அன்பை இழந்து விசுவாசத்தை தள்ளி இப்பிரபஞ்சத்துககு நேராய்ப் போன அநேகரை எழிப்பி அனல் மூட்டி உயிர்ப்பித்தது.

அதனால் பாவ அறிக்கையிடவும், சாட்சி பகரவும் செய்தார்கள். இதுவே உறங்கி கிடந்தவர்களை பேசப்பண்ணுவதாகும்.

## 10-ம் வசனம்

நான் என் நேசருடையவள். அவர் பிரியம் என் மேலிருக்கிறது.

மணவாட்டி பூலோகத்தில் இருந்தபோது அவள் செய்த ஊழியத்தையும், பரிசுத்த ஜீவியத்தையும், ஆத்துமாக்களை கர்த்தரண்டை நடத்தினதையும் ஒவ்வொரு பாகமாக அவயவங்களோடு ஒப்பிட்டு எடுத்துக் காட்டினார்.

எடுத்துக் கொள்ளப்பட்ட மணவாட்டியோடு மணவாளன் ஏழு வருஷ காலமே ஆகாய மண்டலத்தில் வாசம் பண்ணுவார். ஏழு வருஷம் முடிந்ததும் மணவாட்டியோடு பூமிக்கு வருவார் என்பதாக மணவாளன் முன்னதாக மணவாட்டிக்கு சொல்லியிருக்கிறார். அவரது மாறாத வேதப் பிரமாணத்திலும் அப்படியே குறிப்பிட்டிருக்கிறார். ஆதலால் மணவாட்டி மணவாளன் முன்னர் நேசித்தார், இப்போதும் நேசிக்கிறார் என்பதை கண்களாலும் கண்டாள். ஆனபடியால் நான் என் நேசருடையவள் அவர் பிரியம் என் மேலிருக்கிறது எனக் கூறி மணவாளனோடு ஆனந்தித்து குலாவுகிறாள்.

## 11-ம் வசனம்

வாரும் என் நேசரே! வயல் வெளியில் போய் கிராமங்களில் தங்குவோம்.

மத்திய ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட மணவாட்டி மணவாளனோடு மகிழ்ந்து கொண்டிருந்தாலும், மணவாட்டியின் கண்ணீரை மணவாளன் துடைத்து மகிழ்வித்துக் கொண்டிருந்தாலும், மணவாட்டிக்கு தன்னால் இரட்சிக்கப்பட்ட ஆத்துமாக்கள் கை விடப்பட்டு போனார்கள், அவர்களைப் பார்க்க வேண்டும், மணவாளனுக்கு அவர்களைக் காட்ட வேண்டும் என்பதே அவளது ஆசை. அதோடு காலமும் நிறைவேறி விட்டது. மணவாட்டியோடு மணவாளன் பூமிக்கு வரவேண்டிய காலமும் நெருங்கிவிட்டது

ஆதலால் மணவாட்டி மணவாளனை அழைக்கிறாள். வாரும் என் நேசரே ! என் நேசரே போவோம் வயல்வெளிக்கு வயல்வெளி தான் அவள் வேலை செய்த சபை. அவள் வேலை செய்த சபைக்கு அவரை அழைக்கிறாள்.

**கிராமங்களில் தங்குவோம்** :— மணவாட்டி ஆகாய மண்டலத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட உடனே தேவனுடைய இராஜ்யத்தின் மகிமை எப்படிப்பட்டதென்பதைக் கண்டாள். இப்போது தேவனுடைய இராஜ்யத்தோடு உலகத்தை ஒப்பிட்டுப் பார்க்கிறாள். அது கிராமத்துக்கு சமமாய் காணப்பட்டது. ஆனபடியால் கிராமங்களில் போய் தங்குவோம் என்கிறாள். ஏனென்றால் மணவாளன் மணவாட்டியோடு வந்து உலக ராஜ்யங்களின் ஆளுகையெல்லாம் தகர்த்துவிட்டு நீதியின் ராஜ்யத்தை ஸ்தாபிக்கப் போகிறார். அந்த ராஜ்யம் பூமியில் ஆயிரமாண்டு ஸ்தாபிக்கப்படும். ஆதலால் மணவாட்டி போவோம் என மணவாளனை கூப்பிடுப்றாள்.

## 12-ம் வசனம்

அதிகாலையில் திராட்ச தோட்டங்களுக்குப் போவோம், திராட்சை கொடி துளிர்த்து அதின் பூ மலர்ந்ததோ என்றும், மாதளஞ் செடிகள் பூ பூத்ததோ என்றும் பார்ப்போம். அங்கே என் நேசத்தின் உச்சிதங்களை உமக்குத் தருவேன்.

ஒரு இரவுக்கு நான்கு ஜாமங்களுண்டு. நான்காவது ஜாமம் ஆரம்பிக்கும் போது விடிவெள்ளி உதிக்கிறது. பின்னர் நான்காவது ஜாமவேளையில் அந்தகார இருளும் பூமியில் காணப்படுகிறது. அதன் பின்னர் சூரியன் உதிக்கிறது. இது போலவே உலகத்தின் முடிவிற்கு முன்னதாக, அதாவது அந்தி கிறிஸ்து வெளிப் படுவதற்கு முன்னதாக அருணோதயமாகிய விடி வெள்ளி நட்சத்திரம் அதாவது மணவாட்டி எடுத்துக் கொள்ளப் படுகிறாள். அருணோதயம் உதிப்பது என்பது மணவாட்டி எடுத்துக் கொள்ளப்படுதல்- அதன் பின்னர் ஏழு வருஷ காலம் அந்தகாரமான அந்திகிறிஸ்துவின் காலமாகும். இந்த காலம் ஒருவனும் கிரியைச் செய்யக் கூடாத இராக்காலம். யோ. 9:4. அந்த ஏழு வருடம் முடிந்ததும், சூரியன் உதித்து பூமியில் காணப்படுவதுபோல் நீதியின் சூரியனாகிய இயேசு மணவாட்டியோ சீயோன் மலையில் வந்து இறங்குவார். அதன் பின்னர் இயேசு மணவாட்டியோடு பூமியில் ஆயிரம் வருஷம் ஆளுகை நடத்துவார்.

அதற்காக மண வாட்டி மணவாளனிடம் அதிகாலையிலே திராட்சத்தோட்டங்களுக்குப் போவோமெனச் சொல்லு கிறாள். மணவாட்டி மத்திய ஆகாயத்தில் எடுபடும் நாட்களில் பூமியில் தேவன் பேரில் நம்பிக்கை வைத்த இரண்டு கூட்டத்தாருண்டு. ஒன்று திராட்சச் செடி, மற்றொன்று மாதுளஞ்செடி, திராட்சையென்பது யூதரைக் குறிக்கும். யூதர் கிறிஸ்துவுக்குப் பின் எழுபதாவது வருடம் உலகதின் நாலு திசைகளிலுமாய் சிதறடிக்கப்பட்டார்கள். உலகத்தின் முடிவு காலத்தில் யூத ஜாதிகள் தங்கள் சொந்த, நாடாகிய பலஸ்தீனு தேசத்தில் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப் படுவார்களென்று கர்த்தர் சொல்லியிருந்தார். ஏசாயா 11:12 எரே. 31:6-10, எசே. 36:24. அப்படியே இக்காலங்களில் அவர்கள் தங்கள் சுய தேசமாகிய பலஸ்தீனுவில் கூட்டிச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இயேசு மணவாட்டியை எடுத்துக் கொண்ட பின்னர், யூதர் அந்தி கிறிஸ்துவை மேசியாவாக ஏற்றுக் கொள்ளுவார்கள். அந்தி கிறிஸ்துவுக்கு கொடுக்கப்படும் ஏழு வருஷக்காலத்தில் மூன்றரை வருடம் சென்றதும், அந்திகிறிஸ்து தேவனுடைய ஆலயத்தில் பலியையும், காணிக்கையும் ஒழியப் பண்ணுவான். தானி. 9:27. தன்னை தேவனாகவும் உயர்த்துவான். II தெச. 2:3,4. அப்பொழுது யூதருடைய கண்கள் திறக்கப்படும். ஆனபடியால் அந்திகிறிஸ்துவிடம் செய்த உடன்படிக்கையை உடைப்பார்கள். தாங்கள் குத்தின இயேசுவை விசுவாசிப்பார். ஆதலால் அந்திகிறிஸ்து யூதரை சங்காரம் செய்வான். யூதரோ இரத்த சாட்சிகளாய் மரிப்பார்கள். சக. 12:10—13:8,9. யூதர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு கர்த்தருக்கு சாட்சியாய் நிற்பதையே மணவாட்டி திராட்சச்செடி பூ மலர்ந்ததா என்று கூறுகிறாள்.

**மாதழஞ்செடி பூ பூத்ததா :—** மாதழஞ்செடி கைவிடப்பட்ட கிறிஸ்தவ சபையைக் காட்டுகிறது. கைவிடப்பட்ட கிறிஸ்தவ சபை அந்திக் கிறிஸ்துவின் காலத்தில் சொல்லி முடியாத இன்னல்களை அனுபவிப்பார்கள். ஸ்திரிகள் அவமானப்படுவார்கள்; பிள்ளைகளை மோதியடிப்பான்; கற்பக் கன்னிக்கு இரங்கான்; அந்திக் கிறிஸ்துவின் முத்திரையை தரியாதவரை விற்கவோ. வாங்கவோ செய்யவிடான்; பட்டயத்திற்கு இரையாவார்கள், அநேகர் மறுதலிப்பார்கள்; அநேகர் சாட்சியாய் நின்று மரிப்பார்கள். மரித்த இரத்த சாட்சிகள் மணவாளன் மணவாட்டியோடு சீயோன் மலைக்கு சரும்போது உயிர்த்தெழுவார்கள். வெளி. 20:4. ஆலலால் மணவாட்டி மணவாளனோடு இருண்ட காலத்தில் சாட்சி

ளொய் நின்ற மலர்ந்த பூக்களைப் பார்க்கப்போவோமென துரிதப்படுத்துகிறாள்.

**அதோடு மேநேசத்தின் உச்சிதங்களைத் தருவேன் :—** மணவாளனின் அன்பினால் சம்பாதித்த ஆத்துமாக்கள் அங்கிருக்கிறது. அதை உமக்கு தருவேனென்கிறாள். ஏனென்றால் அவளுக்குரியதே அவருக்குரியது: அவருக்குரியதே, அவளுக்குரியது; அவள் சம்பாதித்த யாவையும் உமக்குத் தருவேன் போவோமென உற்சாகப் படுத்தினாள்.

## 13-ம் வசனம்

தூதாயீம் பழம் வாசனை வீசும். நமது வாசல்களண்டையில் புதியவைகளும், பழையவைகளுமான சகலவித அருமையான கனிகளுமுண்டு. என் நேசரே! அவைகளை உமக்கு வைத்திருக்கிறேன்.

**தூதாயீம் பழம்:—** இது ஓர் விதமான புசிப்பிற்குரிய பழம். ஆனபடியால் தான ராகேல் இதை விரும்பினாள். ஆதி 30:14-16. தூதாயீம் பழம் மணவாட்டி சம்பாதித்து வைத்திருக்கிற ஆத்துமாக்களைக் காட்டுகிறது.

1 தூதாயீம் பழம் விரும்பக் கூடியது. இது மணவாட்டி சம்பாதித்திருக்கிற ஆத்துமாக்கள் யாவரும் விரும்பக்கூடியவர்களாயிருக்கிறார்கள் II தீமோ 1:6.

2 தூதாயீம் பழம் வாசனையுள்ளது. இது மணவாட்டியின் நற்கிரியைகளைக் காட்டுகிறது. அவள் சம்பாதித்த ஆத்துமாக்கள் வாசனைவீசி ஜீவித்தவர்கள் என்பதைக் காட்டுகிறது.

3 தூதாயீம் பழத்தின் நிறம் சிவப்பு. இந்த சிவப்பு, இரட்சிப்பை தைரியத்தோடு சாட்சி பகருகிறார்களென்பதைக் காட்டுகிறது.

4 இந்த பழத்தைச் சாப்பிட்டால் நல்ல நித்திரை கிடைக்கும். சமாதானமில்லாத ஆத்துமாக்களுக்கு மணவாட்டி புத்தி சொல்லுவதால் அவர்கள் ஆறுதலடைந்து, சாந்திப்பட்டுகிறார்கள் ஆதலால் சமாதானம் பண்ணுகிறவர்கள் என்பதைக் காட்டுகிறது.

5 இந்தப்பழத்தை சிலர் மருந்துக்கும் உபயோகப்படுத்துவார்கள். இது மணவாட்டி சம்பாதித்த ஆத்துமாக்கள் போகிற இடமெல்லாம் ரோக சாந்தி நடத்துகிறவர்களென்றும் பிசாசுகள் துரத்துகிறவர்களென்றும் தெரிவிக்கிறது.

இவ்விதமான அனுபவமுள்ள ஆத்துமாக்கள் இருக்கிறார் அவர்களை உமக்குத் தருவேனெனச் சொல்லி மணவாளனை மகிழ்விக்கிறாள். அதோடு புதிதும் பழையதுமான கனிகள் இருப்பதாகவும் சொல்லுகிறாள். அதாவது தனது ஊழியத்தில் சமீபகாலத்தில் இரட்சிக்கப்பட்டதும் முன்னர் இரட்சிக்கப்பட்ட ஆத்துமாக்கள் இருப்பதாக கூறுகிறாள்.

## 8-ம் அதிகாரம்

இவ்வதிகாரமானது, மணவாட்டியை மணவாளன் மத்திய வானில் எடுத்துக் கொண்ட பின்னர், கைவிடிப்பட்டவர்கள் அங்கலாய்க்கிறதையும். ஒருவரையொருவர் தேற்றுகிறதையும், அந்திகிறிஸ்துவாலடையும் பீடைகளுக்குத் தங்களைத் தத்தம் செய்வதையும் மணவாட்டியை சம்பாதித்த ஆத்துமாக்களோடு ஆயிரவருஷம் அரசாட்சிக்காக வரும் அனுபவங்களையும் காணலாம்.

### 1, 2-ம் வசனங்கள்

ஆ! நீர் என் தாயின் பால் குடித்த என் சகோதரனைப் போல் இருந்தீரானால் நான் உம்மை வெளியிலே சந்தித்து முத்தமிடுவேன் என்னை நிந்திக்கவும் மாட்டார்கள். நான் உம்மைக் கூட்டிக் கொண்டு என் தாயின் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போவேன். நீர் என்னைப் போதிப்பீர், கந்தவர்க்கமிட்ட திராட்சரத்தையும் என் மாதள பழரசத்தையும் உமக்குக் குடிக்கக் கொடுப்பேன்

கைவிடப்பட்டவர்களில் பலரும் பற்பல அனுபவம் உடையவர்களே. சிலர் ஆண்டவரை நேசித்தாலும் மற்றவர் மற்றவர்களுக்குப் பயந்தும் வெட்கத்தினாலும் பகிரங்கமாய் ஆண்டவரை நேசிப்பதில்லை. அப்படிப் பட்டவர்கள் வெளியரங்கமாய் இயேசுவை சாட்சி சொல்லாமலும் அவரை பாடித்

துதித்து ஆராதியாமலும் நடக்கிறவர்களாய் இருந்தார்கள். இவ்வித அனுபவமுடையவர்களைப் பார்த்து தான் தாயின் பால் குடித்த சகோதரனைப் போலிருந்தாரானால் வழியிலே சந்தித்து முத்தமிட்டிருப்பார். ஒருவரும் நிந்திக்கவுமாட்டார்கள் என்கிறாள். அதாவது ஒரு வாலிப பெண்ணாகை இருந்தாலும் தனது சொந்த சகோதரனை எப்படிப் பட்ட ஆள் கூட்டத்தின் மத்தியிலும் யாதொரு வெட்கமுமின்றி கட்டி முத்தமிடுவாள், ஏனென்றால் அவன் சகோதரன் இப்படியே கைவிடப்பட்டவர்கள் வெளியரங்கமாய் மணவாளனை நேசிக்கவில்லை. உலகத்தின் நிந்தைக்கும் பயந்து வெளியரங்கமாய் மணவாளனை நேசியாமல் இருந்து விட்டார்கள். வெளியாய் இயேசுவை குறித்து சாட்சி சொல்லவில்லை. இப்போது அந்த குறைவை உணருகிறாள், நான் கைவிடப்பட்ட காரணம் வேறு எவ்விதமான பாவமுமல்ல அவரை வெளிப்படையாக நேசியாததே குற்றம் என அறிந்து கொண்டாள்.

ஒரு ஆவிக்குரியவன் எப்போதும் இயேசுவை ஆண்டவரைப் போல் மதித்து நேசிக்க வேண்டும் இராஜாவைப் போல் நினைத்து அடங்கி நேசிக்க வேண்டும். ஒரு சிநேகிதனாக ஆலோசனைக் கேட்டு நேசிக்க வேண்டும் மணவாளனாக உள்ளத்தில் மகிழ்ந்து அன்பு கூர வேண்டும் சகோதரனாகப் பகிரங்கமாய் ஜீவனைக் கொடுத்து அன்பு கூர வேண்டும் இவளோ சிநேகிதனாக அன்பு கூராதபடியால் கைவிடப்பட்டுப் போனாள். இப்போது அங்கலாய்த்து சகோதரனைப் போல் நேசியாமற் போனேனே, அப்படி யோசியாமற் போனபடியால் தாய் வீட்டில் போகும் போதும் உம்மை அழைத்துப் போகவில்லை அதாவது சபைகளில் வைத்தும் கூட உம்மைப் பற்றி பேசாமலிருந்து விட்டேன் அப்படி நான் இருந்த படியால் நான் நடக்க வேண்டிய பாதையை நீர் காட்டவில்லை. உமது ஆலோசனை எனக்கு இல்லாத படியால் குறைகள் உணர்ந்து ஜீவிக்கவும் கூடாமற் போய் விட்டது நானும் உமக்கு செய்ய வேண்டிய கடமைளை செய்ய வில்லை, ஊழியத்துக்கோ, விசுவாச வீட்டாருக்கோ தருத்திரிருக்கோ, அனாதைகளுக்கோ, விதவைகளுககோ பத்திரிகைகள் மூலம் செய்கிற ஊழியத்துக்கோ இவ்விதமாக நான் செய்ய வேண்டிய யாவையும் செய்யாமல் தவற விட்டேன் யாதொன்றும் உமக்கு கொடாமல் போய் விட்டேனே என்று அங்கலாய்க்கிறாள்.

## 3-ம் வசனம்

அவர் இடது கை என் தலையின் கீழ் இருக்கும். அவர் வலது கை என்னை அணைக்கும்

தனது குறைகளை உணர்ந்த தெய்வ மக்கள் நான் உண்மையாய் அவரை நேசித்திருப்பேனுனல் அவர் இடது கையை என் தலையின் கீழ் வைத்தும் வலது கையினுல் என்னை அரவணைத்தும் ஒரு தாய் தன் பாலகனை அரவணைத்துத் தூங்க வைப்பது போல என்னை அரவணைத்து ஆதரித்திருந்திருப்பாரே; ஒரு பொல்லாப்பும் என்னைத் தொடாதே இனிமேல் என் காரியம் எப்படியோ மகாக் கொடிய உபத்திரவம் முன் வந்து நிற்கிறதே எனக் கூறி விண்ணப்பம் பண்ணுகிருள்.

## 4-ம் வசனம்

எருசலேம் குமாரத்திகளே எனக்குப் பிரியமானவளுக்கு மனதாகுமட்டும் நீங்கள் அவளை விழிக்கப் பண்ணுமலும் எழுப்பாமலுமிருந்த உங்களை ஆணையிடுகிறேன். மணவாட்டி நிலவரத்தை இழந்துபோன பரிசுத்தவான்கள் தாங்கள் கை விடப்பட்டதை உணர்ந்து இனிமேல் இரத்த சாட்சியாக வாதது மரித்து ஆயிரம் வருஷ ஆட்சியிலாவது பங்கெடுக்க வேண்டுமென்ற பிரியம் கொண்டு அங்கலாய்ப்புடன் ஜெபிக் கிருர்கள். இதே வேளையில் கைவிடப்பட்டவர்களில் ஒரு வகுப்பார். இரட்சிக்கப் பட்டும் கைவிடப் பட்டோமே இனி என்ன செய்ய வேண்டுமென்றுள்ள எண்ணமின்றி ஜீவிப்பது மாத்திரமல்ல அங்கலாய்த்து ஜெபிக்கிறவர்களை யும் தடை செய்கிருர்கள். ஆதலால் கர்த்தர் உணர்வடைந்து ஜெபித்து உபவாசிப்பவர்களை உணர்வில்லாதவர்கள் தடுப் பதை நீங்கள் தடை செய்யாதிர்கள் என்று உணர்த்துகிருர் என்பதாகும்.

## 5-ம் வசனம்

தன் நேசர் மேல் சார்ந்து கொண்டு வனுந்தரத்திலிருந்து வருகிற இவள் யார்? கிச்சிலி மரத்தின் கீழ் உம்மை எழுப்பி னேன். அங்கே உமது தாய் உம்மைப் பெற்ருள். அங்கே உம்மைப் பெற்றவள் வேதனைப்பட்டு உம்மைப் பெற்ருள்.

மணவாட்டி எடுத்துக் கொள்ளப் பட்டபின்னர் கை விடப்பட்ட ஸ்திரியாகிய சபை வனுந்தரத்துக்கு போகிறது. வெளி. 12:5-6. இதுதான் கைவிடப் பட்டவர்கள் போன இடம், வனுந்தரம் புல்லும் தண்ணீருமில்லாத இடம், இவை வேத வசனமும் பின்மாரி மழை பெய்தலுமில்லாத காலம்.

ஆமோஸ் 8:11-12. இதுவே அந்திக்கிறிஸ்துவின் காலம். சமாதானமில்லாத காலம்.

இவ்வித பயங்கரமான வேளையிலும் அங்கலாய்த்து ஜெபித்தபடியால் தேவ கிருபை அவர்களைத் தாங்கினது. அந்திக்கிறிஸ்துவின் கால உபத்திரவத்திற்கு அவர்கள் பயப் படவில்லை. தைரியமாய் தனது நேசர் மேல் சார்ந்து கொண் டார்கள். கர்த்தருக்குள் மரிக்க தீர்மானித்து விட்டார்கள். ஆதலால் மணவாளன் கைவிடப்பட்ட சபையைப் பார்த்து வனாந்தரத்திலிருந்து வருகிற இவள் யார் என்று கேட்கிறார். இவர்களே மணவாட்டியின் பின்னாலே போகும் தோழிகள் சங். 45:14. முன்னாலே மணவாட்டி போனாள். பின்னாலே தோழிகள் போனார்கள். இவர்களே உபத்திரவக் காலத்தில் போகிறவர்கள்.

**கிச்சிலி மரத்தின் கீழ் உம்மை எழுப்பினேன்:—** கிச்சிலி மரம் இயேசுவைக் காட்டும். உன் 2:3 கைவிடப்பட்டவர்கள் கிறிஸ்துவின் பாதத்தைப் பற்றிப்பிடித்துக் கொண்டார்கள். ஆனபடியால் அவர்களையும் சேர்த்துக் கொண்டார். அவர் களும் அரவணைக்கப் படுகிறார்கள். ஆதலால் அவர்கள் உபத்திரவத்தின் பாதை தான் நடத்தப் பட்டவர்களாகும். ஆனபடியால் தான் வனாந்தரத்திலிருந்து வருவதாகச் சொல்லுகிறார்.

**அங்கே உம்மைப் பெற்றாள் உம்மைப் பெற்றவள் வேதனைப் பட்டு பெற்றாள் :—** ஆத்துமாக்களைப் பெற்றெடுக்கத்தான் இயேசு கல்வாரியில் ஜீவனைக் கொடுத்தார். அவர் பட்ட பாடுகள் யாவும் ஆத்துமாக்களைப் பெற்றெடுக்கவே ஆத்து மாக்களுக்காக படுபட்டபடியால் தான் ஆத்தும வருத்தத் தின் பலனை காண்கிறாள். ஏசா. 53:11 ஆத்தும வருத்தத் தின் பலனே இரட்சிகப்பட்ட கூட்டம். ஆத்துமாக்களுக்காகப் பட்ட பாட்டின் பலனைத்தான் இங்கு எடுத்துக் கூறுகிறார்.

## 6-ம் வசனம்

நீர் என்னை என்னை உமது இருதயத்தின் முத்திரையைப் போலவும் உமது புயத்தின் முத்திரையைப்போவும் வைத்துக் கொள்ளும். நேசம் மரணத்தைப்போல் வலிது. நேச வைராக்கி யம் பாதாளத்தைப்போல் கொடிதாயிருக்கிறது. அதன் தழல் அக்கினி தழலும் அதன் ஜுவாலை கடும் ஜுவாலை

யுமாயிருக்கிறது. கைவிடப்பட்ட ஆத்துமாக்களுக்கு பூமியில் பெரும் உபத்திரவம் இருக்கிறது. பூமிக்கோ யாதொரு சமாதானமும் இராது. சமாதானத்தைப் பூமியிலிருந்து எடுத்துப் போடுவார். வெளி. 6:4 கைவிடப்பட்ட விசுவாசிகளுக்கு பல விதத்திலும் நெருக்கமே. இவ்வித உபத்திரவங்களில் நிலை நிற்க தேவனுடைய விசேஷித்த பலன் தேவை. இல்லாவிடில் கிறிஸ்துவை மறுதலிக்க வேண்டியதாகும். அதனை உணர்ந்தே கை விடப்பட்டவர்கள் போராடி ஜெபிக்கிறார்கள்.

நீர் என்னை இருதயத்தின் முத்திரையைப் போலும், புயத்தின் முத்திரையைப் போலும் வைத்துக்கொள்ளும் என்பதாக ஜெபிக்கிறார்கள். பிரதான ஆசாரியனாகிய ஆரோன் தனது மார்ப்பகத்திலும், தோள் பட்டையிலும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரப் பிதாக்களின் பெயர்களையும் கற்களில் கொத்தி பதித்து வைத்திருந்தான். ஆரோன் தேவ சமூகம் செல்லும் போதெல்லாம். இவற்றை அணிந்து கொண்டே போவான். யாத். 28:12-30. இவை இஸ்ரவேலரை ஒருபோதும் மறவாமல் ஆரோன் இருதயத்தில் பதித்து வைத்து கர்த்தரிடம் சுமந்து கொண்டுபோய் ஆசீர்வாதத்தைப் பரிந்து பேசி வாங்கிக்கொடுக்க வேண்டுமென்பதாகும்; இதற்காகவே நமது பிரதான ஆசாரியனாகிய இயேசுவும் நமக்காக பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். I யோ. 2:1-2. அவரின் கிருபையினால்த் தான் நாமும் இது வரை நிற்கிறோம். ஆனபடியால் தான் நீர் எங்களை இருதயத்தில் வைத்துக் கொள்ளும் II கொரி. 7:3. எங்களை மறந்து விடாதிரும் என்று கெஞ்சுகிறாள்.

**நேசம் மரணத்தைப் போல் வலிது :—** பூமியில் பிறந்த ஒரு மனிதனை மரணம் சந்திக்க நினைத்தால் அவனைப் பிடித்துக் கொண்டே போகும். அது அவனை விடாது. அவன் பெரியவனானாலும் சிறியவனானாலும் அவனை விடப் போவதில்லை. பட்டதாரிகளும், பெரியோர்களும், டாக்டர்களும் தடுத்தாலும் அவனைக் கொண்டே செல்லும் தடுத்து நிறுத்த முடியாது. அவ்வளவு சக்தி வாய்ந்தது மரணம்.

அதுபோலவே கிறிஸ்துவின் அன்பும் பெரியது. கிறிஸ்துவின் அன்பு ஒருவனுக்குள் ஊற்றப்பட்டால் அவரை விட்டு அவனைப்பிரிக்க முடியாது. ரோ. 8:35-39 காவலிலும் சாவிலும் பின்பற்றத் தீர்மானிப்பான். அவ்வளவு பெரியது கிறிஸ்துவின் அன்பு.

**நேச வைராக்கியம் பாதாளத்தைப் போல் கொடியது:—** மனிதன் பூமியில் தோன்றி பாவஞ் செய்த பின்னர் மரணம் நியமிக்கப்பட்டது. மரணம் நியமிக்கப்பட்டது முதல் பாதாளமும் நியமிக்கப்பட்டது. மரணம் ஆரம்பித்தது முதல் இன்றுவரை ஆயிரமாயிரம் எண்ணுக்கடங்காத ஜனங்களை பாதாளம் விழுங்கிவிட்டது. இப்பொழுதும் விழுங்கிக் கொண்டேயிருக்கிறது. என்றாலும் இன்னும் விழுங்குவதற்காக வாயை மட்டில்லாமல் திறந்து கொண்டிருக்கிறது ஏசா 5:14 அதற்காக காத்துக் கொண்டும் இருக்கிறது.

இப்படியே கிறிஸ்துவின் அன்புக்கும் ஓர் எல்லையில்லை நேசிக்க நேசிக்க நேசம் பெருகிக் கொண்டே போகும், இவ்வளவாய் அன்பு கூர்ந்தேன், இனிமேல் போதுமென்று எண்ணினாலும் திருப்திப் படுவதில்லை. அன்பு கூறிக் கொண்டே இருக்கும். அதற்காக மரிக்கவும் ஒப்புக் கொடுக்கும் 1 யோ 3;14 பரிசுத்தவான்கள் இவ்விதமே ஒப்புக் கொடுத்தார்கள். இதுவே நேச வைராக்கியம்.

**அதன் தழல் அக்கினித்தழல், அதன் ஜூவாலை அக்கினி ஜூவாலை:—** ஓரிடத்தில் அக்கினித்தழல் இருந்தால் சமயம் வரும்போது அது பற்றி எரியும். காடானாலும் காட்டைக் கொழுத்தும், அக்கினி ஜூவாலை பற்றி எரியும் போது பக்கத்தில் போகிறவர்களையும் எரிக்கும் பச்சை மரங்களையும், பச்சைத்தழைகளையும் எரித்துவிடும்.

இப்படியே தேவ அன்பும் இருக்கிறது. ஒரு ஆத்துமாவின் உள்ளத்தில் உண்மையாகவே தேவ அன்பு மறைந்திருந்தாலும் காலக்கிரமத்தில் பக்கங்களிலுள்ள பாவிகள் குணப்படுவதற்கேதுவாக அது பரந்துதயாவிக்கும். அது மாத்திரமல்ல அதற்கு தடையாய் எழும்பும் எல்லா வல்லமைகளையும் அது எரிந்து விடும். அதோடு மற்றவர்களின் பாவங்களையும் மன்னித்து அன்பைப் பெருக்கும், 1 பேது 4:8; நீதி 10:12. தன்னையும் செலவுசெய்து கொடுக்கும். II கொரி. 2:15 இதுவே அக்கினி ஜூவாலை.

## 7-ம் வசனம்

திரளான தண்ணீர்கள் நேசத்தை அவிக்க மாட்டாது. வெள்ளங்களும அதைத தணிக்க மாட்டாது. ஒருவன் தன் வீட்டிலுள்ள ஆஸ்திகளையெல்லாம் நேசத்துக்காகக் கொடுத்தாலும் அது முற்றிலும் அசட்டை பண்ணப்படும்.

**திரளான தண்ணீர்கள் நேசத்தை அவிக்கமாட்டாது:—** திரளான தண்ணீர் என்பது பெருங்கூட்டம் ஜனத்தைக் காட்டும். எரே 51:13; வெளி 17:15 பெரிய கூட்டம் ஜனங்கள் எழும்பி கிறிஸ்துவின் அன்பை விட்டு விடு என்று பட்டயம் உருவிக்கொண்டு வந்தாலும் பயப்படாது. மரிக்க என்று வந்தாலும் அன்பை அவிக்க முடியாது. வெளி 13;10 பாடுகளைக் குடுத்தும் பயமில்லை. வெளி 2:10 இதுவே அன்பின் தன்மை.

**வெள்ளங்களும் அதைத் தணிக்காது:—** சத்துருபெரு வெள்ளம் போல் வருவான், வெள்ளம் என்பது பயங்கரமான சோதனை ஏசா 59:19. யோபுக்கு நேர்ந்தது போல் எவ்வித சோதனை நோந்தாலும் இயேசுவின் மீதுள்ள அன்பு தணியாது என்பதே. சோதனையை சகிக்க ஒப்புக் கொடுத்து விடுவார், யாக் 1:12; யோபு 23:10 ஏனென்றால் சோதனையினால் உண்டாகும் மேன்மையை அன்பு உணர்த்திக் கொடுக்கும், ஆதலால் அன்பு தணியாது.

**வீட்டிலுள்ள ஆஸ்தியைக் கொடுத்தாலும் அசட்டைப் பண்ணப்பட்டு:—** பவுலை இயேசுவின் அன்பு பிடித்தது அந்த அன்பை பெருக்குவதற்காக பவுல் தனக்கு உண்டான எல்லாவற்றையும் அற்பமும் குப்பையுமாக எண்ணினார். பிலி 3:7-11 மோசே இந்த அன்பினால் அநித்திய பாவ சந்தோஷம் என எகிப்திலுள்ள பொக்கிஷங்களைத் தள்ளினர். எபி 11:24-26. கடந்த கால பரிசுத்தவான்கள் இந்த அன்புக்காக தங்களை ஒப்புக்கொடுத்து தங்களுக்கு உண்டானவற்றை வெறுத்து உலகத்தை அற்பமாக எண்ணி அன்பில் நிலைத்திருந்தார்கள். இதுவே, உலகத்தை அசட்டை பண்ணுவதாகும்.

### 8-ம் வசனம்

நமக்கு ஒரு சிறிய சகோதரி உண்டு. அவளுக்கு ஸ்தனங்களில்லை. நம்முடைய சகோதரியை கேட்கும் நாளில் அவளுக்காக நாம் என்ன செய்வோம்.

கைவிடப்பட்டவர்களில் பலர் பூரணப்படாவிட்டலும் ஆவிக்குரியவர்கள் உண்டு. அவர்கள் கைவிடபட்டுப் போனோம் என்மேல் அந்திக் கிறிஸ்துவின் கொடுமை இருக்கிறது. என்றாலும் விசுவாசத்தைக் காத்துக் கொண்டு ஆயிரமாண்ட ஆட்சியிலாவது பங்கெடுக்க வேண்டுமென ஒப்புக் கொடுத்து

நல்ல தீர்மானங்களை செய்திருக்கிறார்கள். ஆனால், அதே வேளையில் இரட்சிக்கப்பட்டும் பரிசுத்தாவியைப் பெற்றுக் கொள்ளாத திரளான தெய்வ ஜனங்கள் இருக்கிறார்கள். அதை அவர்கள் கண்டார்கள். பரிசுத்தாவியினால் தான் தேவ அன்பு உள்ளங்களில் ஊற்றப்படும் ரோ 5:5 தேவ அன்பு உள்ளத்தில் இல்லாவிட்டால் பயங்கர உபத்திரவத்தில் நின்று கொள்ள இயலாது. இதையறிந்த தெய்வமக்கள் அங்கலாய்க்கிறார்கள். மகா உபத்திரவம் வந்து கொண்டிருக்கிறதே பரிசுத்தாவி பெறாதவர்கள் என்ன செய்வார்களென திகைக்கிறார்கள்.

**நமக்கு ஒரு சிறிய சகோதரி உண்டு அவளுக்கு ஸ்தனங்களில்லை:—**

**சிறிய சேகாதரி:—** இவள் பெண்ணாகத் தான் இருக்கிறாள். ஆனால் புருஷனுக்கு வாழ்க்கைப்பட பிராய பூர்த்தி அடையாதவள். அவ்விதமானவளை புருஷன் விரும்பான். பரிசுத்தாவியின் அன்பு உள்ளத்தில் இல்லையே; அதாவது மணவாளனாகிய இயேசு விரும்பும் ரூபம் இல்லையே என்கிறார்கள். அதாவது தேவ அன்பில்லாதவள் என்பதைக் காட்டுகிறது,

**சகோதரியைக் கேட்கும் நாளில் என்ன செய்வோம்;—**

1 இவர்கள் இரட்சிக்கப் பட்டவர்களாயிருந்தாலும் மகா உபத்திரவத்தில் இரத்த சாட்சியாய் மரிப்பதற்கான சமயம் நெருங்கி விட்டது சிறைப் படுத்திக் கொண்டு போகிறவன் சிறைப்பட்டுப் போவான் பட்டயத்தினால் கொல்லுகிறவன பட்டயத்தினால் கொல்லப்பட வேண்டும். பரிசுத்தவான்களின் பொறுமையும் விசுவாசமும் இதிலே விளங்கும். வெளி 13:10. இவ்வித உபத்திரவங்களில் உறுதியாய் இருப்பார்களா என்று கேட்பது தான் கேட்கும் நாள்.

2 ஆவியைப் பெற்றுக் கொள்ளாமலிருந்தபடியால் ஊழியத்தில் பயன் படவில்லை. பிரயோஜனமற்றவர்களாய் ஜீவித்தார்கள். காத்தர் கணக்குக் கேட்பார். மத். 24:23-26. இது தான் கேட்கும் நாள்.

3 ஆவியைப் பெறாதபடியால் ஆவியினால் உண்டாகும் சுத்திகரிப்பை அடையவில்லை. ஆதலால் கனத்துக்குரிய பாத்திரமாகவில்லை. II தீமோ. 2:22. ஆதலால் இவர்கள் எவ்விதமாய் ஜீவிப்பார்கள். இந்த நிலைமையில் என்ன செய்வோம் என எண்ணுகிறார்கள். இதுவே கேட்கும் நாள்

## 9-ம் வசனம்

அவள் ஒரு மதிலானால் அதின் மேல் வெள்ளிக் கோட்டையைக் காட்டுவோம். அவள் கதவானால் கேதுரு பலகைகளை அதற்கு இணைப்போம்.

**மதில் :—** இது வீடுகள் கட்டப்பட்ட பின்னர் வீடுகளின் பாது காப்புக்காக வீட்டைச் சுற்றி கட்டும் கோட்டை சுவரை தான் மதில் என்பது ஆவிக்குரியபடி தேவனுடைய சபையே தேனுடைய வீடு. I தீமோ. 3:15 தேவனுடைய சபையாகிய வீட்டில் சத்துரு உட்பிரவேசியாதபடி காக்கப்படும் படியாக ஊழியத்துக்கு பிரயோஜனமாக மதில்போல் விழித்திருந்து ஜெபிக்கவோ சபையில் தீமையான காரியங்கள் ஏற்படும் போது நல்ல ஆலோசனை கொடுத்து சபையை திருத்தவோ ஆத்துமாக்கள் பின் வாங்கிப் போகும்போது அவர்களுக்கு நல்லப் போதனை கொடுத்து முன்னேற்றவோ ஊழியத்தின் முன்னேற்றத்திற்காக பணங்களை செலவழிக்கவோ, ஏழை விசுவாசிகளை பராமரிக்கவோ, விதவைகளை ஆதரிக்கவோ செய்திருந்தார்களானால் அதன் மேல் வெள்ளிக் கோட்டையை கட்டலாமென்கிறார்கள்.

**அதின் மேல் வெள்ளிக் கோட்டையைக் கட்டுவோம் :—** இரட்சிக்கப்பட்டவர்களானாலும் கர்த்தருக்காக சிறு சிறு ஊழியங்களையாவது செய்திருந்தார்களானால் அநேக ஆத்துமாக்களை சேர்த்திருக்கலாம். அதிகமான ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டிருப்பார்கள். முன்னர் சபைக்கு காவலாளியாய் இருந்து காத்தவர்களோடு இவர்களும் ஊழியத்தில் ஐக்கியமாம் உட்பட்டு வெள்ளிக் கோட்டை கட்டுவதுபோல இரட்சிக்கப் பட்டவர்களால் தேவனுடைய சபையாகிய வீட்டுக்கு மிகவும் அலங்காரமாய் இருந்திருக்குமே எனக் கூறுகின்றனர்.

**கதவானால் கேதுரு பலகைகளை அதற்கு இணைப்போம்:—** கதவானது சத்துருக்கள் வீட்டிற்குள் புகுந்து பொருட்களைத் திருடிக்கொண்டு போகாதிருக்கவும் வீட்டில் வசிப்பவர்கள் இராக்காலங்களில் பயமின்றித் தூங்கவும் இவ்வித பாதுகாப்புக்காக உண்டு பண்ணப்பட்டதே கதவு.

1. சத்துருக்கள் இரவு உட்புகாதிருக்க கதவால் பாதுகாப்பு உண்டு. ஆவிக்குரியவர்கள் தேவனுடைய சபையில்

சத்துரு உட்பிரவேசியாதபகுதி கதவுபோல் காவல் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இதுவே ஜெப ஜீவியம்.

2 திருடர்கள் திடீரென்று உட்புகுந்து பொருளை திருடிக்கொண்டு போகாதிக்க கதவு உண்டாக்கப்பட்டது வதுபோல ஆவிக்குரிய சபைகளில் ஆத்துமாக்களை கள்ள சகோதரி ஏமாற்றிக்கொண்டு போகாதிருக்க கதவுபோல் இருந்து காக்கின்றனர். கதவு சத்துரு பயத்துக்கு கற்று விலகியிருக்க உதவுவதுபோல்: பலவீன விசுவாசியின் வியாதி யில் ஆபத்தில் கலங்கும் வேளையில் அவர்களைத் தாங்கி தைரியப்படுத்தி ஆதரிக்கின்றனர். இதுவே கதவு.

4 கதவு சொந்த ஜனங்களை வரவேற்று மகிழ்விக்கிறது போல இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்ந்து ஒரே வீட்டில் சந்தோஷமாய் வாழ்கிறதைக் காட்டுகிறன்.

இப்படிப்பட்ட கதவுபோன்ற சில ஊழியங்களையாவது செய்திருப்பாயானால் ஊழியம் கனமும் மகிமையும் பொருந்தி வாசனை வீசும் கேதுரு பலகை போன்ற மேன்மையான ஊழியம் செய்யும் நிலமைக்குக் கொண்டுவந்திருப்பாரே. என்கிறாள்.

## 10-ம், வசனம்

நான் மதில்தான். என் ஸ்தனங்கள் கோபுரங்கள். அவர்களுடைய கண்களில் கடாட்சம் பெறலானேன்,

**நான் மதில்தான் :—** நான் தேவனுடைய சபைக்கு சுற்றிலும் மதில்போல் பாதுகாப்பாய் இருந்தவள், பணத் திலும், ஜெபத்திலும், சாட்சி சொல்லுவதிலும், ஊழியம் செய்வதிலும் எல்லாவற்றிலும் உதவியாயிருந்தேன் என்கிறாள்.

**என் ஸ்தனங்கள் கோபுரங்கள்:—** உன். 4:5. படிக்கவும் முன்னைவிட இப்போது புதுப்பித்த அன்புக் குள்ளாகி விட் டேன், ஆவியில் அனலாயிருக்கிறேன். வசனமாகிய ஞானப் பாலை மற்றவர்களுக்குக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறேன் என்கிறாள். கோபுரம் யாவருக்கும் காணப்படுவது போல தற்போது இவளுடைய கிரியைகள் எல்லாரும் காணக்கூடிய தாயிருககிறது

**அவருடைய கண்களில் கடாட்சம் பெறலானேன்:—** இவள் தனது பிரதிஷ்டையை புதுப்பித்து கிருபையைப் பெற்று விட்டாள். வந்திருக்கும் உபத்திரவ வெறியின் மற்றவர்களுககா கவே கவலைப் பட்டு அங்கலாய்க்கிருள் ஆதலால் தேவன் இவளை கிருபையால் நிரப்பி விட்டார். இதை அவள் அறிந்து கிருபை பெற்றேன் என்கிருள்.

## 11-ம் வசனம்

பாகால் ஆமோனிலே சாலோமோனுக்கு ஒரு திராட்சத் தோட்டம் உண்டாயிருந்தது. அந்த தோட்டத்தைக் காவலாளிகள் வசத்தில் அதன் பலனுக்காக ஒவ்வொருவன் ஆயிரம் வெள்ளிக்காசு கொண்டு வரும்படி விட்டார்.

**பாகால்ஆமோன்:—** இது பிசாசின் வல்லமை நிறைந்த உலகத்தைக் காட்டுகிறது.

**சாலோமோன்:—** சமாதானப் பிரபுவாகிய இயேசுவைக் காட்டுகிறது.

**திராட்சத் தோட்டம்:—** தேவனுடைய சபையைக் காட்டுகிறது,

**காவலாளர்:—** சபையைக் காக்கிறவர்கள். இது தேவனுடைய ஊழியர்களையும் சபைக்காக விழித்திருந்து ஜெபிக்கிறவர்களையும் காட்டுகிறது.

**வெள்ளிக்காசு:—** இரட்சிக்கப்படும் ஆத்துமாக்களைக் காட்டுகிறது.

இவை யாவும் அந்த சாபம் நிறைந்த உலகத்தில் சாலோமோனுகிய இயேசுவுக்கு தோட்டமாகிய சபையின் அங்கத்தின் ராகிய ஒவ்வொரு விசுவாசிகளும் சம்பாதித்த ஆத்துமாக்களாகும். எஜமான் ஊழியர்களுக்கு தாலந்து கொடுத்து சம்பாதிக்கச் சொன்னுர். அதாவது பற்பலக்கிருபைகளைக் கொடுத்து ஆத்தும ஆதாயம் பண்ண கட்டளை கொடுத்தார். அங்கே ஆயிரம் வெள்ளிக்காசு என்று எழுதியிருக்கிறது, இது ஒவ்வொருவனும் ஆயிரம் ஆத்துமாக்களை சம்பாதிக்க வேண்மென்பதாகும்.

அநேகர் தாலந்தைப் புதைத்து வைத்து விட்டு எஜமானை குற்றப்படுத்தி தண்டனை அடைந்த மூடனைப் போல் ஜீவிக்

கிறார்கள். மத். 25:14-30. ஆத்மாபாரமின்றி கவலையற்றவர்களாய் ஜீவிக்கிறார்கள், ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுகிறவன் ஞானவான். நீதி 11:30 ஆதலால் ஆத்தும ஆதாயம் எந்த விதத்திலாகிலும் செய்ய வேண்டும்.

## 12– வசனம்

என் திராட்சத் தோட்டம் எனக்கு முன்பாக இருக்கிறது. சாலோமோனே உமக்கு ஆயிரமும் கனியை காக்கிறவர்களுக்கு இருநூறும் சேரும்.

**சாலோமோனே உமக்கு அந்த ஆயிரம் கனி காக்கிறவர்களுக்கு இருநூறு:—** உலகத்தின் முடிவிலே தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்ததக்கபலன் கொடுக்க நியமித்து வைத்திருக்கிறார். ஒவ்வொருவரும் கர்த்தருக்காக பட்டபாடு வீணாய்போவதில்லை ஆனால் சபைக்காகத் தனது ஜீவனைக் கொடுத்தவர் இயேசு மாத்திரம் மனிதன். சம்பாதிக்கும் எல்லா ஆத்துமாக்களும் அவருடையதே அவருடைய இரத்தத்தினாலே தான் ஆத்துமாக்களை விலைக்கு வாங்குகிறார் I கொரி 6:19 அவன் அவருக்குரியவன் ஆயிரம் ஆத்துமாக்களை சம்பாதித்தால் ஆயிரமும் அவருக்குரியதே ஆனபடியால்தான் பிதாவாகிய தெய்வம் அந்த ஆயிரமும் இயேசுவுக்குரியதே என்கிறார். என்றாலும் பாடுபட்டவனுக்கு 200 கொடுப்பதாக காண்கிறோம். ஆகவே எல்லாம் அவருக்குரியவைகளே தேவன் எல்லாவற்றையும் தமது சித்தத்தின்படியே செய்கிறார் என்பதாகும்.

## 13–ம் வசனம்

தோட்டங்களில் வாசம் பண்ணுகிறவளே தோழர் உன் சத்தத்தைக் கேட்கிறார்கள். நானும் அதைக் கேட்கட்டும்.

**தோழர்:—** பழைய ஏற்பாடுக் கால பரிசுத்தவான்களை தோழர் என்பார்கள், யோவான் ஸ்நானகன் தன்னை மணவாட்டி அல்ல தோழன் என்கிறார். யோவா 3:29; லூக் 7:28. அந்திக் கிறிஸ்துவின் காலமே மறுபடி யூதருக்கு கொடுக்கப்பட்ட கிருபையின் காலமுமாகும். மணவாட்டி எடுபட்டதும் புறஜாதியினுடைய காலம் முடிவடைந்தது இது யூதருக்குக் கொடுக்கப்பட்ட ஒருவாரம் அதாவது 7 வருஷம் நடு இரவு சென்றதும் அதாவது $3\frac{1}{2}$ வருஷம் முடிந்ததும் யூதா இயேசுவை விசுவாசிப்பார்கள், எல்லாரும் இயேசுவை நினைத்துப் புலம்பி அழுவார்கள். சகரியா 12:10- 14.

இதேவேளையில் கைவிடப்பட்ட சபையும் இன்னல்கள் அனுபவித்து மரிப்பார்கள். அவ்வேளையில் கைவிடப்பட்டிருப்பவர்களையே இயேசு தைரியப்படுத்துகிறார். எப்படியென்றால் இயேசுவின் நாமத்திற்காய் கண்ணீர் விடுகிறீர்கள் பாடுகிறீர்கள். இரத்த சாட்சியாய் மரிக்கிறீர்கள். நீங்கள் அனுபவிக்கும் கடக்குரலை தோழராகிய யூதரும் கேள்விப்படுகிறார்கள். நானும் உங்கள் கூக்குரலைக் கேட்கிறேன். இன்னும் அதிகமாய் புலம்பி ஜெபியுங்கள் என்பதாக உற்சாகமூட்டுகிறார்.

## 14-ம் வசனம்

என் நேசரே தீவிரியும். கந்தவர்க்கங்களின் மலைகள் மேலுள்ள வெளிமானுக்கும் மரைகளின் குட்டிகளும் சமானமாயிரும், அந்திக்கிறிஸ்துவின் ஆளுகை காலத்தில் மணவாளன் மணவாட்டியுடன் மத்தியவானில் 7 வருஷ காலம் இருப்பார். மணவாளன் மணவாட்டியுடன் பூமிக்கு வந்தால் தான் மணவாட்டி பட்டப் பாடுகளின் பலனைப் பெற்றுகொள்ள முடியும். பூமிக்கும் நியாயம் மூவங்குவார் முன்னர் மரித்த பரிசுத்தவான்களான இரத்த சாட்சிகளும் பலிபீடத்தின் கீழே இருந்து கொண்டு பரிசுத்தமும் சத்தியமுள்ள ஆண்டவரே பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு நீயாயத்தீர்ப்பு செய்யாமல் எதுவரைக்கும் இருப்பீர் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். வெளி. 6:9-10. இதன் பொருள் என்னவெனில் எங்கள் ஆண்டவரோ நீர் பூமிக்கு சீக்கிரமாய் வாரும். எங்கள் கண்ணீரை எப்போது துடைப்பீர். பூமிக்கு நியாயத்தீர்ப்பு எப்போது கொடுப்பீர் என்பதுவேவாகும்.

மணவாளன் கொடுத்த பதிலோ உங்களைப் போன்ற தொகை நிறைவேறுமளவும் கொஞ்சகாலம் இளைப்பாறுங்கள் என்பதே. வெளி. 6:11. அதற்குள்ளாக விசுவாசித்த யூதரும் அந்திக்கிறிஸ்துவால் இரத்த சாடசிகளாய் மரிக்கிறார்கள். சக. 13:8-9; வெளி. 7:9,14. இவ்விதமாக அந்திக்கிறிஸ்துவின் காலம் முடிவடையும் போது மத்திய ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட பரிசுத்தவான்களோடு இயேசு சீயோன் மலையில் வந்திறங்குகிறார். வெளி. 14:1-5; சக. 14:4-9.

அதன் பின்னர் அந்திக்கிறிஸ்துவையும் கள்ளத்தீர்க்கதரிசியையும் பிடித்து நரகத்தில் தள்ளுகிறார். வெளி. 19:20

சாத்தானைப் பிடித்து பாதாளத்தில் தள்ளி ஆயிரம் வருஷம் அடைத்துவைக்கிறார். வெளி. 20:2. அதோடு ஆயிரம் வருஷம் ஆளுகையும் பூமியில் ஆரம்பிக்கப்படுகிறது. இந்த மகிமையானது, சமாதானமானதும், சந்தோஷமான ஆளுகையை பூமியில் நடத்துவதற்காகவே கைவிடப்பட்டவர்களாயிருந்து இரத்த சாட்சிகளாய் மரித்த பரிசுத்தவான்களும் மணவாளனாகிய இயேசுவே மணவாட்டியோடு சீக்கிரமாய் வாருமென அழைக்கிறார்கள். இதோடு உன்னதப்பாட்டு முடிவடைகிறது.

---

## முடிவுரை

அன்பர்களே உன்னதப்பாட்டுப் புஸ்தகம் ஓர் ஆவிக்குரிய புஸ்தகமே. இதை சிந்தனையோடு படித்தால் ஆத்துமாவுக்கு மிகப் பிரயோஜனமாயிருக்கும். நீங்கள் இதைக் கற்றுக்கொள்ளுகிறது மாத்திரமல்ல இதன் மூலம் ஆவிக்குரிய ஆழமான இரகசியங்களை இன்றும் அறிந்து கொள்வதற்கு இது ஒரு தூண்டுகோல் என்பதை மாத்திரம் ஞாபக மூட்டுகிறேன். இதால் பயனடைந்து அநேகருக்குப் பிரயோஜனப்பட தேவன் தாமே உதவி புரிவாராக. ஆமென்.

ஆக்கியோனால் எழுதப்பட்ட புத்தகங்கள்:—

1. தீர்க்கதரிசனத் திறவு கோல்
2. ஆசரிப்புக் கூடாரத் திறவு கோல்
3. வெளிப்படுத்தின விசேஷத்திறவு கோல்